உ

சிவமயம்.

ஈ
08

# ராமநாத மான்மியம்.

அ.உ
388

சாவகச்சேரி

ஸ்ரீமாந். ச. பொன்னம்பலபிள்ளை

இயற்றியது.

ஸ்ரீ ராமநாத வித்தியாலயம்,

சுன்னாகம்.

1931.

விலை: 1 ரூபா 50 சதம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி. க. சண்முகம்பிள்ளை

உ

சிவமயம்.

# ஸ்ரீ ராமநாத மான்மியம்

இஃது

ஸ்ரீ ராமநாதவித்தியாலயத் தமிழ்ப்பண்டிதரும்

ஸ்ரீ ராமநாத சம்ஸ்தானவித்துவானுமாகிய

சாவகச்சேரி

**ஸ்ரீமாந். ச. பொன்னம்பலபிள்ளை**

அவர்களால் இயற்றப்பெற்று,

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது.

---

1930.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1311
நன்கொடை எண்: 1311

மதுரை-காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# ஆசிரியர் குறிப்புரை.

இதற்கு இஃறியமையாதென்றே வேண்டிய விடங்களி லாங்கிலமொழிகளைச் சேர்த்தும் அரிதிற் பொருள் பயக்குந் திரிசொற்களைத் தவிர்த்தும் எவர்க்கு மெளிதிற் பொருடரு மியற்சொற்களையே பிரயோகித்துஞ் செய்யுணடையோ வுரைநடையோ வென்று கருதும் வண்ணங் காலவகைக்கேற்ப இந்நூ லியற்றப் பெற்றிருத்தல் கற்றறிந்த அறிஞர்க ளுய்த்துணர்ந்து கொள்ளத் தக்கதேயாம்.

இன்னு மெஞ்சிய பாகங்களை இரண்டாம் பதிப்பில் வெளியீடு செய்வேம்.

ச. பொன்னம்பலபிள்ளை.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

புலோலி
ஆரியதிராவிடமஹாபண்டிதர்
பிரமஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்
இயற்றியது.

### இந்த்ரவஜ்ராவ்ருத்தம்।

ஶ்ரீராமநாதாக்ய ந்ருபோத்தமஸ்ய
ஶாஸ்த்ரேஷு தக்ஷஸ்ய கவீஶ்வரஸ்ய।
ஸுதாஸ்ய ஸௌஜந்யகுணாட்ய: ஶ்ரீ
பொந்நம்பலாக்ய: கவிவம்ஶபோஷ:॥

### ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த விலங்கையெனு மணங்கினணி வதனமெனத் திகழா நின்ற
பேர்பூத்த கொழும்புநகர் வாழ்வுகூர் பெருஞ்செல்வப் பிரபு வான்
நேர்பூத்த புகழ்ப்பொன்னம் பலமுதலி யார்தரும நிலைக ளெல்லாம்
பார்பூத்த திசையெங்கும் வானெங்கும் பரந்துளநாம் பகர்வ தென்னே. (க)

பகர்ந்தவிவன் பெறுபுதல்வர் குமாரசுவா மிப்பெயர்சீர் பரவு மன்னன்
சகந்தழைய வவதரித்த விராமநா தப்பெயர்கொள் சயபூ பாலன்
திகந்தமெலாம் புகழருணா சலத்துரையாஞ் செம்மலெனச் செப்பு மூவர்
உகந்தவிழி மூன்றெனவே யுலகோர்க ளுய்த்துரைக்க வுற்று ளாரே. (உ)

உற்றவிவர் மூவருளே நடுவந்த வுத்தமனென் றோது நீரான்
சுற்றமள வோவுலகத் தெவ்வுயிருந் தன்னுயிர்போற் சுகம்பெற் றுய்யப்
பற்றகலா தோம்புகின்ற தயாளுவெனப் பலகவிஞர் பாடு பண்பான்
செற்றமெதே ளளவுமிலா விராமநா தப்பெயர்கொள் செல்வ னாமே. (ங)

செல்வனிவன் றந்தைமுனாட் செய்தசிவா லயப்பணியைச் சிறப்பி னோங்கப்
பல்வகைய சித்திரங்க ளணியுறநல் லுயர்சிலையாற் பண்பி னுக்குந் [லை
தொல்வரமார் புண்ணியப்பே றேனையர்க்கிங் கமைந்திலதே சொல்லுங் கா
நல்வளமார் பெருஞ்செயலு ளீதுபெருந் தருமமென நவில லாமே. (௪)

நவிலுமிவ னிவ்வுலகி லெவ்வூரி லெச்சங்க நடைபெற் றாலுந்
தவிரவிடா தவரவர்வந் தழைத்துப்போய் வரிசைபுரி சபேச னாகி
அவிர்புருஷ சிங்கமா சாங்கத்தார் மதிக்குநெறி யமைந்த தீரன்
கவிஞர்தமை யாதரிக்கும் பூதலகற் பகமென்னக் கருத லாமே. (௫)

கருதுபெருஞ் செல்வமின மாயுள்செயல் கல்வியெனக் கழறு மைந்
துட், பொருவரிய வொவ்வொன்று மேலதிக மதிப்பாகப் புகலு நூல்கள்,
திருவளரு மிராமநா தக்குரிசிற் கிவையைந்துஞ் சிறந்த வென்றா, லொரு
வரிவர்க் கிணையென்றிங் கோதரிதா லுண்மைதெரிந் துரைக்குங் காலே.()

உரைத்தபுகழ்ச் சீமான்பற் பலவிடத்துங் கழகங்க ளோங்க வைத்தான்
வரைக்குடுமி விளக்கனைய விவன்சீர்த்தி நெறியெவரு மகிழ்ந்து தேற
விரைத்தமலர் மாலையென வினியதமிழ்க் கவிகளினால் விரிவ தாகத்
தரைத்தலத்திம் மான்மியத்தைப் பாடினோன் யாவனெனிற் சாற்று வாமே.

சாற்றுபுகழ்ச் சாவகச்சே ரிப்பதிவே ளாளகுலந் தழைய வந்தோன்
நீற்றொளிபொற் புறவடிவோன் சைவாசா ரம்வழுவா நெறியி னிற்போன்
ஏற்றமுள சங்கரப்பிள் ளைப்பெயர்கொள் குரிசிறவத் தீன்ற மைந்தன்
மேற்றிகழு மறிவடக்க நிறைபொறையா தியகுணங்கண் மேவு மேலோன்.

மேவுவயித் தியலிங்கம் வேற்பிள்ளை யெனுமிவர்பால் விழைந்து கற்
றுத், தாவில்வித்வ சிரோமணிபொன் னம்பலபிள் ளையினிடத்துஞ் சார்
ந்து பன்னாள், ஒவில்பல கலையாய்ந்தோன் வடதேசத் தறிஞர்மதிப் புரை
யும் பெற்றோன், தேவனருள் வளர்பொன்னம் பலபிள்ளைப் புலவனெனச்
சிறந்து ளானே. (௯)

சிறந்துளமான் மியமிதனு ளாயிரத்தின் மேற்கவிகள் சிறந்து மன்னும்
அறிந்தவர்க ளறிவதலா லறியாதார் கவியருமை யறிகு வாரோ
பிறந்தபயன் புகழெனவே சொல்வர்கவி நாயகனும் பெருமன் றானுஞ்
செறிந்தபுக ழொடுவாழி கவிவாழி கவிஞனுஞ்சீர் சிறந்து வாழி. (௧௦)

சுன்னுகம் பிராசீனபாடசாலைத் தமிழ்த்தலைமையாசிரியரும்
வித்துவானுமாகிய
புன்னலைக்கட்டுவன்
## பிரமஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள்
இயற்றியது.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

பொன்பூத்த வரைவளமுந் திரைவளமுங் குரைகொணதிப் புனலார் நாட்டின், மன்பூத்த பணைவளமுந் தருவனத்தின் பெருவளமு மலிந்து தேங்கும், இன்பூத்த செல்வமெலாங் கொண்டிடலிற் பிறதேயத் திறைவ ரோடும், நன்பூத்த மாந்தர்களு நயந்திடவை குவதீழ நாடா மன்றே. (க)

அன்னதற்குத் தலைநகரா வங்கிலமா மன்னவர்க ளமர்ந்தே யாள, மன்னியது பெருநிதிசேர் மக்களொடு மகளிருறை மாட மோங்கித், துன்னியது முந்நீரு மோர்பாலின் முழங்கியிடத் தோன்று கிற்பத், தின்னியல்பல் பொருட்புதுமை காட்டுவது கொழும்பெனப்பே ரியல்வ தாமே. (உ)

அப்பதியின் மன்னவர்போற் பெருஞ்சிறப்பி னொடும்வாழ்ந்தோ னவனி மேய, ஒப்பில்புகழ் பெருங்கருணை போராண்மை கொடைவீர மோங்கு கல்வி, மெய்ப்பரம னடிக்கமலத் தன்புடைமை முதலியவா மிளிர்கு ணங் கொண். டிப்புவிக்கோர் நிதியனபொன் னம்பலமா முதலியென வியம்பு வோனே. (ங)

அன்னவனு மிராமேச னடிவணங்கிப் பெற்றெடுத்த வருமை மக்கள்
முன்னுறுமூ வேந்தரனு மூவருளு மிடைப்பிறந்து முதன்மை பெற்றோன்
மன்னியசெந் தமிழினொடு வடமொழியு மாங்கிலமு மற்றுங் கற்றே
தன்னிகரில் பண்டிதனுய்த் தாணிமிசை ஞாயிறுபோற் றுனே நின்றோன்.

தென்னிலங்கைத் தேசாதி பதியாகி வருவோருஞ் செப்புந் தன்சொல், பொன்னியல்பிற் போற்றியிடச் சட்டநிரு பணசபையிற் போற்றுஞ் சிங்க, மென்னவுறீஇ யஞ்சாமல் விழைவுபெற வன்மையொடு மியம்பும் வாக்காற், றுன்னியவச் சபையினிடைத் தானெவற்கு முதன்மைபெறத் தோற்றி நிற்போன். (ரு)

வேதமுட னுகமநூன் மிருதியிவை முதலாக மேவு நூல்கள்
ஏதமறக் கேட்டவற்றின் வழியொழுகிச் சிவயோகத் தெய்தி நின்றும்
பேதமுறும் பிறருமுளங் கொண்டிடநற் சைவநெறி பிரசங் கித்தும்
நீதகல வரியனசெய் வார்பெரிய ரெனும்யல்பு திடஞ்செய் திட்டோன்.()

எழும்பெரிய மாடமிகுங் கொழும்புதனிற் றன்றூதை யியற்றி யிட்ட,
செழும்பிறைகொள் சடைமௌலிப் பொன்னம்பலவா ணேசர்தளி சிறப்
புற் றோங்கக், கொழும்பரிய கருங்கல்லா லாலயமொன் றமைத்திட்ட சூரி
சில் யார்க்கும், தொழும்புனித ஞானியவன் பெருமைதனை யாரெடுத்துச்
சொலவல் லாரே. (எ)

தன்றூதை வழிமுன்னோர் தாமுதித்த யாழ்ப்பாணத் தனிநன் னாட்டில்
இன்றோன்ற மிளமகளிர் கற்றறிவின் மீதூர வியம்புந் தன்பேர்
நின்றோங்கு கழகமுட னிளைஞர்களாங் கிலம்பயில நிமலன் தன்பேர்
முன்றோன்று கலூரியுநன் கமைத்துதவித் தருமத்தின் முதலாய் நின்றோன்

கன்னன்முதலாகமொழி வள்ளல்கண்முன் னின்றோருங் கடைக்கணிற்பக்
கன்னன்மணி தருதேனு நிதிகளொனு மிவையுமிவன் கணிக்குங் காலோர்
கன்னன்முகந் தீவநிகர் கொடுப்பவெமக் கூழிவரை காணு விண்ணே
கன்னன்கிது வாமெனவான் கரப்பவளித் திடும்வண்மைக் காத்தி னனே.

ஆங்கிலநாட் டரசிருந் தரசாளும் லண்டனக ரடைந்தி லங்கைத்
தேங்குறுகுஞ் சனங்களுக்கு வேண்டுவன பலமுறையுந் தேர்ந்து தாமே
பாங்கினொடும் புரிதலினாற் சுதேசநலத் தொண்டனெனப் பகர்சீ மான்சேர்ப்
பூங்குலவும் பட்டமினி துறும்ராம நாதனெனப் புகல்கோ மானே. (கo)

பகரிலங்கைத் தீவளவோ பரவுறுமிந் தியநாடு பரவி யப்பாற்
றிகழுறுமா சியகண்டத் திடைமருவு தேயமெலாஞ் சென்று நீடும்
இகழ்விலயி ரோப்பகண்டத் தொடுமிளிரா பிரிக்ககண்டம் யாவுஞ் செல்லும்
புகலுமம ரிக்ககண்டம் புகும்ராம நாதனுயர் புகழா மன்றே. (கக)

அன்னவன்றன் சரிதமெலாம் விருத்தமெனும் பாவதனு லமைத்தே
யார்க்கும், இன்னியல்பு கொளராம நாதமான்மி யம்மெனவிங் கியம்பிப்
பேரும், துன்னியபல் லணிகளொடுஞ் சொற்சுவையும் பொருட்சுவையுந்
தோன்றச் செய்தான், மன்னியயாழ்ப் பாணமெனு நாட்டினிற்சா வகச்
சேரி வாழுந் தோன்றல். (கஉ)

வரம்பெறுவே ளாண்குலத்து வந்திடுஞ்சங் கரப்பிள்ளை வள்ளல் செய்த
அரும்பெரிய தவத்துதித்தோன் வயித்தியலிங் காசிரிய னகத்தும் மேலாம்
நிரம்பியநூற் புலவமணி மட்டுவில்வேற் பிள்ளையெனு நிபுணன் பாலும்
சிரம்பெறுவித் துவச்சூடா மணிபொன்னம் பலப்பிள்ளைச் செம்மல் பாலும்.

அரிதுணா நின்றுபல நூல்களெலாங் கற்றுமிக வறிவு பூத்தோன்
பெரிதுமதி கந்தபுரா ணந்தனின்மார்க் கண்டேயன் பெருமை யாவும்
தெரிபடலந் தனக்கொர்விரி வுரையெழுதுந் திறமையினன் சீரார் பன்றிக்
கிரியுறையு மரசன்மேற் கோவையெனு நூலியற்றிக் கீர்த்தி கொண்டோன்.

இகழ்வில்சிதம் பரவாத நடராசப் பெருமானை யேத்தும் வாக்கான், திகழ்ராம நாதவித்தி யாலயத்துப் பண்டிதனுஞ் சிறப்பு வாய்ந்தோன், புகழ் மேல லுறும்ராம நாதனெழின் முன்னிலைவாழ் புலவ னானேன், நிகழ்வா ய்மை யுளன்பொன்னம் பலப்பிள்ளை யெனச்சொலும்பேர் நிலவு வோனே.

---

திருநெல்வேலி
பரமேஸ்வரக்கல்லூரித் தலைமைத்தமிழ்ப்பண்டிதரும்
உலகியல்விளக்க நூலாசிரியருமாகிய
## பிரமஸ்ரீ. க. சு. நவநீதகிருஷ்ணபாரதி அவர்கள்
இயற்றியது.

திருமகட்குப் புயங்கொடுத்துக் கலைமகட்கு நாக்கொடுத்துத் தெய்வத் தர்மத்(து); ஒருமகட்குக் கைகொடுத்து மெய்கொடுத்த சிவஞான வுண் மைச் செல்வம், தருமகட்குத் தலைகொடுத்துச் சச்சிதாநந்தத்தின் சாரந் துய்ப்போன், பெருமகளாம் இலங்கைக்குப் புகழ்கொடுத்து மகிழ்படைத்த பெருமை யோனே. (௧)

காடெல்லாம் வயலாக்கி நாடெல்லாம் பசிநீக்கிக் கவின்று நெஞ்சின், ஊடெல்லாங் கலைபடிந்த அருட்சோதி விளக்கேற்றி ஒன்றைப் போற்றி, ஏடெல்லாம் பாட்டாக்கிப் பாட்டெல்லாந் தான்பொருளா விருந் தொளிர் ந்து, கூடெல்லாம் எடுத்தபயன் உயிர்கொள்ளத் தவம்புரியும் கோமான் ருனே. (௨)

உண்ணுழியுந் தனைநினைந்துண் டுவப்புற்றும் பலகலைகள் ஓதும் போதும்
நண்ணியதன் பெயரோதிப் பின்னோதும் நலனுற்றும் ஞான சோதிக்
கண்ணுதலான் கழல்போற்றுங் காலையிலும் தனைநினைந்து காட்சி சாலப்
பண்ணமைந்த இலங்கைவளர் தமிழர்களைப் புரிவண்மை படைத்த கோவே.

படிக்காத நூலில்லைப் பேசாத அவையில்லைப் பகருஞ் சொல்தேன்
மடுக்காத காதில்லைப் புகழாத நாவில்லை மலர்ந்து நெஞ்சங்
கொடுக்காத கொடையில்லைக் கும்பிடாத் தேவுமில்லைக் கூர்ந்து பார்த்தும்
வடுக்காண வொண்ணாத திருராம நாதனவன் வாழி மாதோ. (௩)

அன்னவன்றன் னவதார மான்மியத்தைச் செந்தமிழி லன்பிற் றந் தான், கன்னலைத்தீங் கனிபாலைக் கோற்றேனிற் குழைத்தாங்குக் கனிவு சான்ற, சொன்னலனும் பொருணலனும் நடைநலனுந் தொடைநலனுந் துள்ளிச் சொட்டப், பன்னுகலை நலனுணர்பொன் னம்பலவேள் என்றெ ங்கும் பகர்சீ மானே. (௪)

---

இந்நூலாசிரியரின் மாணாக்கர்களிலொருவரும்
யாழ்ப்பாணம் சைவப்பிரகாசவித்தியாசாலை மாணாக்கரும்
திருநெல்வேலி ஆசிரியகலாசாலையாசிரியருமாகிய
மட்டுவில்

## ஸ்ரீமத். சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

பொன்னாடென் றலகனைத்தும் புசழுமொழிப் பொருளாகிப் பொருந்துமீ
நன்னாடு செய்ததவப் பயனாகி யவதரித்த ஞானபானு [ழ
எந்நாடுந் தன்கிரண ஒளிப்பிழம்பிற் றிளைத்துமகிழ் வெய்த வெள்ளிக்
கன்னாடுங் கீர்த்தியினான் றன்புகழே கவிகளெலாங் கருது மேலோன். (௧)

பைந்தருவு மிருநிதியும் பயின்றதிருக் காமுடையான் பயிலுந் தோறுஞ்
செந்தமிழே போலினிய திருமுகத்தான் செழியகலைத் திறங்கள் யாவும்
மைந்தர்மட வார்பயிலப் பலகழக நிறுவியசீர் வள்ளற் கோமான்
இந்திரசம் பத்துடையா னிலங்கைநரேந் திரன்பகைவர்க் கிடியே றன்னான்.

மன்னவையி லொருமணியாய் மருவலர்தம் வயமிழக்க மழைபெய்
மேகந், தன்னிகர்பன் னூலுரைகள் தந்தகட லத்துவித சைவ ஞானி, எந்
நலமும் பிறர்நலமா எவ்வுயிருந் தன்னுயிரா எண்ணும் மேதை, பொன்னி
யல்சேர் பொன்ராம நாதனெனும் புரவலர்கோன் புகழ்மிக் கோனே. (௩)

அன்னவன்றன் புகழ்ச்சரிதை அவனிதலத் தமிழ்தமென அழகு வாய்
ப்பச், சொன்னலமும் பொருணலமுந் துறுமியிடந் தொறுமிளிரத் தொ
ன்னூ லுள்ள, எந்நலமுஞ் சேர்ராம நாதமான் மியநூலொன் றியற்றித்
தந்தான், முன்னவன்றன் சமஸ்தான முதன்மணியாய்க் கவிபொழியு
முகிலே போல்வான். (௪)

என்னனைய மாணவருக் கிலக்கணலக் கியங்களெலா மியம்பு மாசான்,
தன்னிகர்சா வகச்சேரித் தலம்புகழ்சங் கரப்பிள்ளை தந்த செம்மல், பன்னி
யநா வலர்கல்விப் பரம்பரையோன் நூலுரைகள் பலமுன் செய்தோன்,
பொன்னிகர்பொன் னம்பலவன் சைவநெறி பயின்ற தமிழ்ப் புலமை
யோனே. (௫)

உலகனைத்துந் தொழுதேத்த வுடல்பொருளா விகண்முழுது முதவா நின்றே
நலமனைத்துந் துறந்தபெரும் புகழாளர் புகழ்ச்சரிதை நவிலுந் தோறும்
புலமனைத்து மொழுகுதமிழ்ப் புலவருளப் புதுமதுவப் போத விழ்ந்து
தலமனைத்தும் பாந்துவளந் துளும்பியெழி லொழுகுமது சகசந் தானே. ()

# பிழை திருத்தம்.

| பக்கம். | செய்யுள். | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௬ | ௩௧ | விடடாலுஞ் | விட்டாலுஞ் |
| ௧௧ | ௬௪ | செய்லான் | செய்வான் |
| ௧௨ | ௭௧ | செலலலை | செல்லலை |
| ௨௨ | ௧௩௧ | வரநல் | வரால் |
| ௨௫ | ௧௫௩ | பதுமத் | பதுமைத் |
| ௩௧ | ௧௯௩ | ரேனோர் | ரேமேனோர் |
| ௪௧ | ௨௬௦ | ———— | வேறு |
| ,, | ௨௬௨ | பாங்குற | பத்திரம் |
| ௯௨ | ௩௯௪ | சட்டங்கள் | சட்டகங்கள் |
| ,, | ,, | ணோர்ந்த | னேர்ந்த |
| ௬௯ | ௪௪௦ | யெண்ணு | யொண்ணு |
| ௮௩ | ௫௩௬ | வழுங்கல்போற் | தூர்த்தல்போர் |
| ௮௯ | ௫௭௬ | கருணைச் | கருணை |
| ௯௨ | ௫௯௪ | மன்றுற | மன்னுற |
| ௧௦௬ | ௬௯௨ | நாத | நாதன் |
| ௧௧௬ | ௭௫௬ | விலங்கு | விலங்குச் |
| ௧௧௭ | ௭௫௮ | மாற்றுயர்நது | மாற்றுயர்ந்து |
| ,, | ௭௬௩ | பலநாலாக | பலநாளாக |
| ௧௨௫ | ௮௧௯ | நீங்கப் | நீங்காப் |
| ௧௨௭ | ௮௨௭ | நாதனென்று | நாதனன்று |
| ௧௨௮ | ௮௩௯ | னீங்கள் | நீங்கள் |
| ௧௬௦ | ௧௦௪௫ | வாழ்க என்பவற்றின்கண் மிக்குவந்த வல்லொற்றுகளை நீக்கிக்கொள்க. | |

ஸ்ரீ ராமநாதமான்மிய

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| காப்பு ... ... ... ... ... | ௧ |
| அவையடக்கம் ... ... ... ... | ௧ |
| நாட்டுச்சிறப்பு ... ... ... ... | ௨ |
| நகரச்சிறப்பு ... ... ... ... | ௨ |
| மரபினர்மாட்சி ... ... ... ... | ௫ |
| ஸ்ரீமான் பொன்னம்பலமுதலியார் வரலாறும் அவர்களின் கருமப்பேறும் ... ... ... | ௯ |
| ஸ்ரீராமநாதோற்பவம் ... ... ... | ௧௪ |
| கல்விபயிறல் ... ... ... ... | ௧௭ |
| நியாயதுரந்தராதல் ... ... ... | ௧௯ |
| மணச்சிறப்பு ... ... ... ... | ௨௦ |
| புதல்வர்ப்பேறும் அவர்தம் விவாகச்சிறப்பும் ... | ௨௨ |
| முதன்முறை இங்கிலந்துக்கேகல் ... ... | ௨௮ |
| யாழ்ப்பாணம்வருகை ... ... ... | ௨௯ |
| ஸ்ரீமான் பொன்னம்பலமுதலியார் தலயாத்திரையும் பதமுத்திப்பேறும்... ... ... ... | ௩௪ |
| முதன்முறை ராசாங்கசட்டநிரூபணசபையைச் சேருதல் (கவுஞ்சில்மெம்பராதல்) ... ... ... | ௩௫ |
| சகோதரமாட்சி (துணைவர்மாட்சி) ... ... | ௩௯ |
| யாழ்ப்பாணத்தினர்மதிப்பும் மகிழ்வும் ... ... | ௪௫ |
| சொலிஜிட்டர்ஜெனரலுத்தியோகப்பேறு (ராசாங்கமந்திரியாதல்) ... ... ... ... | ௪௬ |
| அட்டோணிஜெனரலுத்தியோகப்பேறு (பிரதிநிதித்தலைவனாதல்) ... ... ... ... | ௪௮ |
| இரண்டாமுறை இங்கிலந்துக்கேகல் ... ... | ௪௯ |
| சைவசித்தாந்தப்பயிற்சி ... ... ... | ௫௦ |
| யோகசாதனை ... ... ... ... | ௫௧ |
| பத்தினியார் செல்லாச்சி அம்மையார்பதமுத்தி ... | ௫௨ |
| கிறீஸ்தவர் பைபில் வியாக்கியானம் ... ... | ௫௪ |
| தமையனார் குமாரசுவாமிமுதலியார் பதமுத்தி ... | ௫௪ |
| ராசாங்கஉத்தியோகத்தில் வெறுப்புறுதல் (கவுஞ்சிலிருந்து விலகுதல்) ... ... ... | ௬௯ |

# ஸ்ரீராமநாதமான்மிய விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| அமெரிக்கர்காட்சிபெறுதல் ... ... ... | ௫௭ |
| இரண்டாந்தர்மபத்தினி லீலாவதிஅம்மாள் ... | ௬௧ |
| ராசாங்கசட்டநிரூபணசபையில் மீளவுமமைதல் (கவுஞ்சிலில் மீளவுமமைதல்) ... ... | ௬௫ |
| பொன்னம்பலவாணேசராலய தர்மகர்த்தாப்பேறு ... | ௬௬ |
| மூன்றுமுறை இங்கிலந்துக்கேகல் ... ... | ௬௯ |
| ஸ்ரீ ராமநாதவித்தியாலய ஸ்தாபனம் ... ... | ௭௦ |
| பெண்ணுசிரியர் தமிழ்க்கல்லூரி ஸ்தாபனம் ... | ௭௩ |
| தமிழிற் பகவற்கீதை மொழிபெயர்ப்பும் உரையும் ... | ௭௪ |
| திருக்குறள் ராமநாதீயமும் ஆத்திசூடி மந்திரவிளக்கமும் ... ... ... ... | ௭௫ |
| ஊர்க்கலகமும் சேனுபத்தியமும் நான்காமுறை இங்கிலந்துக்கேகலும் சிறைவிடுதலும் தேசாதிபன் நீக்கமும் ... ... ... ... | ௭௬ |
| பரமேஸ்வரவித்தியாலய ஸ்தாபனம் ... ... | ௮௬ |
| பட்டஞ்சூடுதல் ... ... ... ... | ௮௯ |
| அருணுசலமுதலியார் பட்டம்பெறுதல் ... ... | ௯௧ |
| திருச்செந்தூர் விழாநடைபெறுத்தல் ... ... | ௯௨ |
| திருமயிலாப்பூரில் திருவள்ளுவமகாசபையில் அக்கிராசனம் வகித்தல் ... ... ... ... | ௯௬ |
| சிதம்பரதீக்ஷிதராபத்தைத்தீர்த்தல் ... ... | ௧௦௧ |
| வேதாரணியவழக்குச்சமாதானஞ்செய்தல்... ... | ௧௦௭ |
| அருணுசலமுதலியார் பதமுத்தி ... ... | ௧௧௦ |
| மலாய்நாடு காட்சிபெறுதல் ... ... ... | ௧௧௪ |
| ஸ்ரீமான். நடேசபிள்ளைக்கும் ஸ்ரீமதி. சிவகாமசுந்தரி அம்மாளுக்கும் விவாகப்பேறு ... ... | ௧௨௬ |
| செந்தமிழிலக்கண வெளியீடு ... ... ... | ௧௩௫ |
| மதுரைச் செந்தமிழ்ச்சங்க உபன்னியாசம்... ... | ௧௩௬ |
| வித்தியாலயஸ்தாபனமும் சமயபரிபாலனமும் ... | ௧௩௮ |
| சட்டநிரூபணசபையிற்சேர்ந்த ஐம்பதாம்வருடக்கொண்டாட்டம் ... ... ... .... | ௧௪௦ |
| தொகைநலம் ... ... ... ... | ௧௫௦ |
| ராசரிஷித்துவப்பேறு ... ... ... | ௧௫௪ |
| சிவஞானப்பேறு ... ... ... ... | ௧௫௮ |



கௌரவ ஸ்ரீ: சேர்: பொன். இராமநாதனுர், கே. ஸி., ஸி. எம். ஜி.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
... முகம் நூலகம்.
... துறை

உ

கடவுள் துணை.

# ஸ்ரீ ராமநாத மான்மியம்

## காப்பு.

பைமுகப் பாந்தளும் பாதித் திங்களும்
வைமுகச் சூலமு மழுவு மானுங்கொள்
ஐமுகத் தொருவன்முந் தருளுந் தாரகக்
கைமுகக் கடவுளென் கருத்தைக் காக்குமே.

## அவையடக்கம்

ஓங்குகலை திருத்தருமம் பகைவேற லுவ்வுபுக ழூலகை யென்றுந், தாங்குமமைச் சியலமையச் சேர்ராம நாதனுயர் சரிதந் தன்னை, யீங்குபலர் வரைவதற்கென் றுங்காங்கே நானுனென் றிருக்க விந்தப், பாங்குநின தெவறிவி லேன்விருத்தப் பாநடையாற் பகர்கின் றேனே. (க)

பின்னூல்க ளியற்றுமவர் முறைதவறு ரமைதிகளைப் பெரிது முன்னி, முன்னூலின் வழியுரைத்தா ரவர்தமக்கென் மொழிந்திடுங்கான் முதனூலாகு, மிந்நூலி னுண்டுகளும் பிறவுமுறை தான்மாறி யிருக்கு மேனு, நன்னூல்க ளாய்ந்துகற்றோர் குற்றமென ருய்த்துணர்ந்து நயப்ப ரன்றே. (உ)

மன்மொழியா மாங்கிலத்தாற் கவுஞ்சிலினும் வேறிடத்தும் வாய்ப்ப வையன், றன்மொழிபோற் பேசுகையில் வரும்பொருட் சொற் சாரமெலாஞ் சாரவைத்துத், தென்மொழியா லுரைத்து மெனி னமைதருமோ வதற்கதுவே சிறந்து நிற்கும், பன்மொழியும் பயின்றவர்கள் பகுத்தறிந்து பாராட்டிப் பகர்த னன்றே. (ங)

## நாட்டுச்சிறப்பு.

வேறு.

வானுயர் வரைமேற் படிந்துபெய் தாரை வடிந்துவந் தொருங்குறத் திரண்ட, தேனுயர் நதிக டாயரின் வளர்க்கச் செழித்தெழுஞ் செந்நெலின் வளமுங், கானுயர் மலையோ டலைதரு வளமுங் கதித்தவென் றுரைப்பதுஞ் சிறப்போ, தானுயர் மிதிலை மான்பதம் படலாற் றவம்பெறீஇ யுயர்ந்ததிவ் விலங்கை. (௪)

ஏனுறு மசோக வனமிலங் கிலங்கைக் கீழ்நா டென்பதும் பெயராற், சாலுறு மிதன்கண் வடதிசை யிருந்தே தனித்துமே விணையகன் றொருபா, லாலுறு தமிழுஞ் சைவமும் விரும்பு மறிஞருஞ் செல்வரும் வதியா, மேலுறு மொருசீர் நாடுயர் வளங்கண் மேவுயாழ்ப் பாணமென் றுளதால். (௫)

சீர்பெறு திருவாற் றிகடிரு நாட்டிற் சிறந்தயாழ்ப் பாணநன் னாட்டி, னேர்பெறு பலவு சூதமே கமுக விளமரக் காவுசூழ்ந் திமையோ, ரூர்பெறு சுதன்மை நிகருமா மனைக ளோங்குமெவ் ளொளிமிகப் பரப்பும், பேர்பெறு தலைமைத் தகுதியோர் பிறந்த பெரும்பதி மானியம் பதியே. (௬)

சாற்றிய வருள்சேர் சோழநே ரீழத் தலைநக ரளகைதன் னுருவை, மாற்றிய கொழும்பாம் வயங்குவேந் திருக்கை வலியுடை யரணமற் றுயர்ந்த, போற்றிய வினைய நாள்வரு மழகாற் புவியிலோர் பொன்னகர் கொளும்பு, மேற்றிய முதணு ணிலையுமே லுளவாந் தோற்றமு முரைக்குவன் சிறிதே. (௭)

## நகரச்சிறப்பு.

வேறு.

காடுகளுங் காம்புகளும் வெற்புகளுங் கதித்தெழுந்து கற்கள்செற்று, மேடுகளும் பதிவுகளு மிதமான சிங்களரு மேவு மன்னோர், வீடுகளுங் குடிசைகளுங் கழனிகளும் விரிதிரைகள் வீசு முந்நீர்க், கோடுகளுங் குண்டுகளு மாறுகளுங் குளங்களுமே கொளும்பு முன்னாள். (௮)

தொன்னாளிற் சிங்களரைத் தமிழினரைப் பறங்கிவந்து தொ
டர்ந்து பற்றிச், சின்னாளிற் புரந்துவரச் செயிர்த்தெடுத்த வொ
ல்லாந்தர் சிறிதுகால, மந்நாளிற் றாமளிக்கக் கலைத்தவரைக் கொ
ளும்பைமுத லணைய வந்தே, யிந்நாளிற் றனியரசு புரியுமிந்த
வாங்கிலர்க ளெளிதி னெண்ணி. (௯)

தனமிகுந்த கண்டியர சானகண் ணுச்சாமியுடன் சமரி னே
ற்றுச், சினமிகுந்த வவனொளிக்கத் தொடர்ந்து பற்றி வேலூரி
ற் சிறையில் வைத்தே, சனமிகுந்த தொல்லிலங்கை முழுதினுந்த
ன் னாணைசெல்லத் தனிக்கோ லோச்சி, மனமிகுந்த மனுநீதி த
வறாமற் றானரசின் வருமக் காலம். (௧௦)

ஏர்படுத்தித் தலைநகரை யரணமுத லானவெலா மியற்றுவி
த்துச், சீர்படுத்தி நாடுகளைச் சிங்களவெம் பகைகளையுந் தெளி
ந்து தம்மி, னேர்படுத்தி யரசியலைக் கோப்பதற்குங் குறைத
விர நேமி யுய்த்துப், பார்படுத்தி யாள்வதற்கும் வேண்டுமென
ச் சங்கமொன்றேற் படுத்தி யங்கே. (௧௧)

தோய்ந்தசில மதியினரை யமைத்தரசைத் தானியற்றத்
தொடங்கி மன்ன, னேய்ந்தசில வருடமட்டி லிவணிருந்தங் கக்
கால மெய்தி மன்னும், வாய்ந்தசில ரவர்தமினு மிம்மானா முதலி
யென்பான் வழியில் வந்தே, யாய்ந்தபல நூலறிஞ னாங்குமார
சாமிதனை யவர்கைக் கொண்டே. (௧௨)

இன்றுமுதலாகவினி யெம்மரசின் மந்திரிநீ யென்று சட்டந்
துன்றுசங்கத் தமைச்சாகத் தெரிந்தவர்தா மமைத்துவைத்த தொ
ன்மை தொட்டே, யென்றுமவன் சந்ததியே யமைச்சியலின் கு
டும்பமென விலங்கை தன்னி, வின்றுமுள தாமிதனை யாரறியா
ரெடுத்துரைப்ப னிதுபின் னிங்கே. (௧௩)

மன்னுமிவன் றந்தசிவன் கோவிலுநன் மடமுமிவண் வயங்
கு கிற்குந், துன்னியபே ரையாற்றுத் தீவிலொரு சிவாலயமுந்
துலங்குஞ் செட்டிப், பன்னுதெரு வதின்முத்து விநாயகரி னால
யமும் பாங்கி லுள்ள, முன்னுசெந்துப் பிட்டியிற்சுப் பிரமணிய
ராலயமு முதலின் வந்த. (௧௪)

கொங்குவளர் தருவனக்கே தீச்சுரமுங் குலவுதிரி கூட வெற்புந், தங்குதனித் திருவிலங்கைத் தலைநகரென் றிக்காலந் தனங்க டம்மாற், பொங்குகொளும் பக்காலம் பொருந்துநிலை யீதுகண்டீர் புகலு மிந்நா, ளிங்குவரும் புரத்தணிகள் சொல்லளவன் றுயினுஞ்சற் றியம்ப னன்றே. (கரு)

நீருரு மரணலைக ளடங்குதுறை மந்திரஞ்சேர் நீடு மன்றம்
பேருரு மரண்மனைசத் திரமடமா லயசிகரம் பெயர்பல் வேறு
தேரூரு நம் வீதிவகை யிருபாலுந் தொடர்மனைக டிகழுங் காடி
யேரூரு மியந்திரங்க ளேற்றபல கல்லூரி யிமைக்கு மின்னும். ()

பாங்குளபேர் வீதிதொறுஞ் சனநெருக்கம் பண்டவிதம் பரப்புதெற்றி, தீங்குபெறு வகையிடங்க டொறுந்தொறும்போர்ப் படைவீரர் திகிரி மன்னர், வீங்குநடு நீதிமன்ற நூதனங்கொள் சாலைமுற்ற வெளிவை யாளி, யோங்குமனை யகங்கடொறு மரிவையர்க ளருகுதொறு முயருப் யானம். (கஎ)

மின்சார பண்டிவிளக் குண்டுபுனற் குழல்களுண்டு விறல்சேர் யுத்தக், கொன்சார மானபடை வீரருண்டு காசடக்குங் கூட முண்டு, பொன்சார முளவெறுக்கை சுமந்துறுமண் டபமான புரமி தென்னி, னென்சார மென்னைகொலோ கொளும்பு நகர்ச் சிறப்புகளை யியம்பு தற்கே. (கஅ)

இருநகர மிபக்கபதிக் கொன்றளகை வடதிசைக்க ணிருக்கு மற்றை, பொருநகர மிலங்கையிது தென்றிசைக்க ணிருந்தது முன் னுயர்ந்த செல்வத், தருநகர மேய்க்குமிந்த நகரினுக்குத் தலைநகராய்த் தயக்க முற்ற, திருநகரங் கொளும்பாமே லதன்சிறப்பை யினைத்தெனயான் செப்பப் போமோ. (ககூ)

நீட்சியுள வரமியமேன் மாடிதெற்றி வீதிமற்று நிரம்பி யெங்குங், காட்சியுள விக்கொளும்பு நகர்வதிந்தோன் பண்டுவளங் கதித்து மன்னி, யாட்சியுள தனிமானிப் பதியுதித்தோர் ஞற்றியபே ரறங்க டம்மான், மாட்சியுள ஞனபொன்னம் பலமரபு முதலனைத்தும் வகுப்பன் கேண்மின். (உ0)

## மரபினர்மாட்சி

தென்னாட்டிற் றலந்தீர்த்தந் திகழ்சோழ நாடுமுதற் செப்பு கின்ற
நன்னாட்டிற் சவுந்தரனு ராசிருந்த திருப்பாண்டி நாட்டி னின்றும்
பன்னாட்டிற் றிருமகளுக் கிடமாகக் கவின்மாணிப் பாயென் றிந்த
முன்னாட்டின் வந்தசைவ வேளாள முதன்மானு முதலி யென்பர்.

ஊருளருந் திருவுளரு மிலங்கையர சியற்றுமுத்தி யோக
மென்னுஞ், சீருளரும் படிப்படியே திறலரச சேவைகளிற் சிற
ந்து மன்னும், பேருளரும் பெருங்கீர்த்தித் திறத்துளருந் தரும
மதிற் பேசற்கொண்ணு, வேருளரு மாகுமிவர் தமக்கடிகா ணீ
ம்மானு முதலி யென்பேம். (உஉ)

வாய்ந்துவரு மிவற்குமுன்னம் வருகுநரை வரைமுறையடி வா
ழை யென்ன, வாய்ந்து புகன் றிடுவனெனிற் காலநனி கழிந்தத
னு லரிது கண்டீர், தோய்ந்துவருங் குரிசிலிவன் பின்னுமொரு
சிலரொழியத் தொல்லை தொட்டே, யேய்ந்துவரு மவர்தமைநா
னுய்ந்துமுறை வழுவாம லியம்பு கின்றேன். (உ௩)

போற்றுமர பிதன்கணந்நாட் புண்ணியமே யுருவாகப் பொ
ருந்தி வந்து, தோற்றுமொரு பேரறிஞன் றேன்றுமுடற் கட
மையென்றே தொல்லை நூல்கள், சாற்றுமற முள்ளவெலாந் தா
ன்விரும்பி யியற்றிவருந் தரும மன்னன், பேற்றுலவ வழங்கு
பொன்னம் பலமிவனை யாரறியார் பெரிது மிங்கே. (உச)

ஆர்பூத்த சடையானை யனுதினமு மறவாத வன்பு பூண்டோ
னோர்பூத்த குணங்கொடில்லை யம்பலமென் றிம்மரபி னிலங்க வ
ந்தோன், பேர்பூத்த விவன்பயந்தோன் பேரறமும் பெருநோன்
பும் பெரிது முள்ளோன், சீர்பூத்த பொறுமையுளோ னிவன
ருணு சலமெனும்பேர் திகழப் பெற்றேன். (உரு)

தொடுத்தியம்பு மிந்தவருணுசலவே ளரிதுபெற்ற தோன்
றல் கண்டீர், மடுத்தியம்பும் புகழ்பொறுமை வாய்மையறந் தேசு
கலை மகிபர் தம்மாற், கொடுத்தியம்பு மதிப்புநிறை சிவநேயந்
தனமிவற்றிற் குறைவொன் றின்றி, யெடுத்தியம்பு மனையபொ
ன்னம் பலமுதலி யாரெனமே லியம்பும் வள்ளல். (உ௬)

ஈண்டுவருந் தனியிலங்கைத் திருநாட்டைத் தர்மமைச்சா யிருந்து பண்செய், தாண்டுவருந் திருவாள ராங்குமார சுவாமியுட னவனி யெங்கு, நீண்டுவரும் பேர்ராம நாதனரு ணாசலநா ணிகழ்த்து மின்னோர், பூண்டுவருஞ் சீர்பெருக்கு மிணையபொன்னம் பலம்பயந்த புதல்வ ரன்றோ. (௨௭)

பன்னுமரா புயரவந்தோ னாறுமுகத் தோன்றலவன் பயந்த செம்மன், மன்னுமிவன் முன்னரச ரர்ராச்சிக் கவுஞ்சிலுக்கு மதிக்கத் தக்க, துன்னுமதி சாலுமங்கத் தவனாக விருந்திலங்கை துலங்க வைத்து, முன்னுமரும் பேருலவப் பெறுங்குமார சுவாமியெனு முதலி யம்மா. (௨௮)

சாற்றுமிவன் றலைநாளி னலந்திகழ்நா கம்மாளைத் தயங்க வேட்டே, தோற்றுமழ கேய்ந்துவட மீளிகர்த்துத் தவம்விளக்கித் தொல்லை ஞாலம், போற்றுமரு ளமைந்திலங்குஞ் செல்லாச்சித் தனயையுடன் புகலென் றுற்றோர்க், காற்றுமுப காரிமுத்துக் குமாரசாமித் தனயனையு மரிதிற் றந்தான். (௨௯)

தோன்றுதவத் துருவாகத் துலங்குபொன்னம் பலமுதலித் தோன்ற லுக்கிங், கேன்றுவிருந் தேவேள்வி யியலறங்க ளிவையனைத்து மியற்று தற்கும், போன்றுசுர பதியிலங்கை யாளுவதற் கொருமூன்று புதல்வர் தம்மை, யீன்றுநமக் கீந்திடற்குந் தான்பிறந்த செல்லாச்சி யிவடா னம்மா. (௩௦)

மனையிழந்து நாடிழந்து நகரிழந்து மயோத்திதனை வழுவா தோம்பும், வினையிழந்துந் தனிமகனைத் தானிழந்தும் பெறற்கரிதாம் வீடு தன்னைப், பினையிழந்து விட்டாலுஞ் சத்தியத்தை யங்குகடைப் பிடித்து நின்றே, தனையிழந்து மிழவாத மன்னனரிச் சந்திரன்றன் சரிதந் தன்னை. (௩௧)

அங்கிலத்தின் மொழிபெயர்த்திட் டிலண்டனகர்ப் பாலேகி யரண்மனைக்கட், டங்குமகா ராணிதனைக் கண்டுநயந் தளவளாவிச் சார்ந்த பின்னர்ப், பங்கமிலன் வாய்மைதனி லொருவேந்த னவன்சரிதம் படிப்ப னென்றே, பொங்குமரிச் சந்திரனின் சரிதமுற்றும் புந்தியுறப் புகட்டச் செய்ய. (௩௨)

உனதருமைக் கலையறிவு முயர்வேந்தின் சத்தியமு முவப்பா மென்றே, தனதருமைக் காத்துமணி வாளெடுத்து வெரின்றேள்க டடவி யின்னு, மனதருமைத் துரைமகற்குப் பலவரிசை மாராணி மகிழ்ந்து செய்பா, துனதருமைப் பெருங்கீர்த்தி யோங்குநயிற் பட்டமவன் சூட்டப் பெற்றே. (௩௩)

பொன்னிலங்கை யாண்டிருக்கு மங்கிலரும் வியந்துவந்துபுகழ்ச்சி செய்ய, மன்னிலங்கை வந்தவனு மன்னவரு மற்றுளரு மதிக்க மன்னி, முன்னிலங்கை யுளநீதிச் சட்டநிரு பணசபைக்கண் முறைகள் வைத்துத், தென்னிலங்கை புரந்தவனு மினையமுத்துக் குமாரசாமிச் செம்ம லன்றே. (௩௪)

ஆதவன்சென் றத்தமியாத் தேயமெங்கு மோராழி யாணை கொண்ட, மாதவஞ்சான் மாராணி யார்காங்கி ழாகமுறை வழங்கு மங்கே, மீதவன்றன் காமாக மாவலியோர் காநிகர்க்க மேன்மை பெற்று, லோதவன்றன் சீர்க்குலகி லார்சீரை யொப்பாக வுரைப்ப தம்மா. (௩௫)

எண்ணுலகைப் புரந்துவருந் தனியாசன் றனைமரிங் கிலந்திலங்கோர், கண்ணுலவுஞ் சர்வகலா சாலைதனக் கமையுமெனக் கருதி யங்நாட், பண்ணுலவும் பலகலையும் படிப்படியே யரிதரிதாய்ப் பயிலக் கற்று, மண்ணுலகிற் சிற்பநுண்ணூல் வாய்ந்ததெனச் சித்தியதின் மாணப்பெற்றே. (௩௬)

ஆக்கமரு ளறிவுகலை யருந்தொழில்க ளமைந்துவரு மமெரிக் காவிற், றூக்கமுள வொருநகர மங்கணுறு மதிவிநோத சாலை யின்க, ணேக்கமுறுஞ் சிற்பவகை விளக்குமதி பதியாக மேன்மை யுற்றோன், பூக்கவிஞ னந்தனென்போ னிவன்றுணிப் பெருந்தகைதன் புதல்வன் கண்டீர். (௩௭)

முன்மனையாள் கதியதற்கு மேற்குமார சுவாமியெனு முதலிக் கின்பப், பின்மனையா ளளித்தவிசா லாட்சிதனை மணம்புரிந்த பெரும னின்னோன், றன்மனைநேர் தருந்தரும னெதிர்மன்ன சிங்கமெனத் தகும்பேர் பெற்றே, மன்மனையார் கவுஞ்சிலுக்கு வந்தவனு மானமரு மகன்றான் கண்டீர். (௩௮)

ஆய்ந்துகரு திடினிலங்கை யாங்கிலர்கைப் பட்டவர்க ளரசு
செய்ய, வேய்ந்துவரு மொருசிலநா ளாமளவில் வேந்தியனுக்கி
யைந்த வெல்லாம், வாய்ந்துவர நெறிநிறுவு மந்திரத்து மந்திரி
யாம் வகுப்பி னுக்குட், டோய்ந்துவருங் குடும்பமென்றே யிக்
குடும்பந் தொன்றுதொட்டுத் துலங்குங் கண்டீர். (௩௯)

கருகுலமுந் தமிழரசுந் திருத்தலமுஞ் செந்தமிழுங் கவினு
ரென்னு, வருகுலமு மாரமுதும் வாய்ந்தவட தேயநின் றும் வ
ந்து மன்னி, பொருகுலமு மீடிலையென் றியாழ்ப்பாணத் திரு
நாட்டி னுலவி நின்ற, விருகுலமுந் துப்பகுலத் தினர்தமை
யும் வரன்முறையே யியம்பு கிற்பேன். (௪0)

நயந்துவரும் வேளாண்மை நாடுமதிப் புள்ளரகு நாத னின்
னோன், பயந்துவருந் தனயனிந்த மரபையென்று மென்மே
லும் பல்க வைப்போன், வியந்துவருங் குரிசினன்னித் தம்பி
யெனு முதலியென்போன் விளம்பு மிந்த, வுயர்ந்துவரு மண்ணா
லுக்கு முவப்புடைய பலதனய ருண்டு கண்டீர். (௪௧)

ஆற்றறஞ்சா லிம்முதலி தனதுமனை யாகியமுத் தாச்சி யம்மா
ள், சாற்றறஞ்சா லொருதனயை தனையளித்த தலைநாளத் தனயை
தன்னை, யேற்றறஞ்சான் றிருந்தபொன்னம் பலமுதலி தனது
மனைக் கிருந்த நற்பேர், தேற்றறஞ்சால் சேர்ராம நாத னுக்கென்
றேமதித்துத் திசழ வைத்தான். (௪௨)

இன்னுமிவன் மரபுதுய்ய னிருந்தரும னின்னிலத்தி லெவ
ர்க்கு நல்லன், மன்னுபெரும் பொருள்களுளன் மனையறஞ்சா
ன் றிலங்குபெரு வாழ்வு பெற்றோன், பன்னுசிவ பத்திபுளோ
னாலயங்கட் கனுதினமும் படிய ளப்போன், முன்னுமரு ளோ
ங்குகுணத் தோனமசி வாயமெனு முதலி கண்டீர். (௪௩)

நலமதித்த குரிசிலிவன் றுனியற்றுந் தனியறத்தா னயந்து
பெற்ற, நிலமதித்த தனயரவர் பேருடையர் மேலதுநா னிகழ்த்
து கிற்பேன், குலமதித்த யாவரையுங் கூறவெனிற் சாலுமது
கூடுங் கொல்லோ, தலமதித்த முதலிபொன்னம் பலத்தறமும்
வரலாறுஞ் சாற்று கிற்பேன். (௪௪)

## ஸ்ரீமான். பொன்னம்பலமுதலியார் வரலாறும் அவர்களின் தருமப்பேறும்

வேறு

எண்ணிய வுத்தி யோக மிறையவன் றெழும்பு பூசை
கண்ணிய மருள்சீர் செல்வங் கடைப்பிடித் தறங்க ளென்றும்
பண்ணிய வள்ளல் பொன்னம் பலப்பெயர் முதலி யென்னும்
புண்ணிய புருடன் செய்த புண்ணியம் விளங்கு மென்றும். (சரு)

தந்துறு தந்தை தாயர் தாஞ்சிவ கதியைச் சேர
வந்துறு மிளமை தன்னின் மாதுல ருன வன்பு
முந்துறுங் குமார சாமி முதலிதான் கொளும்பிற் கூவிச்
சந்துறு மாங்கி லத்தைத் தமிழுடன் பயிற்று வித்தான். (சகூ)

அறைதருங் கல்வி கற்றே யந்தநாட் கலங்கள் கொண்டு
துறைதரும் பண்டங் கட்குத் துலைநடு நானவப் போல
முறைதரும் வரிக ளேற்கு முதலதி காரி யான
நிறைதரு முத்தி யோக நிலைமையி னிருந்தா ருங்கே. (சஎ)

திண்ணிய வுத்தி யோகத் திறமையா லிதற்கு மேலாம்
விண்ணிய னகர மேய்க்கு மேலைமா காண மாட்சி
நண்ணிய வதிகா ரிக்கு நலந்தரு முதலி யாக
வெண்ணிய வுத்தி யோக வேற்றமும் பெற்றானன்றே. (சஅ)

அங்கவ னிதினு மேற்ற மாதலை நேர்மை தன்னைப்
பங்கமின் முயற்சி தன்னைப் பலருப கார்ந் தன்னை
யிங்குகண் டிவனல் வேந்த ரிடுக்கணைத் தீர்வ மென்றே
சிங்கள தமிழ்மேன் மக்கள் சேர்ந்துபின் பற்று வார்கள். (சகூ)

இன்னவா றெழுகு நாளி லினியமா துலன்றன் பெற்ற
சொன்னமாண் புடனே கற்புந் தூயசெல் லாச்சி யாச்சித்
தன்னமர் சிலாமல் வந்து தவமொரு வடிவாய்த் தோன்றும்
வன்னமா மகளை யாங்கே வதுவையுஞ் செய்து வைத்தான். (ருo)

முனையற நலத்தி னாலே முதுமைசே ருலகம் வாழ்த்த
மனையற மரிதிற் காத்து வருமிவன் முதனாட் செய்த
வினையற முன்னி யிந்த மேதினி தனினு மேலுந்
தனையற மோம்பு மென்னாத் தானற மோம்பு வானால். (௫௧)

நலந்தனை யுதவு மான்ம நாதனைத் தாபித் தற்கோர்
தலந்தனை யெடுக்க வேண்டித் தலைநகர்க் கொளும்பின் மேல்பாற்
சலந்தனை யலைகொண் டுய்க்குஞ் சலநிதிக் கரைய தான
நிலந்தனை யிடமே யாக நிதானஞ்செய் ததற்குப் பின்னர். (௫௨)

ஆங்குதன் னாம மாம்பொன் னம்பல வாண நாதற்
கோங்குமோ ராலய யத்தை யுவப்புட னாக்கு வித்தே [ற்
யீங்கொரா யிரத்தி யெண்ணூற் றைம்பத்தே ழெனுமவ் வாண்டி
றேங்குமன் பாரக் கும்பத் திருவபி டேகம் பண்ணி. (௫௩)

சிந்தனை தனிலெஞ் ஞான்றுஞ் சிவனடி யரணென் றுன்னி
வந்தனை புரியு மேந்தல் வருமறு காலப் பூசைப்
பந்தனை யமைத்து மேலும் பங்குனி விழாவும் வைத்தே
நிந்தனை யகலி ரண்டு குரவரை நியமித் திட்டான், (௫௪)

சிவாலய மதற்கோர் சார்பிற் றிருமடா லயமுந் தந்தே
யவாவுடன் மனைகள் கோலி யருச்சக ரிருக்க வைத்துத்
தவாவகை பூசை யாற்றத் தண்மலர்த் தோட்ட மாக்கி
யுவாமதி கண்ட நீரி னுவகையா லோங்கி யுற்றான். (௫௫)

கதியினை யருளை வாக்கைக் காவலர் வசியந் தன்னை
நிதியினை மகாரை நேரு நெடும்பகை வென்றி தன்னை
மதியினை யுதவ நின்ற வாலையை மனையில் வைத்தே
விதியினை நாடி நாளும் விந்தையாய்ப் பூசை செய்வான். (௫௬)

தினந்தின மருளான் மார்த்தந் திகழ்சிவ பூசை பண்ணி
மனந்தின மிசைந்தே யாங்கண் வந்தபண் டார மென்னு
மினந்தின மிரண்டு பந்தி யிருத்திநீர் தத்தஞ் செய்தே
யனந்தின முண்ண வூட்டி யதற்குமேற் றானு முண்பான். (௫௭)

நெற்றிபுண் டரநற் பொட்டு நிலவுடை பஞ்ச கச்சு
பற்றிய கரம்பொற் றண்டு பண்புறு தலைமேற் பாகை
செற்றிய மேனி யங்கி திருச்சியிற் பாத ரட்சை
முற்றிய விந்தக் கோல மொழியலாந் தரித்த தேயோ. (ருஅ)

ஆனவன் பணிக ளோடு மாலயக் கருமம் பார்ப்பான்
மானவன் மனையி னின்றும் வரும்வழி யதினூ றேயா
மேனவர் குறைகள் கூற வினவியுல் லாச மாக
வானவன் போல வந்தே மடாலயத் திருந்து கொள்வான். (ருசு)

மகரசங் கிராந்தி மேட மதியிற்சங் கிராந்தி யாதிப்
பகரவொண் ணாத நல்ல பண்டிகைக் காலந் தோறுஞ்
சிகரமேல் விளக்கே போலத் திகழ்புகழ் வளரிச் சீமான்
நிகரமா யுறவோர் வாழு நீண்மனை தொறும்போய் மீள்வான். (சு0)

வலமதி னுயர்ந்த மன்னர் மகிழ்ந்துறை கொளும்பி னோர்சார்
நலமதி லுயர் கல்யாண நதியினுக் கழைத்து நண்பாங்
குலமதி னுள்ளோர் தம்மைக் கூட்டியே பாதை யேற்றிச்
சலமதி னுலாவி யாடித் தங்கிப்பின் மனைக்குச் செல்வான். (சுக)

புலங்களி னவாக்கொண் டுற்ற பொருளிலர் தம்மைத் தங்கள்
குலங்களி னுள்ளோர் தம்மைக் குடும்பமோ டொருங்கே கொண்டு
கலங்களி னேற்றிச் சென்றே கவின்வட தேய நண்ணித்
தலங்களி னுள்ள யாவுந் தரிசனஞ் செய்ய வைப்பான். (சுஉ)

கன்னியர் தமக்கு நல்ல கடிமண மியற்று தற்குஞ்
சென்னிமேன் மதியஞ் சூடுஞ் சிவன்றிருப் பணிக ளுக்கு
மன்னிய பசியால் வாடும் வறிஞரா மவர்க ளுக்குந்
துன்னிய நோயா ளர்க்குஞ் சொன்னவா றுதவி வந்தான். (சுங)

இந்தயாழ்ப் பாணத் தாரங் கிறந்திடிற் புதைத்தி டாமற்
சொந்தமாய்த் தகனஞ் செய்வான் சுடலையு மாக்கித் தந்தான்
வந்தநூற் கலைதேர் வேத வனத்துள குரவ மாரைச்
சந்ததங் கிரியை யாற்றத் தகும்படி யழைத்து வைத்தான். (சுச)

தந்துள தாய்நர் டாகத் தயங்குயாழ் ப்பாண நின்றும்
வந்துமுன் வதிகின் றோர்க்கு மற்றுளோர் தமக்கும் வாய்ப்ப
முந்துள கொழும்பின் மேனாண் முதன்முத லிடங்கள் சோறு
நந்துத லிலாத சீமா னவிலுமிச் சீயா னன்றோ. (௬௫)

தேர்தரு மறிவு சாலாச் சிங்களர் நகரே யான
பேர்தரு கொழும்பின் மேனாட் பேதமை யிலாத ஞானச்
சீர்தரு தமிழை மேலாஞ் சிவமத மதனை யென்று
மார்தரு மாறு செய்யு மறிஞனு மிவனே யம்மா. (௬௬)

ஓதுல கிதுவென் றுண்மை யுணர்ந்திடாக் கொழும்பிற் றானே
தீதுல வாம னாட்டுஞ் சிவாலய மடத்தில் வைத்துத்
தாதுவ வுறுந்தா ரேந்த றானத்துட் சிறந்த தென்றே
யாதுல ரறவோ ருண்ண வன்னமுங் கொடுத்து வந்தான். (௬௭)

தூயபே ரொளியார் ராமேச் சுரனரு ளுருவ மாக
வாயபே ரருளான் மன்னு மாலய முன்பு பாங்கர்ப்
போயபே ரழகு காட்டும் பொற்றுசத் தம்ப மொன்றை
மேயபே ரன்பி னாலே மேலைநா ணிறுத்தி வைத்தும். (௬௮)

மாசல பதிவெரிங்கண் மன்னுறு சேது தீர்த்தத்
தேசல மூழ்கு வோர்க ளிருந்திளைப் பாறு தற்காய்க்
கோசல நாடன் வில்லாற் கொழுந்தனுக் கோடி யின்கண்
மாசில வாக வந்நாட் சத்திர மமைத்து வைத்தும். (௬௯)

பிறந்ததன் மக்க ளுக்கும் பெரும்பய னாகும் வண்ண
நிறைந்ததன் பெயரை யிங்கே நிலவுற நிறுத்தி வைத்தோன்
சிறந்ததென் னிலங்கை வாணர் செயற்கரி தாகச் செய்த
வறந்தன துருவே யாம்பொன் னம்பல முதலி தானே. (௭௦)

சொல்லவும் வேண்டுங் கொல்லோ சுற்றமா மவரைப் பேணி
நல்லதோர் நகர நேராய் நாடுறத் தழுவி வந்தான்
செல்லலே யிலாம வின்ன செயற்கருஞ் செயல்க ணாடி
யெல்லைதா னிலாமற் செய்தே யிருமைப்பே றுடைய ஞானன் ()

ஆன்றுள வறங்க ளுக்கு மளவைதீர் தகுதி கட்குஞ்
சான்றுமற் றளவை யென்னாச் சாற்றுவ தெதற்கு மண்மேற்
றோன்றுக புகழோ டென்றே சொற்றவா றாகத் தோன்று
மூன்றுநன் மக்க ளுந்தான் மொழிந்தகண் கூடு கண்டார். (௭௨)

தனந்தனைப் பெரிதென் கேனோ தருமமே பெரிதென் கேனோ
கனந்தனைப் பெரிதென் கேனோ கருணையே பெரிதென் கேனோ
மனந்தனைப் பெரிதென் கேனோ மக்களே பெரிதென் கேனோ
வினந்தனைப் பெரிதென் கேனோ வெதனையே யறைவ னம்மா. ()

ஆவியு முடம்பு மான வனன்னிய மாகி யென்று
மேவியு ளுவப்ப வேண்டும் விருந்துகள் விரும்பிக் காத்துக்
காவியு மொவ்வா நோக்கங் கவின்றசெல் லாச்சி யாச்சித்
தேவியுந் தானு மாங்கே சிறப்புடன் வீற்றி ருந்தான். (௭௪)

நாளுநன் மக்கட் பேற்றை நாடின ரிருக்குங் கால
நீளுநன் மன்னர் யார்க்கு நேத்திர நிகர்க்கத் தானே
யாளுநன் னிலத்தை யென்னா வரியசோ திடநூல் கூறுங்
கோளுநன் னிலையி நிற்கக் குமாரனங் கொருவன் வந்தான் (௭௫)

தோன்றல்வந் திடலுந் தந்தை தூயநீ ராடி யாங்கே
யேன்றநல் லறவோ ரேனோர்க் கேற்றதா னங்கள் செய்யாச்
சான்றபல் கிரியை யாற்றத் தக்கமூ தாதை யாகி
யான்றவர் குமார சாமி யாமெனப் பெயரை வைத்தார். (௭௬)

சித்திர மிலகு பாலன் சிறுமைதா னிலாத செல்வ
மித்திர ருடனே யாட மேதகு தாதை பஞ்ச
வத்திர னருளாற் பன்னூல் மனனுறப் பயிற்ற வந்தப்
புத்திரன் கலையுந் தானும் பொற்புற வளர்வ தானான். (௭௭)

மாமக னுவகை நல்க மனையுநல் லின்ப நல்கக்
காமக பதிகண் டுள்ளக் காட்சிசே ரிலங்கை யென்னும்
பூமக ளுளந்தான் றுள்ளப் புகலுமென் னான்க றங்க
டாமக னிலத்திற் றேங்கத் தகுமுறு வினர்க ளோங்க. (௭௮)

காவலர் கண்போ லேத்திக் கனந்தா நயந்து பாங்கிற்
பாவலர் போற்றப் பொன்னம் பலமெனு முதலி யார்தான்
தேவலர் கருணை கூர்ந்தே தியாகதா னங்க ணல்கிப்
பூவலர் புகழ்வா னேங்கப் பொற்புடன் வாழு நாளில். (எகூ)

# ஸ்ரீ ராமநாதோற்பவம்

தலனுள தமிழும் போற்றுஞ் சைவமுந் தரும மின்னும்
வலனுள தனிச்செங் கோலும் வாழ்வுற வந்து பொன்போற்
புலனுள ராம நாத பூபதி யுதித்தற் கான
நலனுள கால மீங்கே நணுகலாற் போலு மன்றே. (அ0)

சதம்பர ஞானந் தூண்டத் தையலு மகனுந் தானும்
பதம்பர வுறுவா னெண்ணிப் பாரத வருடத் தேகிச்
சிதம்பர மாதியான திவ்விய தலங்க டம்மின்
னிதம்பர னுபயப் போதை நியமமாச் சேவை செய்தே. (அக)

சீதையைச் சிறைக்கண் வைத்த தென்னிலங் கைக்கு வேந்தாம்
பேதையைக் கோற வந்த பிரமகத் தியைத்தான் போக்கத்
தாதையை யயோத்தி யோடுந் தான்பிறந் திழந்து கான்போம்
மேதையை யான ராமன் மேலைநாட் டாபித் திட்ட. (அஉ)

சுராந்தரு ளளிக்கும் ராமேச் சுரன்றிரு முன்பு நின்றே
யிரந்தரு வாய தேவே யின்னுமாண் மகவு நல்க
வரந்தரு கென்று வேண்டி வள்ளலுந் தன்னா ரேகிச்
சரந்தரு விழிமா தோடுந் தலைமக னேடும் வைக. (அங)

நீர்த்திரைச் சேது தீர நிலவிய ராம நாத
மூர்த்திநல் வரத்தி னாலு முந்துசெய் தவங்க ளாலும்
பூர்த்திபெற் றிலங்கு கர்ப்பம் புண்ணிய வதிவ யின்க
ணார்த்திதந் திடனு மண்ணாற் கலைவதீ ருவகை யான. (அச)

ஆதபத் தழல்கின் ரேுரை யருநிழல் போலப் போற்றுந்
தாதையு மதியந் தோறுந் தானமுந் தியாகந் தானும்
போதவே யளித்து நாதன் பொற்பத நினைந்து மிக்க
காதலுற் றருளை முன்னக் கருப்பமும் வளர்ந்த தன்றே. (அரு)

ஏர்பெறு மனுநூல் செல்ல விலங்கையு மரசும் வாழப்
பார்பெறு தருமந் தேங்கப் பாவலர் கலிக ணீங்கச்
சீர்பெறு சைவ மோங்கச் செந்தமிழ் சிறந்து பொங்கப்
பேர்பெறு மறையோர் மல்கப் பெருநில மகள்க ளிக்க. (அசு)

உன்னுமிக் கலியு கத்தி லுற்றநா லாயி ரத்துப்
பன்னிய தொழாயி ரத்தைம் பானிரண் டொருங்கே செல்ல
மன்னுற வரும்வி ரோதி கிருதெனும் வருடந் தன்னிற்
றுன்னுசித் திரையி லேந்திற் றுலங்கிய புதவா ரத்தில். (அஎ)

பேடமா மதிமீன் சோதி மீனலக் கினத்திற் செவ்வாய்
கூடமால் காரி வாக்குக் கூறுமைந் தினிலே ராகு
நீடவோ ரேழிற் பொன்மே னிலவுபன் னிரண்டிற் சுங்கன்
நாடவே நவமாங் கோள்க ளன்னிலை யாக நிற்ப. (அஅ)

நோக்குற நம்மோ டொன்றாய் நுவன்மனு நானே ராக்கிக்
காக்குறக் கலியிற் காவற் கடவுள்வந் துதித்த வாபோற்
றேக்கிய கருணை செய்வான் றென்னிலங் கையர்க்கோர் யார்க்கும்
பாக்கிய மாகப் பாலன் பாரில்வந் துதித்தா னம்மா. (அகூ)

பிறந்தனன் மைந்த னென்னப் பிதாவட திசைக்க ணேகி
யறந்தனக் கியைந்த வாற்றி யாதுலர் தமையும் பேணிச்
சிறந்ததன் சுற்றத் தார்க்குஞ் செயத்தகு விருந்து மூட்டிப்
புறந்தரீ இச் சூதி கைக்கட் புதல்வனைத் தரிசித் தானால். (கூ0)

எல்லவர் தமக்கு மந்நா ளினியநற் சகுனந் தோன்ற
வல்லவர் நூல்கள் கூறும் வைதிகக் கிரியை யாற்ற
வில்லவர் பணியு மந்த விண்ணவன் குறிய தாக
நல்லவர் தெரிந்து ராம நாதனென் றிட்டார் நாமம். (கூக)

பின்புசின் னாட்கள் செல்லப் பிரானருட் பேற்றி னாலு
முன்புசெய் யறங்க ளாலும் மூத்தவர்க் கிணையி னாலு
மன்புதந் தருள்கை யாலு மாரிவற் கிலக்கென் றோத
வின்புமிக் கின்னுமாங்கோ ரிளைய சீர்ச் சுதனைத் தந்தார். (௩௨)

எண்டகு புவியி லுள்ள வெழிலுடைத் தேயந் தம்முட்
காண்டகு மீழத் தோர்நங் கதித்தபுண் ணியங்க ளெல்லாஞ்
சேண்டகு குழவி யாகத் திரண்டிவ ணுதித்தல் கண்டே
மாண்டகு மறிஞர் வைத்தார் மகற்கரு ணாச லப்பேர். (௩௩)

தோற்றிய குழந்தைக் கான தொன்மறை விதிக ளின்னுஞ்
சாற்றிய வாறு செய்தே தளர்நடைப் பருவ நீங்க
வேற்றிய வாங்கி லத்தை யெழிலுள தமிழை மேலும்
போற்றிய வடநூ றன்னைப் போதவே பயில வைத்தான். (௩௪)

பிறைமதி போலு மிந்தப் பிள்ளைகள் வளர்ச்சி யாலு
நிறைமதி தோறுங் கல்வி நிரம்பிய வளர்ச்சி யாலு
முறைமதி யமைச்சர் போலு முயர் மதியுடைமை யாலு
மிறைமதி யுடைய தாதைக் கிசைக்கலா மகிழ்வு பூத்த. (௩௫)

முன்னவன் குமார சாமி முதன்மைசேர் ராம நாதன்
பின்னவன் பின்பு வந்தோன் பிறங்கரு ணாச லந்தா
னென்னவர்ப் புகல்வ மேரு விலங்குமுச் சிகரம் போலு
மின்னவர் தாமே யன்றோ விலங்கைமே லுளமு வேந்தர். (௩௬)

சீருடைத் திருவி லீசன் சேவையி லீகை தன்னிற்
பேருடைப் புதல்வர்ப் பேற்றிற் பிறங்குமன் னவர்ம திப்பிற்
பாருடைப் புகழிற்பொன்னம் பலத்தனி முதலி யார்க்கு
நேருடைத் தாக விந்த நீணிலத் தொருவ ருண்டோ. (௩௭)

சிவமிக விளங்கு மூன்று திறலரிக் குருளை முன்னஞ்
சுவமிக வைக வைத்துச் சொல்லிய மதிகள் பத்தும்
நவமிகச் சுமந்து தந்த நலந்திக மூதாத் தாயாந்
தவமிகப் புரிந்த தாயிற் றூயருங் கலியி லில்லை. (௩௮)

யார்வரு மதிக்க வேந்த ரிறைத்தொழில் வினவ மைந்தர்
மூவரு மொருவர் போல முதன்மைபெற் றிருத்தல் காணுப்
பாவரு சீரார் பொன்னம் பலமுகற் றேவி யாருந்
தேவரு நலம்பா ராட்டுஞ் சிறப்புடன் வாழு நாளில், (கூகூ)

நிகழ்ந்தபேர் கங்கள் முற்று நீடவுந் துய்த்து மாக்கள்
புகழ்ந்தபூ லோக வின்பம் பொய்யென வெறுத்துக் கொல்லோ
மகிழ்ந்தசெல் லாச்சி யாச்சி வயதுபத் தொன்ப தாகத்
திகழ்ந்ததே வுருவ மெய்திச் சிவகதிப் பேறு பெற்றாள். (க00)

என்றநல் விளமை தன்னி னில்லறங் கண்டிட் டானு
மீன்றநல் லமையத் தோகை யெய்தபத் தினியம் மாளுக்
கான்றநல் லறிவும் வாக்கு மமைந்ததன் மக்கட் குள்ள
சான்றநல் லாற்றல் காணுத் தவக்குறை விருந்த தென்னே. ()

ஆவியை யிலாத காய மாகவே முதலி யார்தந்
தேவியை யிழந்திட் டானுஞ் செல்லலை யிலங்கை யென்னுங்
கோவியை யொருமுன் றூன கோடுநேர் மகார்க ணீக்கப்
பூவியை மகிழ்வுஞ் சீரும் புகழுடன் பொலிய வுற்றார். (க0உ)

குலம்புரி தவத்தின் சீராற் குலவுமிம் மூவர் தம்முள்
வலம்புரி சூழ நாப்பண் வதிசலஞ் சலமே மானு
நலம்புரி யிராம நாத நாயக மணிதன் சீர்த்தித்
தலம்புரி சரித மல்லாற் சாற்றவுஞ் சரித முண்டோ. (க0ங)

## கல்வி பயிறல்

### வேறு

ஓங்குமிளம் பருவமதி னுயாரச பாடையென்றே யுலக மெங்கும், பாங்குபெற வழங்கிவரு மாங்கிலத்தை யுயர்தரத்துப் பயிலச் சென்னை, யாங்குநயந் திருந்தரிய சாத்திரத்தின் பகுப்பையெலா மமையக் கற்றே, தேங்குபல தேயமுடன் றென்னிலங்கை செயுந்தவத்தாற் சித்தி பெற்றும், (க0ச)

சீரியநான் மறையாதி முதனூல்க ளத்தனையுந் தெளித்துக்
காட்டு, மாரியமாம் வடமொழிதான் றென்மொழியோ டெம்
மொழிக்கு மழகு செய்ய, நேரியமேன் மொழியாமென் றுண
ர்ந்துவியா கரணமுட னின்ற மற்றுந், தேரியநூற் கலைகளைநற்
குருமுகமாய்த் தனதுமனந் தெவிட்டக் கற்றும், (௧௦௫)

ஏய்ந்தபல புலவருட னணிமதுரைச் சங்கமமர்ந் திறைவன்
முன்னு, ளாய்ந்ததமி ழோவினிமை பெற்றிணையற் றிருந்ததெ
ன வகத்துட் கொண்டு, தோய்ந்தபொருட் டருக்கமுடன் காவி
யமு மிலக்கணமுந் துகடீர் ஞானம், வாய்ந்தபல நூல்களுமாய்க்
கற்றருமைச் செந்தமிழை வரம்பு கண்டும், (௧௦௬)

மூன்றுசுட ரொருமுகத்தே யமர்ந்துபுற விருள்கடியு மு
றைமை தன்னைப், போன்றுபுக லொருமூன்று பாடைகளு மிக்
குரிசில் புந்தி யுற்றே, சான்றுபெறப் பேசுபன்னி யாசமதாற்
றுனியற்றித் தருஞ்சீர் நூலா, லான்றுவரு மவனிமிசை யவரவ
ர்த மகவிருளை யகற்று மம்மா. (௧௦௭)

கொங்களவுந் தார்மார்பக் குரிசிலுக்கு நாடெடுத்துக் கூறு
மூன்று, பங்களவு மாத்திரமோ பயிலீழ மண்டலத்தோர் பகர
நின்ற, சிங்களமும் லத்தீனுங் கிரீக்குடனே பாளியெனச் செப்பு
கின்ற, விங்களவில் பாடைகளு முரியவருட் சாலவிவர்க் கெளி
ய தன்றே. (௧௦௮)

உற்றவுல கோம்புதற்கோ வோர்துமகோ ராத்திரமு முழைப்
பு விஞ்சச், சொற்றவொரு நாழியினுந் தூங்காமல் விழித்துவ
ருஞ் சோர்வு மின்றிப், பற்றமன மீதிளமைப் பருவமதி லேழ
ருமைப் பாடை முற்றுங், கற்றவதி நுண்மதியை யறிஞரெலாம்
பாராட்டிக் கழறு கிற்பார். (௧௦௯)

வருத்தமுறப் பலகலையும் பாடைகளும் பலகால மதித்து
நல்ல, திருத்தமுறக் கற்றபயன் முன்னுழவு பின்விளைவைச் செ
ய்வ தென்னப், பொருத்தமுற வமைச்சர்யுய்த் திடநெறியும்
புகலருஞ்சொற் பொழிவு மின்னு, மருத்தமுறத் தருநூலுந்
தருமமுமே கண்கூடா யமைந்த வம்மா. (௧௧௦)

## நியாயதுரந்தரராதல்.

ஏன்றகதிர ளந்திடுயோண் டாயிரத்தி யெண்ணூறே டெழு
பான் மூன்றி, லான்றவிரு பானிரண்டாம் வயதிலிந்த வவனிமுற்
று மதிசயிக்க, வான்றவமாய் மனுநூலுள் விரித்தெடுத்துக் கூறு
பிர மாண மெல்லாந், தோன்றவெவ ரெவரினுந்தா னுயர்ஞாய
துரந்தரனுய்த் துலங்க வந்தான். (௧௧௧)

வலமான வழக்கொழிய வழிவழக்கிற் புகுதாமல் வாய்
மை மன்னப், பலமான வாக்குறுதி மொழியழகு பிரமாணம்
பலவுங் காட்டிச், சலமான பெருநீதி பதிதனையுந் தன்வச
மாய்ச் சாரவைத்தே, நலமான செயமனைத்துந் தனதாக வழ
க்குகளை நடத்தி வந்தான். (௧௧௨)

உந்துமனச் சாட்சியுட னுண்மையென்றே யுளவழக்கி னுவ
ப்புற் றூக்கந், தந்துமதி நனிசெலுத்தி யூகமுடன் வென்றிகளைத்
தருவ தன்றி, முந்துமதந் தருந்தீய பொய்வழக்கே லவர்தமிலே
முனித லொன்றே, நந்துமறு பாவிலஞ்ச மெனவிடுகிற் றேன்
றலுக்கு நஞ்ச மன்றே. (௧௧௩)

தகுமொழியா லொருதவி புரிகவெனப் பணிபவர்பாற் றய
ங்கு மன்பு, மிகுமொழியா லுலகமதிற் பெருவெளிச்சம் போ
ட்டுவரு மேன்மை யோரை, நகுமொழியான் மிகுமகிமைப்
பேற்றினரை மன்னவரை நயந்து பேசும், வெகுமொழியா லிவ
ற்கீடு முண்டுகொலோ வென்றுலகம் விளம்பு மம்மா. (௧௧௪)

வாக்கிலனு வழியுடனே யாதவனுக் காரியுமாய் வதியும்
பேற்றை, நோக்கிலதி னுறுபயன்றான் பொய்யாத சோதிடநூ
னுவன்ற வாறே, நாக்கிலெழு மொருவாக்கே யவைபகத்தி
னுறுகுநரை நடுக்கு மென்னி, னூக்கியொரு காலுரைக்கி னே
ராக வுத்தரமொன் றுரைக்கப் போமோ. (௧௧௫)

வேறு

கரைதுரந் தோடு நீரிற் கவுரவ ராம நாத
துரைதுரந் தரனுப் பேசத் தொடங்குநாட் டீயஞ் சீறி
நிரைதுரந் திடத்தா மோடி நெடும்புதர்ப் பதுங்கு மாபோ
லுரைதுரந் தடங்கி ஞாய துரந்தர ரொதுங்கி னாரே. (௧௧௬)

நோக்கிய கவர்ச்சி யோடு நுண்பொருட் பேற்றி னோடுந்
தேக்கிய சுவைக ளோடுஞ் சித்திர மாகப் பேசும்
வாக்கிய லான பாவு மந்திரத் துணைவ னுமென்
றூக்கிய விடத்திற் கூற வமையுமென் றீங்குக் கூறேன். (கக௭)

## மணச்சிறப்பு

வேறு

அருவமைந்த காமனிந்த வவனிதனிற் கலியுகத்தி
லுருவமைந்த வுருவமென்றே யுயர்ராம நாதமன்னன்
றிருவமைந்த வடிவமுற்றுத் தெவிட்டாமற் கண்டுகண்டே
மருவமைந்த கூந்தனல்லார் மருண்டுமயல் கொள்ளுவரால். ()

ஆதவனேர் நகைமுகமு மணியாசு ருயர்நோக்குங்
கேதமிலா வுடையழகுங் கெம்பீர நடையழகு
மோதவருஞ் சொல்லழகு மொருங்கேகண் டாடவருங்
காதலுற வேபிவனுங் காளையனு யுறுங்காலம், (கககூ)

பல்லறங்க ளானவெலாம் பகுப்பிரண்டேன் றறநூல்கள்
சொல்லறத்துட் செயற்கரிதாந் துறவறத்துட் புகுதாமற்
செல்லறங்க ளெண்ணுன்குஞ் செய்திருமைப் பேறுபெற
நல்லறமென் றில்லறத்தை நாடவிதி மதியுமதாய், (க௨０)

கதிப்புமிக வுளபதியாய்க் கவின்மானிப் பதியிலங்நாண்
மதிப்புமிகப் பிறந்தாலு மகிமைவரு மென்றுகொலோ
விதிப்புமிக விதிவிதித்த மேனகரின் மேனகராய்த்
துதிப்புமிக விருந்திமைக்குந் தொல்கொளும்பு நகரொருசார். ()

நீட்சிபெறு வீதிகளா னிலவுமதின் மனைகளினுன்
மாட்சிபெறு மாமிபத்தான் மலருநந்த வனங்களினு
லாட்சிபெறு மிந்துகளு ளருந்தனத்தோ ரமருகையாற்
காட்சிபெறு கற்பகநாட் டுதைறுவாக் காடதென்பர். (க௨௨)

ஐந்தருவும் வெளிற்றயிரா வதமுமிவை யல்லாத
விந்திரனு ராங்கறுவாக் காடுசிறப் பினிதமைய
நந்தறமு நளிர்தனமு நவின்முதலி நற்பதமு
மூந்தருளு மொருங்குபெறு முதன்மையுடன் வாழ்குரிசில். ()

பார்வருஞ்சீ ரோங்குபொன்னம் பலமுதலி யார்தனக்கு
நேர்வருஞ்சி ராமுறவோ னீடுசைவ வேளாள
னேர்வருஞ்சீ ரெய்தவரு மில்லறந்தான் வழாதியற்றிப்
பேர்வருஞ்சீ ரேற்றபல பிள்ளைகளைப் பயந்தசெம்மல். (கஉச)

மேனிலத்தோர் தனக்குதவ வேளாண்மை விருந்துசெய்வோன்
நானிலத்தோர் மதித்தநன்னித் தம்பியெனு நாமமுளோன்
தானிலத்தோர் பயனுகத் தருந்தனயர் பலர்தமக்குட்
டேனிலத்தோர் தெய்வமகள் செல்லாச்சி யாச்சியம்மா. (கஉரு)

பொறைதனக்குப் பூமாது பொற்பினுக்கு மலர்மாது
நிறைதனக்கு மீன்மாது நிகராக வருமணங்கு
சிறைதனக்கு நெறியதனாற் றெய்வமுந்தான் றொண்டுசெயக்
குறைதனக்கு நேராமற் குலாவுமிந்த வுத்தமியை, (கஉசா)

முற்றினத்தி னறமிவர்க்கு முந்திநின்று கூட்டுதலாற்
பிற்றினத்திற் றுமடையும் பேறதெலாஞ் சித்திபெறச்
சுற்றினத்திற் றலைவருடன் றுணைவருமுன் சூழ்ந்திருப்ப
நற்றினத்தி லோரைதனி னன்மணமுஞ் செய்தனரால். (கஉஎ)

தனமொருமித் ததற்கிசையத் தரணிநனி துதியெடுக்கக்
கனமொருமித் தொருபொழுதுங் கையகலாக் காதலுடன்
றினமொருமித் துயர்நூல்கள் செப்புமுறை திறம்பாமன்
மனமொருமித் திருவருமாய் மனையறங்கள் பேணிவந்தார். ()

நலக்கிலக்கா யருள்பூணுந் துரைராம நாதவள்ளற்
கிலக்கினத்திற் கதிபதிபொன் னியம்புகளேத் திரத்தினிற்கிற்
றுலக்கமுள மனைமாட்சிச் சோதிடநூல் வகுத்தவுண்மை
கலக்கமற வேயுலகிற் கண்கூடே காட்டுமன்றே. (கஉகூ)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1311
[illegible] எண்: 1211
மதுரை ... அவ் ... தி.க. சண் ...

சொற்றுணைவர் தமிற்குமார சாமியெனத் தோன்றுமந்த
முற்றுணைவன் முனிதற்கு முன்புமன்ற லயசவங்கன்
பிற்றுணைவ னுமருணு சலம்வதுவை பின்னியற்றி
நற்றுணைவர் மூவருமே நரேந்திரராய் வாழ்வுபெற்றார். (கரு௦)

பொருளிருந்த புகழிருந்த புரவலரென் றுயர்விருந்த
மருளிருந்த மனையிருந்த மற்றுமெலர் மிருந்திடினும்
தெருளிருந்த வான்றோர்க டெரித்தோங்கு மில்லறத்திற்
கருளிருந்த மக்களேயே யணிகலமென் றோதுவரால். (கருக)

தேயமுறக் கொண்டாடுஞ் சேர்ராம நாதமன்னன்
காயமுற விளங்கவருள் கான்முளைக ளுற்பவமு
நேயமுற வவசவர்த நேரான வதுவைகளுந்
தாயமுற விவணெடுத்துச் சாற்றுகிற்பே னடைவாக. (கருஉ)

## புதல்வர்ப்பேறும் அவர்தம் மணச்சிறப்பும்

வேறு

ஈருடற் குயிரொன் றுக வியைந்தனர் வாழ வாங்க
ணோருட லுயிரு மொன்று யுலாவுறத் தொடர்ந்து பற்றிச்
சீருடன் மழலை கேட்குஞ் செல்வநன் மக்க டம்மே
னேருட னிலாத வாசை நீடவே யமரு மந்நாள், (கருங)

தந்தையார் தமக்கு மீன்ற தாயர்க்குந் தவிரா தாக
முந்தைதொட் டிருந்த பிள்ளைக் கலியகன் றுங்கே முற்றுஞ்
சிந்தைமே லுவகை பொங்கச் செல்வமுஞ் சிறப்பு மோங்க
விந்தையா யுதித்திட் டாள்கா மினிவிசா லாட்சி யம்மா. (கருச)

தாயர்த மடியு மற்றைத் தந்தைதன் மார்பு மேனை
நேயமார் செவிலி கையு நீங்கலா வகைமைத் தாக
மேயபே ரன்பாற் போற்ற மென்னடைக் குதலைப் பேதை
யாயமோ டாடி யீன்றோர்க் ககநனி களிப்பு நல்க, (கரு௫)

சீர்மக ளுதிக்கப் பின்னு நாடிய கடன்க ளாற்று
மார்மக வாசை நீட வணையசின் னாள்க ளிற்பின்
சேண்மக பதிநேர் ராசேந் திராவெனச் செப்ப நின்ற
மாண்மக னுதிக்கக் கண்டே வரம்பிலா மகிழ்வு பூத்தார். (கநரு)

மருவருங் குழலி தானும் மருவுதம் பியரு மான
விருவரு மேக மாக வியைந்துநல் லாடல் செய்யா
வுருவரும் வளர்ச்சி சான்றே யுலவுமாங் கிலமுஞ் செய்ய
திருவருந் தமிழு மாங்கே தெளிவுறக் கற்ப தானார். (கநஎ)

சோதரச் சோக மிந்தச் சோதரர் தமக்குண் டாகப்
போதரப் பெற்றோ ருக்கும் புத்திர சோகம் விஞ்ச
வோதரப் புவியைக் கைத்த வுத்தம மகேசச் செம்ம
லாதரத் துலவு மூன்றே யானநற் பால னம்மா. (கநஅ)

பவந்தனை யெடுத்து மாற்றும் பழவினைப் பயன்வந் தெய்தத்
தவந்தனை யிளைக்குந் தாய்க்குந் தந்தைக்குங் கலக்க நல்கிச்
சிவந்தனைப் பெற்றி ருந்த சிவகாம சுந்த ரிப்பேர்
நவந்தனை யுடைய மானு நான்கெனுங் குழவி யாமே. (கநகூ)

பாருள பலரும் போற்றும் பல்குபுண் ணியங்க ளாற்றிச்
சீருள வாழ்வு மன்னுந் திவ்விய காலந் தன்னி
லேருள குணங்கள் சான்றே யெழில்பெறும் வாம தேவப்
பேருள தனய னங்கே பிறந்துபே ருவகை தந்தான். (கச0)

முன்னுற நின்ற மாயன் முயங்குபத் தினிநன் னுமை
மன்னுற வருமு ருக்கு மணியெனு மணிநேர் பேதை
தன்னுற வர்கத் தர்மந் தளைந்திட வுதிக்க வந்நாட்
பின்னுற வந்த செல்வம் பிறங்கிய தன்யை தானே, (கசக)

ஒள்ளிய தயையே யாதி யுலவிய சிவக்கொ ழுந்தாம்
வெள்ளிய குணங்கள் பெற்று விளங்குமிவ் வைவர் தாமுந்
தெள்ளிய நீரும் பாலுஞ் சேர்ந்தெனத் தம்மு ளொன்று
புள்ளிய சோத ரத்துக் குலகினி லிலக்க மானார். (கசஉ)

தெருளுடைப் பாவை யார்ட் டிரண்டபங் தாட வின்னு
முருளுடைச் சிறுதே ரூர்த லுரைத்தவாட் டவைக ளாடி
மருளுடைப் பருவ நீங்கி மழலையுந் திருந்தி நல்ல
வருளுடைக் சழ்க மேவி யருங்கலை யமையக் கற்றூர். (க௪௩)

திருந்திய மொழிகள் காட்டுஞ் செந்தமி ழுதவு மெங்கும்
பொருந்திய பாடை யர்கப் பொலிந்தவாங் கிலமுங் கற்று
மிருந்திய் விலங்கைக் கண்ணு யிலங்குசிங் களம்ப யின்றும்
விருந்திய லான மைந்தர் விண்மணி போன்றங் குற்றூர். (க௪௪)

இவ்விய லான யாவு மெய்திய தனயர் தம்மு
ளவ்விய மிலாத நெஞ்ச மருள்மை யறிவுஞ் சான்று
செவ்விய வாங்கி லத்திற் சித்திக ளீங்கு பெற்ற
திவ்விய மான ராசேந் திராவெனுஞ் செம்ம லந்நாள், (க௪௫)

நிரந்தர மன்னர் மன்னர் நெடுநில முழுது மோம்பிப்
புரந்தா னெனமன் னுற்ற புரமெனும் லண்ட னிற்போய்த்
தரந்தர மாகக் கற்றே தக்கபார் விசிட்ட ஞாய
துரந்தர னென மேன்மைத் துரைமக னுனை னம்மா. (க௪௬)

வாய்ந்தவண் ணலுக்கு நல்ல வலியுடைத் தம்பி முற்ற
வாய்ந்தவங் கிலமே யல்லா லருந்தமி ழுதவுஞ் சாலாத்
தோய்ந்ததன் சோத ரத்திற் றுதியுடைப் பெற்றோர் தம்பி
னேய்ந்தநல் லன்புஞ் சான்ற வேந்தலை வாம தேவன். (க௪௭)

அத்தமு மருளும் பேரு மாற்றலுங் குணமு நெஞ்சச்
சுத்தமு நெறியு மீவுஞ் சூழ்ச்சியும் வலியும் வாய்மைச்
சத்தமும் பொறையுந் தேசுந் தகுதியு மொழுக்குந் தாமச்
சித்தமுந் தவறு துற்ற செம்மலே வாம தேவன். (க௪அ)

எம்மையுஞ் சீர்சேர் ராம நாதமன் னவனு மெண்ணுஞ்
செம்மையு முலவா தென்றுந் திகழ்ந்தசெல் லாச்சி யாச்சி
யம்மையும் புதல்வர்ப் பேற்று லானபே ருவகை பூத்தே
மும்மையுஞ் சிறப்பு நல்கு முதற்பெரு வாழ்வு பெற்றூர். (க௪௯)

சொன்னவ னைவ ருக்குந் தொல்லையூழ் கூட்ட யாரு
முன்னுறு வுத்தி யோக வுயர்வுக்குந் தனத்தி னுக்கும்
பன்னுசீர் மரபினுக்கும் பாங்குள வெவைக்கு மீடாய்
மன்னிய சிறப்பொ டாற்றும் வதுவையு மீங்குச் சொல்வேன். ()

சாலுறு தவங்கள் செய்துந் தங்குடிக் குயர்வு தந்து
மாலுறு கொழுநற் றாழ்ந்து மணியிலக் கணங்கள் பூண்டு
மேலுறு மரிவை மாருக் கிலங்குமோர் திலக மாக
மேலுறு மரம்பை நேர்கா மினிவிசா லாட்சி மாதை, (கருக)

திண்ணிய நிலைமை பெற்றோன் செல்வனென் றெண்ணுகிற்போன்
கண்ணிய மிகவு முள்ளோன் காவலர் மதிக்கப் பெற்றோன்
றண்ணிய தரும முள்ளோன் தம்பையா முதலி தந்த
குண்ணிய தனயன் முத்துக் குமாரநந் துரைம கற்கே, (கருஉ)

பந்தரின் விதானம் போக்கிப் பன்மலர் மாலை நாற்றி
யந்தரம் புதைய வெங்கு மரம்பையுங் கமுகு நாட்டி
யெந்திரப் பதுமத் திப மெல்லென வெறிப்பச் செய்த
விந்திர மாட மேய்க்கு மெழில்கொண்மண் டபத்தி னூடே, ()

மன்னரு மதிவல் லோரு மசாமதிப் பினரு முள்ளத்
துன்னருஞ் செல்வர் தாமு மொக்கலு முத்தி யோகப்
பன்னருஞ் சிறப்பி னோரும் பாங்குறச் சடங்கை நாடிப்
பின்னரு முளவோ வென்னப் பெருமண மியற்றி வைத்தான். ()

சொல்லிய சீர்சார் முத்துக் குமாரநற் றுரையு மிந்த
மெல்லிய லான நற்கா மினிவிசா லாட்சி மின்னும்
பல்லிய லமையும் போகம் பரிவுட னுகர்ந்து நாளு
மில்லிய லறங்க ளெல்லா மேர்பெற நடாத்தி யுற்றார். (கருரு)

நேரிய மனுநூற் கண்ணே நேர்பிர மாணம் யாவுந்
தேரிய நின்ற ஞானஞ் சேர்ந்தவர்க் கருளும் வண்மை
யேரிய திருவென் றுள்ள விவையெலா மமைய வந்த
சீரிய செல்வ ராஜேசந் திராவெனுஞ் செம்ம லுக்கே, (கருசு)

ஓங்குறு மொழுக்கந் தானே யுயிரெனப் பாது காத்து
மாங்குறு கணவ னுக்கோ ரடிமைபோற் றெண்டு செய்துந்
தாங்குறு மாது லர்க்குந் தவாதநம் பணிகள் பூண்டும்
பாங்குறு குணங்கள் சான்ற பகவதி நாம மின்னும், (கருஎ)

பிறந்ததன் மனைக்கு மேலும் பெட்புறப் புகுந்த தான்
சிறந்ததன் மனைக்கும் வைத்த தீபமே யான விந்த
வறந்தவி ராத மாதை யறைவதென் னனைத்து மொப்ப
நிறைந்தநன் னுளி னுடி நேர்மண மியற்றி வைத்தான். (கருஅ)

பிறந்தவர் பிறந்தா ராவர் பெருநில மீது வைகி
யிறந்தவ ரிருந்தா ராவ ரென்றுதன் புகழு டம்பை
யறந்தனு னட்டி யென்று மவனிமே னெடிது வைகுஞ்
சிறந்ததன் றுதை தன்னைச் சிந்தையின் மறவாச் செம்மல். (கருகூ)

ஏதிலார் தமக்கோ வின்னு மெல்லவர் தமக்கு மொக்கத்
தீதிலா வகைமைத் தான திவ்விய குணங்கள் சாலா
வோதிலோ ருவமை யுண்டோ வுத்தம னுகி யேதுங்
கோதிலா வாம தேவக் குறைதவிர் குரிசி லுக்கே, (கசூ0)

நிலவள முளது நீடி நிலவுமா முகத்தோன் வைகுந்
தலவள முளது தக்கோர் தனித்தனி தோன்ற நின்ற
நலவள முளது மேலு நான்புகன் றிடுவ தென்னே
பலவள முளதாம் மானிப் பதியினி லந்த நாளில், (கசூக)

தன்பெருந் தரும மாகத் தனிப் பெரும் புகழு மாக
மன்பெரும் வீதி யொன்றை வயங்கவே றெடுத்து முன்ன
மின்பெரு மாண வர்க்கே யிந்துக்கல் லூரி யொன்றைப்
பின்பெரும் பெயர்வ ழங்கப் பெட்புற நிறீஇய வேந்தல். (கசூஉ)

நாற்பொருள் பயப்ப தாகி நல்லவர்க் கூன்று கோனேர்
நூற்பொரு ளச்சிட் டாக்க நுவல்பொரு ளுதவும் வள்ளல்
மாற்பொருள் பேசிக் கற்ற மாந்தரை மயங்க வைப்போன்
மேற்பொரு ளீட்டி நாளு மேன்மையோ டமர்ந்த தோன்றல். ()

தலைவரு சீர்சே ரிந்தச் சங்கரப் பிள்ளை முன்னு
ளுரைவரு சிறப்பி ளுேடு முதவிய மக்க டம்முட்
டிரைவரு திருமா தென்றே செப்பலாந் தன்மைத் தான
விரைவரு குழலா ளன்ன பூரணி யெனும்பேர் மின்னை, (கசுச)

சொன்னபல் லணிகள் யாவுஞ் சோர்விலா தமைத்தே யந்த
முன்னவர் தமக்கு முன்ன முறைமுறை புரிந்த வாபோற்
பன்னருங் கிரியை முற்றும் பழமறை யவர்க ளாற்ற
நன்னல மான நாளி னவமண மியற்றி வைத்தான். (கசுரு)

வெல்லயிற் குமார வைப்பாம் வேங்கடம் வடபாற் றென்பா
லெல்லையாங் குமரி யாங்கே யென்றுந்தன் னுமை நீற்க
வல்லவ ரினியா சென்ன வண்டமிழ் வரம்பு கண்ட
நல்லையி லறுமு கப்பேர் நாவலன் மருமா னுன, (கசுசு)

குலங்கிளர் தமிழு மல்லாற் குவலயத் தேக மாக
நலங்கிள ராங்கி லத்தை நன்குறப் பயின்று வாய்ந்த
தலங்கிளர் கிளைக ளோம்பித் தருமமுந் தயையுந் தேசுந்
துலங்கிள மதனன் சோம சுந்தரக் குரிசி லுக்கே, (கசுஎ)

உருவுநற் பொற்றுமை வாக்கு முத்தம குணமு மோங்குந்
திருவுநற் கணவற் கேற்குஞ் செவ்விய வொழுக்குங் கண்டோர்
வெருவுநற் கற்பு மான மெல்லிய ரியல்பு முற்று
மருவுநற் பேரு ருக்கு மணியெனு வயங்கு மாதை, (கசுஅ)

எங்கணு மலங்க ரித்தே யிலங்குமண் டபங்கோ டித்துத்
துங்கமிக் குடைய மாந்தர் துணைவரங் கமர்ந்து வைகப்
பொங்குநற் கிரியை யாற்றிப் பூசுர ராசி கூற
மங்கல வோசை பொங்க வதுவையை யியற்றி வைத்தான். ( )

அரசருக் குரிய பாஷை யங்கிலங் கற்றே ஞாயம்
விரசநன் காய்ந்து தேர்ந்த மேதகு தாணி மட்டோர்
விரசமார் மொழியும் பேரு மின்னமுங் குணமுஞ் சான்றே
பாசநன் றிருக்கும் ராச நாதனும் பார்த்தி பற்கே. (கஎ0)

பாங்குள சோத ரத்தோர் பரிந்தெடுத் தணைக்குஞ் செல்வி
தீங்கிலா வொழுக்குந் தேசுந் திருந்திய குணமு மென்று
மாங்குள பயந்தோன் மீதே யாசையு மொருவா துள்ள
மோங்கிய சிவக்கொ ழுந்தென் றெளிபெறு மணங்கு தன்னை, ()

வீடெலாம் பதுமைத் தீபம் விரித்தபூக் கம்ப லங்கண்
மாடெலாங் கமுகு வாழை மங்கல முரச வோசை
யூடெலாந் தக்கோர் கூட்ட மோதுவோர் சடங்கி யற்ற
நாடெலா மதிக்க வாய்ந்தே நன்மண மியற்றி வைத்தான். (கஎஉ)

கரைகுறித் துரைக்க வொண்ணாக் கவுரவ ராம நாத
துரைகுறித் தினைய வாறே தொன்மகா ரைவ ருக்கு
முரைகுறித் தோத லாகா தொன்றுக்கொன் றுச்ச மாக
வரைகுறித் தியற்றத் தக்க வதுவைக ளியற்றி னானே. (கஎங)

## 1. இங்கிலந்துக்கேகல்

காசிலா வுலக மேத்துங் கவுரவ ராம நாத
னேசிலா யிரத்தி யெண்ணூற் றெண்பத்தா றான வாண்டின்
மாசிலா ராணி யம்மாள் வதியுமிங் கிலந்திற் கேகி
யாசிலா நகர்க்கட் சின்னா ளமர்ந்தன னசை கூர. (கஎச)

சேணுலா நகர மேய்த்துத் திகழ்நக ரணிகள் கண்டு
மாணுலா மமைச்சர் தம்மை மணிமுடி யரசைக் கண்டு
மேணுலா மிராச சேவை யிறைமையோர் மதிப்புக் கண்டும்
பூணுலா மவர்சன் மானம் புகன்றுகொண் டாட வுற்றான். ()

பொன்னெனக்கும் வாக்கி னாலும் பொலம்புரி மகுடம் பூண்ட
மன்னெனக்கு மதிப்பி னாலு மகிதலத் தெடுத்துக் காட்டத்
தன்னெனக்கு மொருவ ரில்லாத் தராதிபன் ராம நாதன்
மின்னெனக்கு நகரி னோர்க்கோர் விருந்தனைப் விளைவு தந்தான். ()

பாரிய பட்ட ணத்திற் பார்க்கவென் றுன்னி வந்த
காரிய சித்தி யெல்லாங் கருத்துற முடிந்த பின்னர்
நேரிய கிரிகள் காவு நெடுநதி வளங்கண் மிக்க
சீரிய விலங்கை மீண்டு திகழவே வீற்றி ருந்தான். (கஎஎ)

ஓதுல கத்து ளொன்று யுயர்ந்தவிங் கிலந்தி விந்நாட்
டீதுல வாம லோங்குந் திவ்விய குடும்ப மென்று
மாதுலன் றனினு மிந்த மருமகன் பெரிய னென்றுந்
தாதுல வுற்ற தாரான் றயங்கவே வைத்து மீண்டான். (கஎஅ)

## யாழ்ப்பாணம் வருகை

வேறு

ஞானக ராகவே மதிக்க விந்நிலத்
தானக ரெங்கணு மமைவ தாயினு
மேனக ராகியே விளங்கும் புட்பகக்
கோநக ரொத்துளங் கொழும்பு நின்றுந்தான், (கஎகூ)

ஆனதாய் நாட்டினை யவாவி யந்தநாட்
கானதாய் வதிவழி கடந்து தானிவண்
மேனதாய் வழங்குயாழ்ப் பாண மேவுதல்
தேனதாய் சுரும்பெனத் தெரிந்த விங்குளோர், (கஅ0)

காற்றுவன் துலவுறுங் கடற்க ரைக்கணே
யேற்றுவன் தமர்தா வீச்ச மோட்டையில்
ஆற்றுவன் தயாவற் கான வோர்மணே
சாற்றுவன் தனைபெறத் தயங்கத் தந்தனர். (கஅக)

இங்குளர் வழியெதி ரேற்க வேற்றவர்
றெங்களுக் குதவிகூர் ராம நாதமன்
பொங்குள மேற்களி பொருந்த வந்துதா
னங்குள மனைவயி னமர்ந்து வைகினன். (கஅஉ)

ஓசமார் மதிதனை யுடுக்கள் சூழ்ந்தெனப்
பாசமார்ந் துற்றயாழ்ப் பாண மாந்தர்கள்
தேசமார் புகழுடைச் செம்ம லார்தமை
நேசமார்ந் தம்மனை நேர்ந்து மொய்த்தனர். (௧௮௩)

பொன்முகந் தனித்தெனப் பொலிந்த கஞ்சநேர்
இன்முகங் காட்டியு மின்சொற் கூறியுந்
தன்முகங் கண்டவர் தம்மை யவ்விடை
நன்முகம் வைத்துரை நவின்று வைகினான். (௧௮௪)

கோடுத லிலாதமேற் கோட்டுக் காயது
வாடுத லிலாததாம் வழக்கொன் றந்தநாள்
நாடுத லுற்றவ ணடாத்துஞ் சீரையுந்
தேடுத லுற்றுநான் செப்பு கின்றனன். (௧௮௫)

வேறு

ஆற்றலன் பிரதி வாதிக் காகவே வழக்கை முற்றுந்
தேற்றமேற் றேற்ற மாகத் தெரிந்துநன் காய்ந்து கொண்டே
தோற்றமா முடையுந் தேசுந் தூயபுன் னகையுந் தோன்ற
வேற்றமன் றகத்திற் றானு மெய்திவீற் றிருந்தான் மன்னன். ()

கரையிவண் காணாச் செல்வக் கவுரவ ராம நாத
துரையிவண் வாத மொன்றிற் றோற்றினா னென்று கேட்டே
வரையிவண் கூற வொண்ணா மாந்தர்கள் வந்து மன்றத்
தரையிவண் போதா தென்னத் தனிதமோ டமர்ந்தா ரன்றே. ()

அந்தமேற் கோட்டு வேந்த னூர்வஞ்செய் யவரை நோக்கிச்
சுந்தர மான ஞாயத் துரைமகன் றன்னைக் காண்பான்
வந்தபான் மையினா லும்மை வரைவது தகாது நீங்கள்
பந்தமுற் றடங்கி வைகிப் பார்ப்பதே தகுதி யென்றான். (௧௮௮)

சொற்றவேந் தனுமேன் ஞாய துரந்தரர் தானு மாக
மற்றவா தத்தி னெல்லாம் வாதித்து முடிந்த பின்னர்
கற்றநூற் றுறைகை போய கவுரவ ராம நாதன்
உற்றவவ் வழக்கி னுள்ளோ ருரைத்தன யாவுங் கொண்டே, ()

ஐந்துநா ழிகைமட் டுந்தா னமுதம்போ லுலாவி நின்றே
யுந்தமன் னவனும் யாரு முவப்பவே யுரைக ளாடி
யிந்தயாழ்ப் பாணத் தாருக் கேற்றமுஞ் சிறப்பு நல்கி
விந்தையாய் வழக்கை யாங்கே விலக்குவித் தெழுந்து போனான்.

வாமனேர் தலைமேற் பாகை வாய்ந்தமெய்க் கவசஞ் சோதித்
தாமனேர் நகைநற் செய்ய தாமரை வதன மன்னர்
ஏமனேர் விலாச நோக்க மியம்பிய வெழில்கள் வாய்ந்த
காமனே ரிந்தக் கோலங் கண்ணுக்கு விருந்து செய்ய, (௧௯௧)

உண்ணுறு தேனைப் பாலை யொருங்குறக் கலந்த தென்னப்
பண்ணுறு மாறு நின்றே பனிமொழி யுலாவிப் பேசும்
எண்ணுறு மினிய வாக்கு மேய்ந்தமெல் லிசையின் போக்குங்
கண்ணுறு விருந்து மட்டோ காதுக்கும் விருந்து செய்ய, ( )

துரந்தர ராச ரேனோர் துதிதர வெழுந்து மண்ணிற்
புரந்தர னாகு மென்னப் பூரித்தே யேர்ந்து சென்றே
நிரந்தர முலகிற் றன்பேர் நிறுவிய ராம நாதன்
வரந்தர மாக மன்னு மாளிகை யதன்கட் சேர்ந்தான். (௧௯௩)

நந்தவி லறுமு கப்பேர் நாவலன் மருகன் கற்ற
செந்தமிழ் வரம்பன் வித்வ சிரோமணி கலைமா னோடு
பந்தமுற் றிருந்த பொன்னம் பலமிவன் றானுந் தானு
மிந்தநா ளொருங்கு கூடி யினிதள வளவிக் கொண்டார். (௧௯௪)

பார்மலி வளங்கள் சால்யாழ்ப் பாணநாட் டணிக ணாடிப்
போர்மலி தகுதி வாய்ந்த பெருமகா ரருகிற் சூழ
வேர்மலி வீதி வாய்ச்சென் றிந்துக்கல் லூரி வந்து
சீர்மலி வுறுக வென்றே திறந்துதந் துவகை தந்தான். (௧௯௫)

தேனமர் தொடையன் மார்பன் செந்நெலின் வளங்க ளோங்கு
மானம ரிலங்கை வாழ வந்தசேர் ராம நாதன்
தானமர் நாட்டி னுள்ளோர் தங்குறை வின்விக் கொண்டே
கோனமர் நகர மான கொழும்புவந் தணைவ தானான். (௧௯௬)

முச்சுட ரர்கத் தோன்று மூவரு முலகைக் காக்கு
மச்சுத னமிச மாகி யவனியா ளிராம நாதன்
மெச்சுசெந் தமிழின் வல்லோர் மேவுயாழ்ப் பாண மாந்தர்
நச்சுநற் சுகங்கள் யாவு நாடியே நயந்து செய்தான். (௧௯௭)

இன்னமு மிருகா லிந்த வேந்தல்யாழ்ப் பாண நாட்டிற்
கன்னவர் ருக வந்தே யனைவர்க்குங் காட்சி தந்தான்
உன்னநா வுரைக்க வொண்ணு வுத்தம வமைச்சுக் கிங்கே
பன்னரும் விருந்தொன் றீந்த பான்மையும் பகர்வன் கேண்மின்.

வேறு

நீலங்கை வந்த நெடும்பரப் புள்ளது
நலங்கை தந்து நளிர்தருந் தென்னை தன்
குலங்கை பெங்குங் குலாவுறுந் தோப்புமா
விலங்கை யென்ன விளங்கு மிதன்பெயர். (௧௯௯)

நிதிகொள் பான்மை நிரம்பு குலையுடன்
சதிகொ டென்னை தயங்குமித் தோப்புத்தான்
மதிகொண் மன்னவன் மந்திரி யாகிய
துதிகொ ளிந்தத் துரைமகற் குள்ளதே. (௨௦௦)

சீரி னோங்கிவண் சித்திர மாடத்திற்
பாரி னுள்ளதின் பண்டங்கள் யாவையும்
ஊரி னுள்ளவ ரொவ்வொன்றாய்த் தேடியே
நேரி னங்கு நிரப்பினர் நின்றிட, (௨௦௧)

பாகஞ் செய்து பயின்றவர் சைவர்கள்
ஆக மூவ ரவரொரு வாரமாய்ப்
போக விந்திரன் போனக மோவென
யூக மோடுபல் லுண்டிக ளாக்கினர். (௨௦௨)

ஏவ லாள ரெடுத்துக்கை நீட்டிட
மூவர் பாகத்தின் முந்துகை வந்தவர்
ஆவ தாமுண வாக்குவ ரேலது
தேவ ருணென்று செப்பவும் வேண்டுமோ. (௨௦௩)

வேறு

ஆன போனக மமைத்தபி னண்ணலை யழைக்க
மான மாந்தர்க டம்முடன் வந்தவண் குறுகி
யூன மற்றவர் தம்மொடு மொருங்கினி தமர்ந்தே
வான வர்க்கெனும் போனக மருந்தினன் மகிழ்ந்தான். ()

பொருந்து மந்தரஞ் சுழற்றபு புணரியைக் கடையா
வருந்தி யுண்டவன் சுரபதி வருத்தமொன் றிலனுய்த்
திருந்தி வந்தவர் தம்முடன் சேர்ந்தொருங் கமர்ந்தே
யருந்தி னுனினி தாகவிந் நரபதி யமுதம். (௨௦௫)

உந்த நல்விருந் தவ்வயி னொருதினத் தருந்தி
யிந்த வுண்டிபோ லினியதொன் றிலையென மருங்கின்
வந்த மாந்தரு மதித்திட முகமனும் வழங்கி
யந்த வூண்டொழி லவர்க்குப காரமு மளித்தான். (௨௦௬)

முந்து மீழத்தோ ராற்றிய முழுத்தவ வுருவாய்
வந்து தோன்றிய மன்னவர் மதியுடை யமைச்சன்
பந்து போலய லுழுநர்க்குப் பரிவுடன் விடைக
டந்து மீளவுந் தானமர் தலைநக ரடைந்தான். (௨௦௭)

வேறு

முந்துசேர் ராம நாதன் முதன்முதற் றுய்நா டான
விந்தயாழ்ப் பாணம் வந்தே யெங்களுக் குயர்வு தந்த
நந்தலில் லாத வாண்டு நவிலுகி லாயி ரத்தோ
டுந்துமெண் ணூற்றின் மேலு முற்றவெண் பானொ டாறே.(௨௦அ)

தூயநா டான தங்க டிலங்கு யாழ்ப் பாண நாட்டிற்
கேயசேர் ராமநாத னெய்திய வாறு சொன்னேன்
மூயபே ரன்பார் பொன்னம் பலமெனும் முதலி யார்தம்
பாயயாத் திரையின் பேறும் பதமுத்திப் பேறுஞ் சொல்வேன்.()

## ஸ்ரீமான் பொன்னம்பலமுதலியார் தலயாத்திரையும் பதமுத்திப்பேறும்

ஆல்வருங் கடவு ளெங்க ளர்விநா யகன்மன் னுற்ற
மேல்வருந் தலங்கள் யாவும் விரும்பியே காலங் கால
நால்வருந் தாமு மாக நயந்துயாத் திரைகள் செய்தே
சேல்வரும் விழியா ளங்நாட் சிவபத மடைந்த பின்னர், (௨௧௦)

மூவருந் தாமு மாக முதலியா ரவ்வக் காலந்
தேவரும் வழுத்துந் தில்லை திருவிரா மேச்சு ரம்பூங்
காவருங் காளி காஞ்சி காளத்தி மதுரை யாதி
தாவருந் தலங்க ளெங்குந் தரிசனஞ் செய்து மீள்வார். (உகக)

மீத்திரை நரைக ளேற விமலன்மேற் பத்தி தானு
மாத்திரை யளவு நெஞ்சின் மறக்கலா தேற வேற
யாத்திரை நினைவே யாகி யினியநன் மைந்த ரோடும்
பூத்திரை காவு சூழிப் புண்ணியத் தலங்கள் செல்வார். (உகஉ)

ஏறுதா னுயர்த்த வெங்க ளிறைவனைத் தொழும் போதெல்லா
நீறுதான் பூத்த மெய்யு நிமலன தருளார் பத்தி
வீறுதான் விளங்கு நெஞ்சுந் துதியுமாய் விமல னோடு
வேறுதா னிலாம னிற்பார் மேலொன்று மறியா ராங்கே. (உகங)

துரியமே லுணர்வு கூடத் துளக்கில்சித் திரநே ராகி
யரியமே லமல னோடு மைக்கிய மாகி யிவ்வா
றுரியமேற் றலங்க டோறு முமையொரு பாகற் போற்றிப்
பிரியமே தலைக்கொண் டோங்கப் பெருநகர் வருதல் செய்வார். ()

வேறு

தினந்தருதன் னறங்களுமேற் சிவாலயத்துத் திருப்பணியு
மனந்தருதன் றானமது மான்மார்த்த பூசையுநன்
மனந்தருதன் பத்தியுமாய் வந்துதிரண் டிவ்வமைய
முனந்தருதன் னூழாகி முகங்கொடுத்து முந்திநிற்ப, (உகரு)

ஓங்கியமுன் றரசர்களு மொருமூன்று மடநகியரும்
பாங்கியனும் பவுத்திரரும் பற்றார்ந்த வுறவினரு
மாங்கியனு மயலாரு மருகிருந்து பாராட்டத்
தேங்கியநற் பத்தியுளோர் தேவார முறைபடிக்க, (உகசு)

தீண்டுமரா வொடுமதியந் திகழ்மவுலி மீதினன்பு
பூண்டுமற வாதவனு பூதியுள புண்ணியருக்
கீண்டுவரு மாயிரத்தெண் ணூற்றெண்பத் தேழெனுமாண்
டாண்டுநிக ழுறுகிகழு மகவையுமெண் பானுக, (உகஎ)

நாவேலுங் கலைவாணர் நானிலமே னிலைநிறுத்தும்
பாவேறும் புகழ்ப்பொன்னம் பலமுதலிப் புண்ணியர்தந்
தேவேறும் பதங்களினுந் திப்பியநல் லொளிதிகழுஞ்
சேவேறுஞ் சிவபெருமான் றிருவடியைச் சேர்ந்தனரே. (௨௧௮)

சடக்கடனுந் தந்தையர்க்குத் தகனவிதிக் கேய்தருதிக்
குடக்கடனு மாற்றியபின் கூடவுறப்புரியு மந்தித்
தடக்கடனு மதன்மேலுந் தரத்தகைய தாகியவில்
லிடக்கடனுங் குறைநீர விவர்கணிறை வேற்றினரே. (௨௧௯)

சொற்றபத முத்தியிவண் டொடுத்தொருங்கு சொல்லுகினு
மற்றமக லந்தரங்க வமைச்சினனு யரியமக
னுற்றபெரு மகிழ்வினுட னுலகுரைக்கு மிகுமொழியும்
பெற்றபின ராமறிஞர் பிறபூரம லாய்ந்தறிவர். (௨௨௦)

வேறு

இந்திரச் செல்வந் துய்த்திட் டிருநில மேத்தப் பாச
பந்தமற் றிருந்த பொன்னம் பலப்பத முத்தி யீதால்
சுந்தர ராம நாத துரைமக னீழ தேய
மந்திரக் கவுஞ்சி லுக்கு வந்தது வரைந்து சொல்வாம். (௨௨௧)

## முதலாவது கவுஞ்சில்மெம்பராதல்

ஈண்டுமோர் யிரத்தி யெண்ணூற் றெழுபதோ டொன்ப தான
வாண்டுதா னிகழ வந்த வகவையு மிருபத் தெட்டிற்
றேண்டுசீ ரிலங்கை யோங்கத் தெரிந்துசட் டங்கள் செய்வான்
வேண்டுநற் கவுஞ்சி லுக்கு மேன்மைசே ரமைச்ச னானான். ()

சிங்களர் தவமோ சேர்ந்த தமிழர்செய் தவமோ நாடா
திங்குமுன் மயங்க வைத்த விறைமுறை நெறிநே ராக்க
வங்கில ரதிட்ட மேயோ வமைச்சியற் றலைவ னான
மங்குருக் கவுஞ்சி லுக்கு மந்திரி யான தம்மா. (௨௨௩)

வேறு

காட்சிபெறுங் கவுஞ்சிலெனக் கழறுவது பொதுவகைகாண்
மாட்சிபெறுந் துரைராம நாத மன்னன் வருங்கவுஞ்சில்
நீட்சிபெறும் ராசாங்க சபையாக நேருமிதை
யாட்சிபெறுஞ் சட்டநிரு பணசபையென் றறைகுவரால். (௨௨௪)

சாதனமாம் ராசாங்க சபைக்கடன்க டெருமனைகள்
மாதனஞ்சால் பாலவனை வயங்கிருப்புப் பாதையிவைக்
கேதனங்க ளாய்ந்தீத லின்னுமுத்தி யோகருக்கு
வேதனங்கள் விதித்திடுதென் மேலுமவை யீந்திடுதல். (௨௨௫)

என்னகுற்ற மெனவினவி யேற்பாடு செய்தனுமாந்
தன்னமுமா சாற்றவிந்தச் சட்டநிரு பணசபைக்கண்
முன்னமன முவந்திருந்தோன் முதன்மையுள மாதுலனும்
பின்னமகன் றாய்ந்தமுத்துக் குமாரசாமிப் பெருந்தகையே. ()

துங்கமுள கவுஞ்சிலுக்குத் துரைராம நாதனென்பான்
மங்கலமாய்த் தோற்றுமன்றே மந்திரமா ளிகையிருந்த
வங்கமுளோர் தம்முகமு மணியரசர் தம்முகமுஞ்
செங்கமல மொத்தவவன் றிருமுகமோ பரிதியொத்த. (௨௨௭)

பாட்டனுடன் மாதுலனுஞ் சட்டநிரு பணசபைக்க
ணீட்டமுடன் முன்னிருந்தோர் நிருபருட னொத்திருந்தோர்
நாட்டமுடன் சேர்ராம நாதமன்னு மொத்திடுமோர்
கூட்டமுடன் குடிகளுறுங் குறைகளைத்தா னொத்திடுமே. ()

வல்லாரென் றுள்ளவரும் வஞ்சகரென் றுள்ளவரு
மொல்லாரென் றுள்ளவரு முற்றவரென் றுள்ளவரு
நல்லாரென் றுள்ளவரு நாமுரைக்கு மித்தகைய
வெல்லார்தங் கண்களுஞ்சென் றிவன்முகத்திற் றைக்குமன்றே.

ஓராழி யுருட்டியுல கோம்புமவன் முறைபிறழின்
வாராழி சூழிலங்கை மந்திரிக ளேதுசெய்வார்
பேராழி விரற்கரத்தாற் பெரிதமர்த்திப் பேசுமிவன்
தோராழி போற்பொறுத்துத் தீர்க்குமுய ரமைச்சினன்காண். ()

தேக்குகலைக் கடல்பருகித் தேயமுற்றும் விளங்கவொளி
யாக்குபுகழ் மினல்பரப்பி யரியசட்ட விடியிடித்துக்
காக்குமருள் சேர்ராம நாதனெனுங் காரெழுமேல்
வாக்குமழை பொழியாதோ மந்திரஞ்செய் மன்றகத்தே. (௨௩௧)

தானாட்டித் தாளிறுத்தும் தன்மதமுந் தயக்கமுள
மேனாட்டி னுள்ளவரு மிகவிரும்பு மொழியழகு
நானாட்டி நவிலுவனோ நவிலுவதென் னின்னுமென்னைப்
போனாட்டி னெவர்க்கேனும் புகல்வரென்கை யையமன்றே. ()

புத்திரர்கள் பேசுகின்ற புந்திகவர் குதலையென்னப்
பத்திரமாய்ப் பேசுகினும் பலருளமு மூடுருவ
வத்திரம்போற் பேசுகினு மவைகருதா ரவையகத்தோர்
சித்திரமாய்ப் பேசுமதைத் தெவிட்டாமற் கேட்டிருப்பார். ()

ஒழுங்கான வாக்குகளே லொண்பொருள்க ளுடையனவேன்
மழுங்காத நீதிகளேன் மன்னவரும் விரும்புவதேற்
றெழுங்காத லெவர்க்குமுள துரைராம நாதன்மொழி
விழுங்காமல் விட்டிடுமோ மேவமைச்ச ருளங்களையே. (உ௩௪)

முன்னாக்கை யெடுத்தவரு மொழிகுவரோ பூவுலகிற்
பின்னாக்கை யெடுப்பவரும் பேசுவரோ வென்றிறமை
யென்னாக்கை திருந்தியபின் னேற்குமெனத் தானினைந்து
பொன்னாக்கை யீங்கிவற்குப் புண்டரிகன் படைத்தனனால். ()

தானீதி யெடுத்துரைக்கத் தடைவிடைகள் காட்டவதிற்
கோனீதி வழுவுமெனிற் கூறுமற் குறைகூறும்
மேனீதி யீதெனவே மேலமைச்ச ருரைக்கினிது
போனீதி யில்லையெனாப் புன்னகையுஞ் செய்திடுமால். (உ௩௬)

பொறுத்துரைத்தும் பொருத்தமிலாப் போலியுரை புகலுவரேன்
மறுத்துரைத்து மனுநூலின் வழக்குலக வழக்குகளை
யறுத்துரைத்துந் தென்னிலங்கைக் கமைந்தநெறி முறைமைகளை
நிறுத்துரைத்து நீதிகளை நிலையாக நிறுத்திடுமே. (உ௩௭)

தேர்ந்தகலைக் கடல்குளித்த சேர்ராம நாததுரை
யார்ந்தமதி யமைச்சனென்றே யானதென்றே வன்றுதொட்டே
நேர்ந்தபிற ரிருந்துமென்னே நீடியவை வகைவளமுஞ்
சேர்ந்தகளித் தென்னிலங்கை திருந்தியது நிச்சயமே. (உ௩௮)

ஆங்கிலத்தி லெவ்வளவோ வவ்வளவுஞ் செந்தமிழு
மோங்குவட மொழியுமென வோதியநூலளவறிவுந்
தேங்கிவரும் பெருந்திருவுஞ் சேர்ந்திலங்கு மிவனிடத்தே
யீங்குலவு மந்திரித னிலக்கணநாங் கண்டனமே. (௨௩௯)

நாட்டிடையே குறைகளுறி னல்லிலங்கை யதிபதியைக்
கூட்டியவண் கொண்டேகிக் குடிகளுக்காத் தானிரங்கிக்
காட்டியவை நீக்கிவைப்பான் கருதிடுங்காற் றுய்புதல்வர்க்
கூட்டிவளர்த் திடுதலொக்கு முவனுயிர்கட் கன்னையன்றே. ()

அன்றுசிறு தானியத்தி னடைகளையு நீக்கினனால்
நின்றகுறை யெனத்தெரிந்து நெல்லடையு நீக்கினனாற்
கன்றுகொலைத் தீர்ப்பினாற்றோர் களக்கயிறு நீக்கினனாற்
சென்றுகுறை நேர்ந்தவர்தஞ் சிறைகளையு நீக்கினனால். (௨௪௧)

தோற்றுமணைக் கானசுங்கத் துறைகளையு நீக்கினனா
லேற்றுமதித் தீர்வைகளை யெளிதாகக் குறைத்தனனாற்
சேற்றுழக்கும் வன்னிகளிற் சேனைகளுங் கொடுத்தனனான்
மாற்றுவருந் தனியீழ மந்திரியென் றுயர்ந்தவிவன். (௨௪௨)

வேந்தருக்குந் திறைப்பொருட்கு மமைச்சருக்குங் குடிகளெனு
மாந்தருக்கு மொருபடித்தாய் மனுநூலி னடுவுநின்றே
தாந்தருக்கு மிளநகையுந் தயங்கியிட மற்றொருவ
ராந்தருக்கு மடங்கவிவ னரியசட்ட நாட்டிவைப்பான். (௨௪௩)

தென்னனென்றுந் தருமனென்றுஞ் சேடனென்றுங் கலியுகத்துக்
கன்னனென்றும் போகியென்றுங் காமனன்றிக் கூடவரும்
பின்னனென்றும் பெயல்காத்துப் பெருவிளைவு தருமிலங்கை
மன்னனென்றுஞ் சேர்ராம நாதமன்னை வழங்குவரால். (௨௪௪)

தென்னிலங்கைத் தமிழருக்கே சீர்களைநன் காய்ந்தாய்ந்து
முன்னுபதின் மூன்றேயாம் வருடமட்டு முறைசெலுத்தி
புன்னியவா யிரத்தியெண்ணூ றுடன்றொண்ணூற் றிரண்டாண்டிற்
பன்னுமனுச் சட்டநிரூபகசபையிற் பிரிந்துயர்ந்தே. (௨௪௫)

நிதியுடைய பாண்டிதொண்டை நிலவியகே ரளஞ்சோழ
நதியுடைய வளநாடு நான்கனுளுந் தான்சிறந்தே
திதியுடைய தாயிலங்குந் தென்னிலங்கை யாளநல்ல
மதியுடைய ராசாங்க மந்திரிதா னாயினனே. (உசகூ)

தானமைச்சாய்த் தம்பிவரச் சட்டநிரு பணசபைக்குக்
கோனமைக்கத் தனித்தமையன் குமாரசாமி முதலியென்பா
னூனமிலா யிரத்தியெண்ணா றேடுதொண்ணூற் றேழாண்டின்
மானமைந்த மந்திரியாய் வந்துநமக் குதவினனே. (உசஎ)

நலமதித்த சேர்ராம நாததுரை தமிழருக்காப்
புலமதித்த கவுஞ்சிலுக்குப் போய்ப்புரிந்த நலங்களிவை
வலமதித்த ராசாங்க மந்திரிச்சீர் மேலுரைப்பன்
குலமதித்த துணைமாட்சி கூறுவது மமையுமிங்கே. (உசஅ)

## துணைவர்மாட்சி

வேறு

முந்த வேமா போங்குற முதன்மைபெற் றிருந்தோர்
தந்த பேறநந் தானுரு வாமெனத் தகுந்தோ
ரிந்த நானிலத் தேவரு மேத்துமா றிருந்த
வந்த வன்புடைச் சோதரர் மாட்சியு மறைவேன். (உசகூ)

ஏய்ந்து தன்னுட னுதித்தநற் சோதர ரிவரை
வாய்ந்து நின்றிட முன்னநான் வரைந்தது பொதுக்காண்
டோய்ந்து மன்னரிற் றுலங்கிவர் தூயமாண் பவைக
ளாய்ந்து மற்றிவண் வேறெடுத் தறைவது சிறப்பே. (உருo)

சொன்ன சோதரர் மாண்புடன் றோற்றமும் பிறவு
மின்ன காலமென் றவணவ ணெடுத்தெடுத் தெனக்குப்
பன்ன வென்றிடிற் பல்குறும் பகர்ந்தபல் குறிப்பா
லன்ன வாண்டுக ளறிகுத லறிஞரின் கடனே. (உருக)

ஆமி வற்கிது தகுமென வருங்கலை முதியோர்
பூமி போற்றிட வாய்ந்துமுன் புகன்றிடுங் குமார
சாமி யாங்குலப் பெயரினன் றரணியர் மதித்த
தோமி லாதமந் திரிக்குமுன் றோன்றிய குரிசில். (உருஉ)

ஆதி நாளினி னுங்கில மரியவித் தோன்றல்
கோதி லாவிறற் கொற்றவர் குலாவிய கொளும்பி
னீதி சான்மகா ராணிதன் பெயர்கொடு நிலவுந்
தீதி லாதகல் லூரியிற் றிருத்தகப் பயின்றே, (உருங)

முன்பு தானிவண் கற்றிடுமுறையினுக் கிணங்கப்
பின்பு சென்னைமேற் போந்தவண் பிறங்கிய கழகத்
தின்பு சாலுறுந் தருமநூற் பண்டித னெனவே
யன்பு தந்தநன் னகரிமீண் டணுகின னிவன்காண். (உருச)

ஓத வேந்தனு நியாயநல் வாதியா யுலவா
நீத மன்னிய கவுஞ்சிலி னிலவுறுப் பினனுய்ச்
சீத நாட்டுள சீர்களைத் திருத்துநாள் ராம
நாத மன்னுமச் சங்கமே னணுகின னெருங்கே. (உருரு)

ஆய சீர்த்திகள் சாலவு மமைந்தவிக் குரிசில்
நேய மானவன் னீடிய தனத்தினன் னமசி
வாய மென்றுறு முதலியில் வாழ்க்கையி னலத்தாற்
றூய மாகவே பயந்திடு மூத்தநற் றனையை, (உருசு)

ஆன பேர்பெறு மன்னபூ ரணியெனு மணங்கை
மான மேவிய மன்றலை மனமகிழ்ந் தியற்ற
மேன வில்லற வினைவுகள் யாவையும் விளைந்தே
யூன மில்லவன் காந்தனென் றொருமக வளித்தான். (உருஎ)

உற்ற காந்தனு மோர்துபல் கலையறி வுடையோன்
கற்ற மாந்தருக் கரியநூல் கவின்பெற வியற்ற
நற்றனந்தரு வானிது நின்றிட நலத்தாற்
சொற்ற தந்தைதன் சோதர னுடனவ ணமைந்தே, (உருஅ)

அங்க ணுற்றவந் துலங்குற வமர்வுறு நகர
சங்க நாடனிற் றனதுதாய் நாடெனத் திகழ்ந்து
பங்க மற்றயாழ்ப் பாணமென் றிருந்தசீர்ப் பழைய
வெங்க ணுடுவந் தேகுவா னுங்குநின் றெழுந்தான். (உருக)



கௌரவ ஸ்ரீ: பொன். குமாரசுவாமி.

தோற்றுமா யிரத்தெண் ணூற்றுத் தொண்ணூற்றைந் தாகு மாண்டி
னேற்றுள கன்னி மாத மெய்துநற் கால மாகப் [ண்டி
போற்றுயாழ்ப் பாணத் துள்ள பொற்புகள் பார்க்க வென்றே
சாற்றுநாட் டணிக ணுடித் தரைவழி யாக வந்தான். (உசுய)

மூத்தசீர்க் குமார சாமி முதலியக் கொளும்பு நின்றும்
பாத்தயாழ்ப் பாண மென்னும் பழநகர் வருகின் றனென்
றேத்தகு நாடு தோறு மெழில்பெறப் பந்த ரிட்டே
பூத்தகு மாரி யோடும் பொலிவொடும் வரவேற் றூர்கள். (உசுக)

பந்தரி னகங்க ளெங்கும் பாங்குறப் படித்த பின்னர்ச்
சுந்தர நாடு கட்குச் சுகங்களைத் தருக வென்றே
வந்தபேர் மாந்தர் வாழ்த்தி வேண்டலு மதற்கு நேர்ந்தே
யந்தநன் னகர்போய் மீள வவர்குறை நீக்கி வைத்தான். (உசுஉ)

சந்துக்க டெருக்க ளெங்குஞ் சனகணி நின்று நோக்கக்
கொந்துற்ற மாலை நாற்றிக் கோலஞ்செய் வீதி வந்தே
யிந்துக்கட் கான வண்ணே யிந்துக்கல் லூரி நாடி
முந்துற்ற குமார சாமி முதலிதன் காட்சி தந்தான். (உசுங)

தன்னுள வூர்க ணூடாத் தலங்களை நாடா மன்னன்
மன்னுள வரண நாடா மதிப்புளோர் தமையு நாடாத்
தென்னுள வளங்க ணூடாச் செய்யபதா மரைமேன் மேய
மின்னுள நகரி வந்து மீளவு மடைந்தா னன்றே. (உசுச)

மங்கலில் லாமற் கற்ற மகாமகோ பாத்தி யாயன்
தங்கட னெழுக்கம் பூண்டோன் சாமிநா தைய னென்போன்
சங்கநூற் காவி யத்துட் டகுமணி மேக லைப்பே
ரங்கணு லச்சி டற்கே யாய்தருங் காலந் தன்னில், (உசுரு)

மயங்கிய வையந் தீர வகுத்தநூ லுணர்ந்த புத்தந்
தயங்கிய பாட சாலைத் தலைமையா சிரியன் றன்னால்
வயங்கிய பொருணுட் பங்கள் வரைகுவித் தனுப்பி வைத்தே
முயங்கிய தமிழை யோம்பு மூதறி வினனு மின்னேன். (உசுசு)

அருந்தவே யமுத நல்கு மதுவென வுபாத்தி யாய
னிருந்தவேந் தியல்சொல் சிந்தா மணியுட னியம்ப நின்ற
திருந்தவே சிலம்பு கூறுஞ் சிலப்பதி காரந் தன்னைப்
பொருந்தவே யச்சி டற்காய்ப் பொருளுப கரித்த வள்ளல். ()

ஆற்றிய தருமஞ் சால்பொன் னம்பல முதலி யார்முன்
போற்றிய தமது நாமம் பொருந்துமீச் சுரனுக் கென்றுஞ்
சாற்றிய வவற்குப் பின்னாட் டலைமக னான தானே
மேற்றிய னித்தி யம்நை மித்திய நடத்தி வந்தோன். (உ௬அ)

ஏர்தகு மணங்க டம்மை யெழுதினு மொழியி னுந்தான்
நேர்தகு மறையோர் வேத நெறிப்படி யியற்று வாரேற்
பார்தகு மெனுமச் சட்டம் பண்டைநா ணிறுத்தி வைத்தோன்
பேர்தகு மாறு வந்த பெருந்தகை யிவனே யன்றோ. (உ௬௯)

முன்னமு மீன்று ரோடு முறைகொள்யாத் திரைகள் செய்தோன்
பன்னுநூற் கடலைத் துய்த்த பாவலர்க் கதிகந் தந்தோன்
மன்னுதன் னாட்டை நோக்கி வளநனி பெருக்கி வைத்தோ
னின்னமுங் குமார சாமி யேந்தறன் சீர்க ளுண்டால். (உ௭௦)

வேறு

முந்தை வந்த முதல்வர்க் கிளையவன்
தந்தை தாய்க்குத் தகுங்கலிப் பீந்தவன்
விந்தை யானநல் வித்தைவி னோதனுச்
சிந்தை கூர்ந்தவன் சீரரு ணாசலம். (உ௭௧)

திண்மை நீதி தெளிவு கலைபரு
ளொண்மை யோக முயர்வு பொறைநிறை
வண்மை யோதி மதிகுண மாண்புசீ
ருண்மை யாவு முவனுடன் றோன்றின. (உ௭௨)

நோக்க நண்பு நோதுமல் பகையெனப்
பார்க்க வின்றிப் பழிதனக் கஞ்சிக்கோ
ணாக்க தென்ன நடுநிலை நிற்பவன்
நீக்க மற்றகன் னீதிக டந்தவன். (உ௭௩)




கௌரவ ஸ்ரீ சேர்: பொன். அருணாசலம்.

நேர நின்ற நெறிக டவறுகிற்
றூர மென்றுந் தனயர்க ளென்றுமுட்
சோர லற்றதன் சோதர ரென்றுஞ்சற்
றீர நெஞ்சி லிலாத குணத்தினன். (உஎச)

போற்று மீசன்றன் பூசைமேற் பத்திமா
னூற்று கின்றதற் காமில் லறந்தனைச்
சாற்று மாற்றிற் றகுதிகண் டெய்ப்பவன்
றேற்று மந்தத் தொழிற்பயன் கொள்பவன். (உஎரு)

வேறு

முன்னவருங் கொளும்புநகர் முதற்பாட சாலையதின்
மன்னவருங் கலைகளைத்தான் மனவூக்கத் துடன்பயின்றே
பின்னவருங் கதித்தவினைப் பேறுநின்று கூட்டிவைப்ப
வுன்னவருங் கலைவனப்பா லுதனுடன்சம் பந்தமுள்ள, (உஎசு)

ஆட்சிபெறும் புரவலருக் கரணான கொளும்பி னூறுங்
காட்சிபெறும் மாராணி கழகமதிற் கற்றுவரு
மாட்சிபெறுந் திறமதனை மதித்தெடுத்த வரசினராற்
சாட்சிபெறு மிங்கிலத்திற் றானுவந்து சென்றிருந்தே, (உஎஎ)

தாக்கமுள வருங்கலைதேர் சர்வகலா சாலைமன்னி
யாக்கமுள வங்கிலரு மதிசயமு மன்புமுற
வூக்கமுள னுடங்கி யோதுமுயர் நூல்களிலே
நோக்கமுள னாகிமதி நுட்பமுடன் கற்றதன்மேல், (உஎஅ)

பின்னெவரு மதித்திடுவான் பீயேமே லெம்மேயென்
றின்னவரும் பட்டமிரண் டெங்கொருங்கே பெற்றனனாய்த்
துன்னவரும் பெருஞ்சீர்த்தித் துணைவருக்கு வாய்த்ததம்பி
யுன்னவருந் தொல்லிலங்கை யுயர்வுபெற வந்தனனே. (உஎகூ)

சாலுயர்ந்த கழனிதொறுஞ் சாலிசெழித் தெழுமிலங்கை
மேலுயர்ந்த ராச்சியநல் விவகார சேவையெனுங்
கோலுயர்ந்த கோனேர்ந்து குலவுமுத்தி யோகமுடன்
மாலுயர்ந்த துரையருண சலமுயர்ந்து வதிந்தனனே. (உஅ0)

பகுதிபெற வரும்பெருமண் டலநீதி பதியாகித்
தகுதிபெற நனிநீதி தான்செலுத்தி வருமளவில்
மிகுதிபெற வளங்குகிற்கும் பத்திரமி வேசகராய்த்
தொகுதிபெற வருமவர்க்குத் துரையாகி மன்னினனால். (உஅக)

மதித்திடுமுத் தியோகமதின் மன்னிவரு மந்நாளிற்
றுதித்திடுபேர் நிறுத்திவந்த துரைராம நாதனென்றே
யுதித்திடுநல் லண்ணனுட னுயர்நகர சங்கமென
விதித்திடுமக் கவுஞ்சினுக்கு மேவுமதி யமைச்சானன். (உஅஉ)

வெம்பியெழுந் துன்பமெனும் வேலையினுள் மூழ்குநர்க்கோ
ரம்பியென நின்றுமுன மருள்ராம நாதமன்னன்
றம்பியுடன் கவுஞ்சிலிலே தானமர்ந்த திந்நாளின்
நம்பியெனு மண்ணனுட னன்கமர்ந்த தந்நாளில். (உஅங)

வேறு

தந்திய றனத் தானுஞ் சார்ந்துசெய் தியாகத் தாலும்
வந்திய லறங்க ளாலு மனத்துமா சின்மை யாலு
முந்திய நமசி வாய முதலிநற் றவத்தாற் பெற்ற
வுந்திய நேய மக்க ளுவர்களு ளிளைய மாது, (உஅச)

நிற்பினிற் புவிமே லெந்த நேரிழை யென்று கொண்ட
வற்பினிற் றெரிவை மாரு மறைதரத் தக்க சீலி
பொற்பினிற் கமலை சான்ற பொறையினிற் புவிமான் செய்ய
கற்பினிற் சாலி நேரக் காரிகை நாமஞ் சொர்னம். (உஅரு)

மீனகு விழியா ளிந்த மெல்லிய றனைத்தா னுய்ந்தே
மேனகு வதுவை யாற்றி விளைவுதுய்த் துறுநா டன்னிற்
றேனகு மாலை மார்பச் செம்மலுக் குவகை பொங்கக்
கானகு குழலா ளாங்கே களிப்புடன் மகாரைத் தந்தாள்.(உஅசு)

அருமகன் முதனுட் டொட்டே யமைச்சராங் குடிக்குப் பின்சீர்
தருமகன் முந்தை யோரிற் றனுமே கவுஞ்சி லுக்கு
வருமகன் குணத்நான் மிக்கோன் மாணரு ளைச லந்தன்
னொருமகன் பின்னர் வந்தோ னுயர்மகா தேவ னாமே. (உஅஎ)

ஏற்றமாங் கலைகள்கற்க வெண்ணியிங் கிலங்துக் கேகித்
தேற்றமா யுயர்ந்த சித்தி சேர்ந்துமீண் டேகமுன்ன
மூற்றமா மூழ்வங் தெய்த வுயர்கதிப் பேறு பெற்ற
தோற்றமாம் பதும நாபத் தோன்றலே சேட்டமைந்தன். (உஅஅ)

சனந்தனக் கியலு மென்றே சாலவும் பொருடே டுற்றே
ரினந்தனக் கெழுதா ராகி யிறப்பரே லவர்தம் மிக்க
தனந்தனக் குரிமை யான தத்துவ மெடுக்க வென்றே
கனந்தனக் கான விந்தக் காவலன் விதித்து வைத்தான். (உஅகூ)

ஊங்குவ னினைய வுத்தி யோகந்தா நடாத்து நாளி
லோங்குசீ ரிலங்கை யெங்கு முள்ளபத் திரங்க ளுண்மைப்
பாங்குற வரைவர் பக்கம் பற்றிநின் றெழுதல் செய்யா
ராங்குதா னுய்ந்து நாடி னவதிகள் வருமென் றஞ்சி. (உகூ0)

எண்ணிய வெண்ணுன் கான விம்மையி னறங்க ளானும்
பண்ணிய தாதை தன்பேர் பகர்சிவ பெருமான் பூசை
கண்ணிய காலந் தோறும் கடிகையும் வழுவா வண்ணம்
புண்ணிய னிவனு மாங்கே போற்றினன் வருதல் செய்வான். ()

நலனுள வறிஞ னென்றே நவிலரு ஞசை லப்பேர்
தலனுள தாக வைத்தோன் றனதுயாழ்ப் பாண நாட்டிற்
குலனுள பலரும் வந்துகூடியே வருகை யேற்க
வலனுள தருக்கி னேடும் வந்துநற் காட்சிதந்தோன். (உகூஉ)

## யாழ்ப்பாணத்தினர்தம் மதிப்பும் மகிழ்வும்

இங்கிய லோடு வைகு மினங்களுக் குயர்வு மட்டோ
வங்கிய லமையு மீழத் தனைவர்க்கு முவகை நல்கிப்
பொங்கிய வமைச்ச ராகிப் புரவலர் தம்பா லாகத்
தங்கிய ராசாங் கத்தைத் தாங்கினோ ரிவர்தா மன்றோ. (உகூங)

மற்றவர் கொளும்பி னூடே மகாமதிப் புடைய ராகி
யுற்றவர் தமக்கு வேண்டு முதவிமே லுதவி யாகச்
செற்றமென் றிலரா யெல்லாச் சீரொடும் விளங்கு நாளிற்
பெற்றயாழ்ப் பாணத் தார்தம் பெருமைக்கு மவதி யுண்டோ. ()

ஊருக்கு முறவி னர்க்கு மொருமகன் பிறந்தா லெய்துஞ்
சீருக்கு நிகரின் றுயிற் றிரைபுடை கொளித்துச் சூழு
நீருக்கு வீழ நாட்டை நிருபராய்ப் போற்று மூன்று
பேருக்குத் தாய்நா டிதேற் பெருமகிழ் வளக்கப் போமோ. ()

மூன்றுவேந் தரையே போல முற்றியே விளைவு கொண்ட
மூன்றுசெம் மணியே போல முத்தொழி லியற்றி நின்ற
மூன்றுதே வரையே போல முழுதருட் கருணை கூர்ந்த
மூன்றுநேத் திரமே போல மூவரு மிலங்கை யுற்றார். (உகூகூ)

தன்னனே ரறங்கள் செய்துந் தவங்களைச் செய்தும் வைத்த
பின்னையே பயந்த பாலர் பெரியவ ராவ ரென்பர்
பொன்னனே ரறிஞர் வாக்குப் பொய்மையோ மெய்மை யன்றோ
முன்னையோர் தவத்தி னுண்மை மூவரிற் கண்டா மன்றே. ()

அங்கிலர் தமிழர் டச்ச ரானவொல் லாந்தர் மற்றைச்
சிங்கள ரெவர்க்கு மந்நாட் சிந்தைமே லுவகை யென்னிற்
பங்கமி ருதை பொன்னம் பலமெனு முதலி யாருக்
கிங்குள மகிழ்வி னுக்கோ ரெல்லையு மிருக்குங் கொல்லோ. ()

முந்தையிற் றவஞ்செய் தற்கு முயங்குமில் லறமாற் றற்கு
மைந்தரைப் பெறுவ தற்கு மதிபத்துஞ் சுமப்ப தற்கும்
வந்தநற் றுய்த னக்கு வயதினின் மகார்கள் வைகும்
விந்தையைக் காண வையா விதியுமொன் றிருக்குங் கொல்லோ.

## ராசாங்கமந்திரியாதல்

வேறு

சீத மேவுதென் னிலங்கைமேற் றினகர னிகர்த்து
நீத நீடொளி பரப்புற நேர்தரு மிராம
நாத மன்னவன் மேலைநா ணவிலுரா சாங்கப்
போத மந்திரி யானமை யினியிவண் புகல்வேன். (௩௦௦)

வலமும் வாய்மையு மனுமுறை வந்தநூ லறிவுங்
குலமுஞ் செல்வமும் பொறையருண் முதலிய குணனும்
புலமும் வாய்ந்தமந் திரிக்கெனப் புகலுறும் சகல
நலமுந் தாமொருங் கேய்ந்தநன் னரேந்திர னிவனே. ()

எண்ணு மாயிரத் தியைந்தவெண் ணூறுட னிணங்கி
நண்ணு கின்றதொண் ணூற்றிரண் டாண்டினி னலங்கள்
பண்ணு மாறுரார் சாங்கநல் லமைச்சனுப் பரித்தே
கண்ணு மாங்கவன் கண்ணென நடத்தினன் கருமம். ()

ஆன மந்திரிக் காகிய வமைச்சியற் கடமை
மேன தானகீழ்க் கோடுகள் விசாரணை நடத்தித்
தீன மாஞ்சிறு தண்டனை தெரிந்திட றவிர
வூன மானமேற் றண்டனைக் குவைக்கிலை யுரித்தே. (௩௦௩)

வாத புத்தகம் வரைந்தவன் விடுத்திட வடித்துப்
போத வர்திகள் சாட்சிக டுரந்தரர் பெரிது
மோத நின்றன யாவையு மொருங்குநன் காய்ந்தே
நீத மானமேற் கோடுக டீர்த்திட நிறுத்தல். (௩௦௪)

ஆலு நுண்மதி யாற்றவு மமையுமிவ் வமைச்சன்
சாலுங் கோடுகட் காமெனத் தருவது மலாம
லேலும் வாதிக டம்மிடைக் குற்றங்க ளிலையேன்
மேலுந் தானதை யாய்ந்தனன் விலக்கவு முரித்தே. (௩௦௫)

அந்த நீதவான் றனதுதத் துவப்படி யலது
முந்த நின்றகுற் றங்களைத் தண்டித்தன் முடியா
திந்த மேற்பெருங் கோடுகட் கேற்றவு முடியா
வுந்த மந்திரிக் குவைவெலா முடியுமென் றுணர்மின். ()

உலக நீர்மையு மோர்ங்குபன் னூல்களி னுணர்வு
மிலக நேரனு பவங்களுஞ் சித்திபெற் றிலங்கைத்
திலக மேயெனத் திகழ்ந்துதன் சீர்களுக் குரைக்க
வலகி லாதவித் தோன்றலுக் கிவைகளு மரிதோ. (௩௦௭)

இந்த ராசநல் லமைச்சனு மிறைத்தொழி னடத்தி
வந்த வாண்டுபன் மூன்றதை வகித்தன னுறுங்கா
லந்த நல்லதே சாதிப னுழுய ராசின்
னந்த வில்லவந் தாங்கமந் திரியுமாய் நயந்தான். (௩௦௮)

ஓங்கு கோடுகட் குயர்வழக் குதவுவ தூவனேற்
றூங்கு வேந்தனுக் கரியவந் தாங்கமுந் தருமே
லீங்கு நாடுகி னருந்தவ மியற்றுநர் தமக்குட்
பாங்கு பெற்றவன் றருந்தவம் பகருகிற் பெரிதே. (௬0௯)

## பிரதிநிதித்தலைவனுதல்

இன்ன வாண்டுபன் மூன்றினுட் டானிடை யிடையே
யன்ன வாய்ந்தவந் தரங்கநல் லமைச்சியற் கடனு
முன்ன வந்தவர்க் காகமும் முறையிருந் ததற்பின்
சொன்ன மந்திரித் துவந்தனைச் சொர்தமுற் றிருந்தான். (௬௧0)

சேட்ட மந்திரி தானவண் செய்குறுங் கடமை
நீட்ட மானமேற் கோடுக ணீதங்கள் விளங்க
நாட்ட மாமதி காரங்க ளுடுறீஇக் கொடுத்தல்
வேட்ட ராசநல் லமைச்சுக்கு மேவுமிவ் விதியே. (௬௧௧)

வேண்டு மண்டலக் கோடுகள் விளங்குபுத் தகங்கள்
ஆண்டு தான்றரச் செய்துநன் காயவு முரித்தே
யீண்டு வந்தகீழ்க் கோடுக ளியற்றுறுந் தீர்ப்பை
மீண்டு மேலுயர் மன்றுக்கு விடுவது முரித்தே. (௬௧௨)

ஆக வாதிகள் சாலவு மாளத்தின் மறைத்த
வேக மானநல் லுண்மையைப் பருந்தென வெடுத்தே
யோக வேந்தனன் குணர்ந்திடத் தெள்ளிதி னுணர்த்தும்
யூக மொன்றினுக் குவற்கிணை யுலகினி லுளதோ. (௬௧௩)

ஒக்க லோடுநட் புறுபகை யென்றுல குரைக்கும்
பக்க மொன்றுதா னேக்குமென் றுன்னுதல் பழியே
யக்க ணந்தனி லன்புசெய் வேசிக ளகம்போ
லொக்கு வர்தங்க டெரிந்துதீர்ப் பிடுகுவ னுவனே. (௬௧௪)

முந்த நிற்புறும் ராசமேன் மந்திரி முறைக்குப்
பிந்த வேசல நிதியுடைப் பெருநில மளிக்கு
மந்த நல்லதி பதியினந் தரங்கமே வமைச்சாய்
வந்த பின்னடப் பித்தது வருடமீ ரிரண்டே. (௬௧௫)

### வேறு

கரையிவண் கலைக்குக் கண்ட கவுரவ ராம நாத
துரையிவண் கோல்கைக் கொண்ட தூயதே சாதி பற்குத்
தரையிவண் புரத்தற் கொத்த தனியிர கசிய மாயும்
வரையிவண் காணு வாய்மை மந்திரி யான வந்நாள், (௫௧௬)

தாங்கிய நீதிச் சட்ட நிரூபண சபைத னக்கு
மாங்கிய லமைபுந் தேச வதிபதி தனக்கும் பாங்கா
யோங்கிய மதிக ளாயா லோசனைச் சங்கத் துக்கும்
வாங்கிய புகழான் மிக்க மந்திரி யாகி யுற்றான். (௫௧௭)

சொன்னவா யிரத்தெண் ணூற்றுத் தொண்ணூற்றே ழோடு தொட்
பின்னநன் முறைக ளாட்டு மிருவகைக் கவுஞ்சி லுக்கு [டே
மன்னவன் துயர்ந்த நீதி மதியுடை யமைச்ச னாகிப்
பின்னமி லிலங்கை நாட்டைப் பெட்புறப் பேணி வந்தான். ()

நீட்சிசேர் நேர்மைத் தான நெறிகொள்செங் கோலை யேந்தி
யாட்சிசே ரரசை யோம்பு மவற்குமேற் றுணையா யுற்றே
சூட்சிசே ருலக பாரஞ் சுமந்தன னுரைப்ப தென்னோ
மாட்சிசே ரிலங்கைச் சூடா மணியன்றோ ராம நாதன். (௫௧௯)

## 2. இங்கிலந்துசேறல்

தோற்றிய வாயி ரத்துத் தொளாயிரத் தொருநல் லாண்டிற்
சாற்றிய முன்னை யாண்டிற் றொன்பதி னைந்திற் பின்னர்
போற்றிய நிதிக டம்மாற் பொற்பினு லமா ரூரை
மாற்றிய விங்கி லந்து மதிக்கச்சென் றடைவ தானான். (௫௨௦)

மாண்டகு மாண்ம னைக்கண் மகுடமா மகிப னோடு
மேண்டகு பாளி மேந்தி னெழின்மதி யமைச்ச னோடுங்
காண்டகு மவர்க ளோடுங் கலந்துகண் டளவ ளாவி
வேண்டகு ராம நாதன் மேவினன் சிலநா ளாங்கே. (௫௨௧)

ஓங்கியே யுலகின் மாந்த ரைம்புல வுணர்வு முற்றும்
வாங்கியே விளங்கு கின்ற மாநகர் லண்ட னுமேற்
றோங்கியே யணிகள் சான்று திகழ்புர மனைத்துஞ் சீர்க
டாங்கியே யமர்ந்திட் டாலுந் தனக்கிணை யாகு மோதான். ()

சீருடைத் தர்க நெஞ்சிற் சிந்தித்த கரும முற்றிப்
பாருடைத் தேய மாந்தர்ப் பகுப்புளோர் விடுப்ப வாங்கே
நீருடைத் தான தான நெடுவழி கடந்து மீண்டு
மேருடைத் தாகு மீழத் திலங்கைவந் தணைந்தான் மன்னன். ()

சோதரர் பெருமை யாலுந் துலங்குமந் திரியோகத் தாலு
மாதர வளித்துப் போற்று மருமகார் சிறப்பி னாலு
மீதர மாக மன்னி விளைவுகூர் செல்வத் தாலுஞ்
சீதர னருளி னாலுந் திகழ்ந்துவீற் றிருந்தா னையன். (௬௨௪)

வேதனே யமைப்புத் தன்னின் மேலுள நூல்க ளாய்ந்த
போதனே யறிவு தன்னிற் பூதலத் தவரைக் காக்கு
நீதனே யரசு தன்னி னேர்கவு ரவசேர் ராம
நாதனே யாகு மென்னி னாவினி நவில்வ தென்னே. (௬௨௫)

உலங்குல வுறுத்தோள் வேந்த னொருகுறை யிலாம லிந்நா
ணலங்கிள ரிலங்கை வாழ நடாத்துறுந் தருமச் செங்கோல்
வலங்கிள ரறமுஞ் சீரு மன்னுசேர் ராம நாதன்
கலங்கிர வலர்பாற் செய்யுங் கருணைநேர்ந் தோங்கு மம்மா. (௬௨௬)

## சித்தாந்தப்பயிற்சி

வேறு

பொன்னிவள நாட்டினொரு தலைநகராய் முத்தமிழுட் பொலிசங் கீதந், தன்னினிணை யகன்றுசர போசியர சியற்றியுற்ற தஞ்சை யின்கண், மன்னியுள மாஞானி சித்தாந்த நூன்முழுது மயக்க மின்றிப், பன்னிவரு மருளபரா னந்த சாமித் தேசிகன்பாற் பத்தி பொங்க, (௬௨௭)

முந்துபசு பதிபாச முப்பொருளின் குணங்களையு முதல்வன் றனை, தந்துலக நடத்துவது மாயைகன்ம மாணவமாந் தளைக டம்மா, னைந்துயிர்க ளுழலுவது மவ்வினையின் போகமுற்று நுகர்ந்த பின்னர், வந்துசிவ மடைகுவதுந் தத்துவத்தி னிலைகளுடன் வகுத்துச் சொல்லும், (௬௨௮)



ஸ்ரீலஸ்ரீ அருள்பரானந்த தேசிகர்.

புத்திதருஞ் சிவஞான போதமதன் வழிநூலாய்ப் பொருந்தி நின்ற, சித்திசிவப் பிரகாச நவநீத மொடுக்கமுடன் சேர்ந்து மன்னும், பத்திமிகத் தருந்தாயு மானவர்மேற் கீதையெனப் பகருகின்ற, முத்திதருஞ் சித்தாந்த நூன்முழுதுந் தெரிந்தெடுத்து முறையிற் கற்றே, (ருஉகூ)

வாய்ந்தபரா னந்தசாமித் தேசிகனைத் தன்னகமேன் மன்னவைத்தே, யாய்ந்தபதி சாத்திரத்தி னுண்மைகளை யுள்ளவண்ண மகத்திற் பின்னுந், தோய்ந்தபல பொருளையநு வதித்தரிதிற் கேட்டறிந்துந் தொல்லை ஞாலத், தேய்ந்தபரந் தேர்ராம நாதமகா ஞானியென்றே யிலங்கு மையன். (ருங0)

ஆனபரா னந்தகுருத் தந்தவுப தேசமுளத் தமைய விந்த, மானவுல கதுமாய மெனவுதிக்கு முணர்வுலகை மறைக்க வைய, வீனவுட லேனுமிதன் பயனிதுசிவன் றநுதுணையா யிருந்து நித்த, ஞானநிலை நின்றுபரா னந்தவமு துண்ணமன நயந்து பின்னர், (ருங௧)

## யோகசாதனை

அரியமனு வாயினர்க்குப் பக்குவங்கட் கேற்றநிலை யறையுங் காலைச், சரியைமுதற் கிரியையதன் மேல்யோக ஞானமிவை தாமே யெய்தற், குரியமுறை யானேதான் சாலோக சாமீபமோடு மின்னுந், தெரியவரு சாருபசா யுச்சியமும் பதவியென்றுஞ் செப்பு நன்னூல். (ருஙஉ)

ஞானமருள் சாதனமா யுறுதிதரு நிலைத்தாகி ஞாலம் போற்று, மோவமதைக் காதலித்தே குருமுகமாய் முறைமைகளை முறையிற் றேர்ந்தே, யானமறைப் பொருளுரைக்கு முபநிடத முதலெவையு மாய்ந்து வல்ல, மானமனத் தூய்மைமுதற் பக்குவத்தா லுயர்ராம நாத மன்னன், (ருஙங)

கருமமதிற் பட்டாடை யுடுத்து வெள்ளிக் கயிலையென்னக் கவின மெய்யிற், றருமமருள் பூதியள்ளிப் புனைந்துமணி வடங்கழுத்திற் றயங்கச் சாத்திச், சருமமதிற நுகில்விரித்துத் துலங்குகம லாசனமாய்த் தானங் குற்றே, பெருமனவன் சிவமயமே பாகியய னறுந்துமம் பெரிது பொங்க, (ருஙச)

குணங்களொரு மூன்றினையு மைம்புலனை யடக்கியவண் குலவு மூலத், திணங்குமொரு வாயுவினை யெழுப்பியிடை பிங்கலையென் றிரண்டையப்போ, தணங்கவுடன் கும்பகஞ்செய் தோங்குசுழு முனைவழியை யணுகிச் சென்றே, வணங்குதுரி யாதீதநின்றுபரா னந்தவின்பம் வழாமற் றுய்த்தே, (கூகரு)

மீண்டுமுடன் ரேசகத்தில் வருவதுவு நடுவழியை மேவிநின்று, வேண்டுபரா னந்தவெள்ளத் தழுந்துவது மெந்நாளும் விடாமலெங்க, வீண்டுபர ஞானமதிற் றிகழ்ராம நாதனென்றே யியம்புஞ் செல்வ, னுண்டுபல வாகவின்று மோனவப்பி யாசமுட னமரு கிற்கும். (கூகசு)

ஊற்றுவரும் பெருந்திருவு மொருசூழ்ச்சித் துணைவனெனு முயர்வு மிக்க, மாற்றுவரும் புகழுமன்னி வாளரசும் வாயடங்க மனமுமெஞ்சக், கூற்றுவருங் கணைதொடுக்குஞ் சேர்ராம நாதனெனுங் குரிசிலிங்கே, யேற்றுவரும் யோகவப்பி யாசமுனை ரிசைத்திடுங்கா லெவரு மில்லை. (கூகஎ)

நீற்றுமிளிர் பூச்சினுட னீடுமரைப் பட்டாடை நிலவுஞ் சீரும், போற்றுதிருக் கண்டிகைநற் றுவடமு மலர்முகத்தின் பொற்பு மேனி, யாற்றுமொளிச் சாயையுமக் கமலவா சனத்தமர்வு மமைந்த வெல்லாந், தோற்றுமுருக் காண்குவமே லன்பினுடன் குதுகலமுந் தோன்று மன்றே. (கூகஅ)

அவமுடையோ ரிருமையுந்தா மிழந்தவரே யவனிதனி னரியமக்கட், பவமுடையோ ரருந்தவத்தை யுயர்கலையை யறையுமற்றும் பலநற் சீரை, நவமுடையோ ராய்ப்பெறினும் பயனுமோ நாமறிய நவிலு முன்னைத், தவமுடையோர் தங்களுக்கே தனியோக சாதனமுஞ் சாரு மன்றே. (கூகக)

## பத்தினியார்பதமுத்தி

வேறு

இன்னண நிகழு நாளி னினையதென் னிலங்கை மட்டோ
சொன்னதே யங்கண் முற்றுந் துலங்கத்தன் பெயரை நாட்டு
மன்னவன் ராம நாத மதிவலான் றனக்கென் றந்நாட்
டுன்னருந் தவஞ்செய் துற்ற பத்தினி யான தெய்வம். (கூசo)



கௌரவ ஸ்ரீ பொன். இராமநாதர்
நிட்டை வீற்றிருத்தல்.

சீர்தனைக் கணவற் கீந்துஞ் செயத்தகு பணிகள் செய்தும்
கார்தனை வழங்க வைத்துங் கற்பையே நிறுத்துந் தேவி
பார்தனைப் பரவ நித்தம் பலமனை யறங்கள் பேணி
யோர்தனை யுடைய மைந்த ரெழுவரைப் பயந்த செல்வி. (௩௪௧)

தேங்கிய செல்வத் தாலுஞ் செல்வரின் பேற்றி னாலு
மாங்கிய லரசுக் கேற்ற வமைச்சியற் கணவற் கில்லா
ளீங்கிய லாக வாழு மிராசமா னிபத்தி னாலு
மோங்கிய வணங்கி னார்க்கு ளுவமைதா னிலாத மாது. (௩௪௨)

சித்தியு நோன்பு மென்றுஞ் சிவனடி சேவை செய்யும்
பத்தியு மருளு மின்னும் பாவைமார்க் கேய்ந்த சிந்தைச்
சுத்தியு மிருமைக் கேற்ற தொல்லற நடத்தற் கொத்த
புத்தியு மொருங்கே வாய்ந்த புண்ணிய வதியுந் தானே. (௩௪௩)

மானுட வுருவிற் றுய்க்கு மாநிலத் தனுபோ கங்க
டானுட லெடுத்துத் துய்த்தே தனிவழி யாக விந்த
வூனுட லுயிர்தான் விட்டே நடக்குநா ளுதவி யாகி
வானுட னேகத் தக்க வதிப்பொதி யமுது கைத்தாய். (௩௪௪)

எண்ணுமா யிரத்துத் தொள்ளா யிரத்துட னெய்து நான்கி
னண்ணிய வயது தானு நவிலுமைம் பதுதா னாகக்
கண்ணிய புவியின் வாழ்வு கனவுபோ லாகத் தான்செய்
புண்ணிய மான யாவும் பொருந்திமுன் நின்று காக்க, (௩௪௫)

நிறைமதிக் கணவன் றானு நேரிலா மகார்க டாமு
மிறைமதிப் புடைய மற்று மினியமைத் துனருஞ் சூழ
வறைமதிப் போங்க வாழ்செல் லாச்சியம் மாளு மந்தப்
பிறைமதிப் பெருமான் வைகும் பெரும்பதங் கிடைக்கப் பெற்றாள்.

நாளுற வுடலை விட்டு நாடுதற் கரிதே யான
வாளுற வயங்கு தேவ மாணுரு வமைந்த தாய்க்கு
நீளுற மறைகள் செப்பு நியமங்க டவறு றாமற்
கேளுற வந்த மைந்தர் கிரியையீண் டியற்றி யுற்றார். (௩௪௭)

## விவிலியவியாக்கியானம்

சொல்லுமா யிரத்தெண் ணூற்றுத் தொண்ணூறெட் டே யாகச், செல்லுமாண் டதனி னையன் றிரித்துவே றருத்தங் கொண்டே, வெல்லுமா ருசுப் பேசும் விவிலிய ரதிச யிக்க, வொல்லுமா றிருந்த வுண்மைப் பொருளைமத் தேயு வுக்கும், ( )

மேலுமா யிரத்துத் தொள்ளா யிரத்துடன் மேலி ரண்டிற்
சாலுமா ஞானி யென்றே தகுமொரு யோவா னல்ல
ஞாலுமா றுன நல்ல வரும்பொரு ளறிஞ ருக்கே
யேலுமா றமைத்துக் காட்டி யிவனொரு யோவா னுக்கும், ( )

அம்மதம் பிறந்த தேய மந்தநூல் வழங்கு தேய
மெம்மதந் தனையுந் தோரா ரெம்மதத் தேயத் துள்ள
தம்மதப் பொருளீ தென்றே தக்கவ ரான யாருஞ்
சம்மதப் படத்தா னடித் தகும்விரி வுரைகள் செய்தான். ( )

தண்மைசே ராரி யத்திற் றண்டமி ழதனின் மேலு
மொண்மை சேர் சித்தாந் தத்தி லோதுபல் பாடை தம்மிற்
றிண்மைசேர்ந் திலங்கு மிந்தச் சேர்ராம நாத ஞானிக்
குண்மைசே ருரைக ளாய்ந்தே யுரைப்பது மரிய தேயோ. ( )

பாசமே பசுவே யென்றும் பதியென்று மியம்பு மூன்றி
னேசமே விலக்க ணங்க ணீடுயி ரிறப்புத் தோற்ற
மோசமே யிலாமற் சேரு முத்திமே னரக மெல்லாந்
தேசமே லளவை யோடு தெரிப்பது சமயந் தானே. (௧௫௨)

## குமாரசுவாமிமுதலியார்பதமுத்தி

### வேறு

மூவரு மொருங்குதா முடிகொண் மன்னனுக்
கேவரு மதிக்கநல் லெழில மைச்சராய்க்
காவரு மிலங்கையைக் கைக்குள் வைத்துமேற்
றூவரு குறைகளைத் தவிர்த்து வந்தனர். (௧௫௩)

இடன்வரு மிலங்கைமே விலங்கு செல்வத்தர்
திடன்வரு கலைகளிற் றேர்ச்சி மிக்கவர்
நடன்வரு மமலன்ற ளுடு மன்பின
ருடன்வரு சோதர வுதிர பாசத்தார். (௩ருச)

ஏறிய சீரினுக் கிலக்க மில்லவர்
தேறிய தமிழர்செய் தவந்தி ரண்டவர்
வீறிய லமைந்தவ ரிவர்க்குண் மேலைநாட்
கூறிய மூத்தவன் குமார சாமியே. (௩ருரு)

அறைதரு மிவன்றனை யறிவர் யாவரும்
பிறைதரு நிமலன்மேற் பெருகும் பத்தியு
நிறைதரு தருமமு நிலவு சீர்த்தியு
முறைதரு தந்தைவிண் ணுலகஞ் சேர்ந்தபின், (௩ருசு)

தந்தைதன் பெயரையே தந்து நாட்டிய
வெந்தைதன் பூசனை யெழில்வி ழாக்களு
முந்தைதன் றந்தைசெய் முறைமைத் தாகமேல்
விந்தைதன் பாங்கினின் விதிப்ப தின்றியே, (௩ருஎ)

மன்னுபத் தொன்பது வருட மட்டுந்தான்
றன்னுயர் தவந்தனுற் றரும கர்த்தனு
யுன்னுமவ் வாலய வொழுங்கை யிம்மியு
முன்னுமொர் குறைவரா முறையி னுற்றியே, (௩ருஅ)

தொடுத்தவா யிரத்துடன் றொடர்தொள் ளாயிரத்
தடுத்தவா றாகிய வாண்டு தானுற
வுடுத்தநீ ரிலங்கையுள் ளோர்க்குஞ் சீரெலா
மெடுத்தசோ தரர்க்குமீங் கெய்தச் சோகமே, (௩ருகூ)

பாகமற் றொருத்திதான் பங்கு கொள்ளினும்
போகமற் றமருமப் புனித னார்தருந்
தேகமற் றவர்கடாஞ் சேரும் லோகமேற்
சோகமற் றிருக்குநற் சுகத்தை யெய்தினான். (௩சு0)

வேறு

கற்றுள ராம நாதன் கவுஞ்சிலை விடுமாண் டீதாற்
சொற்றுள வமெரிக் காவைத் தொடர்ந்துபோய் வருத லோடும்
பற்றுள விரண்டாந் தார்ம பத்தினி மணமு நோக்கின்
முற்றுள முதலி சென்று முத்திசே ராண்டின் முன்பே. (௩௬௧)

## கவுஞ்சிலிலிருந்துவிலகுதல்

பொன்னுடன் வாணி தன்னைப் பொருந்தவோர் கலக மின்றித்
தன்னுட னிருக்க வைத்த தவமுள ராம நாதன்
முன்னுடன் பிறந்த வண்ணன் மூதுல குவர்த்த வாண்டின்
மன்னுட னீதி யாயு மந்திரித் துவம்விட் டானே. (௩௬௨)

காரிய மெடுத்துக் காட்டுங் கவுர்வ ராம நாத
வேரிய லமைச்ச னில்லா திருக்குமந் நாளிற் சங்கஞ்
சூரிய னிலாத வானுந் தூயவ ரிலாத நாடும்
போரிய லிலாத வேந்தும் போற்பொலி விழந்த தன்றே. (௩௬௩)

கோவியல் விலகி நின்ற குலவுமாண் டாறு மட்டு
மேவிய வமெரிக் காவை விளங்கு பன்னகரை நாடித்
தேவியல் சிவால யத்துத் திருப்பணி புரிந்து மின்னுந்
தாவிய வறங்கள் செய்துந் தருமகர்த் தாவா யுற்றான். (௩௬௪)

இன்னிய லுடைய தான விந்தயாழ்ப் பாண நாட்டின்
மன்னிய விளைஞர் வேறு சமயமேற் புகாம லுக்கும்
பன்னிய வொழுக்கங் கல்வி பயில்வு நினைந்திட் டையன்
கன்னியர் கழகந் தந்து காத்தது மினைய நாளே. (௩௬௫)

பொருந்திய வறிவாற் சான்றோர் புணர்த்துகைத் தொழில்கள் வா[ய்ந்து
திருந்திய திறலின் மிக்கோர் சோமத தரும முள்ளோ
ரிருந்திய லமெரிக்காவுக் கேகலு மிரண்டாந் தார்ம
விருந்தியன் மணமு மற்றும் விளம்புவ னினிது கேண்மின். ()

## அமெரிக்காக்காட்சிபெறுதல்

### வேறு

வானுலவும் பச்சிலைக ளடர்ந்து சேந்து
வயங்குமிளங் கிசலயங்கள் பொதுளத் தந்து
தேனுலவு மதுகரங்க ளிசைத்து மொய்க்கச்
சீதநறு மணிமலர்க டிகழப் பூத்துக்
கானுலவுங் கிளைகடொறுங் கருத்துங் கண்ணுங்
கவர்ந்துபல நிறவிசைப்புள் ளினங்கள் பாட
மானுலவு மதியமுத கிரண மென்ன
மன்னுநிழற் றண்டலைகண் மலியப் பெற்றும், (௩௬௭)

பந்தமுற வலர்ந்தவெண்மை செம்மை யின்னும்
பலநிறமு நோக்கமுறக் கவினு கின்ற
கந்தமுள மலர்ச்செடிக ளிலைகண் மின்னக்
கைநிரைமேற் கோணவட்ட முறையின் வைத்த
நந்தவனக் காட்சிதனக் குலகி லிந்த
நந்தவன மென்பதலா லுவமை யுண்டோ
விந்தவன மிடமிடங்க டோறு முள்ள
விமையவரா ராமமென விளங்கப் பெற்றும், (௩௬௮)

விண்ணளவு மடுக்குமனை விரும்பு தெற்றி
வேந்தரரண் மனையமைச்சர் சங்க மன்றம்
பண்ணளவு சபையரங்கம் பத்தி முற்றப்
பணிகுநர்தே வாலயங்கள் வகுப்புக் கேய்ந்த
வெண்ணளவு கழகவிதம் விநோத சாலை
யேற்றவபி டதந்தருபண் டிதர்கள் வைப்புக்
கண்ணளவு நெடுவீதி கவலை சந்தி
கண்டகண்ட விடங்கடொறுங் கவினப் பெற்றும், ( )

தனமுடையோர் வறிஞருக்குங் கலைகற் போர்க்குந்
தமதுமதம் பரப்புநர்க்குஞ் செய்யுந் தர்ம
மனமுடையோ ரறிவுடையோ ராழ்ந்த பத்தி
மாண்புடையோர் தாழ்ந்தகுணந் தயாவு தம்மாற்
கனமுடையோ ருலகிலின்றி யமையா தாகக்
கண்டசித்திக் கைத்தொழிலை விருத்தி யெய்தத்
தினமுடையோ ரானவிவ ரமரப் பெற்றுஞ்
சீர்படைத்துத் தான்சிறந்த தமெரிக் காவே. (௩௭௦)

காயமது பொருளாகக் கருத கில்லான்
காசினிக்க ணொருபாலுற் றழகு வாய்ந்த
தேயமது காண்பலெனக் கருதி யொன்றுஞ்
சிந்தைகொள்ளான் கலமூர்ந்து சனமுங் கொண்டே
நேயமது தூண்டநெடு நாட்கள் சென்று
நினைவுமுடி பாகவென நினைந்து சென்ற
தாயமது பெற்றகொலம் பசுமுன் கண்ட
தனிநாளின் மேற்சிறந்த தமெரிக் காவே. (௩௭௧)

குடியரசு வழுவாமற் றனிக்கோ லோச்சிக்
குறைதவிர்க்கு முறைமையுள வமெரிக் காரன்
முடியரசு போலுமதோ வெனவு முன்னான்
மூதறிவு மிருக்குமதோ வெனவு மின்னுங்
கடியரசு போலாத நலஞ்சா றேயக்
காட்சிகளைக் கருதியுமே யிலங்கு மீழப்
படியரசு புரக்குமமைச் சியலின் வாய்ந்து
பரவுபுகழ்ச் சேர்ராம நாத வையன், (௩௭௨)

ஆய்ந்துவரு மாயிரத்தின் மேலுந் தான்றொள்
ளாயிரத்தி யைந்தாகு மாண்டு தன்னிற்
றொய்ந்துவரும் விகிதருடன் றொன்மை பெற்றுத்
தொடர்ந்துவருங் காப்பினரு மெய்த வங்கே
யேய்ந்துவரும் பெருஞ்சலதி கடந்து பன்னு
ளெழில்வளங்கள் சாலமெரிக் காவு கண்டே
வாய்ந்துவருந் தனதருமா னந்த னோடு
மற்றுளரு மெதிரழைக்கக் கலந்தங் குற்றான். (௩௭௩)

திருத்தமுள தாமமெரிக் காவி லெங்கள்
சேர்ராம நாததுரை வருமக் காலம்
விருத்தமுள யோவானு மத்தே தானும்
விளம்பியவாக் கியங்களினுண் மறைந்து மன்னும்
பொருத்தமுள கருப்பொருளைத் தானே முன்னம்
பொற்புறத்தா னெழுதுமுறை கிடைக்கப் பெற்றே
யருத்தமுள திதற்கிதுவென் றங்க ணுள்ள
வறிஞரெலா மற்புதமுற் றமருங் காலம், (௩௭௪)

கோனிருக்கு நகரதனுட் டலைமை பெற்றுக்
குலவுசுகந் தரவமைத்துத் திகழ்வ தான
தானிருக்கு மாளிகைமே லவாவுற் றங்கட்
டகுமமைச்சர் தனமிகுந்தோ ரறிஞ ரின்னும்
வானிருக்குந் திரியேக பரன்பா லன்பு
வரும்போத காசிரியர் மற்று முள்ளோர்
தேனிருக்குந் தாரகலத் தண்ண றன்னைத்
திரடிரளாய்த் தினந்தினமுங் காண்ப ரம்மா. (௱௭௫)

நீட்சியுட னுன்னதமும் பளிங்கிற் செய்தே
நிலவுநிரைக் கதவுகளுஞ் சிகர வைப்புங்
காட்சியுட னுலவுபல கணியு மன்னுங்
கல்லூரி தொறுந்தொறும்வந் தழைக்கச் சென்றே
யாட்சியுட னவர்நூலுண் ணுழ்ந்தங் குற்ற
வரியகருப் பொருளிதுவென் றெடுத்துக் காட்டி
மாட்சியுட னற்புதமு மன்புந் தோன்ற
வகைவகையாய்த் தானுபன்னி யாசஞ் செய்தான். ()

கள்ளுறையுந் தாரழகன் வாக்கொவ் வொன்றின்
கனிவினையுஞ் சுவையினையு மொளியுட் கொண்டே
வள்ளுறையுட் புகும்வாளின் மறைந்து மன்ன
வரைந்தவர்தாம் வைத்திடுவாக் கியங்கட் குள்ள
வுள்ளுறையுட் பொருளினையு நலித்துந் தாழ்த்து
முயர்த்துமொழி திறந்தனையுங் கூடுஞ் சங்கத்
துள்ளுறையும் பேரறிஞ ருவந்து கன்னத்
தூற்றியபுத் தமுதமெனத் தெவிட்டா தூற்றார். ()

தோற்றிவரு மனுக்களுக்காய்ப் பவமன் னிக்கத்
தோன்றுதிரி யேகருக்குட் குமார னென்றே
சாற்றிவரு மவரொருமா ஞானத் தீர்க்க
தரிசியவர் வாக்கியங்கள் சாத மின்னும்
போற்றிவருஞ் சீடருரைத் தனவும் வாய்மை
புதியபல வேற்பாடு கொண்டு சொல்லு
மாற்றவரும் பொருள்களினுன் மயக்க மன்றி
மற்றுமொரு மயக்கமதி லில்லை யென்றும், (௱௭௮)

மேலுமுயிர் பதிபாச மூன்று மென்னு
மேவுமிவை தாமாயி னநாதி மண்மே
லேலுமுயிர் சுடச்சுடரும் பொன்னை யொப்ப
விருவினைக ளொப்பளவு முடலைக் கொள்ளுஞ்
சாலுமுயிர் தானொருக்கா லிரண்டு மெய்தல்
சாலாது சாலுமென றகுதி யன்று
லாலுமுயிர் பிறப்பினுறும் பேத மென்னி
னதற்குவினை முன்னிருந்த தாகு மென்றும், (௩௭௯)

ஆய்ந்தபல நூலுணர்வா லளவை தானு
மமைந்தவுதா கரணமுட னெடுத்துக் காட்டி
வாய்ந்தபல கட்டுரையா லவர்தாந் தேற
மதியிருளுக் கொருசுடரங் குதித்த தென்ன
வேய்ந்தபல மதநிலையுந் தெரியத் தந்தே
யியம்புபன்னி யாசமழை பொழிய வங்குத்
தோய்ந்தபல ருதன்வாய்மை யுள்ள முற்றுந்
துணிந்துளங்கொ ளாசங்கை யகல்வ தானார். (௩௮௦)

முந்துமுகங் கண்டளவி லிருந்த தங்கண்
முதத்தினுந்தான் மொழியமுத வாரி பொங்கிச்
சிந்துமுகங் கொடுத்தளவிற் றேநேர் வாக்கைச்
சித்தசனை ரணியுருவைக் காத லித்தே
தந்துமுகங் கொண்டாடித் தமைத்தாங் காணாத்
தலைசிறந்த களிதூங்க நித்த நித்தம்
வந்துமுகங் கொண்டேக வவர்க்குத் தானோர்
மதித்ததனி விருந்தாகி வதிவ தானான். (௩௮௧)

வேறு

இன்னவா றுகத் தானங் கிருக்குநாள் வளங்கள் சாலு
மன்னசீ ரமெரிக் காவி லறிஞரென் றுயர்ந்த சிலர்
பன்னல மோங்கு மிந்தப் பழநக ரத்திற் சென்னாண்
மன்னநீ யமர்க வென்றே வந்தனை யாக வேண்ட, (௩௮௨)

நல்லொளி யறிஞ ருக்கு ணாயக ராம நாதச்
சொல்லொளி யிசைவு கொண்டே துதைந்துமு டுற்று நின்ற
வல்லொளி யந்த கார மதுதூரந் திடுவான் றோற்றும்
வில்லொளி போலத் தானவ் வியனகர் விரும்பி யுற்றான். (௩௮௩)



ஸ்ரீமதி. லீலாவதி அம்மையார்.

அவ்விய னகரிற் சின்னு ளமர்ந்துகல் லூரி தோறுந்
திவ்விய வளவை யோடுஞ் செயும்பிர சங்கங் கேட்டு
மிவ்விய லான தென்றே யெடுத்தெடுத் தவர்த நூலின்
செவ்விய பொருள்கள் சொல்லச் சேர்ந்தவர் கற்றும் வந்தார். ()

காசினிக் கீழ்பா லாகிக் கைப்பொரு டொழிலுஞ் சான்றே
யாசினிற் படாமன் மன்னு மமெரிக்காச் சீர்க ணுடித்
தேசினிற் சிறந்த வெங்கள் சேர்ராம நாத மன்ன
னேசிறன் பெயரை யின்று மிலங்கவே நாட்டி வைத்தான்.(ருஅரு)

மோனந்த ஞட்சி யாக முதிர்ந்தவன் ராம நாதன்
ரூனந்த நகர மீதாய்த் தங்குகா லங்கண் முற்று
மேனந்த வுவகை சொல்மே வேற்றமைத் துனமே யான
வானந்த னளவ ளாவி யானந்தத் தழுந்தி ஞனே. (ருஅசூ)

திங்கணுன் களவு மாங்கட் சிறப்புக ளமையப் பெற்றே
பங்கமில் ராம நாதன் பயணமுற் றெழுந்த காலைத்
துங்கமே லோர்கள் சேராத் துறைமுக மளவும் வந்து
வங்கமே லமர வைத்தே வழிவிட வழிக்கொண் டையன், ()

ஊருவின் வருமான் சாப முறுமவன் கனிட்டன் முன்னைப்
பூருவின் மரபில் வந்தோன் பொற்பனை பெறுவ தாயுந்
தாருவின் சோகந் தீரச் சானகிக் கருள்வ தாயு
மேருவின் சிகர மாயு மேவுதென் னிலங்கை சேர்ந்தான். ()

## இரண்டாந்தர்மபத்தினி

நீடமா மதியுங் கோடா நீதியு மமைச்சும் வேந்திற்
கூடவே நிதியுஞ் சூழுங் குலங்களுங் கலையுந் தேசு
மாடமா ளிகையும் பேறு மக்களுந் திதியு மின்னுந்
தேடமா நிலத்தி னெல்லாச் செல்வமு மிருந்திட் டாலும், ()

சொல்லிய வொழுக்க மாண்பு தொழுங்குலத் தெய்வ பத்தி
நல்லிய லான கல்வி நாயகற் பணிவு தேசு
புல்லிய விருந்து காப்புப் பொருந்துமிக் குணங்கள் சான்ற
மெல்லிய லிலாத வில்லம் விளக்கிலா வில்ல மொக்கும். (ருகூ0)

வீறுடைட் யில்வில் லோர்க்கு மெய்வலி பாதி யில்லை
மாறுடை யவையை வெல்லு மாற்றமுந் தானே குன்றும்
பேறுடை யெவர்க்கு முண்மை பேசுகிற் சத்தி தன்னோர்
கூறுடை யமலற் கேனுங் கூடுமோ தொழில்க ளைந்தும், (நகூக)

அற்புடைத் தலைகாள் மன்ற லயர்ந்திருந் தறங்கள் காத்த
கற்புடைத் தேவி யிந்தக் காசினி துறந்து விட்டா
விற்புடைத் தாக மேவி யினிதுநல் விருந்து பேணும்
பொற்புடைத் தான யார்க்கும் புனர்மணம் வேண்டிற் றன்றே.()

கதித்தசீர்ச் செல்வந் தன்னைக் கல்வியைக் கருத்துக் கொக்க
மதித்தநல் லியலி னாளை மாணுமுத் தியோகந் தன்னைத்
திதித்தமா லுலகிற் றானே தேடுத லரிது வேதன்
விதித்தவூழ் கூட்டி வைக்கும் விலக்குதல் விதிக்கு மாமோ. ()

சேர்ந்தவூழ் செலுத்தச் சென்றே தேயங்க டொறுந்தான் முன்
னோர்ந்தகன் மத்துக் கேற்ற நெறிகொடுப் புரவை முற்றச் [னு
சோர்ந்தசட் டங்கண் மாறித் தோற்றிமே னுகரு மித்தை
யார்ந்தபே ரறிஞ ரல்லா லஞ்ஞைக ளறியப் போமோ. (நகூச)

கீழ்கட லிட்ட கிட்டி கிடந்தலைந் தேகி மேல்பா
லாழ்கட னுகத்து ளைக்கு ளணைந்துநேர் கோத்த தொப்ப
வேழ்கட லினுக்கு மப்பா லிருப்பினுங் கன்ம மென்னு
மூழ்கட மாற்ற லாலங் கொருங்குறக் கூட்டு மென்பர். (நகூரு)

ஆறிய முனிவர் கட்கு மகிலமுங் கடந்த ஞான
மேறிய மகத்து கட்கு மிச்சையொன் றுறலு மாகு
மூறிய விச்சை யன்றோ ருறுகினு மிலைநீ சொப்பர்
தேறிய வுளமேற் கொண்ட தியானமுந் தவறு வாரோ. (நகூசு)

தொல்லற மவற்று ளந்தத் துறவுவீ டொன்றே நல்கு
நல்லறம் பொருள் வீடின்ப நான்கையுந் தந்து மேலுஞ்
சொல்லறத் துறைகட் கேய்ந்த துணையுமா யெழிது மென்றோ
வில்லற மியற்று கிற்பா ரிருமையும் பெறுதற் கென்றே, (நகூஎ)

உலகநல் வினையுந் தான்முன் னுஞற்றுபுண் ணியமு நொந்த
வலகிலவ் வறிஞ ராற்று மருந்தவப் பயனு மான
விலகவில் லாதவூழம் விடுங் கொலோ வெங்கட் காக
விலகு மாயிசத்துத் தொள்ளா யிரத்துநான் கென்னு மாண்டில்,

பான்மலி கடலை விட்டுப் பாரிடைப் பிறந்த செவ்விக்
கான்மலி வல்லி யொன்று காவியைப் பிறையை வில்லைத்
தேன்மலி குமிழைப் பூத்துத் திகழ்வபோற் றிகழும் ரூப
மான்மலி நோக்க லீலா வதியனை கணைய மின்னே. (நூகூகூ)

ஓங்குல கினுக்கே தன்னை ருடல் பொரு ளாவி மூன்று
மூங்குளங் களிக்க நல்கு முத்தம ராம நாத
னீங்குள ராச தர்ம மியன்மனைத் தர்மங் காக்கப்
பாங்குள செல்வத் தர்ம பத்தினி யெனக்கொ டெய்வம். (சOO)

பெருமைசேர் குலத்தை மாண்பைப் பெருங்குணங் காட்டு மென்று, மருமைசேர் கலையின் சீரை யறிவுதான் றெரிக்கு மென்று, மொருமைசேர் தவத்தின் பேற்றை வாழ்வுதா னுணர்த்து மென்று, மிருமைசே ருலகஞ் சொன்ன விலக்கணத் திலக்கே யாக, (சOக)

உயர்குடிப் பிறப்பு மோங்கு முத்தம குணமுங் கற்ற
வயர்விலாக் கலையு முன்செய் யருந்தவப் பேறு மேற்ற
பெயர்மனத் தருளு மிந்தப் பேர்ப்பெரு மாட்டி தன்பா
மயர்வறக் காணு மேனும் வகுப்பது மிகைதா னன்றே. (சOஉ)

பொருந்துநல் லழகாற் பூமின் பொறுமையாற் புவிமான் கொண்ட
மருந்துநேர் கணவற் காப்பால் வயங்குசா வித்தி ரிப்பெண்
டிருந்து நேர் நெறியால் வானிற் றிகழ்வட மீனங் கோம்பும்
வருந்துமில் லொழுக்கத் தாலவ் வாசுகி நிகரா மன்றே. (சOந)

தவம்பெறச் சமய தீக்கை தான்பெறச் சின்ன மான
சிவம்பெற வுருத்தி ராக்கத் திருவடங் தரிக்க நீற்று
நவம்பெறப் பூதி பூண நாடரு மனுட யாக்கைப்
புவம்பெறக் கிடைக்கு மேனற் பாக்கிய மிதன்மே லுண்டோ. ()

ஆரியந் தமிழை மற்றை யாங்கிலக் கலைகள் கற்றுஞ்
சீரிய காட்சித் தூய சித்திர வகையிற் றீர்ந்து
மோரிய நின்ற விந்த வுலகின துண்மை காட்டு
நேரிய ஞான நூல்க ணெறிப்பட வாய்தல் செய்தும், (௪௦௫)

ஆனஞா னங்கை வந்தே யைம்புல னடக்கி யாங்கோர்
தானமேற் கலக்கும் யோக சாதனப் பயிற்சி யுற்று
மோனமேற் கதியா னந்த முத்தியங் கதற்கே யின்னு
மூனமற் றுலக மேத்து முயர்சிவ பத்தி வாய்ந்தும், (௪௦௬)

ஓதவந் துயர்ந்து மாத ருவர்க்கெலாந் திலக மொத்தே
பாதவத் திலங்கை காக்கும் பார்த்திப னமைச்சுக் கேய்ந்த
மீதவப் பெருமைத் தான மேன்மைக ணடத்தற் கொத்த
மாதவம் புரிந்த லீலா வதியருந் துணைய தாக, (௪௦௭)

மானவர் கண்ணி னுள்ளு மனத்துளுந் தோற்றி நிற்போ
றானவன் ராம நாதன் றருமபத் தினியுந் தானு
மானவல் லரசுக் கேற்ற வமைச்சியற் கருமத் தோடும்
வானவர் வாழ்த்தற் கொத்த மனையற மோம்பி யுற்றார். (௪௦௮)

உண்ணெகிழ்ந் துவந்து தன்னோ ருடலுக்குந் துணையா மென்றே
தண்ணிய குணமு மேழைச் சனங்கண்மே லிரக்கந் தானு
நண்ணிய விந்த மாது நற்றுணை யான கால
மெண்ணுமா யிரத்துத் தொள்ளா யிரத்துமே லைந்தா மாண்டே.

இன்னதோர் நாளிற் றாஞ்செய் யிருந்தவப் பிண்ட மாக
நன்னல நிலையிற் கோளு நாளுமங் குலவி நிற்ப
வன்னமே வுற்ற வோர்பெண் மகவுவந் துதிக்கக் கண்டே
முன்னமுண் மகிழ்வின் மேலு முடிவிலா மகிழ்வு பூத்தார். ()

அற்பகற் பேணித் தொள்ளா யிரத்துட னிரண்டா மாண்டிற்
கற்கட கத்துத் திங்கள் கவினவந் துதித்தா ளுக்குச்
சொற்சிவ காம சுந்த ரிப்பெயர் துலங்க விட்டே
நற்பக ஞுடிக் கல்வி நலம்பெறக் கற்க வைத்தார். (௪௧௧)

பாங்குறக் குழந்தைக் கேற்ற பக்குவ மெய்த வெய்த
வாங்கிலந் தமிழொ டின்னு மாரிய மதுவு நாளு
மோங்குறப் பயிற்றி மேலு மோதுவார் தம்மை நாடி
யீங்குற வழைத்து வைத்தா ரினியதே வார மோத, (சகஉ)

குத்திர மிலாத கீதக் குலத்துளோர் தம்மைக் கூவிச்
சித்திர வீணை தன்னைத் திவவுயாழ் தன்னை யாங்கே
பத்திர மாக வைத்துப் பயிற்றினர் நாளு நாளும்
புத்திர வாஞ்சை கூரப் போற்றினர் வருவ தானர். (சகங)

## கவுஞ்சிலில் மீளவுமமைதல்

ஆண்டுக ளாறு செல்ல வானபன் மூன்று மாண்டின்
மீண்டுநல் லமைச்ச னாக மேவினன் சங்க முள்ளோர்
வேண்டுசட் டங்க ளங்கண் வேண்டுமே னிறுத்தி யிட்டு
மீண்டுதென் னிலங்கைக் கான விதிகளை யமைக்கத் தானே, ()

தோற்றினன் ராம நாத துரைகவுஞ் சிலுக்கே யென்ன [னுஞ்
மாற்றமென் னமைச்சர்க் கெல்லா மகிழ்ச்சியோ வெறுப்போ வின்
சாற்றவும் வேண்டு மோதான் றணிவளத் திலங்கை மாந்தர்க்
கேற்றன வுளமே னல்ல வின்பமு மேன்மை தானும், (சகரு)

பரப்பினிற் பாயு நீர்க்குப் படுமணை வாய்த்த வாபோ
லிரப்பினி லலையு மாந்தர்க் கிருநிதி கிடைத்த வாபோற்
புரப்பினி லடங்கா வூர்க்குப் புரவல னமைந்த வாபோன்
முரப்பினில் வெதும்பு வார்க்கு முதிர்மழ லெதிர்ந்த வாபோல்,

ஆண்டுவந் தாறு மட்டு மாமுறை பிறமும் போதி
லீண்டுவந் தமைச்சர் மன்ன ரினைத்துமே லுளத்து ளன்பு
பூண்டுவந் தேற்கத் தன்னோர் புண்ணியச் சுமையுங் கொண்டே
மீண்டுவந் தையன் சங்கம் விரும்புமந் திரியே யானன். (சகஎ)

வேறு

கோடு நீதி கொடிது கொடிதென
நாடு நீதி நலம்பெற வைத்தனன்
வாடு நீதி மதிவலர் தங்களை
நீடு நீதி நியாயங்கொ லென்றனன். (சகஅ)

துடித்து நாட்டுளோர் சொல்லுங் குறைகளை
முடித்துத் தந்து முறையிது வாமெனப்
படித்துச் சொல்லியப் பார்த்திபன் றன்னோ
ரிடித்துக் கூற லிவற்குள தாமரோ. (சகசு)

சீரி னாடு திருத்தவுஞ் செல்வங்க
ளூரி னெங்கணு மோங்கவுஞ் செய்குவன்
றூரி னீங்கத் தாணிபற் கெங்கணும்
வாரி பொங்கி வரும்வகை செய்குவன். (சஉ0)

காடு குன்று கழனி குளநதி
நாடு தோட்ட நகரந் தெருவனை
வீடு வாவி விடவி நிலங்கடல்
கோடு சர்வடி கோமனை யாவணம், (சஉக)

கூடி வாராக் குலங்கள் சமயங்க
டேடி நாடுபல் சேவைகள் வேலைக
ளீடி லாதவிவ் வீழத் திவையெலா
மாடி யென்ன வகத்து ளடக்குவன். (சஉஉ)

துளக்கு கின்றசொற் சோர்வில னாகியே
கிளக்கு மிந்தக் கிளாமைச் சற்கலால்
விளக்கு மீழ மிகுபொருள் யாவையு
மளக்கு மாற்ற லமைச்சரி னார்க்குண்டே. (சஉங)

## பொன்னம்பலவாணேசராலய தர்மகர்த்தாப்பேறு

வேறு

மாத்தவத்தி னுயர்ந்ததந்தை தனதுபெய ரமையவைத்த மலத்தின் சார்பை, நீத்தபொன்னம் பலவாணேச் சுரான்றரும நடாத்துமுறை நெறியை யங்கா, ளேத்தவருந் தனயரவர்ப் பின்னுமடி யடியாக விவர்க்கு ளப்போ, மூத்தவற்கென் றுரைத்த படி யேகுமார சாமியெனு முதல்வன் றன்பின், (சஉச)

நிலங்குலவு முச்சுடருட் சிவசோதிச் சூரியனை நிகர்த்திட் டெல்லா, நலங்குலவு மவதார புருடனிந்தச் சேர்ராம நாதவள் ளல், புலங்குலவு மாயிரத்துத் தொளாயிரத்தோ டாறுகப் புக லு மாண்டிற், றலங்குலவு மருட்டரும கருத்தாவாய்த் திருப்ப ணியுந் தருவான் வந்தான். (சஉரு)

முன்னவர்க்கு ளிருவோரும் பூசைவிழாத் தனிவேறு முறை மை தன்னிற், பின்னமிலா வகைநிறுவித் தாங்களனு தினமரு ளும் பெருக்கி வந்தார், மன்னனிந்தச் சேர்ராம நாதனிவை மா த்திரமோ மதித்துத் தானே, யின்னமுந்தான் றிருப்பணிகண் மூவேந்த ரியற்றியவா றியற்ற வென்றே, (சஉகூ)

செய்யமுத னூலெனவுஞ் சேர்ந்தவழி நூலெனவுஞ் செப்ப நிற்கு, மையனரு ளாகமத்தை யாய்ந்ததற்கோ ரங்கமென வறையு நுண்மைத், துய்யசிற்ப நூற்றுறைக ளையமறக் கற்று லகந் துதிக்க மன்னும், வையமரு டாதைநிகர் சிற்பியனை யங்கு நின்றும் வருவித் திங்கே, (சஉஎ)

திருந்தியகை வினையாளர் தமையுமுட னங்கழைத்துச் சிற் பி யற்குப், பொருந்தியநல் லிடமருளி நனியுவக்கும் வேதனமு ம் போத நல்க, வருந்தியதன் சிற்பநுண்ணூல் விதிவழுவா தாய் ந்தாய்ந்து வயங்கும் வண்ணம், விருந்தியலென் றதிசயிக்க நூத னமாய்த் திருப்பணிகள் விளைந்து செய்வான், (சஉஅ)

மன்னுகர்ப்பக் கிரகமர்த்த மடுத்தமகா மண்டபமேல் வா ய்ப்ப வொன்றாய்த், துன்னுநப னத்துடனே யலங்கார மங்கத னைத் தொடுத்திட் டின்னும், பன்னுசபா மண்டபமென் றறுவ கைத்தா யியம்புமண்ட பங்க டம்மை, முன்னுமுடம் பதின்மூ லா தாரமுத லாறிடமாய் மொழிந்த முன்னூல். (சஉகூ)

ஒண்ணு மருஞ் சிலைதிருத்தி மேலுமொளி பெற்றிடச்சீ வு ளிக ளிட்டுப், பண்ணுமலர்க் கமலவகை செய்துசந்து தெரியா மற் படுத்து வண்ணங், கண்ணுறுமனத் தொடுகவருங் காட்சிபெ றக் கைத்தொழிலைக் காட்டி யிங்கே, யெண்ணுமறு வகைத்தா கு மண்டபங்க ளெழிலமைய வியற்றி யின்னும், (சங0)

கலங்குமத நர்கமுடனகமெட்டுங் கூர்மமுந்தாங் கனங்க டாங்க, விலங்குதிருத் தூபிகையை விதிதனக்கோ ரிலக்காகவி தித்த பின்ன, ரிலங்குமுலை வயங்குமரி யாழிதுர கதங்களுட னிலைகள் விட்டுத், துலங்குமடற் கதலிநறும் பூத்தூண்க ணிரை நிரையே துதையத் தந்து, (சஙக)

பாங்குவருஞ் சுவரெழுப்பி நிலமுழுதுந் தழுவிசைகள் பரப் பியிட்டே, யோங்குமதில் கோபுரங்க ளணிவீதி யிவைகளெ லா முன்னி யுன்னி, யீங்குவருஞ் சிற்பியர்கோ னின்னமுமே திருப்பணிக ளியற்று கிற்கு, மாங்குசிவ னுலயத்தி லானதிருப் பணிகளுக்கு மவதி யுண்டோ. (சஙஉ)

வேதவிதி யாய்ந்தகுர வோரிருவர் தமைநிறுவி விமலற் கே ய்ந்த, வோதனநன் காக்குபரி சாரகரை யமைத்துநித மோவ லின்றிச், சீதமலர் கொய்வதற்கு மலர்மாலை கட்டுதற்குந் திருந் து பத்தித், தாதரென வமைந்தபல வேவலரைத் தெரிந்தெடுத் துத் தகவங் குய்த்து, (சஙங)

முந்துவருந் தானைசிவ னடியாருக் கன்னமென்று முதத்தி னேடுந், தந்துவருந் திருமடத்தை முன்னையினுந் திருத்திநனி தயங்கச் செய்து, கொந்துவரும் பூந்தோட்டங் குறையாது ம லர்தினமுங் கொடுக்க வைத்தே, யிந்துவருஞ் சமயிகளுக் கி யைந்தவைக ளங்கெவையு மியற்றி யிட்டு, (சஙச)

சித்திதரு மறுகால மொருகடிகை வழுவாமற் றினங்க டோ று, நித்தியநை மித்தியங்க ணிறுத்தியையன் ருனடத்தி நிய தி செய்த, முத்திதரும் பங்குனிநல் விழாநடத்தி முழுதருளை முன்னி யென்றும், பத்திமிக மார்கழியா திரையிலன்னப் பா வாடை பரிவொ டிட்டு, (சஙரு)

புலங்குலவு மமைச்சியலைச் செயுமுலக ஞானமட்டோ பொ ற்புற் றென்று, நலங்குலவு மனுபூதி ஞானமுஞ்சேர் தரும்ராம நாத வையன், றலங்குலவு மினையபல சிவதரும கருத்தாவாய்த் தவாம லின்று, நிலங்குலவு மாறுதிருப் பணியியற்று நூதனங்க ணிகழ்த்தப் போமோ. (சஙசு)

திங்களணி சடைமவுலிச் சிவபெருமான் றிருக்கோவி றிரு
ந்தச் செய்வோர், தங்களுயர் குடியிலெழு தலைமுறையோர் சிவ
கதியைச் சார்வரென்று, லிங்களவி லிலாத்தரும கருத்தர்வா
யறம்பலவு மியற்றி வைகு, மெங்களரும் பொருள்ராம நாத
னுறுங் கதியினுக்கோ ரிலக்கு முண்டோ. (௩௬௭)

வேறு

வலங்கைமேன் மழுவை யேந்தும் வள்ளற்கத் தேயந் தன்னிற்
பொலங்கைமே லுயர்ந்த மூன்று புரவல ரமைத்த வாபோ
னலங்கைமே லோங்கு ராம நாதனென் றமருஞ் சீமா
னிலங்கைமே னகரி லிந்தத் திருப்பணி யியற்று விக்கும். (௩௬௮)

எண்ணவுந் தமிழிங் கில்லை யென்றுள நினைந்தே யையன்
விண்ணவன் கோவின் மேலை வீதியி னொருசா ராகப்
பண்ணமை யிளைஞர்க் காகப் பரிந்தொரு கழகம் வைத்தே
நண்ணநன் கரக வந்த நாள்களி னடத்தி வந்தான். (௩௬௯)

## 3. இங்கிலந்துக்கேகல்

எண்ணுமர் யிரத்துத் தொள்ளா யிரத்துட னேழா மாண்டின்
கண்ணுமிவ் விலங்கைக் கான நலங்களைப் பெறுவா னுன்னி
யெண்ணுமீ ழத்து வேந்தை யுவர்த்துத்தன் கருத்து முற்ற
விண்ணுநா ணிங்கி லாந்தின் மேவினன் கருணை யாளன். (௪௪௦)

வேறு

எங்களுக் கிதந்தரு மிராம நாதவேள்
சங்கமேல் வாதங்க டவிர்க்க வெண்ணியே
துங்கமோ டரசர்கோன் றேன்றி வைகுறு
மிங்கிலந் தேகினன் கருமம் வாய்க்கவே. (௪௪௧)

ஆருல களிக்குமோ ரமைச்சர் மந்திரஞ்
சீருல வுற்றிடச் சேர்ந்து செய்குறுந்
தாருல வுறுந்தனிச் சங்க மெய்தித்தன்
பேருல வுற்றிடப் பெருமன் வைகியே, (௪௪௨)

அங்குதான் கருதிய வனைத்து முற்றுறத்
தங்குமப் புரத்திடைச் சார்ந்து சில்பக
லெங்குமுள் ளவரவ ணோற்றுக் கைதர
விங்குதென் னிலங்கைமேன் மீண்டு மெய்தினான்.(சசங)

தந்தசெந் தமிழினிற் சாற்றப் போந்திடி
லுந்தவேவந் தியல்களை யுரைத்தல் செய்திடா
தந்தவாங் கிலமுழு தாகச் செப்புறு
நந்தவி லாவகை நாடிக் காண்டிரால். (சசச)

## ஸ்ரீராமநாத வித்தியாலயதாபனம்

வேறு

மண்ணினி னுதித்த வெந்த மாந்தரே யெனினு மாக
வெண்ணினி லடங்காச் செல்வம் யாவையு மெய்தப் போமோ
பண்ணினி னோங்கச் சொன்ன பாய்க்கிய முழுதும் பெற்றே
விண்ணினி னுயர்ந்த சீர்த்தி மேவுசேர் ராமநாதன், (சசரு)

வானிடத் தமரர் நித்தம் வாழ்த்தவே யறங்கள் செய்யா
வானிடத் தைந்து மாட்டி யமலனை வணங்கிப் போற்றக்
கானிடத் திருந்து நோற்கக் கருவியே யான விந்த
மானிடப் பிறப்பி னாலே வருபய னெவைதா மென்றும், (சசசு)

மன்பெருஞ் செல்வப் பேறும் வளர்கலைப் பேறும் வேந்தர்
முன்பெரு முத்தி யோக முதன்மையாம் பேறும் பெற்ற
நன்பெரு மகன்றான் வந்த நாடுநற் சிறப்புற் றோங்கத்
தன்பெரும் பொருளா லீட்ட றருமமும் புகழு மென்றும், (சசஎ)

ஒண்மைதா னிருக்கு மேனு முயர்திரு விருக்கு மேனும்
வண்மைதா னிருக்கு மேனும் வளர்கலை யிருக்கு மேனுந்
திண்மைதா னிருக்கு மேனுஞ் சேவைக ளிருக்கு மேனு
முண்மைதா னாளை யிந்த வூனுட லிராதே யென்றும், (சசஅ)

என்னதா னியற்றத் தக்க தென்றுமுன் னிறைவி கேட்ப
வின்னதா மென்றே நாத னெடுத்துநா லெட்ட தாகச்
சொன்னதா னங்க டம்முட் டொடர்பசி தீர்க்கச் செய்யு
மன்னதா னத்தை யிங்கே யதிகமென் றறைவ ரேனும், (சசகூ)

உண்ணும்போ தொழிந்து மீண்டு முறுபசி வாரமற் போமோ
நண்ணும்பே றறத்தோ டின்ப நற்பொரு ளோடு வீடென்
றெண்ணும்பே றுலகி லிந்த வுயிர்த்துணைப் பொருள்க ளன்று
மெண்ணும்போ துதவும் வித்யா தானந்தா னதிக மென்றும், ()

சிந்தைமே னினைந்தே யந்தத் தினங்களிற் றூய்நா டான
விந்தயாழ்ப் பாண மெய்தி யிளையசீர்ச் சிறுமி யர்க்காய்
நந்தலில் கழக மொன்றை நாட்டுது மெனத்தான் செப்ப
முந்தமே கருது நம்மோர் முழுமகிழ் வுடைய ரானார். (சஉக)

நீர்வள நிலவ ளங்கள் நிறைந்தநாட் டகத்து மத்திச்
சீர்வளம் வருவோர் தங்கிச் சேர்வதற் காம டங்க
ளூர்வளம் பலவு மெய்தி யுடுவிலோ டுணுவில் சுன்னைச்
சார்வளம் பொருந்துந் தானந் தருமெனக் குறித்துப் பின்னர், ()

சாலவும் விசால மான தரைகளைத் திருத்திப் பாங்க
ராலவே மதிலைப் போக்கி யணிபெறு படமொன் றாக்கிப்
போலவே பிறிதொன் றில்லாப் பொற்புள தாகத் தானே
காலவும் வடக்குத் தெற்காய் நலம்பெற நேரெ டுத்தே, (சஉங)

வெண்சுதைச் சுவர்க ளோட விசும்புலா வுறவெ ழுப்பிப்
பண்சுலா நிலைக ளாட்டிப் படரொளி பாப்பி நோக்குங்
கண்சுழன் றிடுவா னல்ல கண்ணடிக் கபாட மிட்டு
விண்சுட செழுமா ளேங்க மேலைமா டிகளுஞ் செய்தே, (சஉச)

இலகணி வயங்கத் தூண்க ளெண்ணில நிறுவி யிட்டே
பலகணி வரிசை போக்கிப் பளிங்கொளிக் கதவஞ் சேர்த்தித்
திலகணி யாக மேலே சிகரங்க ளெழுப்பி யிந்த
வுலகணி யினித்தா னேதென் றுவந்தெடுத் துரைக்கத் தானே,

தயங்குசீர்ச் சிறுமி மார்க டரந்தர மாக வைகி
வயங்குநற் கலைகள் கற்க வரிசையி லறைவ குத்தே
முயங்குபத் திமையா லென்று முதல்வனை யிரண்டு கால
மியங்குபெண் மகார்கள் போற்ற விலிங்கதா பனமுஞ் செய்தே,

துயிலிட நன்னத் தானந் தூயநல் லூணவு வர்க்க
மயிலிடம் பந்தே யாதி யவரவர்க் கடுத்த வாடல்
பயிலிட மட்டிற் சாலை பசுநிரை யமர்கொட் டார
மெயிலிட மிருந்த கீழ்பா லியந்திரக் கூப மின்னும், (சருஅ)

இன்னகல் லூரி யோடு மிணைத்ததன் வடபா லாகப்
பொன்னவள் வாசஞ் செய்யும் பொற்புமிக் குடைய தாகிச்
சொன்னநற் சுகபோ கங்க டுய்த்துக்கொண் டமர்தற் கோத்த
நன்னவ மனைதான் வைக நலம்பெற விளித மைத்தே, (சருஅ)

சீரிய கழகத் தோடு சேர்த்ததன் றென்பா லாக
நேரிய குணத்தி னுண்மை நெறிகளி னுயர்ந்தோ ராகிக்
காரிய முணர நின்ற கணக்கினர் லிகிதஞ் செய்யு
மேரிய லமைந்த மன்ற மெவர்க்குமங் குதவச் செய்தே, (சருகூ)

பற்றிய சிற்பர் தம்மாற் பலவணி யமையச் செய்து
முற்றிய காட்சித் தாய முகப்புக ளிலங்க வைத்தே
சுற்றிய சுவர்த்த லங்க டுதைந்தவெண் சுதைக ணின்றுஞ்
செற்றிய நிலவு பாங்கிற் செறியிரு டோப்பச் செய்தே, (சகூ௦)

விருத்தமாய்க் கழக வாயில் விழிக்கொரு விருந்தே யாகிப்
பொருத்தமா யிலங்கு நல்ல பூச்செடி வகைகள் வைத்தே
நிருத்தமாய்க் கலைமா னென்று நிலவுகல் லூரி நேரிற்
றிருத்தமாய் மதில்வாய் தற்கண் டிகழயக் கபாட மிட்டே, ()

ஆனவா யிரத்துத் தொள்ளா யிரத்துமே லொன்பா னுண்டின்
மேனகல் லூரிக் கான வேலையா ரம்ப மாகிப்
போனமூன் றாண்டி லிங்கே புனைந்தகட் டிடங்கண் முற்றி
யீனமி லுலகைக் காக்கு மிறையவ னருளி னாலே, (சகூ௨)

துளங்குபன் மூன்றா மாண்டிற் சொற்றநற் றினத்தின் வேதந்
தளங்கமுன் னவர்க்கும் வாணி தனக்குமர்ச் சனைக ளாற்றி
விளங்கவே ராம நாத வித்தால மெனப்பேர் நாட்டி
யுளங்களி கூர வித்தை யாரம்ப முயரச் செய்தான். (சகூ௩)

சுத்தநல் லுணவி னுக்குஞ் சுயமதப் பேற்றி னுக்கு
மத்தனைத் தொழுவ தற்கு மணியுடை யணிவ தற்கு
மொத்தவ ரமரு தற்கு முணருகின் ராம நாத
வித்தியா லயமே யல்லால் வேறிலைச் சிறுமி யர்க்கே. (சகச)

சமையத்துக் கேற்ற தான சமயமே சமயம் யாருங்
குமையத்தந் துண்டு கற்றல் கூடுமென் பவர்க்குச் சாலா
நமையத்துக் காளா காத நலந்தரு மென்ப வர்க்கே
யமையத்தந் திருந்த வித்தி யாலய மிதுவொன் றன்றே. (சகரு)

ஓதிதா னூட்டு மிந்த விதாலய முனூற்ற வின்றேற்
சோதிதா னிலங்கு சைவத் தூயநஞ் சிறுமி கட்குச்
சாதிதா னெங்கே யோங்குஞ் சமயந்தா னெங்கே யீச
ஞாதிதா னென்ப தெங்கே யானநல் லொழுக்க மெங்கே. (சகசு)

துயிலைமென் பறவைக் கார்க்குஞ் சோலையுள் விளங்கி நல்ல
வெயிலையேய் ராம நாத வித்தியா லயத்தை நோக்கி
னெயிலைமுன் னெரித்த நாத னேந்திழை யோடு வைகுங்
கயிலையிற் றேற்று மென்றே கருதலாம் போலு மம்மா. (சகஎ)

## பெண்கள் ஆசிரியத்தமிழ்க்கலாசாலைத்தாபனம்

சீர்பெறத் தமிழ்க ளாய்ந்து சிறுவர்க்குப் பயிற்ற வல்ல
பேர்பெறக் கற்றுத் தேர்ந்த பெண்க ளாசிரிய ராகப்
பார்பெற வருதற் காங்கு பயில்கலா சாலை யொன்றை
யேர்பெற வமைத்த விந்த விதாலயத் திணைத்துக் கீழ்பால், ()

நீடுபித் திகைக ளாலு நெடியநற் சாலை யாலு
மாடுசா ளரங்க ளாலும் வகுத்தபே ரறைக ளாலுங்
கூடுமுற் றத்தி னாலுங் குலவவே யிருபா னாறி
னூடுபே ரறஞ்சால் ராம நாதவே ளமைத்துத் தந்தான். (சகக)

குலந்தனி லொழுக்கந் தன்னிற் குலவுமா சாரந் தன்னிற்
றலந்தனி லளவைக் கேய்ந்த சைவநற் சமயந் தன்னிற்
கலந்தனி லுயர்ந்த விந்தக் கன்னிமார் கலைகள் கற்க
நலந்தனிற் கழகந் தந்த நன்றிதான் மறக்கப் போமோ. (சஎ0)

## பகவற்கீதை வியாக்கியானம்

### வேறு

பாண்டுமகா ரைவருக்குஞ் சுயோதனர்க்குந் தாயமதாற் பகைமேற் கொண்டே, வேண்டுமுற வினர்குரவர் விறலரசர் மற்றுமுளோர் மிடைந்து சுற்ற, வாண்டுபொருஞ் சமர்க்களத்தி லானபெருந் தானைகளை யணிகள் செய்யாத், தூண்டுபரித் தேர் கடவித் தொடுத்தகணைச் சிலைகளுடன் றோற்று மெல்லை, (சஎக)

வீடுமனைத் துரோணனைமே லவன்மகனைச் சல்லியனை விரும்பித் தாயங், கூடுமமர் தொடங்கிநிற்குஞ் சுயோதனர்க ளூற்றுவரைக் குறித்து நொந்தே, நீடுமனத் துணர்ந்துநிலம் வெறுத்துநெடுந் தேரினிடை நின்று நெஞ்சம், வாடுமனத் தருச்சுனர்க்குச் சமர்புரிவான் மாமாயன் வகுத்த வுண்மை, (சஎஉ)

சாற்றுமது வேபகவற் கீதையென்பர் சோதரங்க டாயர் தந்தை, போற்றுமனை மக்களிது மாயமன நினைவெனத்தான் புகலு கிற்குந், தோற்றுமரும் பொருளமைந்த கீதையிதற் காங் காங்கே தொன்மை தொட்டுத், தேற்றுபல பொருண்மயங்கி யையமுறப் பலருமுரை செய்து வைத்தார். (சஎங)

அவ்வுரைக ளத்தனையு மாய்ந்தாய்ந்து மதன்சார்பா யடுத்து நிற்குஞ், செவ்வுரைக ளாகியசித் தாந்தமவை யேழிரண்டுஞ் செப்பு கின்ற, வெவ்வுரைக ளாங்காங்கு விளக்கமுறத் தான்றேடி யெடுத்துக் காட்டு, மிவ்வுரைக ளுரைகளென யாவருக்கும் பயன்பெறவே யியற்றி யிட்டான். (சஎச)

தத்துவசாத் திரஞானந் தகுராச யோகமுடன் றவநற் சார்பு, பொத்துவமப் பயின்றுலக வனுபவங்கண் முழுதுமொருங் கோர்ந்து வந்த, சத்துவமுற் றுயர்ராம நாதவறி வாளனிது தருமமென்றே, யத்துவித முதற்பொருள்க ளனைத்தினையுங் கீதையின்க ணமையத் தந்தான். (சஎரு)

எவர்கூறு நூற்குமதன் முதன்மொழிக ளமையுமெனி னினிய தன்றோ, வவர்கூறுங் கீதைதனித் தமிழிதற்குப் பொருட்சிறப்பா லமையா தென்று, முவர்கூறுந் தேவமொழி யிந்நூற்குச் சாலுமென்று முளத்துக் கொண்டே, யிவர்கூறுங் கீதையிலே வடமொழிகண் மணிபோல விலங்கு மம்மா. (சஎசு)

பொருளினுக்கும் புகழினுக்குங் கலையினுக்கு மறிவினுக்கு
ம் புவியைக் காக்கு, மருளினுக்கு மொருவடிவா யவதரித்த சே
ர்ராம நாத வைய, னிருளினுக்கு விண்மணிபோ லொளிர்பகவற்
கீதையெனு மிந்த நூற்கு, மருளினுக்கு மருந்தாக விளக்கியரு
ம் பொருளையிவண் வரைந்து வைத்தான். (சஎஎ)

வேறு

கீதையோர் ஞான நூலக் கீதைக்கு ராம நாத
மேதையோன் வியாக்கி யான மேதகு வியாக்கி யானம்
யாதையோ விதற்கு நேரா யியம்புவ மிந்த வுண்மை
பேதையோ ரறிவர் கொல்லோ பேரறி வாள ரல்லால், (சஎஅ)

தாக்கிய வமரைக் கைத்த தனஞ்சயற் குண்மை ஞானந்
தூக்கிய வுறுதி கண்ணன் சொற்றதாங் கீதைக் கையன்
பாக்கிய மெவர்க்கு மாகப் பயந்தநல் வியாக்கி யான
மாக்கிய வாண்டு பன்னுன் காண்டென வறைய லாமே. (சஎகூ)

## ராமநாதீயமும் ஆத்திசூடிமந்திரவிளக்கமும்

நான்மறை முடிவு மூவர் நவின்றநற் றமிழு முன்னாட்
டான்மறை முனிவர் சொல்லுந் தனிமணி வாச கப்பேர்க்
கோன்மறை யவர்மொ ழிந்த கோவையு முத்திக் கேய்ந்த
தேன்மறை ஞானச் சீர்வா சகத்துடன் சேர்ந்தொன் றாக, ()

நந்தலில் லாத ஞான நாயனா ரருளிச் செய்த
முந்தறம் பொருளோ டின்ப மூன்றையுந் தெரித்துக் காட்டி
யுந்தமன் னுலகம் போற்று முத்தர வேத மாதி
வந்தபல் பெயர்கள் பெற்று வருந்தர்ம சாத்தி ரத்தில், (சஅக)

நாடுபா யிரத்தி னோடு நான்கதி காரங் கட்குக்
கூடுபத் தொன்பா னண்டிற் கோமகன் ராம நாதத்
தேடுசீர்க் கலைவ லாளன் றேர்ந்துமேற் பொருள்க ளெல்லாம்
பாடுசெந் தமிழின் வல்லோர் பகர்ந்துதஞ் சிரமேற் கொள்ள, ()

பதவுரை விருத்தி யின்னும் பலகருத் துரைக ளெஞ்சா
திதமுற வரைந்து வாய்ப்ப ராமநா தீய மென்றே
சதமுறப் பெயரு மிட்டுத் தந்துமே லாத்தி சூடிக்
குதவுநற் றரும ஞான வுரையுமொன் றியற்றி னானே. (சஅங)

## சேனுபத்திய ஆஞ்ஞையும் 4. இங்கிலந்துக்கேகலும் சிறைவிடுதலும் தேசாதிபன் நீக்கமும்

வேறு

ஆற்றவருஞ் சீரிலங்கை மீதுபதி னைந்தாகு மாண்டுதன்னிற், சாற்றவருஞ் சிங்களர்க்குஞ் சோனகர்க்குந் தத்தமது சமய மதின், போற்றவரும் விதிவிலக்கென் றுள்ளபல கொள்கைகளின் பொருட்டேயாக, மாற்றவருங் சலகமொன்று கொளும்பு முதற் பலவிடத்து மலிந்தனவால். (சஅச)

வாள்சுரிகை யீட்டிதண்டு வளைதடிகற் றூமரங்கள் வழங்குகிற்பார், கோள்சொலிநேர் வருகுநரைக் கொல்லுகிற்பார் வீதிகளிற் குறுகிநிற்பார், நீள்சுவர்க ளிடித்திடுவார் மாடமனை மதில்களூட னீறுசெய்வா, ராள்சுழிய வருந்தீய வசுரருட னரக்கரு மென் றவரையொப்பார். (சஅரு)

இற்பழியென் றதுகருதா ரிருந்தமனை தொறுந்தொறும் போ யிலங்குநல்ல, கற்பழியா மங்கையரைக் காதலிப்பார் கணவருறிற் கடிந்திடுவார், சொற்பழியா மெனக்கருதார் தோற்றும த மானமனந் தூண்டவிங்ஙன், பொற்பழியா திருந்தபல நகரமெலாம் வெகுண்டொருங்கே பொடித்திடுவார். (சஅசு)

இருவகையி னிவரெழுந்திங் கிவ்வகையே யுயிர்களின்மே லிரக்கமின்றிப், பொருவகையு முயிர்களவண் பொன்றுவதும் பொற்புடைய விடங்களெலா, மொருவகையே யழிவதுவு மோர்ந்தாசன் படைஞரையங் குய்த்துமுன்போல், வருவகையே யமர்த்தியுமக் கலகமின்னு மிகவுமிஞ்சி வருவகண்டே, (சஅஎ)

வேறு

அஞ்ச வேயவ ராற்ற லடக்குவீர்
விஞ்ச மேலும் வினைகள் புரிவரேற்
புஞ்ச மானவர் பொற்பரைக் கீழதா
யெஞ்ச வேவலி யேதுநீர் செய்குவீர். (சஅஅ)

சுற்றி நிற்பவர் சூழ்ச்சிசெய் வோர்களைப்
பற்றி வந்து படர்சிறை யாக்குவீர்
செற்றி நும்வலி செய்மின்க ளாமென
விற்றி தோர்பெற்றி யீழத்தே சாதிபன், (சஅகூ)

முந்த வுள்ள முறையது வாயினு
மந்த நீதி யடாதென் றுணர்கிலா
னிந்த வேலை யிதுதகு மென்றுகொல்
வந்த சட்டத்தை வாய்ப்புற நாட்டியே, (சகூ0)

சாற்று மெல்லையச் சாமரி சாணையைப்
போற்று வன்றிறற் போர்ப்படை மன்னவர்
மாற்று கின்றனம் வந்த கலகமென்
றேற்ற மாநக ரெங்குந்தா மெய்தியே, (சகூக)

நாடு தம்மி னகரங்க டம்மிலங்
கீடு சொல்ல வியலா வகையமர்
தேடு சோனகர் சிங்கள ராமிவர்
கூடு கூட்டத்துட் கோட்புலி பாய்ந்தென, (சகூஉ)

போய வெல்லை பொருநவான் வருநரை
யாய மள்ள ரரையின்கீ ழாப்பெருங்
காய மாக்கியுங் கையுறப் பற்றியு
மாய நூக்கியும் வன்மைகள் காட்டினார். (சகூங)

காட்டு மெல்லை கடும்படை பர்விக்க
நீட்டு மெல்லை நெடுநகர் நாடெங்குங்
கேட்டு நின்றவர் கிட்டிநேர் நின்றவர்
கோட்டு நீரெனக் கோளடங் குற்றனர். (சகூச)

கணங்க ளன்னவர் காய்சின முள்ளவர்
குணங்க ளுள்ளவர் கோள்க டொடங்கின
ரிணங்க யாரு மிறைநகர் வீதிவாய்ப்
பிணங்க ணோக்கிப் பெரும்பய மெய்தினார். (சகூரு)

தெருவ தெங்கணுந் திண்ணைக ளெங்கணு
மருவ நின்றன மாமனை யெங்கணும்
வெருவ வந்தன வீதிக ளெங்கணு
மொருவ ரின்றி யொளித்தடங் குற்றனர். (சகூசு)

தாந்த மாமனை தங்குவ ரோடியே
சாந்த மானவர் தஞ்சமென் றெய்துவர்
காந்த நெஞ்சிற் கடுஞ்சின மூளினும்
வேந்த னாணை விலக்கவுங் கூடுமோ. (சகூஎ)

வேறு

ஏற்றமுள பொருள்கவர்ந்து மேந்திழைமார் கலங்கவைத்துந்
தோற்றமுள வீடிடித்துஞ் சோனகரைத் தொலைவுகண்ட
சீற்றமுள திறல்காட்டுஞ் சிங்களரி லோர்சிலரைத்
தேற்றமுள படைத்தலைவர் சிறையினிடைப் பற்றிவைத்தார். ()

ஓங்குபெருங் குடிப்பிறந்தோ ருயர்தனத்தோ ரக்காலம்
பாங்குபெற வாசியற்றும் பார்த்திபர்த மாபிளுளோ
ரேங்குபெரும் வறுமையுளோ ரேழைகளென் றெல்லோருந்
தீங்குபெற நேர்ந்தகொடுஞ் சிறையகத்துப் புக்கனரே. (சகூகூ)

மேனகரி னூடுகளின் வேந்தனமர் தருங்கொளும்பா
மாநகரி னுயர்ந்தபெரு வளங்களுட னமைந்திருந்த
சோனகரி னொருசிலரைச் சூழ்தமிழ ரொடுமரசன்
றானகரி னருங்காவற் றனிச்சிறைமே லிருக்கவைத்தான். (ருOO)

சீருடைய விவ்விலங்கை சிங்களர்க டீபமெனப்
பேருடைய துண்மையன்றோ பெரிதுமிந்தச் சிங்களர்கள்
பாருடைய வவன்பணிப்பப் படர்சிறைக்கட் பட்டமையா
லேருடைய நாடுநக ரிழந்தனகாண் பொற்புகளே. (ருOக)

நாடுநகர் நலிவதையு நடாத்துகொடுங் கோலினையுங்
கூடுநரர் சிறைகளையுங் குறித்துமனங் கவன்றனனு
னீடுநலம் புகழ்நீதி நிறைகருணை யறிவிவற்றாற்
றேடுநரேந் திரனாகித் திகழ்ராம நாதமன்னன். (ருOஉ)

தரணிபதி வெகுளிதனைத் தானிறுவு சட்டமதை
யாரணிவரும் வன்சிறையை முடித்துமென மனத்தமைத்தே
யாணியழல் போற்சினவி யருங்காவற் கிரக்கமுற்றே
யாணிவந்த விங்கிலந்துக் கரிதுசெல மனம்வலித்தான். (௫௦௩)

கோனிதனை யுய்த்துணரான் கொடிறுபிடி விடாததுபோற்
றானிதனை நாட்டிநிற்பத் தகாதிதுவென் றேயவன்பா
லேனிதனை யெனவுரைத்து மெடுத்தியம்பா னாகவினி
நானிதனைக் காண்பலென நாடியெழுந் திட்டனனே. (௫௦௪)

சாவதனைக் கருதாமற் சலதியினுஞ் சமாதனு
லாவதனைத் தானினையா னவன்மனுக்கட் குற்றபெரு
நோவதனைக் கருதியுள நொந்துதுணிந் திங்கிலந்து
போவதனைப் பொருட்படுத்திப் புத்தியுள பத்தினிதான், (௫௦௫)

மேவுமுயிர்க் குற்றபெரும் விபத்துகளை நீக்கிடுவான்
கோவுநக ரேகியிவண் குறைமுழுதுந் தவிர்த்ததன்மேற்
றேவுநிக ரானதங்க டிருமுகத்தை நாடியிவண்
டாவுமெனக் கதிவிரைவிற் றருகவென விடைகொடுக்க, (௫௦௬)

உரையிடத்து மடங்காத வுத்தமநற் பத்தினியார்
தரையிடத்துந் தானேதான் றாழ்ந்துடைக்குங் கலம்விடுத்துத்
திரையிடத்தும் பொருதுநிற்குஞ் சேர்மனிதன் போர்கருதார்
புரையிடத்து மன்னவனைப் போகெனவிட் டதுவியப்பே. (௫௦௭)

கடன்முழுதும் பகைவருண்டு கலங்களுட னமுக்கிடுவார்
தடம்போக விதுசமையந் தகுமோவென் றவர்தடுத்து
மிடம்போக வளவினுயி ரிறந்துவிடக் கண்டுமினி
யுடம்போடு முயிரினைநா னோம்புவதென் னென்றெழுந்தான். ()

கலமூர்ந்து தான்றுணிந்து கடுகிவர முதனாளிற்
சலமூர்ந்து மாக்கலத்தைத் தயங்கியபே ரமைச்சனுடன்
பிலமூர்ந்து விடத்தாழ்த்த பேரிடமுஞ் சிவபெருமான்
வலமூர்ந்து தருமருளான் மகிழ்வினுடன் கண்டனனே. (௫௦௯)

போரிடத்திற் பொழுதுமுற்றும் போக்குமவர் புணரியுட்போய்
நீரிடத்தி னுடைத்தாழ்த்த நின்றாழ்ந்த கலத்திருந்த
பாரிடத்திற் சுரந்தவெண்ணெய் பரவையிடைப் பரந்திருக்க
லோரிடத்திற் றோன்றுவது முத்தமன்றான் கண்டனனே. (ருக0)

போரோடுந் திரியுமது பொடித்துடைக்கும் வன்மையது
நீரோடுஞ் சுழியோடி நிசியிலெதிர்ந் தேதுரத்த
நேரோடுங் கப்பலிது நேராம லங்குமிங்குஞ்
சூரோடு மோடுவதுந் தோன்றலிவன் கண்டனனே. (ருகக)

இறையிருக்கு மவற்றிடுக்க ணெய்துதற்குங் கடுங்காவற்
சிறையிருக்கு மவர்குறைக டீர்வதற்கும் வினையுறலா
னிறையிருக்கு நெஞ்சிலச்ச நேராமன் முன்புவந்து
கறையிருக்குங் கண்டனருள் கருணைநின்று காத்தருள, (ருகஉ)

ஊக்கமதே துணையாக வொலியெழுமார் கலிநீந்தி
யாக்கமுள லண்டனெனு மரியபெரு நகரடைந்து
தாக்கமுறு மணியெடுத்துத் தக்கவர்க ளானவர்க்கோர்
நோக்கமுறத் தானதன்க ணேன்மையுடன் வைகினனே. (ருகங)

சென்றிருக்கு மச்சமயஞ் சேர்மனரும் போரிவணு
மென்றிருக்கு மச்சமய மெவரெனினும் போர்நிகழ்ச்சி
நன்றிருக்கு நகரினிடை நவிலவென நாவெடுத்தா
லன்றிருக்கு மருங்காவ லானகடுஞ் சமயமம்மா. (ருகச)

பேருலகிற் பெரும்பாகம் பிரித்தானி ராச்சியத்தின்
சீருலவு முதலமைச்சாய்ச் செங்கோலை நடத்திவரு
நேருலவு முறையினன்பா னேர்ந்துமுகங் கொடுத்திருந்தே
பாருலவு மிலங்கையுள பான்மையெலாம் பகருகிற்கும், (ருகரு)

சட்டமவ னுக்கினதுந் தான்வெறுத்து நிற்பதுவு
நட்டமிகச் செய்ததுவு நலிந்துசிறை வைத்ததுவு
மிட்டமுள வரசியலா விருந்தகுடி சனங்களுக்குக்
கட்டமிக வாவதுவுங் கருத்தமையக் கழறியின்னும், (ருகசு)

சீர்முழுதும் பெற்றதனிச் செங்கோலைச் செலுத்தியிந்தப்
பார்முழுதும் புரக்குமெங்கள் பார்த்திபற்குப் பாக்கியமா
யேர்முழுதும் பெற்றிலங்கு மிலங்கைநக ராள்வதற்கு
நேர்முழுது மிலையமைச்சே நெடுங்கலக மிருந்ததென்றும், (ருகஎ)

நாட்டுமந்தச் சட்டமொன்று நலமுடைய தல்லவென்றும்
வாட்டுமதி பதியையவண் மாற்றுமது நன்மையென்று
நீட்டுமருஞ் சிறையினரை நீக்கிவைத்தன் முறையதென்று
மீட்டுமறுப் புரையாத விதிமுறைகள் விளம்பியபின், (ருகஅ)

தெரிந்துநெறி முறைநிறுவித் திருத்தியுல கெங்குமருள்
புரிந்துயிரை யோம்பவரும் புந்தியுள மந்திரியீர்
விரிந்துவளஞ் சாலிலங்கை மேவியவிந் நாட்கலகம்
பரிந்துவரை பட்டோலை பாருமெனக் கொடுத்துமின்னும், (ருகசு)

உன்னவருஞ் சபயிகளி லொவ்வொருவற் றெரிவுசெய்யா
முன்னவரு மிருவரையேன் மூவரையே நால்வரையே
வின்னவரு மிலங்கைசெல வேவியறிந் திடுதனல
மென்னவருஞ் சேர்ராம நாதனெடுத் தியம்பளவில், (ருஉ0)

ஏருரைக்குஞ் சூழ்ச்சிவலோ னித்தனையுங் கேட்டுரைக்கு
நீருரைக்கு முரைகளுண்மை நிகழ்த்துறுசாட் சிகளிதற்கேன்
சீருரைக்கு மவணிகழ்ச்சி தினந்தினமு நாமறிவே
நேருரைக்கு மொருவரிலீர் நெடி துளத்து நினைகலென்றே, (ருஉக)

மதிமுழுதும் வாய்ந்தமுதன் மந்திரிநல் வாக்களித்து
விதிமுழுது நாடியவண் விதிக்குவனென் றனுப்பியபின்
பதிமுழுது மாளமைச்சர் பலருடனே தானாய்ந்து
துதிமுழுதும்பெறுஞ்சூழ்ச்சித் துணைவனிதுசெய்தனனால். (ருஉஉ)

வேறு

தலங்கைவந் தரசு செய்யுந் தரணிபர்க் கடாது கண்டார்
கலங்கவே வைத்த காவற் கடுஞ்சிறை விடுதல் வேண்டுந்
துலங்குசீ ரறிஞர் நீதித் துரைமக்க ளமர்தற் கொத்த
விலங்கைமே னின்று நீயு மிவ்விடை வருதல் வேண்டும். (ருஉங)

என்னவச் செய்தி வல்லே யிலங்கைமன் னவற்குப் பேர்க்க
வன்னவன் கலங்கி யெங்க ளையனாற் றலையே முன்னி
முன்னவன் கிடைத்த வேந்தின் முதன்மைபோய்த் தானு மன்றே
பின்னவன் சிறைக ணீக்கி யெழில்சொளிங் கிலந்து புக்கான். (௫௨௪)

கோதுதான் போலா யள்ளைக் கூற்றுநா ராசந் தோட்கத்
தீதுதான் வந்த தென்றே சிந்தையுட் கலங்கி யந்தப்
போதுதான் பயண மாகிப் புரத்துளோர் தமக்கும் வெள்கி
யேதுதான் செய்வ னந்தோ விவனுமிங் கிலந்து புக்கான். (௫௨௫)

தானமுந் தவமு மில்லோர் தாரணி யிகழ்ந்து பேச
வூனமும் பழியு மெய்தி யொதுங்கியே யடங்கு மாபோன்
மானமு மதிப்பு மின்றி மன்னவர் கோல மின்றி
யீனமுந் தானு மாக விவனுமிங் கிலந்து சேர்ந்தான். (௫௨௬)

கறைகளை யிலாவ மைச்சன் கட்டளை யமைத்த வாறுஞ்
சிறைகளை விடுத்த வாறுஞ் செய்வது மயங்கி யந்நாட்
குறைகளை விளைத்த வேந்தன் கோனகர் தணந்த வாறு
முறைகளை யுடைய வீழ முழுவதும் பரந்த வன்றே. (௫௨௭)

தேற்றிய விலங்கை மட்டோ தொடுகடல் வளாகத் தோர்க்குச்
சாற்றிய வுதவி முற்றுந் தருமுப காரி யன்றோ
வேற்றிய காவ னீக்கி யாருக்கு மொருங்கே யின்ப
மாற்றிய ராம நாத னருளுக்கு மவதி யுண்டோ. (௫௨௮)

தொன்மைகொள் ராம நாதத் துரைவரும் வரினெங் கட்கு
நன்மைகள் வருமென் றுற்ற நகரொடு நாட்டுள் ளோரும்
வன்மைகொள் சிறையி னோரும் வருமவன் வருகை நோர்ந்துந்
தன்மைக ணிகழ்ச்சி கேட்டுந் தாந்தமை யறியா ரானார். (௫௨௯)

நன்றுதா னமக்கெஞ் ஞான்று நல்கிய ராம நாதத்
துன்றுபே ருடைய சீர்த்தித் துரைமக னங்கு நின்று
மின்றுதான் வருமோ நாளை யெய்துமோ வின்னுஞ் சின்னாட்
சென்றுதான் வருமோ வென்றே சிங்களர் வரவு காத்தார். (௫௩௦)

கொங்குநின் றுலவுந் தாரான் கோமகன் ராம நாத
னங்குநின் றரசன் செய்தி யனைத்தையுந் தெரிந்த பின்னர்ச்
சங்குநின் றுலவும் வாரித் தடங்கடந் திலங்கை யென்னு
மிங்குநின் றிலங்கு கிற்கு மெழிற்றுறை முகத்தைச் சேர்ந்தான். (௫௩௧)

சாக்குநற் கருணை யுள்ளோன் கவுரவ னுளமே னீதி
பூக்குநற் குணங்க ளுள்ளோன் பூர்ணன் பொலிந்த ஞானந்
தேக்குநற் பத்தி யுள்ளோன் சேருமென் றலங்கா ரங்க
ளாக்குநற் றுறைமுகத்தை யறையவும் வேண்டு மோதான். (௫௩௨)

குறைமுக மாக மன்னுங் கொளும்புளோர் மற்று முள்ளோர்
நிறைமுக மாக வந்து நிரைநிரை யாக நிற்ப
வறைமுக வாரி நின்று மமிர்தமொன் றுதித்த வாபோற்
றுறைமுக மதன்கண் வந்தே தோன்றினன் ராம நாதன். (௫௩௩)

புரையுறச் சிறையை நீக்கிப் புரவலன் றனையு மாற்றித்
தரையுறப் பேரை நாட்டித் தந்தசேர் ராம நாதத்
துரையுறச் சிறப்புச் செய்த துறைமுகந் தருமே யென்னிற்
கரையுறத் திரண்டு நிற்போர் காதலை யளக்க லாமோ. (௫௩௪)

வெற்பக நெருங்குங் கண்டி வேந்தமர் கொளும்பு காலி
கற்பக நாடு நேருங் கவினுள நாடு மற்று
மற்பகல் வருகை காத்தே யமர்ந்தசிங் களர்க ளேனோர்
பொற்பக மகிழ்வு பூப்பப் போந்தவ ணாசை பொங்கி, (௫௩௫)

தோன்றன்மேல் வான மாரி வழங்கல்போற் கலமு மந்தச்
சான்றபே ராழி தானுந் தரையுமோர் சிறிதுந் தோற்றா
தான்றசீர் மலரே யாக வாருயிர் மீண்டும் வந்தோர்
போன்றவர் மனங்க ளாரப் பூமழை பொழிந்து நின்றார். (௫௩௬)

சீதங்கொ ளாசி யோர்பாற் சிறந்தவாச் சியங்க ளோர்பா
னாதங்கொ ளினிமை யோர்பா னலம்பெறப் பாடிப் போற்றுங்
கீதங்கொ ளார்வ மோர்பாற் கிளர்ந்திடக் கருணை யாளன்
பேதங்கொ ணகரி னுள்ள பெருந்துறை யிறங்கி நின்றான். (௫௩௭)

செய்பகோ விழுக்கு மன்னைத் தேசத்தா கைற்றி யீழ
முய்யவே கர்த்து வந்த வுத்தமன் ராம நாத
வையனே ராக யாரு மப்பொழு தொருங்கு கூடி
வையமே லெவர்க்கு மில்லா வகைபல வாசி செய்தார். (௫௩௮)

சூரிய மார்க்க ஞாய துரந்தரர் தமிழ ரந்தச்
சீரிய மதிப்பு வாய்ந்த சிங்கள ரருகு சாரத்
தேரினி லிருத்தித் தங்கள் செங்கையாற் பற்றி வீதி
நேரினி லிழுத்துப் போந்து நீண்மனையகத்துச்சேர்த்தார். (௫௩௯)

ஈங்குள துறைக்க ணின்று மெழின்மனைக் கேகும் போதி
லாங்கிலர் மற்று முள்ளோ ராடவர் மகளிர் யாரும்
பாங்குள வீதிநின்றும் பலகணி வாய்த னின்று
மோங்குமென் மாடி நின்று முற்று நோக்கிடுதல்செய்தார். (௫௪௦)

கருக்களிற் கலங்குஞ் சட்டங் காட்டுமக் கால மெண்ணார்
மருக்களிற் றிகடார் வேந்தை மனத்துளா ராமை யாலே
திருக்களி னுயர்ந்தோ ரேனோர் திருமுகங் காண நச்சித்
தெருக்களின் வந்து வந்தே திரடிர ளாக மொய்த்தார். (௫௪௧)

மாவுலா மனையி லையன் வதியவே களிமீ தூர்ந்து
கோவுலாங் கண்டி காவி கொளும்புள தகுதி வாய்ந்தோர்
நாவுலாம் புகழி னானை நாடினர் குழுமி வந்து
பூவுலா மாலை சூட்டிப் போற்றியே சலந்தங் குற்றார். (௫௪௨)

சங்கலை யுறங்குஞ் செய்ச்செஞ் சாலிநாட் டரசே யென்பா
ருங்களை யெம்மைக் காப்பா னுதவினு னிறைவ னென்பா
ரெங்களை யிடரி னீக்கி யெடுப்பவர் நீர்தா மென்பார்
தங்களை யலாமல் வேறு தந்தைதா யெமக்கா ரென்பார். (௫௪௩)

மண்ணமை வாச்சி யங்கண் மலிந்தவண் டழங்க வீதிக்
கண்ணமை யிடங்க ளெங்குங் கதலியுங் கமுகு நாட்டி
யெண்ணமை யையன் றன்னை யிணைத்துர கதங்க ளீர்க்கும்
பண்ணமையிரதத் தேற்றிப் பவனியும் வரச்செய் தார்கள். (௫௪௪)

பவனிபோ மார்க்கந் தோறும் பலரணி யணியாய் நின்றே
யிவனிலோ கருணை யென்பா ரிளநகை முகத்தி லென்பார்
புவனியோ ருயிரோ வென்பார் புருடனு மிவனே யென்பார்
தவனிலோ விவனைப்போலத் தரணிமே லுளரோ வென்பார். (ருசரு)

முந்தியே சிங்க ளத்தோர் டாங்கில முறைதேர் தீரர்
புந்திசேர் ராம நாதன் புரியருந் திறமை யாவுஞ்
சந்தியேய் தெருக்க ளெங்குந் தத்தம துளத்தி லன்பொன்
றுந்திய தங்கித் தங்கி யுபன்னியா சங்கள் செய்வார். (ருசசு)

நேரினைத் தந்தா னென்பார் நீள்வள மலிந்த வெங்க
ளூரினைத் தந்தா னென்பா ருற்றவ ரோடு வாழு
மேரினைத் தந்தா னென்பா ரெண்ணுகிற் பலவ கைத்தாஞ்
சீரினைத் தந்தா னென்பார் தெருமனை யகங்க ளெங்கும். (ருசஎ)

சிங்களந் தனிற்பண் சேர்த்தித் தேனெனத் தெவிட்டா தாகப்
பொங்கவே யமைந்து நின்ற புகழ்மிகப் பொலிந்த கீதந்
தங்கட மாசை யாலே தனிமனை தெருக்கண் மற்றை
யெங்கணும் பாடிப் பாடி யிராப்பக லறியா தூற்றார். (ருசஅ)

தத்தம மனைக டோறுந் தயங்கவே ராம நாதச்
சித்திரப் படங்கள் வைத்துத் திரிகளுங் கொளுத்தித் தங்கள்
புத்துவைத் தொழுதாங் கென்றும் போற்றினர் வருவ ரென்னி
னுத்தம ராம நாத னுவர்க்குபர் தெய்வ மன்றே. (ருசகூ)

கோளுடைக் கலகந் தன்னைக் குடிகளை யரசை விஞ்சும்
வாளுடைப் படைஞர் தம்மை மதித்துச்செங் கோலை நாட்டி
நீளுடை யிலங்கை முன்போ னேர்பெற நிறுத்தி நம்மை
யாளுடை ராம நாத னாற்றலே யாற்ற லம்மா. (ருரு0)

தன்னுயிர் போல வேகந் தருமமு மருளும் போற்றி
மன்னுயிர் காக்கு மெங்கள் வள்ளலாம் ராம நாத
னின்னுயிர் வேண்டா னெய்தி யேற்றநீர்ப் படையிற் றப்பிப்
பின்னுயிர் பேணி வந்த பெருமைதெய் விக மம்மா. (ருருக)

பாங்குறக் குடிகள் கோலும் பண்புற வுலகிற் றீமை
நீங்குற நெறிக ணாடி நிலவுறும் ராம நாதன்
ஈங்குற ராச தர்ம மியற்றியே நெடிது கால
மோங்குறக் கருணை யீச னுதவுறப் பணிதல் செய்வாம். (ருஉ)

## பரமேசுவரவித்தியாலய தாபனம்

வேறு

பொற்பமைந் துயர்குணம் பொலியப் பேதையர்
கற்பதற் காமொரு கழகந் தந்தபோற்
சொற்கலை யாண்மகார் தொடர்ந்து கற்றிடச்
சிற்பநற் கழகமுஞ் சிறக்கச் செய்யவே, (ருங)

மன்னுநற் கருணையை மலிந்த தர்மத்தை
நன்னிலத் துயர்த்திய ராம நாதவே
டுன்னுதன் கருத்தனைச் சொல்லி யாமிட
முன்னியிங் குரையுமென் றுரைக்கு மெல்லையில், (ருச)

சலநல மயல்களிற் றங்கு வோர்நலந்
தலநல முலாவியே சார்தற் காநலம்
பலநல மமைந்ததாய்ப் பண்பு சான்றநற்
புலநல மார்ந்தர்கள் புகன்ற தானந்தான், (ருரு)

நீருடைத் தாகியு நெருங்கிப் பற்பல
வூருடைத் தாகியு முயர்ந்த விந்தியப்
பேருடைத் தாகியும் பிறங்கும் பல்வகைச்
சீருடைத் தாயது திருநெல் வேலியே. (ருசு)

ஏற்றநல் விடமென வெடுத்துக் கொண்டபி
னாற்றவும் பெரும்பொனை யள்ளி வீசியே
மாற்றமற் றிலாவகை மலர்நி லங்களை
யூற்றமோ டமைதர வொருங்கு சேர்த்தபோ, (ருஎ)

தாவுமந் நிலங்களோர் சால வானுறு
மேவுநாற் புறங்களும் வேலி கோலியே
யேவுபன் னேமென வியம்பு மாண்டினிற்
பாவுநல் விடத்ததி பார மிட்டுமேல், (ருஅ)

## வேறு

சீர்பெறு வடக்கு நின்றுந் தென்றிசை யாக வாங்க
ணோர்பெறும் படித்தாய் நீள நெடுஞ்சுவ ரெடுத்து மேலிற்
கார்பெறும் வரைக்கும் போக்கிக் கபாடங்க ணிலைக ளிட்டே
யேர்பெறுங் கீழ்பான் மேல்பா லிருந்துமா ணவர்கள் கற்க, (௫௫௯)

பண்ணுறு மறைவ குத்துப் பார்க்குந ருளமுங் கொள்ள
வெண்ணுறுஞ் சாள ரங்க ளிருநிரை யாகப் போக்கிக்
கண்ணுறக் கவர்வா னாகக் கண்ணாடிக் கதவு மிட்டே
சுண்ணவெள் ளொளிக ளல்லிற் சுதாகர னாண வீச, (௫௬௦)

தெள்ளொளி முகப்பு வைத்துச் சிகரகோ புரமெ ழுப்பி
யொள்ளொளி கான்று மிக்க வுயர்வுட னகல நீளம்
வெள்ளொளி விளங்கும் பித்தி விசித்தநூ தனங்க டம்மை
யுள்ளொளி ரிரண்டு கண்ணு ளுற்றுநோக் கிடுவ தெங்ஙன். (௫௬௧)

சாலவே யகல நீளந் தந்துய ரறைக ளானு
மேலவே யிருந்து கற்க வேற்றசோ கரியத் தானு
மாலவே யுலாவி நிற்றற் காநெடுஞ் சாலை யானும்
போலவே கழக மொன்று புகலுமா றிருந்த தில்லை. (௫௬௨)

சொற்கலார் சாலைப் பாங்கர்த் தொடைதொடை யாகச் சேர்ந்து
நற்கலா வினோதர் வைகி நயந்துபன் னூல்க ளாய்ந்து
கற்கலா மாறு நாடிக் கண்டகண் மீளா வண்ண
மற்கலா நிதியு நாண மண்டப மனேக மன்னும். (௫௬௩)

மேதகு வனப்பி னாலே விரன்மடித் திடுதற் கொண்ணு
தோதகு கலாசா லைக்க ணொருபடித் தாகச் செய்தே
நாதகு மாறு கூழு நல்லகோ புரத்தோ டுற்ற
மீதகு முகப்பு முன்னர் விரிவுள முற்ற மன்னும். (௫௬௪)

அருந்திடற் கான தான மல்லிலி னினிது தூக்கம்
பொருந்திடற் கான தானம் போதவே நானஞ் செய்யா
விருந்திடற் கான தான மெழும்புபந் தடித்துத் தேகந்
திருந்திடற் கான தானஞ் செவ்விதி னிருந்த வாங்கே. (௫௬௫)

சந்தத நானஞ் செய்யாத் தயங்குவெண் பூதி சாத்தி
வந்தநற் சிவானு பத்தி மனத்தின்மே லழுந்தச் செய்தே
யிந்தநற் கழக மைந்த ரிரண்டுகா லத்துந் தங்கள்
சிந்தனை யதுவே யாகச் சிவாலய மதுவுந் தந்தான். (௫௬௬)

கற்றதன் பயன்யா தென்னிற் கடவுடா டொழுத லென்று
மற்றதன் பழக்கங் கற்று வருகையில் வானன் றென்றுஞ்
சொற்றதன் கலாசா லைக்கட் சோருமோ தொடங்கு மந்நா
ளுற்றதன் கருத்தாற் சேர்வி லோங்கவே யமைத்ததையன். (௫௬௭)

பற்பல வேலை யெல்லாம் பண்பெற வமைத்த பின்னர்
நற்பதி னென்பா னாண்டி னலம்பெற நாடி மன்னன்
சொற்பர மேச்சு ரப்பேர் விதாலய நாமஞ் சூட்டிக்
கற்பவர் குழும நன்னா ளாரம்பக் காட்சி செய்தான். (௫௬௮)

இப்பிவாய் விழுந்த நன்னீ ரிலகுமுத் தாகு மாபோ
லொப்பிலா ராம நாத வுத்தம மகான்றன் செல்வஞ்
செப்பிலா மென்னத் தக்க சிவாலயத் திருப்ப ணிக்குந்
தப்பிலா விதால யத்துத் தனியறங் கட்கு மான. (௫௬௯)

இந்தயாழ்ப் பாண நாட்டுக் கிரண்டுகண் ணாகத் தோன்று
முந்தநல் லழகு சால்கல் லூரிக ளிரண்டி னாலும்
வந்தது தருமந் தானே மண்ணுல குள்ள மட்டுஞ்
சந்ததி விளங்க வைத்துத் தன்பெயர் நின்றி டாதோ. (௫௭௦)

உரியவர் கல்வி செல்வ முவர்பிறந் ததனா லென்னே
வரியவ ராக விந்த வவனிமேற் பெயர்பெற் றாரோ
புரியற முடனே தோன்றிற் புகழொடு தோன்று மென்று
பெரியவர் புகன்ற வாறே பிறந்தவன் ராம நாதன். (௫௭௧)

தந்தைமுன் னின்று வேண்டத் தானதற் கிரங்கி நல்கு
முந்தைநாள் ராம நாத மூர்த்திதன் வரத்தி னாலே
யிந்தநா னிலத்தில் வந்தே யிவனவ தரித்தா னென்கை
சிந்தைமே லாய்வ தென்னே திண்ணமே யாகு மன்றே. (௫௭௨)

பார்செய்த தவந்தா னென்றே பகர்ந்திடத் தோன்றி யீழ
நேர்செய்த வமைச்சே யாக நிலவுசேர் ராம நாத
னேர்செய்த விலங்கை தன்னி னிலங்குயாழ்ப் பாண நாட்டைச்
சீர்செய்த வதற்கு நாங்கள் செய்யுங்கைம் மாறு முண்டோ. (௫௭௩)

வேறு

பொருளினுக்கும் புகழினுக்குங் கலையினுக்கு மறிவினுக்கும் புவியைக் காக்கு, மருளினுக்கு மொருவடி வா யவதரித்த சீர் ராம நாத னைய, னிருளினுக்கு விண்மணிபோ னெல்வேலி தனினமைத்த வெழிற்சல் லூரி, மருளினுக்கு மருந்தாக வடகலையுங் கற்பதற்கு வாய்த்த தொன்றே. (௫௭௪)

## பட்டஞ்சூடுதல்

வேறு

ஓங்குமர சுடனளவி யுலகோம்பு முறையமைத்தல்
தேங்குகுடி களுக்கினைந்த சீருடைய நெறியமைத்தல்
பாங்குவரு மெவர்குறையும் பார்த்தவர்க்குச் சுகமமைத்தல்
வீங்குபொரு டமக்குரிய விதமான வறமமைத்தல், (௫௭௫)

மந்திரயோ சனைக்குழுதன் மந்திரியா யமைந்துவர
லிந்திரனேர் போகமுற்று மின்பமிக நுகர்ந்துவரல்
சந்திரனல் லமுதமெனத் தனிக்கருணை சுரந்துவரல்
வந்திரவு பெறுமரன்பான் மனம்பதிந்து கசிந்துவரல், (௫௭௬)

மின்பொருட்டாற் கைதையினம் விரைமலர்க ளலர்த்திநிற்கும், பொன்பொருட்டாற் புவிகளிக்கும் பொன்னெடுமின் பயன்பெறுமோ, மன்பொருட்டா யென்றுமிலை மதித்தூக்கி யுணர்ந்திடுங்காற், றன்பொருட்டா யென்றுமிலைத் தானுலகுக் குழைத்துவரல். (௫௭௭)

என்றுபுக றேவகுணம் ராசகுண மித்தனையு
நன்றுபெற மானுடனாய் நல்லிலங்கை யவதரித்தோன்
றுன்றுபல தேயமெங்குந் தோற்றமுள தன்பெயரைச்
சென்றுநிலை நிற்கவைத்த சீர்ராம நாதனன்றோ. (௫௭௮)

கூட்டமுள சிரேவையுங் குறைவகலப் பெற்றுலகி
னூட்டமுள சேர்ராம நாதனெனு மாமணிக்கு
நீட்டமுள வாசுதனு னிலவுறுவா னேர்ந்தவிக்கு
மீட்டமுள வுயர்வான பட்டமுந்தா னெதற்காமோ. (௫௭௯)

தண்மைபெறுஞ் சங்குகளுட் டகும்பாஞ்ச சன்னியம்போ
லொண்மைபெறும் பொன்களினு ளுயர்தருசாம் பூநதம்போற்
றிண்மைபெறு மிவண்மனுவுட் சேர்ராம நாதனெனி
லெண்மைபெறுஞ்சின்னமிந்தவேந்தனுக்குவேண்டுவதோ. (௫௮௦)

ஆட்சிபெறு மாங்கிலர்க ளரசியலிற் றொடங்குமந்நாண்
மாட்சிபெறும் பட்டமுள மந்திரியு மிவன்பாட்டன்
சூட்சிபெறு மிலங்கையருட் சூட்டுநயிற் பட்டமுதற்
காட்சிபெறு மாறிருந்த காவலனு மிவன்மாமன். (௫௮௧)

மன்னுகலை திருவறிவு மந்திரஞ்செய் யுயர்நீதி
துன்னுதர்மங் கருணையெனச் சொன்னவிவை முழுதுமுற்றும்
பன்னுபுக ழோங்கியதன் பரம்பரையோர் குலமுறையென்
றுன்னுமிவன் பட்டமுற வுளத்திலொருப் பட்டனனே. (௫௮௨)

எண்ணியவா யிரத்தியெண்ணூற் றெண்பதின்மே லொன்பதென
நண்ணியவாண் டதினயந்தே நானிலத்தோர் கோலோச்சும்
புண்ணியமா ராணியம்மாள் பொருந்துமெனத் தெரிந்தெடுத்துக்
கண்ணியமாம் பட்டமொன்றைக் கனம்பெறுவான் சூட்டினளே. (௫௮௩)

சூட்டுமிதன் பொருளாய்ந்து சொல்லிடுங்கான் மிகவிரிவா
யீட்டுபிரித் தானியெனும் ராச்சியத்து ளுதித்திருளை
யோட்டுமொரு தாரகையா யோவாம லெத்திசையு
நாட்டுபெரும் புகழோங்க நண்ணியிமைத் திடுதலன்றோ. (௫௮௪)

தார்துலவுந் தார்மார்பத் தமிழரெனுஞ் சாகியத்துண்
மாதுலனே முன்னநயிற் பட்டமவண் வாங்கியபோ
லோதுலகு மேன்மதிப்பா லுயர்ராம நாததுரை
மாதுலவுஞ் சீயெம்சீப் பட்டமுதல் வாங்கினனே. (௫௮௫)

மானமொரு மூன்றினையு மதித்தூக்கி யுயர்த்திவரும்
வானமுயர் சீர்த்தியுள மாராம நாததுரைக்
கானவிரு பானொடொன்றி னணிமகுட வர்த்தனனாற்
றானமுயர் வுற்றநயிற் பட்டமொன்று தான்கொடுத்தான். (௫௮௬)

உற்றவிரு பட்டமலா லுலகினொரு மதிப்பினுக்காய்ப்
பெற்றபல பட்டமுள பேசுசின்னம் பலவுளவாற்
கற்றகலை யமைச்சரசு கருணைபெருஞ் செல்வமிவை
முற்றவுள வேந்தனுக்கு முதன்மைபட்டந் தான்றருமோ. (௫௮௭)

வேறு

ஆர்த்திகொ ளவரைச் சேர்ந்தே யவரவர்க் கேற்ற மான
சீர்த்திகள் கொடுத்துத் தம்பாற் சிறப்பிலா திருந்து நெஞ்சிற்
பூர்த்திகொண் டுலக மென்றும் போற்றிய ராம நாதப்
பார்த்திபற் சேர்ந்தே யிந்தப் பட்டங்கள் சிறந்த வம்மா. (௫௮௮)

என்றநற் றவங்கள் செய்து மின்னுயிர்க் கிரங்கி யுற்றுந்
தோன்றுகிற் புகழோ டென்ற சொற்படி தோன்றப் பெற்று [ம்
மான்றுகோ லோச்சும் வேந்தோ டவனியாள் முறைகள் கோத்து
வான்றுலங் கிடுவோ ரிந்த மந்திரிக் குடும்பத் தோரே. (௫௮௯)

## அருணாசலமுதலியார்பட்டம்பெறுதல்

வேறு

சலமொழி குணத்தினன் றருமச் சிந்தைய
னலமெனக் கற்றவ னடக்க முள்ளவன்
பலமொழி யாரொடும் பகர்த லில்லவ
னலமெனக் கண்டதை நயக்கு நீதியன். (௫௯௦)

சீருல விலங்கைமேற் றிலக மானவ
னூருல கோம்புநல் லமைச்சின் வாய்ந்தவன்
பாருல கத்தவர் பணியுஞ் சீர்த்திய
னேருல வாதவில் லியலைக் காப்பவன். (௫௯௧)

காமரு வருளினன் கடவுட் பத்திய
னேமரு மாசர்கை யேந்துஞ் சீரியன்
றேமரு மண்ணர்க டிருட்டி யொப்பவ
னுமரு ஞாசல மறிவின் மேலையோன். (ருகூ௨)

ஆனவ னரசியற் கமைந்த நீதியின்
மானவ னுமென மதித்து மன்னவன்
றானவ னேர்பெறீஇத் தயங்கு பட்டமொன்
றேனவ ரேத்துற வினிதிற் றந்தனன். (ருகூ௩)

துன்னிய வாண்டுபன் னான்கு தோற்றிடக்
கொன்னியன் மந்திரிக் குடும்பம் வாழ்வுறப்
பொன்னிய விலங்கைசீர் பொலிந்து மன்றுறப்
பன்னிய விவணயிற் பட்டம் பெற்றனன். (ருகூ௪)

மேதினி போற்றிய மேன்மைத் தம்முநீ ணு
டேதினி யுரைக்குவ தியைந்துற் றிங்கிவன்
றீதினி லுறுவகை தென்னி லங்கையா
மாதினி யாண்மன மகிழ வைத்தனன். (ருகூரு)

இட்டமு மாவரோ விலங்கைக் கேய்ந்தநற்
சட்டமுந் தருவரோற் றங்கு மாந்தரின்
கட்டமுந் தவிர்ப்பரோற் கதிப்புத் தந்திடும்
பட்டமும் பெறுவரோற் பகர்வ தென்கொலோ. (ருகூசா)

## திருச்செந்தூர் விழாநடைபெயர்த்தல்

பொங்கிய வசுரர் தம்மைப் பொன்றுவித் தமரர்க் குற்ற
வங்கியல் சிறையை நீக்க வாறுமா முகத்துப் புத்தேள்
கொங்கியல் கயிலை நின்றுங் குவலய மிசையே வந்து
தங்கிய செல்வ மோங்குந் தலமது செந்தூ ராமால். (ருகூஎ)

நீர்தரத் தனிதங் கேட்டே நெடுங்கரைக் கண்ண தார்கச்
சேர்தரக் கருணை கூரச் செந்தில்வாழ் கந்த வேளுக்
கார்தரக் காலங் கால மருச்சனை விழாக்க ளென்று
நேர்தரக் காவல் வேந்தர் நிபந்தனை யமைத்து வைத்தார். (௫௯௮)

சேர்த்திய நெறிக டப்பார் திரிசுதந் தார்க ளென்னுஞ்
சீர்த்திகொ ளந்த ணாளர் திருவிழாப் பூசை யின்னு
மார்த்திபார் பிராயச் சித்த மானவை யெவையு மங்கண்
பூர்த்திய தாக நாடிப் பொற்புட னியற்று வாரால். (௫௯௯)

தீதக றலத்தி லிந்தச் செபலையா ரறியா ராங்கோர்
கோதகல் விழவுக் காலங் கொள்ளைநோய் பரவிற் றென்றே
பாதக மென்ப தெண்ணார் பண்டிதர் பகரக் கேட்டுத்
தோதகன் பகுதி நீதித் துரைவிழாத் தடைசெய் திட்டான். (௬௦௦)

கொற்றவன் றடுக்கு மாறுங் கொள்ளைநோய் பரவு மாறு
நிற்றலு நடந்து வந்த நிபந்தனை தவறு மாறுஞ்
சுற்றமன் னுற்ற யாருந் துடித்திடு மாறும் யாவுந்
தெற்றென வுணர்ந்து நின்ற திரிசுதந் தரத்த ரானோர், (௬௦௧)

காக்குறு பாச னிட்ட கட்டளை விலக்கு தற்கு
மாக்குறு விழாவை யிந்நா ளயருவிப் பதற்கு மாக
நோக்குறு பொழுதிற் றக்க நோன்மையோ ரிவண்யா ரீதை
நீக்குறு திறலின்வாய்ந்த நெடுந்தகை கொளும்பிலுண்டால், (௬௦௨)

ஒண்மையாற் பெரிய னென்று மோர்தலாற் பெரிய னீயும்
வண்மையாற் பெரியன் மன்னும் வளந்தனாற் பெரியன் பேசு
முண்மையாற் பெரியன் செய்யு முதவியாற் பெரிய னுள்ளத்
திண்மையாற் பெரியன் கண்டீர் சேர்ராம நாத மன்னன். (௬௦௩)

ஆற்றொணா தாக நேரு மாபத்துச் சகாய னாகி
வேற்றுமை யாக வந்த விபத்துக டீர்க்கத் தானே
தோற்றிய ராம நாதத் தோன்றலீண் டுற்றா லன்றி
யேற்றவா பத்து நீங்கா தென்றன ரொருங்கே யாரும். (௬௦௪)

ஆதலே கரும மென்னு வந்தணர்த் தலையா யுள்ளோர்
நோதலே வரினு மின்னே நுவல்கொளும் பினுக்கு யாங்கள்
போதலே நலமென் றோர்ந்து பொழுதநிற் பயண மாகிக்
காதலே யொழுக்க மாகக் கடலையுங் கடந்திட் டாரே. (கூ0ரு)

சகங்கண்டு மருள வோங்குந் தனமொளிர் கொளும்பிற் சேய்
சுகங்கண்டு வாழ்வு மன்னுந் திரிசுதந் தரத்தர் தூயோன் [செய்
முகங்கண்டு மகிழ்வு தூங்கி முகத்தினு மலர்ச்சி மிக்க
வகங்கண்டு களிப்பு விஞ்சி யாசியோ டமர்ந்தா ரங்கண். (கூ0சு)

ஏதுநீர் வந்த செய்தி யாவையும் விரித்தெ னக்கீண்
டோதுவீ ரென்றே யைய னுவப்புடன் வினவா நிற்பத்
தீதுநீர் தரவே வேட்குந் திரிசுதந் தரர்க ளாநே
ரீதுநா மீண்டு வந்த தெனவெடுத் தனைத்துஞ் சொற்றார். (கூ0எ)

ஆங்கது கேட்ட போதே யறுமுகன் விழவுக் கேயோர்
தீங்குவந் தடுப்ப தென்னுச் சிந்தைநொந் தவரை நோக்கித்
தாங்குவேல் பணித்துச் சூரைத் தடிந்தவ னருளு மேது
மீங்குநீ ரழுங்கல் வேண்டா மினிவிழா நடக்கு மென்றான். (கூ0அ)

மறுமுக நோக்க ராகி மனமொழி காய மொன்று
யுறுமுக நான்கிற் பின்னு யுளகலி யுகத்து நாங்கள்
பெறுமுக நீயே யென்று பேணுவோர்க் குதவுஞ் செந்தூ
ரறுமுக னெமக்கு நல்கு மருட்டிற மிருந்த வாறே. (கூ0கூ)

தெருட்டுறு மிரம நாதச் செம்மலார் துணிபிற் சொற்ற
வருட்டுறு மமுதந் தங்க ளஞ்செவிப் பட்ட போதி
லிருட்டுறு நிலத்துற் றோரை யெடுத்துவெள் ளிடைவிட் டென்ன
மருட்டுறு மனமு மெய்யு மகிழ்ந்துபூ ரிப்ப தானார். (கூக0)

சண்முகன் சிறப்புச் சற்றே தடைப்படி னமுதத் திங்கட்
டண்முகன் ராம நாதன் றரிக்குமோ வூக்கி நின்ற
பண்முகம் பரந்த பார்மேற் பண்ணவர் தமையுங் கொண்டே
விண்முகம் போலுஞ் செந்தூர் மேவின னமர்ந்தா னங்கண். (கூகக)

தீர்ந்தன குறைக ளென்றே திருச்செந்தூர் நாதற் போற்றிச்
சேர்ந்தன ருவகை பொங்கத் திரிசுதந் தரர்க ளேனோர்
சார்ந்தனர் ராம நாத தருமபூ பதிபா லாக
நேர்ந்தன யர்வு நேராய் நின்றுமுன் முறையிட் டாரே. (௱௧௨)

தனையது நாடிக் கூறச் சண்முகன் விழவுக் கிந்த
வினையது வாரா தென்றும் வேறுளோர் தம்மைப் பற்றி
யினையது செய்மி னென்றே யெழுதுத றகுமோ வென்று
மனையது தீரத் தேச வதிபற்கே வரைந்து விட்டான். (௱௧௩)

திண்மைசே ருளத்தி னோடுஞ் சென்னைமே லிருந்த தன்பா
லண்மைசேர் நண்பாந் தேச வதிபனுங் கண்ட போதே
வண்மைசேர் ராம நாதன் வரைதலை மறுப்ப னோதர்
னொண்மைசேர் விழவு செய்வா னுத்தர வளித்து விட்டான். (௱௧௪)

பாங்குறு நீதி மானும் பண்டிதர் தாமு நாணா
வாங்குறு மிராம நாத வண்ணற னாற்ற லாலே
யோங்குறு மாவைக் கீன்ற வொருதனி வேலி னாற்குத்
தேங்குறு வரிசை யோடுந் திருவிழா நடைபெற் றன்றே, (௱௧௫)

திருவரு ளுடைய சேய்தன் றிருச்செந்தூர் விழாக்கண் முற்றுங்
குருவருள் ஞானச் செல்வன் குறைகணோர்ந் தவர்க்கு நாடித்
தருவரு ளிராம நாதன் றரிசனஞ் செய்து மீண்டும்
பொருவரு கொழும்பு நண்ணிப் பொற்புட னமர்வ தானான். (௱௧௬)

வையமே லாறே யாக வரும்படை வீடு தோறுஞ்
செய்யுநற் கருணை பொங்கத் திருவிளை யாடல் செய்யு
மையனக் கீரனாரை யடுத்துவந் தருளு மாபோற்
கையனேன் றனக்குந் தன்னோர் கடைக்கனோக் கருளு மென்றும். (௱௧௭)

## திருமயிலாப்பூரில் திருவள்ளுவமகாசபையில் அக்கிராசனம்வகித்தல்

மன்னெயில் மகேந்தி ரத்தில் வானவச் சிறையை வைத்தே
தன்னைமற் றெவரும் போற்றத் தனியர சாண்ட சூரைக்
கொன்னயில் விடுத்துச் செற்ற குமரவே ளமருந் தானஞ்
சென்னையி னொருசா ரான திருமயி லாப்பூ ராமால். (௯௧௮)

நிறையினை யுடைய தர்க்க நேர்பொரு ளறிஞ ராயு
முறையினை யெடுத்துக் காட்டி மூன்றுபா லமைத்துப் பற்பல்
துறையினை யுடையார் யாருந் துதிக்கவே தமிழி னைய
மறையினை யருளும் ஞான வள்ளுவன் சமாதி யிங்கே. (௯௧௯)

கூறுவள் ளுவன்ச மாதிக் கோவிலின் பிராகா ரத்திற்
றேறுபன் னேழா மாண்டிற் சேர்வுறு மாணி யைந்தி
லேறுசீர் நாய னாரை யெண்ணுஞா பகத்துக் காக
மாறுதீர் வள்ளு வப்பேர் மகாசபை கூட லுற்றார். (௯௨௦)

நாயனார் மான்மி யத்தை நன்றுதாம் விளக்கு தற்கு
நாயனார் ஞாப கத்தை நாட்டமண் டபஞ்செய் தற்கு
நாயனார் நூலு மற்று நாடியச் சிடுவ தற்கு
நாயனார் பொருட்டி னாலே நற்சபை கூட லான. (௯௨௧)

வள்ளுவ ஞாப கத்து மகாசபைக் கதிபன் றேரிற்
றெள்ளுசீர் ராம நாதச் செம்மரு னென்று மிக்க
வள்ளிய னான சீனி வாசநல் லையங் காரங்
குள்ளுற நினைந்து யார்க்கு முரைக்குவ னினைய வாறே. (௯௨௨)

வித்துவ சபைக்கு வாய்ந்த விளங்கொளி மகுட மாக
மத்தியில் ராம நாதப் பிரபுதான் வயங்கு கிற்கு
முத்திசேர் நாய னார்த முதல்வருஞ் சபைக்கு யாரை
மத்திய மகுட மாக வரிப்பதென் றெனையே கேட்டார். (௯௨௩)

மற்றவர் வினுவும் போதின் மருளிலா வெனது நெஞ்சந்
தெற்றென வாய்ந்து வல்ல செந்தமிழ்க் கிடமே யாகி
யுற்றசேர் ராம நாத வுத்தம புருடன் றன்னைப்
பற்றிமற்றொன்றைநோக்கா திலங்கைமேற்பாய்ந்ததன்றே. (கூஉச)

எண்ணுநா வலர்கள் கூடு மேற்றமாஞ் சபைக்கு மத்தி
நண்ணுநா யகமாய் நின்று நடாத்துமுத் தமனு மாவான்
மண்ணுளோர் துதிக்கத் தோன்று மன்னவன் ராம நாதப்
பண்ணுளோனென்றேநெஞ்சிற்ப திந்ததென்னபிப்பிராயம். (கூஉரு)

இலக்கண லக்கி யத்தி லெய்துபே ரபிமா னத்தோன்
றலக்கணை மயலைத் தள்ளுந் தத்துவ ஞான முள்ளோ
னலக்கணற் றிலங்கைக் கின்றே ணுற்றுணைகங் கரிய மற்று
நிலக்கணோ யாருந் தேர்வர் நீவிரு மறிதி ரன்றே. (கூஉசு)

நேருற வமைத்த சட்ட நிரூபண சபைக்க மைச்சாய்ச்
சாருற விருந்த தங்கள் சாதியன் றெனினு மூக்கிச்
சேருற விவனை வைத்தார் சிங்கள ராகி லைய
னுருற வெமக்கு மட்டோ வவர்க்குமன் புடைய னன்றே. (கூஉஎ)

புண்ணியன் புலவர் போற்றும் புகழினன் போதன் மிக்க
கண்ணிய னிலங்கை யாளுங் காவலன் முதல மைச்சன்
குண்ணியன் கருணை யாளன் குலவுயாழ்ப் பாணத் துள்ள
பண்ணியல் விதால யங்கள் பரவுப காரங் காட்டும். (கூஉஅ)

எற்பமார் ராம நாதற் கெய்துநற் சிறப்பை யெல்லா
மாற்றவே சீனி வாச வையங்கா ரெடுத்துக் காட்டி
மாற்றமென் னுய னுர்த மகாசபைக் கழைமி னென்னச்
சாற்றவே கேட்ட தக்கோர் தகுமென வொருப்பட் டாரே. (கூஉகூ)

தெரித்தனர் கலைக ளாய்ந்தோர் செல்வர்க ளினைய சில்லோர்
பரித்தன தனத்தாற் றுழும் பாக்கியக் கொளும்பு நண்ணித்
தரித்தன ரமைய நோக்கி வள்ளுவ சபைக்குத் தம்மை
வரித்தனம் வருதல் வேண்டு மகாசபை சிறக்க வென்றார். (கூநo)

என்றிவர் வேண்டு மெல்லை யெண்ணுபு ராம நாத
னன்றிவர் வருகை யென்னு நாடின னுபச ரித்துக்
குன்றிவர் மயிலாப் பூர்க்குக் குறையிலை வருதற் கென்றான்
மன்றிவர் பான்மை வேண்டின் மறுக்குமோ ராம நாதன். (௲௩௧)

பொருமயி லேந்துஞ் செவ்வேள் பொற்புடன் வீற்றி ருக்குந்
திருமயி லாப்பூர் நின்றுஞ் சேர்வர வதுநேர் நோக்கி
யொருமயி லளவு மிக்கோ ருவந்துமங் கலங்கள் செய்யப்
பெருமையி லையன் வந்தே பிறங்குசீர்ப் பதிக்க ணுற்றான். (௲௩௨)

கற்றபே ரறிஞர் செல்வர் காவலர் சேவை செய்வோர்
முற்றவே யொருங்கு கூடி முகமனோ டளவ ளாவி
யுற்றபோ திராம நாத வுத்தம புருடன் யார்க்கு
மற்றமே யுறுமற் றானு மறைந்தன னுபசா ரங்கள். (௲௩௩)

வள்ளுவ மான்மி யத்தை வளர்தர விளக்கு தற்கு
முள்ளுனர் பகத்து மாட மொன்றிவ ணியற்று தற்குந்
தெள்ளுநூ லாய்ந்தே யச்சிற் றிருத்தியச் சிடுவ தற்கும்
வள்ளியோ யவர்தம் பேரான் மகாசபை கூட்ட லானேம். (௲௩௪)

கற்றுள கலைசேர் செல்வங் கருணைநன் மதிய மைச்சுச்
சுற்றுள சீர்த்தி யீகை துலங்கிய பிரபுத் தன்மை
பெற்றுள மாந்தர் தம்மைப் பெரிதுநா மாய்ந்து நோக்கி
முற்றுள தாங்க ளல்லான் மொழியுங்கா லிங்கா ரென்றே, (௲௩௫)

வள்ளுவ மகாச பைக்கு வரித்தன மவைக்குத் தாங்க
ளுள்ளுவந் தமர்ந்து நன்று நடாத்துத றகுதி யாகு
முள்ளுவந் திதுவேண் டுற்றே மூதிசைத் தும்பிக் கென்றுங்
கள்ளுவந் தூட்டுந் தாராய் கருத்தினி லெமக்கீ திச்சை. (௲௩௬)

எண்ணிய பொருள்க ளர்யா விலாவகத் துணரக் காட்டு
துண்ணிய வுணர்வான் மேலோய் நுமக்கியாம் புகலப் போமோ
தண்ணிய குணத்தாற் சீராற் றருமத்தான் ஞானந் தன்னாற்
கண்ணிய மான வேந்தே கைக்கொளல் கடனீ தென்றார். (௲௩௭)

சான்றபே ரறிஞ ராகித் தக்கவ ரென்று வேண்டி
ஞன்றமேன் மக்க ளானோ ரதனையு மறுப்பர் கொல்லோ
தோன்றவே திசைக டோறுஞ் சூழ்புகழ் நிறுவி யிட்ட
வேன்றசேர் ராம நாத வேந்தனு மதற்கி சைந்தான். (௬௩௮)

வேறு

ஆங்குதிரு வள்ளுவனு ராலயத்தி னெருசாரி
னோங்குதிரு வாளருட னெளிபெறுமற் றெல்லோருந்
தாங்குதிரு வாய்ந்ததெனச் சாற்றமிக விரிந்துயர்ந்து
தேங்குதிரு வார்சபையைச் சித்திரமா யலங்கரித்தார். (௬௩௯)

செந்தமிழுக் குரியபற்ப றேயமுள வுத்தமருஞ்
சிந்துதிரை சூழிலங்கைச் சிரமான ரத்தினமும்
வந்தபடி கண்டுயர்கை வல்லவர்க ளமைத்தனவே
யிந்திரனின்சபையழகென்றிசையாமலெதையிசைப்பேம். (௬௪௦)

வேறு

பக்கநோக் கிலாத நீதி பதிகண்மேன் ஞாய வாதர்
மிக்கவண் டமிழின் வல்ல வித்துவக் குழாங்கள் செல்வர்
தொக்கமேற் குடிப்பி றந்தோர் சொல்லினு யிரத்துக் கொன்றாய்த்
தக்கவ ரெவருந் தோன்றிச் சபைக்கலங் காரஞ் செய்தார். (௬௪௧)

நேரிய சபைதா னங்கோர் நீர்த்தட மாக வைகும்
பாரிய மாந்தர் செய்ய பதுமங்க ளாக வந்தச்
சீரிய பதும மெல்லாந் திகழுமா ரலர்த்தத் தோன்றுஞ்
சூரிய னாக வந்து தோற்றினன் ராம நாதன். (௬௪௨)

இருளுடை யிடத்தி லேயோ ரிருள்வலி யெனுமா றையன்
மருளுடை மனமா சோட வந்தவை பொலியத் தோற்ற
வருளுடைச் சீனி வாச வையங்கா ரோடு மேனோர்
தெருளுடை ராம நாதச் செம்மலை வேண்டிச் சொல்வார். (௬௪௩)

சேயக மிருந்த செவ்வித் திருமயி லாப்பூர் தேவர்
தாயக மதனு லிங்கே தானதை விளக்குஞ் சாட்சி
யாயக நினைந்துண் டாக்கு மவைக்குநன் மணியைப் போன்ற
நாயக மாக வைகி நடத்தவென் றனுவ தித்தே, (௬௪௪)

இரந்தன ராக வைய விசைந்திள நகையுந் தோன்றத்
துரந்தவுட் கிளர்ச்சி யோங்கத் தோற்றவை பொலிந்து காட்டப்
பரந்தபன் மணிக ளுக்குட் பதித்தசெம் மணியென் றேத
நிரந்தபே ரொளியி னோடு நீடுமா சனத்தி னுற்றான். (௬௪௫)

மேன்மறை வழங்கு மையன் வீற்றிருந் ததற்குப் பின்னர்க்
கான்மறை கமழ மாலை கழுத்தினி திட்ட தன்மேற்
றேன்மழை தானே யென்னத் திருப்பதி கங்க ளோதி
வான்மழை நாண வாக்கு மழைசொரி வதற்கு வல்லர். (௬௪௬)

ஆனவ ரின்னும் நுண்ணூ லறிவினி னுயர்ந்தோர் யாரு
மானமே லுடைய ராகி மகாசபை மதிக்கும் வண்ணம்
வானவர் விரும்பு ஞான வள்ளுவர் சரித மற்றுந்
தீனமே வுறும லாய்ந்தே தெரிந்துசொற் பொழிவ தானார். (௬௪௭)

இலக்கண மதனின் வல்ல ரிலக்கிய மதனின் வல்லர்
தலக்கண தாக வேண்டுந் தருமசாத் திரங்கள் வல்லர்
நிலக்கண துண்மை கூறு நீடுசித் தாந்தம் வல்லர்
புலக்கண தாகக் கற்கும் புராணங்கள் வல்ல ரெல்லாம், (௬௪௮)

கற்றத னளவே யான கலைதரு மறிவுக் கேற்க
வுற்றசித் தாந்த மெல்லா மொருவருக் கொருவர் முந்திச் [கப்
சொற்றசொற் பொழிவை முற்றச் சோர்விலா தமைத்துக் கேட்
பெற்றசேர் ராம நாதப் பெருந்தகை யாய்ந்து பேசும். (௬௪௯)

வள்ளுவ ரவதா ரத்தை வாசுகி யொழுக்கை யான்றோ
ருள்ளுமுப் பால்க ளோது முயர்தமிழ் வேதந் தன்னைத்
தெள்ளுநல் லறிஞர் தங்கள் செவிக்குப்புத் தமுத மாகக்
கொள்ளுமாறுபன்னியாசங்குதூகலத்துடன்செய்தானல். (௬௫௦)

இயம்புநா லதிகா ரங்கட் கிராமநா தீய மென்று
நயந்தரு பெயரை வைத்தே ஞானப்பே ருரைதான் செய்த
வயங்கிளர் ராம நாதன் வாக்கினால் விரிக்கு மென்னின்
வியந்தரும் பொருளி னுண்மை விளம்பவும் வேண்டுங் கொல்லோ. (௬௫௧)

இன்னவர் ருக வர்ங்கண் யாவர்க்கு முவகை தூங்கச்
சொன்னயம் பொருனை யங்க டுலங்கியே ததும்ப வெங்கண்
மன்னவ னுபன்னி யாசம் வானம்போற் பொழிவு செய்யா
தன்னமா சிலாம னுற்ற சபைக்கலங் காரஞ் செய்தான். (கூ௫௨)

தேங்கிய தமிழி னின்பந் தெவிட்டவே மொழிந்திட் டையன்
பாங்கிய னுடைய யார்க்கும் பரிவுரை யதுவுஞ் செப்பித்
தாங்கிய கலைஞ ராதித் தக்கவ ரேத்திக் கூறு
மோங்கிய சன்மா னங்க ளுத்தமன் கூட லானான். (கூ௫௩)

தாவடி நெடுவேற் பெம்மான் சன்னிதி போற்றி யன்பாற்
சேவடி தொழுத பின்னர்த் திருமயி லாப்பூர் நின்றுங்
கோவடி வான தோன்றல் குழீயினர் வழிய னுப்பத்
தேவடி வாகு மீழத் தலைநகர் சேர்வ தானான். (கூ௫௪)

## சிதம்பரம் சுதந்தரமாக்கல்

வேறு

நாத னார்தின மருளுட னடமமர் தலந்தர்
னேத நீங்குல கதற்குள விருதய கமலம்
போத மேயினர் தமக்கரன் பொற்புறு முபய
பாத நற்பதந் தருவது முயர்சிதம் பரங்காண். (கூ௫௫)

முற்று நற்றவத் துயர்மணி வாசக முனிக்குப்
பற்று மன்னுசா யுச்சிய பதமுன மளிக்கப்
பெற்று மின்னமும் வேண்டிய பெருந்தவர் தமக்கு
மற்று மேற்பா முத்திகள் வழங்குமித் தலங்காண். (கூ௫௬)

ஞான ரூபமுற் றிலங்கிய நற்சிதம் பரத்தை
மோன ஞானிகள் முனிவர்கள் முயங்குத லறியா
னை வாங்கில மன்னவ னரசினுட் படுத்த
மேன நீதிக ளாய்ந்தனன் விதித்திடக் கருதி. (கூ௫௭)

சானு மென்றவண் சதாசிவ வையரைத் தகுந்த
மேலு மோசிரு நடுவரை வேந்தியன் முறையா
லேனு மாறுநீ ராய்ந்து நம் மரசினு ளெடுக்க
வானு நீதியைக் கூறுகென் றவ்விடை யமைத்தான். (கூ௫௮)

அந்த நீர்மையைத் தில்லைவா ழந்தண ரறிந்தே
சிந்தை நொந்தனர் செய்வதும் யாதெனத் தெரியார்
நந்த வேசெயும் விபத்தினைச் சிதம்பர நடனத்
தெந்தை யாரரு ளெங்ஙன மாவதென் றினைந்தார். (௬௫௯)

சிறந்த வேதிய ராயினுந் திணிநில வரைப்பிற்
பிறந்த மானுடப் பிறப்பினின் மயங்கினர் பெரிது
மறந்த வர்வகைத் தாண்டவத் தைந்தொழி னடத்தி
யுறைந்த நாதனுக் குவாது செய்வது மூவப்போ. (௬௬௦)

வாத மாயிது நீடித்து வலியுற வருநாள்
வேத சிற்சபைத் திருநட வேதிய னருளா
னீத நல்லுரு வெடுத்தென நிலவுறும் ராம
நாத வேந்தலுஞ் சென்னையை நணுகியங் கமர்ந்தான். (௬௬௧)

ஆழி மூழ்கையிற் புணையரு கணைந்தமை நிகர்க்க
மீளி சென்னையி னமர்வதைக் கேட்டனர் விழைந்தே
யூழி யோங்குறுஞ் சிதம்பரத் துத்தம மறையோர்
நாழி தாழ்த்திலர் சென்னையை நாடினர் நணுகி. (௬௬௨)

ஓங்கு பத்தியு முலகுப கராமு முறுநர்த்
தாங்கு தர்மமுந் தனக்குறு குணங்களாய்த் தயங்க
வீங்கு வந்தவ தரித்தநம் மையனை யிருந்த
பாங்கு நாடினர் வந்தனர் கண்டனர் பரிந்தே. (௬௬௩)

சீர்த்தி பெற்றுநல் வாழ்வுறத் தில்லையி னடேச
மூர்த்தி தன்னரு ளாகவென் றுசிகண் மொழியச்
சேர்த்தி பெற்றமூ வாயிரத் தொருவனுய்ச் சிவனு
மார்த்திகொண்டுறையவவரைநம்மண்ணலுந்துதித்தே. (௬௬௪)

ஆச னங்கொடுத் தமரவைத் ததற்குமே லவரை
நேச மாகவீண் டுற்றது நிகழ்த்துகென் றுரைக்கத்
தேச மேத்திய தில்லைவா ழந்தணர் தெரிந்தே
பேச லாயினர் பெருந்தகை பெரிதுளங் கலங்க. (௬௬௫)

போற்று கின்றநம் பொற்சபை பொலிவுற நடன
மாற்று கின்றவன் றஞ்சமென் றமரெமக் கருளாற்
றோற்று நீர்மணற் கேணிதான் சுரந்துறு மதுபோற்
சாற்று கின்றதென் னுழைத்தனன் றினந்தினந் தருவான். (௬௬)

நாங்கி லேசமற் றமுதுபா றதியுட னறுநெ
யோங்கி யார்சுவைக் கன்னறேன் கனியுமென் றுவைக
டேங்கி யுற்றதிம் போனக மருளினுற் றினமும்
வாங்கி வாங்கியே யருந்தினம் வருவது வழக்கம். (௬௭)

நாத னல்லரு ளாலிது நடப்பதே யலர்மன்
மீத மாகநாம் புதைத்திலம் வேறிலை விளம்பப்
பேத மெண்ணியே சிதம்பரம் பெரும்பொரு ளுடைத்தென்
றோத மன்னவன் விசாரணைக் குன்னின னுளத்தே. (௬௮)

வேந்து கையகப் படுமெனின் மேலுமென் சேட
னேந்து பார்மிசைத் தலமித னேற்றமு மொழியுஞ்
சார்ந்து வைகுமந் தணர்களின் றகுதியு மொருவும்
பேரந்து தங்களைக் காண்பமேற் போதுமென் றெழுந்தேம். (௬௯)

சந்த தந்தனித் தாண்டவச் சபாபதி யருளுந்
தந்த நல்லறத் தங்கடந் தயாவுமே யிருந்தால்
வந்த சைவமுந் தில்லைவாழ் மறையவர் குலமு
மிந்த நீர்மையி னோங்குமென் றிங்ஙன மிசைத்தார். (௭௦)

வேறு

எல்லையில் வேள்வி யோம்பி யிருங்கலி கடியு நீவிர்
தொல்லையின் முறைபோ லாகுந் துயரமேன் விடுமி னெங்க
டில்லையி னடேச ணார்தந் திருவரு ளாடியேற் குண்டேல்
வல்லையில் யானே தீர்ப்பன் வழக்கினை யென்று சாற்றி. (௭௧)

அடுத்தநாட் கங்கு லாங்கே யாங்கிலர் தமிழர் யாரு
மடுத்தன ராகி மன்னு மன்னிய சபைய தாகக்
கடுத்தவங் கிலத்தி லண்ணல் கதிப்புடன் பொருளுந் தோன்றக்
கொடுத்தன னுபன்னி யாசங் கொண்டகோ ளதற்கு மேற. (௭௨)

கேட்டுள தீரர் யார்க்குங் கிளர்ச்சியுக் திறனு மின்பும்
வேட்டுளங் களிக்கக் காட்டி மேவல ரரிநே ரண்ணல்
பாட்டுள கலைஞர் செல்வர் பகர்குடிப் பிறப்பி னுள்ளோர்
கூட்டுள விவர்க ளோடுங் குலவுறீ யடுத்த நாளில். (௬௭௩)

சட்டமேற் போன நீதிச் சதாசிவ மறையோ னோடுட்
பட்டவ ரிருவர் தாமும் பாங்குற வைத்து மன்ன
னிட்டமாந் தலந்த னக்கு மியல்சம யந்த னக்கு
நட்டமா மிதனை நீங்க ணாட்டுதன் முறைய தாமே. (௬௭௪)

பூதல மென்றோ வன்றே பொற்புடன் பொருந்தி மன்னு
மாதலஞ் சிதம்ப ரங்காண் மன்றுணின் றாடு நாதன்
காதல னாகித் தானு மொருவனாய்க் கலந்து நின்ற
வேதல மாகு மைய ரிமையவ ரெனற்குங் கண்டீர். (௬௭௫)

கோனுயர் பாண்டி யற்குக் குறைவின்மந் திரியா யுற்று
யானுய ருலகை நீத்த மாணிக்க வாச கன்முன்
னானுயர் பதங்க ளுள்ளு நணுகுதற் கரிதாய் மன்னு
மேனுயர் பதமா மத்து விதப்பெருந் தலமு மீதால். (௬௭௬)

காதலி னுண்ணு மென்றே கருணைகூர் நடேச மூர்த்தி
யோதலி னுயரி வர்க்கே யுழைத்துழைத் துதவு மென்றுஞ்
சாதலி னொழித்து முத்தி தருந்தல மிதுவே யாகு
மாதலி னொருகோ லோச்சு மரசின ரொழுங்கிங் கேனோ. (௬௭௭)

சீர்த்திசேர் ராம நாதத் திப்பிய ரினைய வாறே
யார்த்திசேர் தேவ நீதி யமைதரக் காட்டக் கேட்ட
பூர்த்திசே ரனைய மூன்று புண்ணிய ரொருங்கே யாயா
மூர்த்திசேர்கோவினோக்கமுபல்வதைவிலக்கல்செய்தார். (௬௭௮)

இருணிலை திரிவோர் தம்மை யெண்ணிய விடத்துச் சேர்க்கு
மருணிறை ராம நாத னங்குறோர் விபத்தை நீக்கத்
தெருணிலை வுற்ற சிந்தைத் தில்லைவா ழந்த ணாளர்
பொருணிரம்புறப்பெற்றோரிற்பொருவிலாமகிழ்வுபூத்தார். (௬௭௯)

சிந்தனை யதுவாய் நின்று சிதம்பர நடேசன் பாதம்
வந்தனை புரிக வென்றே வள்ளலை வரிசை யோடுந்
தந்தனை வோர்க்குங் காட்சி தானடஞ் செயுந்த லத்தே
பந்தனை யொழியு நல்லேலர் பரியுட னழைத்துச் சென்றார். (௬அo)

தலத்துடன் மூர்த்தி தீர்த்தந் தந்தினை யிலாத தாகிப்
பலத்துடன் பூசை யாற்றும் பாப்புடன் புலியு நின்று
நலத்துடன் காண நித்த நடப்புரி தலத்தின் மாடே
வலத்துடன் ராம நாதன் வந்தொரு மடத்திற் சேர்ந்தான். (௬அக)

சித்தமும் புலன்க ளைந்துஞ் சேர்ந்திடப் புறம்பு முள்ளுஞ்
சுத்தமும் தானு மாகத் துரியமே லாவி மன்ன
மத்தமும் பணியும் வேய்ந்த மன்றுடை நாதன் பாத
நித்தமும் வணங்கிச் சின்னா ளொருமத் தலத்தி லுற்றான். (௬அஉ)

வாதமீண் டுற்ற வீர்பா ளைந்தினில் வந்த வில்லின்
மாதமோர் சபையை யிங்கே மகாமகோ பாத்தி யாயன்
ஏதமில் லறிஞ ருமம் பலவநா வலனு மின்னும்
போதமே விட்ட யாரும் பொலிதரக் கூட்டிப் பின்னர். (௬அ௩)

ஆய்ந்தன ரெங்க ளைய னக்கிரா சனத்தில் வைக்க
வாய்ந்தவம் பலவா ணச்சீர் நாவல னிந்த வாத
மேய்ந்தநன் னீதிதன்னை யேந்தலார் தீர்ப்பி னோடுந்
தோய்ந்தசீ ருவையு நாடித் தொடுத்துச்சொற் பொழிவுசெய்தான். (௬அச)

உன்னுற வேண்டிற் றெல்லா நாவல னுரைத்து வைக
மன்னுற வுபாத்தி யாயன் வள்ளலார் மாட்சி செப்பப்
பின்னுற ராம நாதப் பெருந்தகை வழக்கு மற்றும்
பன்னுற நின்ற வெல்லாம் பகர்ந்தன னவையோர் போற்ற. (௬அ௫)

போற்றிய சபையிவ் வாறே பொலிவுற முடிந்த பின்னும்
சாற்றிய தேவி யோடுந் தனிமக ளோடு மின்னுந்
தோற்றிய நடேச பிள்ளைத் தோன்றலுங் கூட வையன்
தேற்றிய வருள்கை கூடுஞ் சிற்சபைத் தலத்தி லுற்றான். (௬அ௬)

உயங்குல வுருவ மாக வுளவிராட் புருடற் கென்று
மியங்குவ தாகி மன்னு மிருதயத் தான மான
நயங்குல வுறுந்த லத்தே நடாத்திமுன் றொட்டு வந்த
வயங்குவ தொருசித் தாந்த மகாசபை யென்று முண்டால். (௩௮௭)

நல்லிய லுடையீ ரின்னு நவிலுவ னிதற்கு முன்னுஞ்
சொல்லிய சபையி தற்கே தொழாயிரத் தேழா மாண்டில்
சல்லிய மிலாம லென்றுந் தயங்கிய சமாச மென்றே
யெல்லிய லொளியா ரெங்க ளேந்தலை வரச்செய் தார்கள். (௩௮௮)

மற்றவ னெய்த வங்கே மருவுசித் தாந்த நூல்கள்
சொற்றமேற் காவி யங்க டேவே தாந்த மற்றுங்
கற்றவர் யாரும் வந்தே கவின்மகா சபையைக் கூட்டி
நற்றவன் ராம நாத னுயக மணியாய் மன்ன. (௩௮௯)

கதித்தமே னூல்கள் கற்ற கவின்கொள்பண் டிதனு மென்றே
மதித்தபே ரறிஞ னான மறைமலை யடிகண் முன்னந்
துதித்தசேர் ராம நாத துரைமகன் பெருமை யாவும்
விதித்தபே ருபன்னி யாசம் பெய்தபின் மேலு முள்ளோர். (௩௯௦)

தத்தம துணர்வுக் கேற்பத் தகுந்தகா வியஞ்சித் தாந்த
மத்தகு பொருண்மைத் தாம்வே தாந்தமென் றினைய யாவும்
புத்தமு தெனுமா றங்கட் பொருள்வழுச் சொல்வ முக்கள்
சித்தநன் காய்ந்து சுத்தச்செந்தமிழ்ப்பொழிவுசெய்தார். (௩௯௧)

இன்னுமங் குரைக்கத் தக்கோர் யாவரு முரைத்த பின்னர்
மன்னுமச் சபைக்கு மத்தி மன்னிய ராம நாத [சொல்லிப்
முன்னுமங் குரைத்தோர் சொற்ற வுரைக்கெலாங் குறிப்புச்
பின்னுமங்கினிமைத்தாகப் பிரசங்கமதுவுஞ்செய்தான். (௩௯௨)

முன்னையங் கிருந்தகல்வி முதிர்ந்தபே ரறிஞ ராய்ந்தே
தன்னையங் கழைத்த வாறுஞ் சமாசமு மீது கண்டீர்
பின்னையங் கனமே யாகப் பெரிதுவந் தரிய தக்கோர்
முன்னையங் கிருக்க வைத்தே வளப்பங்கள் வினவிச் சார. (௩௯௩)

பொருவரும் ராமநாத புரவலன் றேவி யோடு
மிருவரு மினைய வாறே யிவணருந் தானஞ் செய்துந்
திருவரு ளார்ந்த தில்லைச் சிதம்பரஞ் சேவை செய்துந்
தருவரு வனஞ்சா ரீழஞ் சார்ந்தன னுவகை யோடும். (சுசுச)

## வேதாரணிய வழக்குத்தீர்ப்பு

வேறு

ஓதவனக் கடற்சார்பு முப்பளமு மிருப்பையுட னேங்கு புன்னைச், சீதவனச் சார்புகளுஞ் சேர்ந்துமுன நான்மறைகள் சிறந்த பூசை, மாதவனத் துடனியற்றி வதிந்துகத வடைத்திருந்த மகத்து வஞ்சேர், வேதவனப் பதிக்கதிப ரிவரவரென் றொருவாதம் விளைந்த தந்நாள். (சுசுரு)

வளஞ்சாலும் யாழ்ப்பாணத் திருநாட்டிற் பழமையது வரணி யென்னு, முளஞ்சாலு மொருதனியூ ரவ்வூரிற் றொண்டுதொட்டே யுறைத லுற்றோ, னளஞ்சாலும் பதிக்குமட வதிபதியா யிருந்துவரு மடியி னுள்ளோன், குளஞ்சாலுங் கண்ணருளோன் சுந்தரதே சிகனெனும்பேர் குலவப் பெற்றோன். (சுசுசு)

தானுரிமை யொடுநடத்தி வருநாளி னிடையினதைத் தவிர்க்க வெண்ணி, மானுரிமை யிலையெனவே வடபான்மங் கலமுதலி வந்து முன்னை, நானுரிமை யுடையவனென் றொருமூன்று வருடமட்டு நயந்தா னெய்தக், கோனுரிமை வழக்குமன்றிற் கொடுத்துறுதி பெறநடத்திக் கொண்டு வந்தான். (சுசுஎ)

சென்னையுள மேற்கோடு பலகாலுந் தானுய்ந்து தீர்க்க வென்னின், முன்னையுள முறைமயங்கி யுண்மைநிலை தானறிய முடியா தாகிப், பின்னையுள கட்சியினர் சம்மதமு மறிந்ததன்மேற் பெரிதுமுன்னிப், பொன்னையுள தாமிலங்கைச் சேர்ராம நாததுரை போது மென்றே, (சுசுஅ)

தெர்க்கவுல குய்யவுமைத் துதவுமுய ருபகாரி தொடர்புற் றங்கோர், பக்கமுறக் கோடார்த துலைநாவி னிற்குநடு பாவு மீழத், தக்கமதி யமைச்சருளொ டார்ந்தகுண பூடணமித் தகைய வெல்லா, மொக்கமதித் தேவழக்கைத் தீர்க்கவெனத் தானுமதற் குடன்பட் டெய்தி, (சுகூகூ)

நெய்யுடைய விளக்கழகு பெறும்வேத வனத்தனரு ணெறியை முன்னிச், செய்யுடைய வடபாதி யொடுவானிச் சுந்தரதே சிகன்றன் பாங்கிற், பொய்யுடைய தெங்கெனவு மாங்கதனு ளாழ முறப் புதைத்து வைத்த, மெய்யுடைய தெங்கெனவுஞ் சாதனஞ்சான் றுட்சிகளால் விளங்கிக் கண்டான். (எOO)

தந்திரியும் வருதினியு மணியணியாய் வகுத்திருத்திச் சலதி சூழ்ந்த, நந்திரியு மாறுழவ ருழுபழனத் திலங்கையரு ணலங்கொள் ராச, மந்திரியு மந்தரங்க மந்திரியு மந்திரியு மன்னனென் றுை, விந்திரியுந் தண்மனமே தெரித்துரைக்கும் வழக்குரைக்கு மிவர்க ளுண்மை, (எOக)

இந்தமறைக் கர்ட்டினுக்கா மாதீன கர்த்தாவென் றின்று மன்றுஞ், சொந்தமுறத் தேசிகனை யொருமூன்று மளவைகளுஞ் சொல்லு கின்ற, முந்தமறைந் தழிவழக்கை முதன்மையுளோர் தொடுத்திடுதன் முறைமை யன்றாற், றந்தமுறை தவறுமவர் தண்டனைக்குட் படுவரெனத் தள்ளி விட்டான். (எOஉ)

மெய்ம்மறைத்த வடபாதி மங்கலத்து முதலியதில் வெறுப்பு மில்லை, பொய்ம்மறைத்த தேசிகற்கும் வழக்குவென்றி யானதென்று புகழு மில்லை, நெய்ம்மறைத்த குழலியுடன் வேதவனத் தமர்ந்தருளு நிமலன் முன்னர், மெய்ம்மறைத்த றகாதெனத்தாந் துரைதீர்த்த நீதியொன்றை வியந்து கொண்டார். (எOங)

தேனுடனேர் மொழியோடுஞ் சேயோடு மருளாசத் திகழ்ந்தெங் கோமான், றனுடனே கலந்ததிரு வுருவமிருந் திலங்குகிற்குந் தலமாம் வேதக், கானுடனே தரிசனஞ்செய் தருள்கவெனத் தெய்வமிந்தக் காசி னிக்கண், மானுடனே யாகிவந்த சேர்ராம நாதனைத்தான் வழிக்கொள் வித்தே, (எOச)

நடையிடையே பந்தரிளங் கமுகுகன்னல் கதலிகளு நடுவித் தோங்க, விடையிடையே யலங்கரித்து மற்றுமெங்கு மலங்கரித்து மிமையோர் போற்றும், விடையிடையே வருநாதன் கோவிலுற மங்கலங்கள் மிகவுஞ் செய்தும், புடையிடையே வரிசையெலாந் தந்தழைத்து விமரிசையாய்ப் போந்த பின்னர், (எ0ரு)

ஏற்றசுக மத்தனைக்கு மிடமான திருமடத்தி லிருக்க வைகி, யாற்றலுறப் பெறும்ராம நாதனவண் டேயநன்னீ ராடிப் பின்னர், போற்றவரும் பூதிபுனைந் தன்புருவாய்ச் சிவஞானம் பொலிய வந்து, சாற்றமறைக் காடனுமை பாகனமர்ந் தமர்ந்தசந்நி தானத் துற்றே, (எ0சு)

நோற்றபயன் கைகூடப் புலனடங்க நெஞ்சினுள்ளே நுனித்திட் டெங்கோன், றேற்றமுள வுருநினைந்தே மனம்வாக்குக் காயமெனச் சொல்லின் மூன்றுந், தேற்றமுற வவன்வசப்பட் டொழிந்தபின்னர் வீதிவலஞ் செய்து வந்தே, யூற்றமுள சிவநேயர் சேர்ந்துவரத் திருமடத்தி லுவந்து புக்கான். (எ0எ)

மறுசுவையொன் றில்லாம லமுதமுங்கைப் பாகுமென மடத்திற் செய்த, வறுசுவைகொ ளமுதமுண்டு மதன்மேலுஞ் செவிகளுக்கு மமுத மென்னப், பெறுசுவைசேர் தேவாரம் பண்ணமையக் கேட்டுமின்னும் பெருகு மின்பத், துறுசுவைகொள் சங்கீதங் கேட்டுமுளங் களிகூர்ந்தே யுறைத லுற்றான். (எ0அ)

ஆண்டுவரும் வழக்கினுண்மை யதுவாகத் தீர்ப்புமுட னளித்த பின்னர், வேண்டுமறைக் காடணுகி விளம்பியநூல் விதிப்படியே விமலன் பொற்றா, ளீண்டுமுளத் தன்பாரப் போற்றியருள் பெற்றதன்மே லிலங்கை நண்ணிப், பூண்டுதன தறங்களெலா மாற்றியிவ ணெல்லோர்க்கும் புகழ்ச்சி தந்தான். (எ0கூ)

## அருணாசலமுதலியார் பதமுத்தி

### வேறு

பம்பிய வருளும் பன்னூற் பயிற்சியு மறிவுஞ் சீரும்
வெம்பிய திறலும் பேரும் விளங்கிய ராம நாதன்
றம்பிய தார்கும் பேறுந் தகுதியுங் கலையுஞ் சீரு
நம்பிய வென்ன வந்தோர் னவிலரு ணாச லந்தான். (எக௦)

தோன்மனைக் கழகு செய்யுஞ் சொர்னமின் றுணைய தாக
நன்மனை யணிக லம்போ னலம்பொலி மகாரைத் தந்து
மன்மனை யனைய செல்வ மன்னுபு வயங்கிக் காட்டும்
பொன்மனை வாழ்ந்திவ் வேந்தல்புகழுடன் வருநாடன்னில், (எகக)

சொல்வினைப் போக முற்றுந் தோன்றியே துய்த்த பின்னர்
வல்வினை தினைப்போ தேனு மாநிலத் திருத்து மோதான்
பல்வினை யான யாவும் பார்மிசை நுகர்த்தி நின்ற
நல்வினை யீர்த்துக் கொண்டு நடந்தது யாத்தி ரைக்கே, (எகஉ)

ஆர்தரு மவர்வு மன்பு மகத்துற விருபான் மூன்றிற்
சீர்தருந் தேவி யோடுஞ் சித்திர மகார்க ளோடு
மோர்தரும் பத்தி ஞான மோங்கரு ணாச லந்தான்
பார்தருந் தலங்கண் மன்னும் பாரத வருடத் துற்றான். (எகந)

தில்லைபுள் ளிருக்கு வேளூர் திருவிடை மருதூர் காளி
யொல்லைவந் தருளு மெங்கோ னுவந்தமர் தலங்கள் போற்றி
வல்லைவந் தவற்கு நல்கி மைந்தநம் பழநீ யென்றே
தொல்லையிற் குமாரற் கையன் சொல்லிய பழநி வந்தான். (எகச)

தலைப்படு பவங்க ணீற்றுஞ் சரவணப் பொய்கை மூழ்கி
நிலைப்படு நீறு கண்டி நிலவுபட் டாடை சாத்தி
மலைப்படு முச்சி யேறி வளரிளங் குமரன் முன்ன
முலைப்படு மெழுகு போல வுள்ளநெக் குருக நின்றே, (எகரு)

காழ்ந்தநெஞ் சுடைய சூரைக் காதியே சயந்த னேனோர்
வீழ்ந்தவெஞ் சிறையை நீக்கி விண்ணர சுதவுந் தேவே
தாழ்ந்தவெம் போக மான சாகரக் கரைகா ணாதே
யாழ்ந்தவென் றனக்கு நின்ற னடிப்புணை தருவாய்போற்றி. (௭௧௫)

பூவினன் சிறைமேல் வைகப் புவிபடைத் தமர்ந்தாய் போற்றி
காவினன் மகளை வேடக் கன்னியை மணந்தாய் போற்றி
யாவினன் குடியே யாதி யறுபடை வீடு தோறு
மேவிநன் காடல் செய்யும் வேற்படை விறலா போற்றி. (௭௧௭)

முருகனே போற்றி யாறு முகவனே போற்றி மாயோன்
மருகனே போற்றி யத்தன் மதலையே போற்றி போற்று
ரருகனே போற்றி பொன்னு ரமரனே போற்றி யென்னுட்
கிருகனே போற்றி பூவிற் கிளர்பதம் போற்றி போற்றி. (௭௧௮)

வேலனே போற்றி சூர்க்கு மேதினி யடக்கிக் காட்டுங்
கோலனே போற்றி யன்பர் கும்பிடச் சித்தி நல்குங்
காலனே போற்றி யார்ந்த கருணைவா ரிதியே போற்றி
பாலனே போற்றி போற்றி பழநிமேன் மருந்தே போற்றி. (௭௧௯)

என்றுநின் றிரங்கிப் போற்றி யின்றவற் பிரியுஞ் சேய்போற்
குன்றுநின் றிழிந்து தானுங் குணவதி தானு மாக
நின்றுநின் றடியார் பார்க்கு நிரப்பினர் தமக்கு மீந்தே
யன்றுநின் றடுத்த நாளி லாலவாய் மதுரை வந்தான். (௭௨௦)

முன்னுறப் பிறப்ப தற்கு முதம்பெற வளர்வ தற்கு
மன்னுறச் சீவித் தற்கும் வருமனு பவங்க டுய்த்த
பின்னுறப் பிரிவதற்கும் பிதாமக னிடங்க ணாடி
யுன்னுறக் குறித்த கன்ம முரைப்பதென் கண்கூ டன்றோ. (௭௨௧)

இன்னவ னால வாயி லெய்துமத் தினத்தி னாசி
துன்னிய சலதோ டத்தாற் சுரஞ்சிறி திருந்த தாக
வன்னதாற் றேவி யன்றே யாலய சேவை வேண்டா
மென்னவு மறுத்துத் தன்பா லிருந்தநல் விளையி னாலே, (௭௨௨)

தாதையர் தாய ரன்பார் தனயரிற் கிழமை பூண்ட
கோதையர் கூட வந்தோர் கூடினர் தடுப்ப ரேனும்
பேதையர் காய மட்டே பிறந்தவ ரிறந்த நிண்ண
மேதையர் தமக்கென் றூலும் விதியினை விலக்கப் பேர்மோ. (எ௨௩)

இந்திரன் பழியைத் தீர்த்த லெனும்விளை யாட றெட்டே
யந்தவெண் ணெட்டே யான வாடல்க ளியற்றுஞ் சோம
சுந்தரன் றன்னை நோக்காற் றுலங்குமீ னாட்சி தன்னை
வந்தனை யின்றே நாங்கள் வாழ்வுறச் செய்வ மென்றே, (எ௨௪)

தாதனிற் றாழ்ந்த நாரை தானுண வொழிந்து நோற்ற
மாதவர் படியும் பொற்றா மரைத்தடம் விதியான் மூழ்கித்
தீதவ மிலாத வேந்த றேவியுந் தானும் வந்து
காதலி னால வாயான் கழலா ணெனக்கென் றுன்னி, (எ௨௫)

திருத்தனே பொருணூ லுக்குச் சீருரை நிறுத்துக் காட்டு
நிருத்தனே யால வாயி னிமலனே போற்றி போற்றி
யொருத்தனே யாகி யென்று முலவுமைந் தொழிலுஞ் செய்யுங்
கருத்தனே யால வாயிற் கடவுளே போற்றி போற்றி. (எ௨௬)

ஆக்கிய கருவைக் குஞ்சா யமைத்தகண் மீனை யொக்கு
நூக்கிய பக்கு வஞ்செய் நோக்கமீ னாட்சித் தாயே
போக்கிய முழுதுந் தந்தாய் போதும்பே ரின்பப் பேறுந்
தேக்கிய பெறுவான் செய்யுந் தேவியே போற்றி போற்றி. (எ௨௭)

கதித்தகா யத்தால் வாக்கான் மனத்தினால் வலமும் வந்து
துதித்தன னினைந்து சோம சுந்தரே சுவா ேனாடுங்
கதித்தமீ னாட்சித் தாயைக் கண்டருள் பெற்று மீண்டு
விதித்ததன் சாகை வந்து மேவினன் மேவு மன்றே. (எ௨௮)

செல்லறீர் கலியின் மிக்கோர் திகிரியுய்த் துலக மாள்வோ
ரெல்லவர் தமக்கு மெய்து மிறப்பெனல் சாத மென்கை
சொல்லவும் வேண்டுங் கொல்லோ சுரமெனு மந்தப் பாவி
மெல்லவே யேறி யேறி விடமெனத் தலைக்கொண் டன்றே. (எ௨௯)

பூவியை தரவைத் துள்ள புகழரு ணுச லந்தன்
றேவியை மறக்க வீன்ற செல்வரை மறக்கத் தன்னே
ராவியை நிகர்க்கு மன்பா ரண்ணனை மறக்கச் செய்த
பாவியை நேரா யின்னும் பாவிதா னெந்தப் பாவி. (எ௬௦)

மருந்துமந் திரமே மற்றை மணியெனு மினைய மூன்றும்
பொருந்துமா றுக வாங்கட் பொருக்கென வவர்கள் செய்து
மருந்துவா னிருந்த போக மனுபவித் தொழிந்து விட்டாற்
றிருந்துமோ சுரநோய் விஞ்சிச் செகத்தறி வொழித்த தன்றே. (எ௬க)

தலமுடன் மூர்த்தி தீர்த்தந் தானுடைத் தாகி யென்று
நலமுடன் விளங்கு முத்தி நகரமா மதுரைப் பாலாய்ப்
புலமுட னடங்க வாவி போய்ச்சிவ னருளுண் மூழ்கக்
குலமுடனிவர்கள்மாழ்கக்குவலயம்வெறுத்தான்மன்னன். (எ௬உ)

சோகத்தின் சுவையைக் கண்ட தோகையு மகனு மாக
யாகத்திற் றம்மை யிங்கே மறந்துபோ யிருந்த வேந்த
றேகத்திற் சீர்கள் குன்றாச் செயல்புரிந் திரதத் தேற்றிப்
பாகத்திற் கொண்டு செல்வப் பாங்குள கொளும்பு வந்தார். (எ௬௩)

கிளத்திய சடத்துக் கேய்ந்த கிரியைகள் செய்து செய்த
வளத்திய றேர்கொண் டெய்தி மயானத்திந் தனத்துப் பாயல்
வளர்த்தியே தகனஞ் செய்யா வழங்குமச் சடங்கு மாற்றி
யுளத்தியலொருவாத்துன்ப மொருவகையாற்றியுற்றார். (எ௬௪)

ஊரையு நோக்கான் மற்று முறவையு நோக்கா னன்பாம்
பேரையு நோக்கா னீதி பிறழ்கிலா நோக்கை நோக்கிச்
சீரையு மருளை யுந்தான் செயுமரு ணுச லத்துக்
காரையு மறிவுக் கொப்பென் றறைவது சழக்கே யன்றோ. (எ௬௫)

## மலாய்நாடு காட்சிபெறுதல்

### வேறு

மாட்சிபெற் றுள்ளது மலைகள் சான்றது
நீட்சிபெற் றுள்ளது நிலவு மாறது
சாட்சிபெற் றுள்ளது தனங்கொள் காடது
காட்சிபெற் றுளமலாய் நாடு கண்டிரால். (௭௩௬)

ஊனருந் திடுமதி லுவப்பு மிக்குள
சீனரு மலாயருஞ் சேர்ந்து மன்னிய
சோனருந் திருந்திடாச் சொற்கொள் வஞ்சக
வீனரு மிருப்பதவ் விடங்கள் கண்டிரால். (௭௩௭)

ஈயமே வெள்ளிமற் றிலங்கு நாகத்தோ
டேயமேல் விளைவுறுந் தோட்ட மெங்கணும்
பாயமேற் பான்மரம் பதஞ்செ யப்பிசின்
மேயமேற் பொன்விலை விலையு மென்பவே. (௭௩௮)

மானறுங் காட்டுள வளங்க ளேயலால்
வானறு மலையுள வளமுஞ் சால்வது
தேனறு நெய்தனித் தேங்கொள் சாரமோ
டானறும் பாலுமிங் காறு தானரோ. (௭௩௯)

மானமா னவருள மயங்கல் சொல்வதென்
மோனமா முனிவர்க்கு முயக்க மூட்டுறுஞ்
சீனமா தர்க்குநேர் தெய்வ மாதரேல்
வானமா நாடது மலாய நாடிதே. (௭௪௦)

நாமத னியல்புக ணவிலப் போகுமோ
வாமத மெண்ணல ராண்மை யோர்களுந்
தேமத மாதருந் தினமுஞ் சிந்தையேன்
மாமத னரசது மலாய நாடிதே. (௭௪௧)

மானமர் வனமுள மலாய நாடிதை
நானமர் கருத்தணோ நவில்வர் மேலையோர்
கானமர் மலைகளிற் கான்கொள் யாற்றினிற்
றேனம ரிலங்கையைச் சேர்ந்த தென்றரோ. (௭௪௨)

போதிய பொருள்களாற் பொருந்திற் றந்நகர்
ளாதிய தொற்றுவ னனும னுய்ந்தெடுத்
தோதிய தோரெழு நூறு யோசனை
பாதிய திந்தநாட் பார்க்கி னில்லையே. (எசங)

வாங்கிய குறிஞ்சியை வனங்கொண் முல்லையைத்
தேங்கிய பிசின்மரந் தெங்கத் தோப்புடன்
றூங்கிய விதனைப்பா தாள லங்கையென்
றோங்கிய மேலையோ ருரைப்ப ருண்மையே. (எசச)

அறைமுகச் சிங்கைகோர் லாலம் பூருடன்
பறைமுகப் பட்டணம் பகரிற் பற்பல
தறைமுகப் பண்டங்க டந்து வாங்குறுந்
துறைமுக மிரண்டுடன் றென்று மொன்றுமே. (எச௫)

வள்ளிய னம்மவர் வதிவ தேனைநர்
டெள்ளிய தாகிய விந்த நாடுதான்
வெள்ளியை வந்தவர் விரும்பு மவ்வள
வள்ளியே தருதலி னளகை யொக்குமே. (எசசு)

முன்னிய தாமலாய் நாட்டின் முந்தைநாண்
மன்னிய கலையினர் மாபி னேரிவர்க்
கன்னிய ராயின ராப்ப குப்பினர்
பன்னிய செல்வயாழ்ப் பாணத் துள்ளவர். (எசஎ)

நன்றுதா னென்றுதாய் நவின்ற சொற்படி
சென்றுதா மரசினர் சேவை தன்னினுந்
துன்றுதா யிருந்தபாற் றோட்டந் தன்னினு
மொன்றுதா மேதுரைத் தனத்தொ டுற்றனர். (எசஅ)

இன்னநன் னிலமையோர் டிருக்கு மிங்கிவர்
சொன்னநா டாளுநுந் தொன்ம லாயர்க்கு
மின்னவச் சீனர்க்கும் யவன வேந்தர்க்கும்
பின்னவாங் கிலர்க்குந்தம் பெருமை காட்டவே, (எசகூ)

வேறு

பாரந்தபுகழ் நிறுவுபொன்னம் பலக்குரிசி றவத்தாலுஞ்
சுரந்தவரு டரும்ராமேச் சுரனுதவும் வரத்தாலு
மிரந்தகுறை கூறவரு மெங்கடவ வசத்தாலு
மரந்தைகெட மாநிலமே லவதரித்த செம்மறனை, (௭௫௦)

ஏலாத பிரமாணத் தேற்றமுள நூலாய்ந்து
சாலாத வழிவழக்கிற் றுன்புகுந்து கொள்ளாம
லாலாத நன்னீதி யரசனுக்குக் காட்டிவைத்துத்
தோலாத வாதமதிற் றொடர்ஞாய துரந்தரனை, (௭௫௧)

பார்ட்டனதன் மேலாக மாதுலனும் பண்டுதொட்டு
நீட்டமுட னயந்தமதி நேர்ந்தசங்கத் திவர்களின்பி
னாட்டமுட னனையசங்கத் தமைச்சினர்க டலைசாய்க்க
நாட்டமுடன் கட்டுரைக ணவில்சூழ்ச்சித் துணையினனை, (௭௫௨)

தேங்குபல வளஞ்சாலுந் தென்னிலங்கை மாத்திரமோ
பாங்குவருஞ் சீருடையாழ்ப் பாணமுள வரிகளையுந்
தீங்குபெறுஞ் சிறைகளையுந் தீராத கொலைகளையுந்
தாங்குபல குறைகளையுந் தவிர்த்தருளுந் தண்ணியனை, (௭௫௩)

பின்னமகல் செங்கோலைப் பிடித்தரசு புரிதருவான்
மன்னவனுக் குறுதிதர வரும்ராச வமைச்சினனைச்
சின்னமக றென்னிலங்கைத் தேசவதி பதிதனக்கு
மின்னவல விதுவெனச்சொல் லிரகசிய மந்திரியை, (௭௫௪)

தென்னிலங்கைக் கண்போலச் சிவாலயத்துத் திருப்பணியும்
பன்னியயாழ்ப் பாணமகள் பண்ணுதவப் பயன்போல
மன்னியவான் மகார்களுக்கும் வாய்ந்தவிளம் பெதும்பையர்க்குந்
தன்னிகரில் விதாலயங்க டாபனஞ்செய் தருமினனை, (௭௫௫)

தொல்லிலங்கை தனிற்கலகந் தோன்றியழி வுற்றிடுநா
ளெல்லிலங்கு மிங்கிலந்துக் கேகியமைச் சனுக்குரைத்தே
புல்லிலங்கு மதிபனையு மதிமயங்க மாற்றுவித்தும்
வல்லிலங்கு சிறைமீட்டும் வைத்ததனித் திறலினனை, (௭௫௬)

செந்தூரின் விழாக்களென்றுஞ் சிறப்பாக நடக்கவைத்துங்
கொந்தூருஞ் சிதம்பரத்தைக் கோன்கரத்துக் கொடாதொழித்து
நந்தூரு மறைக்காட்டு நவில்வழக்கைத் தீர்த்துமென்று
மிந்தூருஞ் சடைமௌலி யினிதருளும் பேற்றினனே, (எருஎ)

மாற்றுயர்ந்து மாசகலு மாமணிக்கு மேலுமணி
யேற்றுமது போலுமென்றே யாருமறிந் ததுவேனுந்
தோற்றுமல கோர்மருளாய்த் தொடர்ந்தாசி நாமமின்னுஞ்
சாற்றுநயிற் பட்டமுதற் றயங்குபட்டச் சிறப்பினனே, (எருஅ)

தென்கலையை வடகலையைத் தேயமுற்றும் பரந்துவரு
மன்கலையை யின்னுமிவண் மதித்தபல பாடைகளி
னன்கலையை நனியாய்ந்து நாவலரைப் பாவலரை
முன்கலையைக் கற்றவரை முழுதோம்பு மறிவினனே, (எருகூ)

முத்திசைக்குந் தாரகல மூவருளுந் தான்சிறந்து
நத்திசைக்கு மணிபோல நடுவிலுறு நாயகனே
யித்திசைக்கு மத்திசைக்கு மென்னும மேலோர்படித்தா
யெத்திசைக்கும் பேர்நிறுவி யிடும்ராம நாதமன்னே, (எகூ0)

வேறு

இக்குநா மழைப்பே மென்று யாவரு மொருங்கு கூடிப்
பங்குதா மெடுத்துப் பாங்கர்ப் பட்டணந் தோறுந் தோறுங்
கொங்குலா மாலைப் பந்தர் குலவுமா றிடக்கொண் டாட
வெங்குமா யாங்காங் காக விரும்பொரு டிரட்டி னரே. (எகூக)

ஆற்றவு மருள்வைத் தெம்பா லங்குதாம் வருதல் வேண்டு
மாற்றமென் னெமக்கு மேலா மகிமையைத் தருதல் வேண்டும்
போற்றவே யிருக்குஞ் செல்வப் புரங்களைப் பார்த்தல் வேண்டுஞ்
சாற்றநாம் போதா தென்னத் தாழ்ந்துவிண் ணப்பஞ் செய்தார். (எகூஉ)

முந்தவும் பலகா லாக முன்னுறீ வேண்ட லாலுந்
தந்ததாய் நாட்டி னோர்க்குத் தனித்துணை யாத லாலு
மந்தநாட் டணிகள் காணு மவாவுமொன் றிருத்த லாலுஞ்
சிந்தைமேல் ராம நாதச் செம்மலு மதற்கி சைந்தே, (எகூங)

ஈருடற் குயிரொன் றேபோ லிபைந்தநற் றுணையாய் மேவு
நேருட னிலாத பத்தி நிறைகுணந் தேசு ஞானம்
பாருடன் வந்து தோன்றும் பத்தினித் தெய்வத் தோடுஞ்
சீருடன் சார்ந்த மேய செல்வமா மகளுந் தானும், (எ௬௪)

எண்ணிய விருபா னைந்தி லெய்துபங் குனிநற் றிங்க
ணண்ணிய சுபமா தத்தி னலங்கொள்யாழ்ப் பாண நின்றுங்
கண்ணிய மாகச் சென்று கவின்பலாய் நாட்டி னுள்ளோர்
பண்ணியதருமம்வாய்ப்பப் பயணமென்றெழுந்துவந்தே, (எ௬௫)

நலந்தரும் ராம நாத நரேந்திரன் பயண மென்றே
சலந்தரு கலமேல் வந்து தானிவ ணிவர்ந்த செய்தி
நிலந்தரு கதிரோன் றோற்ற நெடுங்கதிர் பரந்திட் டாங்கே
புலந்தருமலாய்நாடெங்கும்பொள்ளெனத்தெரிந்ததன்றே. (எ௬௬)

நல்லவர் வரவு நாடி நயந்துகொண் டாடா ருண்டோ
வல்லவ ரிலாமற் செய்த வையனிங் கெழுந்த மாற்றம்
வல்லவ ராக வாங்கே வதிந்தயாழ்ப் பாணத் தார்க
ளெல்லவர் தமக்கு மற்றை யெவர்க்குமே களிப்புத் தந்த. (எ௬எ)

தேசமே சமயஞ் சாதி தேர்கலை யபிமா னத்தி
னேசமே யாகி யென்று நிலவுயாழ்ப் பாணத் தாரிற்
பாசமே லான தக்கோர் பலப்பல நகர நின்றும்
வாசமே லளிக ளென்ன வரல்கொளச் சிங்கை வந்தார். (எ௬௮)

சேர்தனை யழைக்க நின்ற சிறந்தபட் டணங்க டம்மை
யேர்தனை யியற்றிச் சாகை யிடங்களு மமையச் செய்தே
சீர்தனை யுடைய சிங்கைத் திருநகர் மிகக்கோ டித்து
நேர்தனைநோக்கியாருநெடுந்துறைமுகத்துமொய்த்தார். (எ௬௯)

தோரண வகைகள் போர்க்கித் துறைமுக மறையத் தூர்த்தே
யேரண வுறுந்தார் வாச மேய்ந்தபன் னீர்கைக் கொண்டு
பூரண மாக யாரும் புவியினற் கருமங் கட்குக்
காரண மான வையன் கவின்முகங் காண வுற்றார். (எஎ0)

இன்றுவந் திடுங்கொ லென்று மின்னமு மொருநாட் பிந்தச்
சென்றுவந் திடுங்கொ லென்றுந் தினந்தினம் வரவு காத்து
நன்றுவந் திருந்த மேலோர் நாடினர் குறித்து நின்ற
வன்றுவந் துயர்ந்த கப்ப லணைந்தது துறைமு கத்தில். (எஎக)

துன்றிடத் தவஞ்செய் வார்க்குத் தோற்றுதந் தெய்வ மாகச்
சென்றிடக் கலத்து ளெங்கள் சேர்ராம நாத மன்னன்
நின்றிடக் கண்ட யாரு நிறைமது வுண்டார் கொல்லோ
வென்றிடக் குதூக லித்தே யெதிர்வர வேற்ப தானார். (எஎஉ)

தூரியத் துழனி யோங்கத் துவசங்க ளெழுந்து துள்ள
நேரிய வாசி பொங்க நிலவுபூ மழைவான் றூர்ப்பப்
பாரிய புதல்வி யோடும் பத்தினி யணங்கி னோடுஞ்
சீரிய ராம நாதச் செம்மலுங் கரைக்கண் வந்தான். (எஎங)

தரைதனி லெவர்க்கு மில்லாத் தருமத்தைத் தனத்தை மேலா
முரைதனி னடங்காச் சீரை யுயர்கலை யறிவைப் பெற்றே
நிரைதனி னமைச்சா யென்று நீடிய ராம நாதன்
கரைதனி னிழிந்து யார்க்குங் காட்சியுங் களிப்பு மீந்தான். (எஎச)

பல்வகைச் சமயஞ் சாதிப் பாங்கினர் மேன்மை சான்ற
நல்வகைத் தான யாரு நயந்துகை கொடுத்து வாசச்
சொல்வகைத் தான மாலை சூட்டினர் தேர்மேற் கொண்டே
தொல்வகைப்பார்த்திபற்காய்த்துலங்குமாளிகையிற்சேர்த்தார். ()

பொருந்துபார் கங்க ளார்ந்த போனக மருந்திச் சற்றே
யிருந்துப சாரம் பேசி யின்றுயில் பொருந்திப் பின்னர்
திருந்துசீர் மலிந்த சிங்கைத் தேசாதி பதியுந் தானும்
பெருந்துரைத் தனமு மற்றும் பேசின ருவகை கூர்ந்தார். (எஎகூ)

தேனருந் துறநேர் வண்டிற் சிறந்தயாழ்ப் பாணத் தோருஞ்
சீனருந் தலைமை பெற்ற சிங்கையின் மலாயர் தாமுஞ்
சோனரு மாங்கி லேயத் துரைகளு மொழிந்தோ ரான
வேனரும் ராம நாத வேந்தலை வந்து மொய்த்தார். (எஎஎ)

வேறு

வந்தவர்க டமையிருத்தி வர்க்கமுதந் தெவிட்டாமன்
முந்தவவர் தம்முடனே முகமனுரைத் திருந்தளவிற்
செந்தமிழ்க் காமுபன்னி யாசமிவண் செய்கவென
விந்தையுள யாழ்ப்பாணத் தவர்தாழ்ந்து வேண்டியன்றே, (எஎஅ)

சீரினருஞ் சிங்கைநகர்ச் சிறந்தசபை யணிதிருத்திப்
பாரினருங் கலையினரும் பாங்கினரு மல்லாம
னேரினருஞ் சேவைகளி னிற்பவரும் பல்வகுப்பாம்
பேரினரு மவ்வமையம் பெருந்திரளாய்க் குழுமியுற, (எஎகூ)

மன்னவனே மந்திரியோ வயங்கியபொன் னாக்கினனென்
றன்னவனே யுண்மையுள வத்துவித முணர்ஞான
முன்னவனே வென்றவையோர் முன்னியதி சயித்திருப்ப
நன்னவனே யெனும்ராம நாதவண்ண லச்சமயம், (எஅ0)

சுதியுடைய நாகசுரந் தோர்க்கருவி யெழுந்திசைக்க
மதியுடைய யாழ்ப்பாண மக்களய லாகவரத்
துதியுடைய பாரிமக டொடர்ந்துபல மாதருடன்
றதியுடைய னாகவந்து சபைகளிக்க வைகினனால். (எஅக)

செய்யமறைப் பொருளமைந்த தேவார மோதியபின்
னையனவ னெழுந்திருந்தே யவைபொலிய மதிப்பருளித்
துய்யவரும் பொருட்சுவையுஞ் சொற்சுவையுஞ் சுகங்கொடுக்கச்
சய்யமுகி னேருபன்னி யாசமழை தான்பொழிந்தான். (எஅ௨)

பொன்பூத்த சடைமவுலிப் புண்ணியனார் மான்மியமுங்
கொன்பூத்த சைவமக்கள் கொள்கைகளும் பத்திகளும்
தென்பூத்த யாழ்ப்பாணத் தேசமுளோர் சீர்த்திகளும்
பின்பூத்த சிங்கைநகர்ப் பெருமைகளும் பேசினனே. (எஅ௩)

செந்தமிழ மிடையிடையே யாங்கிலமுந் தெரிந்தாய்ந்து
பந்தமுள தேனினுடன் பாலுமெனப் பேசியபின்
வந்தபல வரிசையுடன் மாண்பினர்கள் பரங்காகச்
சுந்தமுள தன்சாலைத் தனிமாளி யணைந்தனனே. (எஅ௪)

திருவுலவுஞ் சிங்கையுள் சித்திரமார் மணைகளையுந்
தெருவுலவு மணிகளையுந் தெரிந்ததன்மேற் சினருள்ளூ
மருவுலவுந் தனபதிகண் மந்திரிக ளேத்தெடுக்க
வுருவுலவுஞ் சிமானங் குற்றனனு லைந்துதினம். (எஅரு)

வேறு

நாவைமேற் கொண்டு மாற்றார் நலிந்திடா வகைமைத் தாகத்
தேவைமேற் கொண்டு நித்தந் திருந்திட விருந்து பேணிச்
சேவைமேற் கொண்டு தாந்தாஞ் சேர்நகர் தோறு மெங்கள்
கோவைமேற்கொண்டுதஞ்சீர்குலவுறல்வேண்டுமென்றே,(எஅசு)

சுலாவுறு புகைத்தேர்த் தானஞ் சுற்றிட மணிகள் செய்து
முலாவுறு வீதி முற்று முயர்கொடி துலங்க விட்டுங்
குலாவுறு சாகை மற்றுங் குறைவற வமைத்துக் கொண்டு
நிலாவுறுசிறம்பானென்னுநெடுநகர்க்கழைத்துச்சென்றார்.(எஅஎ)

தடையிடை யிலாம லோடுந் தழற்புகை யிரத நிற்கு
நடையிடை வந்த வந்த நாடுள தானந் தோறு
மிடையிடை வருகை நோக்கி யேற்றபாழ்ப் பாணத் தோர்கள்
புடையிடை மலர்கடூர்த்தே புண்ணிய னோடுஞ் சென்றார்.(எஅஅ)

ஏரியல் ராம நாத னெய்துமத் தேர்வந் தெய்தத்
தூரிய மொலிக்க வாசித் துழனிபூ மாரி பொங்கச்
சீரியர் தொடையல் சூட்டச் செவ்விதி னிழிந்து யார்க்கு
நேரிய வினிமை கூறி நிலவுதன் சாகை புக்கான். (எஅகூ)

புக்கபி னமுத மொக்கும் போனக மருந்தி யாங்குத்
தக்கவ ராகித் தன்பாற் றண்ணளி யோடும் வந்து
தொக்கவ ருவகை கூரத் தொன்மையோ டளவ ளாவி
மிக்கநற் சுகசே மங்கள் வினவியே யமர்ந்தா னையன். (எகூ0)

புவியுடைத் தாகி நிற்கப் புகழொன்றும் புலவ ராற்றுங்
கவியுடைத் தலைவ னாகக் கதித்தசேர் ராம நாத
வவியுடைத் தேவின் வாக்கா மமுதநாஞ் சமய மின்றே
செவியுடைத் தான பேறு சித்திக்க வுண்ப மென்றே, (எகூக)

எய்திட லெவர்க்கு மாகா தோர்பெறச் சபைகோ டித்தே
யுய்திட லெமக்கே யாக வுத்தம வுபன்னி யாசஞ்
செய்திடல் வேண்டு மென்னச் சிந்தைநேர்ந் தவனோர் மாரி
பெய்திடலென்னத்தானேபிரசங்கமகிழ்ந்துசெய்தான். (எகூஉ)

இன்னநன் னகரத் துள்ள வெழில்வள நோக்கி யெங்கண்
மன்னவ னமர்ந்தா னாக வாய்ந்தவிம் மலாய்நாட் டிற்கே
யுன்னவுற் றிலங்குஞ் செல்வத் துபநகர் குவாலா லம்பூர்
சின்னயாழ்ப் பாண மென்றுஞ் செப்புவ ரிதனைத் தானே. (எகூ௩)

பொன்னகர் கொல்லோ கஞ்சப் பூமக ணகரங் கொல்லோ
வெந்நக ரீது கொல்லென் றெண்ணவே யிலங்கித் தோன்று
மிந்நக ரிடங்க டோறு மிருந்தயாழ்ப் பாணத் தோர்கண்
முன்னக ரெதுவென் றுன்ன முழுவது மலங்க ரித்தே, (எகூச)

கோவலர் நெறிக்கு நாதன் குறைவிலாத் தனத்தி னாதன்
றேவல ரருட்கு நாதன் றேர்ந்தநூற் கலைக ணாதன்
பாவலர் துதிக்கு நாதன் பாரிநேர் கொடையி னாதன்
நாவலர் ராம நாத னானையே காட்சி யென்ன, (எகூ௫)

தேவரு மதிக்குந் தூமத் தேர்வந்து தரிக்குந் தானம்
பூவரு மாலை யாலும் பொற்புடைக் கொடிக ளாலுங்
காவரு கதலி பூகங் கவின்றரு நிரைக ளாலு
மேவரு மொருங்கு கூடி யெழின்மிகச் செய்த பின்னர், (எகூ௬)

மானநீ ருடைய நாதன் வதிந்துநீ ராடு தற்கு
மானநீ ரான வுண்டி யமைதர வருந்து தற்கு
மேனநீ ராகப் பள்ளி மேவியே துயில்வ தற்கும்
வானநீ ரமைந்த சாலை வாய்ப்புற வெடுத்து மேலும், (எகூ௭)

தேர்வருந் தான நின்றுஞ் சிறந்தமா ளிகைவ ரைக்கு
நேர்வரும் வீதி யார நெடுங்கொடி விதானம் போக்கிப்
பேர்வரும் ராம நாதப் பெருந்தகை வருகை நோக்கி
யேர்வருஞ் சிலரை யாங்கே யேவின ரழைக்க வென்றே, (எகூ௮)

வேறு

ஈங்குவரு மவர்களுட னிருந்தவருங் களிசிறந்தே
யோங்குபெருஞ் சீருடைய வுத்தமனோ டொருங்களவிப்
பாங்குவரு மலாய்நாட்டுப் பண்புகளு மேனவையு
மாங்குவகை யாரநகை யாடியுரைத் தமரளவில், (எகூகூ)

ஆண்டுநம துயர்நாட்டை யணிபடுத்து பதிபோல
வீண்டுநமக் குபர்வுதா வெய்துமைய வுளத்தில்ன்பு
பூண்டுநமக் கர்கவினிக் குவாலாலம் பூர்க்குவர
வேண்டுநம தன்பாரக் கொண்டாட வேண்டினமே. (அ00)

என்றுவரு மவர்வேண்ட வின்னுமுள்ளோர் தகவேண்ட
நன்றுமது சிந்தனையே நமக்குமென்று பெருந்தகைதான்
றுன்றுமவர் பாங்காகத் தொடர்ந்தபுகைத் தேரினிடைக்
குன்றுவள நாடுகண்டு குவாலாலம் பூர்குறுக, (அ0க)

வேறு

கதிரவ னுதயங் கண்ட கமலம்போன் முகம லர்ந்தே
யெதிரவந் துற்ற மேலோ ரிரதநின் றிழியச் செய்யர்
வுதிரமென் பூக்க டுவீ யோங்குபே ராசி கூறி
யதிரவாச் சியங்க ளாங்கே யாசனத் தமர வைத்தார். (அ0உ)

பத்தினி யாரும் பெற்ற பதுமையொத் திலங்கு கின்ற
சித்திர மகளும் வைகச் செம்மலார் நடுவண் வைக
மித்திர ரான நல்லோர் மென்மலர்த் தெரியல் சூட்டிப்
பத்திரம் படித்து வாசம் படுபனி நீருந் தூர்த்தார். (அ0௩)

ஈகையிற் குணத்தின் மிக்க வெழில்கொள்யாழ்ப் பாணத் தோருக்
கோகையி லுயர்ந்த வண்ண லுவந்துப சாரங் கூறி
யாகையி லமரர்க் காக வமைத்தகொல் லெனவ மைத்த
சாகையி லழைத்துப் போகித் தகவுப சரித்தல் செய்தார். (அ0ச)

நால்வகைச் சுவைக ளார்று நாடுகி னமரா ருண்டி
போல்வகைத் தான யாவும் பொருந்தவுண் டின்னு மையன்
பால்வகைத் தாகி வந்த பலருமே லருந்திப் பின்ன
ரேல்வகைத் தாக வைகி யின்மொழி யுவந்து கேட்டார். (அ0௫)

பாலுண்டு ததியு முண்டு பழமுண்டு தேனு முண்டு
சேலுண்டு நாரையுண்டு செய்யலுண் டோடு மாற்றங்
காலுண்டு வளங்க ளுண்டு காருண்டு கிரிக ளுண்டு
மாலுண்டு மலாய நாடு மறப்பதற் கரிய தென்றான். (அ0சு)

நாட்டமா யினைய நம்பி நாட்டுள சீர்கள் கூறக்
கேட்டவ னமர்ந்த செல்வங் கிளர்புகழ் பொறுமை யீகை
கோட்டமின் மனமென் றின்ன குலவுயாழ்ப் பாணத் தோர்கள்
வேட்டநா டீது போல வேறிலை யென்று சொல்வார். (அ0எ)

ஆக்கமுங் கலையு நேரு மறங்களு மருளுந் தேசு
மூக்கமு மமைச்சுஞ் சீரு முயர்ச்சியும் பொறையும் ராச
நோக்கமு மொழிபு மின்பு நுவலுங்கா லுலகி லெல்லாத்
தாக்கமு மமைய வெங்க டவத்தினாற் பிறந்த கோவே, (அ0அ)

ஆங்கில ராச்சி யத்தி லவிருந்தா ரகையே யன்றி
யீங்குள வெங்களுக்கோ ரிரவியு மான வையா
வோங்குமோ ருபன்னி யாச முவந்துநாங் கேட்கப் பண்ணுட்
டேங்குபேராசையுள்ளோஞ்செய்திடல்வேண்டுமென்றே,(அ0கூ)

உள்ளிய தெரிந்த பின்ன ருவருபர் சபைய தொன்றை
யொள்ளிய விதானத் தாலு மொளிரிணர்க் கண்ணி யாலு
நள்ளிய லாக மேவி நளிருமா சனத்தி னாலுந்
தெள்ளிய வணிகள் சேர்த்தித் திகழுமா றலங்க ரித்தார். (அக0)

மேலைநாட் டறிவிற் சான்றோர் விளங்குசெந் தமிழிற் சான்றோர்
சாலுமேற் சேவை யாளர் தளர்விலா தீட்டு செல்வ
ராலவே திருந்த மேலா மணிநகர் நாட்டி னுள்ளோ
ரேலவே வந்து வந்து யாவரு மிடமின் றுற்றார். (அகக)

பேறெனப் பிறந்த செம்மல் பிறந்தபே றெடுத்த தர்ம
னூறெனப் பெருகுஞ் செல்வ னடைந்தவர்க் கருளுஞ் செய்யன்
மாறென வருந ரில்லா மாண்பினன் ராம நாத
னேறென வவைக்கண் டோன்றி விருந்திவர் விழிகட் கீந்தான். (அகஉ)

இருந்தவ ரெழுந்து தாழ வெழில்கொள்ளா சனமேல் வைகித்
திருந்தவப் பண்ணின் வல்லோர் திருப்பதி கங்க ளோதப்
பெருந்தவம் விளங்கு மையன் பேரவைக் கமைவு செப்பிப்
பொருந்தநற் றத்து வங்கள் புகல்பொருள் பேசி னானே. (அகங)

திருத்தமு மங்கி லத்திற் சேர்ந்தசெந் தமிழின் வாய்ந்த
பொருத்தமு மாக வாயும் புலன்களைந் தாரத் தக்க
வருத்தமும் வாக்குங் காட்டி யையமு மயலுந் தீர
வருத்தமு நோக்கா தாங்கே வழங்கினன் சொல்லின் மாரி. (அகச)

அவ்வயி னங்கி லர்க்கு ளாய்ந்தபண் டிதர்க டாமுஞ்
செவ்விதிற் றமிழைக் கற்றுச் சித்திபெற் றவர்க டாமு
மெவ்வயி னேனு மெய்தா வினியசொற் பொருண யங்க
டிவ்விய மாகக் கேட்டே சிறந்ததெம் முளங்க ளென்றார். (அகரு)

இந்தநல் லறிஞர் வேண்ட வின்னுங்கோ லாலம் பூர்க்கண்
செந்திலென் றுரைக்குந் தானஞ் சேர்ந்தமர் தண்ட பாணிக்
கந்தவே ளால யத்திற் கவின்றிரு மடத்திற் பின்னும்
வந்தமா ஞானி தாயு மானர்சித் தாந்தஞ் சொன்னான். (அகசு)

மருவினை மலரா ணேக்கும் வடிவுள ராம நாத
னருவினை யதைநா மத்தை யறிந்ததே யன்றிக் காணு
ருருவினை வாக்கை யிங்கே யுழுவலன் பார நேரிற்
றிருவினை யுடைய மன்றிற் றிரண்டுவந் துவந்து கண்டார். (அகஎ)

இந்துகண் டிளகுங் கன்னே ரிருதயத் துடனே நோக்கி
முந்துகண் டெவிட்டா துற்ற முதமுள ராகத் தம்மை
வந்துகண் டவர்கள் யார்க்கும் வகைவகை முகமன் கூறிக்
கொந்துகண் ணிறையுந்தாரான் குலவுதன்சாலைபுக்கான். (அகஅ)

சுற்றுள சுற்ற மென்னச் சூழ்ந்தயாழ்ப் பாணத் தார்க்கா
மற்றுள நகரங் கட்கும் வந்துவந் தழையா நிற்பக்
கற்றுள கவிஞர்க் குற்ற கலிகடிந் தென்று நீங்கப்
பற்றுள ராம நாதப் பார்த்திப னதற்கு நேர்ந்தான். (அகசு)

பாங்குபான் மரத்தோட் டங்கள் படர்ந்தசிர்க் கிள்ளா னீப்போ
தேங்குபேர்க் கோலக் கஞ்சாச் சேயமர் ரைப்பீங் கின்னுந்
தாங்குநீர் மரக்க லங்கள் சார்துறைப் பிஞுங்கு மான
வோங்குபார் தவந்தா னென்ன வோதுபட் டணங்கள் சென்றே, (அ௨௦)

மேலுறு நகர்க டோறு மேதையோ ருபக ரிப்பிற்
சாலுறு தன்மைத் தாகத் தகத்தக வுபக ரிக்கக்
கோலுறு காத்து வேந்தர் கோநிகர் ராம நாதன்
மாலுறு மவாவு தீர வவர்க்குத்தன் காட்சி யீந்தான். (அ௨க)

சொற்றவவ் வாறே யாகச் சோபித்த வவைக டோறு
மற்றவர் பணிந்து வேண்ட மன்னிய பாடை யேழு
கற்றவன் ராம நாதன் கருத்துடன் செவிகட் கின்பம்
பெற்றன மென்று சொல்லப் பிரசங்க வமுதந் தந்தான். (அ௨௨)

இன்னவ ரிந்த விந்த விடங்களி னனுச ரிக்கப்
பன்னருஞ் சிறப்பி னோடும் பரிவொடுந் தங்கித் தங்கி
மன்னவன் செழிப்புற் றோங்கும் வளநகர் நாடு பாராப்
பின்னவன் றுறைகொள் வேலைப் பிஞுங்கினிற் றரிக்கு மெல்லை,(அ௨௩)

பொருளுறு நாட்டு நின்றும் புறப்பட ராம நாத
னருளுறு முளத்தி னூடே யானநற் குறிப்புத் தோன்றச்
சுருளுறு மலைசேர் சிங்கைத் துறைபிருந் துயர்ந்த கப்ப
றெருளுறு மிலங்கைக் கேகுஞ் செய்தியுந் தெரிய வந்த. (அ௨௪)

சங்குறை யிலங்கைக் கப்ப ரூன்செலு நாளு மாகக்
கொங்குறை காவு சூழுங் குவாலாலம் பூர்க்கு வந்தே
கங்குறை சிங்கைக் கந்தக் கடிகையிற் செல்வ னென்றே
யங்குறை பவர்கட் கெல்லா மன்புரை பகர்வ தானுன். (அ௨௫)

வயங்குயாழ்ப் பாணத் தோர்கள் வாழ்த்தியே குழுமிப் பற்பல்
லியங்களுந் தொனிக்கத் தூம விரதமே லிவரச் செய்தே
தயங்குபூ மாரி பெய்து தாங்களுந் துணையாய்ச் செல்வ
மயங்குகோ லாலம் பூர்க்கு வழிக்கொண்டு வருவ தானூர். (அ௨௬)

### வேறு

சிங்கைநகர் நாடியெங்கள் சேர்ராம நாதனென்று
துங்கமுடன் வரவவற்குத் தூமத்தேர் வந்துவந்து
தங்குமிட மிடந்தொறுந்தாந் தண்மலர்வாச் சியங்களுடன்
பொங்குபல வரிசையுடன் போற்றினர்கள் வழியனுப்ப, (அஉஎ)

சென்றுவருங் கனலாவித் தேர்வரலும் படிந்துமுகில்
குன்றுதொறுங் கண்ணுறங்குங் குவாலாலம் பூர்க்கணுள
துன்றுபெருங் குணஞ்சாலுந் தூயபவ ராசைவிஞ்ச
நின்றுநறு மலர்தூவி நீளிரதத் திழியவைத்தே, (அஉஅ)

அந்தநல போனகங்க ளானவெலாந் தாமருத்தி
வந்தவழி தூரமுள வயாவிளைப்புத் தீர்த்ததற்பி
னிந்தவிடத் திருநாழி யிருந்துபன்னி யாசமொன்று
தந்ததன்மேற் செல்கவென்றுந் தனியிரதம் வைப்பமென்றும், (அஉகூ)

சலமேகும் பொழுதினுமோர் கடிகையிவண் டாழாமற்
றலமேகுந் தனியிரதஞ் சாருமென்று மவர்வேண்ட
நலமேவுஞ் சேர்ராம நாதவர சோமறுக்குங்
குலமேவு மவர்தமுடன் கொண்டாடிக் கலந்திருந்தே, (அங0)

உத்தமர்க ளுளங்களிக்க வோதுபன்னி யாசமவண்
புத்தமுத மாகுமெனப் புலங்களுதன் மயமாகச்
சுத்தமுற வெடுத்தெடுத்துச் சுலாவுகடற் றிரையெழல்போல்
வித்தகமாய்த்தெளிவுபெறவேட்கையளவாயுரைத்தான். (அஙக)

பின்னுமவன் றனைச்சிறிதும் பிரியவொருப் பட்டிலராய்
மன்னுமணி யாசனமேல் வைத்துநறு நீர்தூவி
முன்னுமலர்த் தொடையலுமம் மூவருக்குஞ் சூட்டியின்னுந்
துன்னுமன மார்ந்தபல துதிகளையுஞ் சாற்றியங்கே, (அஙஉ)

நீரேறி வளமேறி நிலவுமலாய் நாட்டுவண்மைச்
சீரேறி யுள்ளவருந் திருவேறி மல்குபுகழ்ப்
பேரேறி யேரேறும் பெருந்தகையா ருடன்றனிமைத்
தேரேறி யெல்லவருஞ் சிங்கைபெனு நகரேற, (அஙங)

வேறு

சிங்கைமேல் வருகை காத்துச் சேர்ந்தவ ணின்ற மேலோர்
செங்கைமேன் மலர்க டூவித் தேரினின் றிழிந்த பின்னர்
பங்கைமே வுமைக்கு நல்கும் பரமனு ரருளை முன்னித்
தங்கைமே லெடுத்து வாழ்த்திச் சாகைமேற் கொடுசென் றுய்த்தார். (௮௩௪)

தக்கவ ரமைத்த செல்வந் தகுமுண வருந்தி மேலுந்
தொக்கவ ரவரு முண்டே தூயவாய் பூச றுத்து
மிக்கமா ளிகைக்கண் ணுக விலாசமா யமரா நிற்ப
வக்கண மிலங்கைக் கப்ப லாயத்த மான தன்றே. (௮௩௫)

நேரமே யாக நின்ற நெடுந்தகை யினரு மற்றை
யீரமே ளுட்டி ஞேரு மேனையோர் தாமுங் கூட
வாரமே விட்டு வாசத் தரும்பனி நீருந் தூர்த்து
வாரமே லுடைய ராகி மங்கலம் புகல்வ தானார். (௮௩௬)

சூழுறத் திரைக டேங்குந் தொடுகட லிலங்கைப் பாரந்
தோழுறச் சுமந்து காக்குந் தொன்மதி யமைச்சர் கோவே
தாழுற விடாம லெம்மைத் தந்தயாழ்ப் பாண நாடு
வாழுற நலங்கள் செய்து வைத்தநந் தருமத் தேவே, (௮௩௭)

ஆலுறு மரசி கைகி ழாகவே முறையை நல்கி
மேலுறு மொருக ரத்து மேன்மையோ மெம்மைச் செல்வஞ்
சாலுறு மிந்த நாட்டுஞ் சார்ந்தமே லுயர்த்தி வைத்த
மாலுறு நன்றி யொன்றை மறக்கல மென்று மென்றார். (௮௩௮)

வானநேர் நோக்கும் வேளாண் மக்களி னவாவி னீங்கள்
கானவாஞ் செல்வ மோங்கிக் கவின்மலாய் நாடு காட்ட
மானமே விட்டே யென்னை வரவழைத் துபச ரித்த
லானபேர் நன்றி நானு மயர்க்கல னென்று மென்றான். (௮௩௯)

நன்னல மொழிக ளிங்ங னவின்றெருங் களவ ளாவிப்
பின்னய வாசி கூறிப் பெருந்தகை தனைய ழைத்துத்
தொன்னய மான தக்கோர் தொடர்ந்துநாற் புறமுஞ் சூழப்
பன்னய மலிந்த வீதி படர்ந்துவான் றுறைக்கண் வந்தார். (௮௪௦)

ஆங்குமே ணட்டி னெரு மம்மலாய் நாட்டி னீருந்
தேங்குபே ரான செல்வச் சீனரு மான மேலோ
ரோங்குறு வுவகை பொங்க வொல்லையி லெங்க ளையன்
பாங்குநே ராக வுற்றே பணிவுடன் கைகொ டுத்தார், (அசக)

மேலுமிப் புகைகொண் டேகும் விரைமரக் கலத்தின் மீதாய்ச்
சாலுமி தென்ன வந்தே தந்துகை பணிவுஞ் செப்பி
மாலுமி வருகை யேற்ப வள்ளலா ரமர்ந்து வைக
வேலுமி னுயிரை மானு மேந்தறன் பிரிவை யாற்றார், (அசஉ)

உன்னவ வுலகுக் கெல்லா முயருப காரி யாகிப்
பன்னக மணிந்த மோலிப் பரமனின் னருளே காக்க
நன்னய மான யாவு நயந்தனை நெடிது கால
மன்னவ வாழ்கென் றுசீர் வதித்தனு மதியின் மீண்டார். (அசரு)

சலமிசை யெழுங்கை தந்து தாங்கியே செலுத்தச் செல்லுங்
கலமிசை ராமநாதக் கருணையா ரறிஞன் வந்து
புலமிசை விளைவு சாலப் பொலிந்துறு மிலங்கை யென்னுந்
தலமிசை யெவர்க்கு மின்பந் தந்தனன் காட்சி தந்தான், (அசச)

## ஸ்ரீமான் நடேசபிள்ளைக்கும்
## ஸ்ரீமதி சிவகாமசுந்தரிஅம்மாளுக்கும் விவாகப்பேறு

வேறு

பார்பரவ வருங்குரிசில் பார்த்திபருக் கொருவலக்க
ணேர்பரவ வருங்குணக்குன் றேத்துமரு ளறக்கடவுள்
சீர்பரவ வரும்பரிதி சேர்ராம நாதனிவண்
பேர்பரவ வீற்றிருந்து பெருவாழ்வு கூர்தருநாள், (அசரு)

ஓதுதவந் திரண்டுருவா யுதித்ததுகொல் லெனவுதித்தே
போதுதருந் திருநிகர்த்துப் பொறையறிவு குணஞ்சிறந்து
தீதுதவி ரிளையமகள் சிவகாம சுந்தரிப்பேர்
மாதுதனக் கானதொரு மணப்பருவம் வந்ததுவே, (அசசு)

வாய்ந்தமணப் பருவமதை மனத்தமைத்த வெங்களைய
ஞய்ந்தகலை யறிவடக்க மருளாண்மை பொறையொழுக்க
மேய்ந்தகுலங் குணங்தேசென் றெண்ணவரு மத்தனையும்
வேய்ந்தவரனொருவனைத்தான் வேண்டினனுயுற்றனனுல், (ஆசஎ)

காவிரிசூழ் வளநாட்டிற் கதித்திடுசெங் நெல்வளத்தாற்
பூவிரிநற் றண்டலையாற் பொலிந்தவரண் மனையழகா
ஞவிரியு முத்தமிழா னல்லவர்கள் வதிதரலாற்
ருவிரியு மொருநகரந் தஞ்சையெனுந் திருநகரம், (அசஅ)

துலங்குநக ரிற்கரசின் றொடர்புடையோ னமரசிங்கென்
றிலங்குமிவற் கொருபொழுதி னெய்தியவா பத்தினுக்காய்
நலங்குலவு மதிகபொரு ணல்கியிடர் தீர்த்துயர்ந்த
தலங்குலவவாழ்ந்துவருந்தனிக்குடியோர்வழித்தோன்றல், (அசகூ)

இருள்கொடுக்கு மிருநிலத்தே யெவரெவர்க்கு மினியதுபோன்
மருள்கொடுக்கு மின்னுமெரி வாய்நரகந் தான்கொடுக்கும்
பொருள்கொடுக்கும் பெரும்பேற்றிற் புலனடங்க யோகநின்றே
யருள்கொடுக்குஞ் சிவஞானி யருளபரா னந்தகுரு, (அரு௦)

தேடுசர போசிமகன் சிவாசிமகன் சரபோசி
கூடுமர சிவன்காலங் குருவிவற்குக் காலமதும்
நாடுபுக ழார்ராம நாதசிவ ஞானிதனக்
கீடுமிக யோகநிலை யீய்ந்தகுரு நாதனிவன், (அருக)

ஈனமுள ராமமண ரீடழிய வென்றுதனி
மானமுள ரேத்துசைவ மடதநிறுவி வருஞானப்
பானமுள ராகியசம் பந்தமுனி பரம்பரையாம்
ஞானமுள னிக்குருவே னவிலுவதென் குருத்துவமே, (அருஉ)

மாசுதவி ரிவன்மரபின் மருமாறுய் வருங்குரிசி
றேசுபெறு மாங்கிலத்திற் சித்திபல தானடைந்தோன்
பேசுதிற லுறும்ஞாய வகைகளினுற் பெருவழக்கை
யாசுதவிர்த்தெடுத்துரைத்தேயரிதுவென்றிபெறுந்திறலோன், (அருங)

சீலமிகப் பெருந்தமிழைத் தெவிட்டாமற் றேரறிஞன்
சாலவங்கத் தவனாகத் தஞ்சைநகர்ச் சங்கமிருந்
தேலவர சேர்பெறுவா னெடுத்துயர்த்தி வருந்தலைவன்
ஞாலநலம்புகன்றேத்தும்நடேசனெனத்தகும்பெயரோன், (அருச)

ஆவைநிகர் சாந்தமுளோ னனைவோரு மோர்ந்துகொளும் [குன்
பூவைநிகர் பெருங்குணத்தோன் பொங்குவெயில் வெப்பொழிக்
காவைநிகர் தண்ணளியோன் கருதுமிவன் வரனெனத்தான்
தேவைநிகர் செம்மலையே தெரிந்துளத்து ளமைத்ததன்மேல், (அருரு)

நிலமகடன் னிதியாக நிலவுதஞ்சை நகரநின்றிக்
குலமகனை வரவழைத்துக் கூடவைத்துச் சிலகாலம்
நலமகடன் குணங்களுட னுடியிவ ரமையுமென்றே
தலமகனற் களிசிறக்கத் தயங்குமணஞ் செயநினைந்தான், (அருசு)

ஒற்றரிட மணவோலை யூர்கடொறும் விடுத்துநல்லோர்
சொற்றசுப நாள்வகுத்துத் துலங்குபுக ழோனுரைக்க
நற்றலமென் றேராம நாதவித்தி யாலயத்துண்
முற்றமுற வாய்ந்துவல்லோர் மூடுபந்த ரிட்டனரால், (அருஎ)

வேறு

உள்ளுற விதானம் போக்கி யுயர்ந்தகால் களுக்கு வாய்ப்ப
வெள்ளுறை யிட்டு மேலும் விளங்குபன் னிறங்கள் சுற்றிக்
கள்ளுறு மாலை நாற்றிக் கதலியுங் கமுகு நாட்டி
வள்ளுற விடங்க டோறு மகரதோ ரணங்க ளிட்டே, (அருஅ)

தயங்குபூக் கம்ப லங்க டரையுற விரித்து விண்ணி
னியங்குசூ ரியனிற் சோதி யிலங்குதீ பங்க ளேற்றி
யுயங்குத லிலாமல் வைக வுத்தமர்க் கிடங்கள் கோலி
வயங்குமா றங்க ணுடி மணவறை யமைப வைத்தார், (அருகூ)

இன்னவா றுக யாவு மியற்றின ராக வாங்கட்
சொன்னநன் முகூர்த்த முன்னர்த் தோகையர் குழாமு மற்று
மன்னவா டவரு மெய்தி யவரவர்க் கிடங்க ளெங்கே
யென்னவே நாடிப் பந்த ரெள்ளிடற் கிடமின் றுற்றூர், (அசுo)

சீர்தகு மகளி ராலுஞ் சிறந்தவர் டவர்க ளாலு
நேர்தகு மணிக ளாலு நிலாவுகண் ணாடிக ளாலும்
பார்தகு முவமை யொன்றும் பகருதற் கரிதா யப்போர்
தேர்தகு மணஞ்சால் பந்த ரிந்திரச் சபைபோன் றுற்ற, (அ௱க)

வேறு

நாடு சீர்த்திசேர் ராம நாதவே
டேடு யாண்புடைத் தேவி யாரொடுங்
கூடு மச்சபை குறுகு வோர்க்கெலா
நீடு நல்லுரை நிகழ்த்தி னரோ, (அகூஉ)

கார்கொள் பேரிகை கதிப்புற் றார்த்தன
சீர்கொள் வீணையுந் திவவு யாழ்களு
மேர்கொள் சின்னமு மிசைத்துப் பொங்கின
தார்கொள் மத்தளந் தவிற முங்கின, (அகூங)

சீத நாண்மலர் தீர்த்தம் பத்திர
நாத மார்மணி நளிருந் தீபங்கள்
போத நீள்குசம் பொருந்தக் கொண்டவண்
வேத வந்தணர் மேவி வைகினர், (அகூச)

மார னேர்மண வாளன் மஞ்சன
மார வாடியே பட்டு மங்கியும்
பூர மானவுத் தரியம் பூண்டுபின்
ஞார மாதிய வணிகள் சாத்தியே, (அகூரு)

முந்து வாச்சிய முழங்க நண்பர்கை
தந்து சேர்ந்திடத் தாங்கு கோலமோ
டுந்த மாசபை யகம லர்ந்திட
வந்து சீர்மண வறையின் வைகினன், (அகூகூ)

வேறு

சொல்லிய முகூர்த்தமுந் தோற்ற வவ்வயின்
வல்லிய ரானவர் வண்ணஞ் செய்பவர்
மெல்லிய றனக்குநெய் விதங்கள் பூசியே
நல்லிய லாகவே நான மாட்டினர், (அகூஎ)

ஆட்டின ரீரமு மாற்றிக் கோதியே
கூட்டினர் கூந்தலைக் குடுமி சேர்த்திடாக்
காட்டினர் நறும்புகை கலவை பூசிப்பின்
தீட்டினர் நெற்றியிற் றிலகந் தன்னையும், (அசுஅ)

மட்டினை யிலாவிலை வயங்கும் கச்சினை
பிட்டினைத் தாமென வியம்ப லாகலா
முட்டினை நுசுப்புற மொய்கு ழற்கொரு
பட்டினை யுடுத்தினர் பண்செய் மாதரார், (அசுகூ)

வில்லணி கலன்களின் மிளிர்த லைக்கெனச்
சொல்லணி கழுத்தணி தூய கையணி
செல்லணி காலணி சேர்த்தி ஞர்கலை
நல்லணி யாமென நயந்த நங்கைக்கே, (அஎ0)

சொல்லுநல் லணிகளைத் துலங்க விட்டபின்
நல்லவர் பற்றினர் நடத்தி வந்திடப்
பல்லவப் பதங்களாற் படர்ந்து நாணுறீஇ
மெல்லவந் தவன்வலம் மேவி வைகினுள், (அஎக)

வேறு

அந்தநல் லமைதி தன்னி னவையுளோர் சான்றே யாக
நந்தலி லருள்சேர் ராம நாதனும் பாரி யாரும்
கந்தமார் குழலி யெங்கள் கன்னியைத் தழன்முன் னின்னே
தந்தனங் கொள்கவென்றே சாற்றிநீர்த் தாரை வார்த்தார், (அஎஉ)

சொல்லிய முகூர்த்த யாகத் தூரிய முழங்கப் பூமேல்
வல்லியென் றிலங்கி நின்ற மங்கல நாணை யேந்தன்
மெல்லியல் களத்திற் சேர்த்தி விரைகமழ் முடியி னுக்கு
நல்லிய லமைந்த முல்லை நறுந்தொடை சூட்டி ஞனே, (அஎந)

அந்தணர் கிரியை யாவு மாற்றினர் வளர்த்த செய்ய
முந்துறு மோமத் தீயை மும்முறை வலமாய்ச் சூழ
வந்தனர் வந்து தோகை வலதுகால் சிலையின் மீது
தந்துபின் வானிற் சாலி தரிசனஞ் செய்வித் தானல், (அஎச)

மஞ்சணீ ரறுகு நிம்பம் வாலரி கடுகு சோறு
விஞ்சநீ டிரியுஞ் சேர்த்து விளங்குதட் டேந்தி யாங்கே
கஞ்சமா னிருவ ரென்னக் கவின்கொள்பொற் றூவி மாத
ரஞ்சமே னெவந் தேநீ ராஞ்சன மெடுத்து நின்றார், (அஎரு)

இந்தநற் சடங்கு முற்ற விருந்தமங் கலஞ்சேர் மாந்தர்
வந்தகங் களிக்க நீங்கள் வையமே னெடிது காலம்
சந்ததிப் பேறு செல்வந் தழைக்கவே வாழ்க வென்னாக்
கந்தமா ரறுகும் பூவுங் கலந்தவக் கதமெ டுத்தார், (அஎசு)

நல்லமுக் கனியும் பாலு நறுஞ்சுவைத் தேனு மின்னுஞ்
சொல்லுசிற் றுணவு மாகத் துய்த்தபின் னிருவர் தாமும்
வல்லசேர் ராம நாத வள்ளலைப் பாரி யாரை
யொல்லுமாறெருங்கேபோற்றியோங்கியமகிழ்வுபூத்தார், (அஎஎ)

இன்னன மன்ற லெல்லா மியற்றியே முடிந்த பின்ன
ரன்னபே ரவையு ளோருக் கானபோ னகங்க ளார்த்தி
நன்னலச் சாந்தம் பன்னீர் நறியதாம் பூல நல்கிப்
பின்னவர் மனைகட் கேகப் பிரியநல் விடைக ளீந்தார், (அஎஅ)

சொல்லுநல் வினைதந் துய்க்கச் சுந்தர மாதுந் தானு
மொல்லுநற் போகந் துய்த்து மூடதீர்த் துவந்து மாரா
தல்லுநற் பகலுந் தாங்க ளாருயி ருடலு மொன்றாச்
செல்லுநல் லுலகங் கூறத் தேனொடு சுவைபோ லுற்றார், (அஎகூ)

உத்திசெய் யறிவு சான்ற வொண்டொடி தானுந் தானுஞ்
சித்திசெய் காலந் தோறுஞ் செபமனுட் டானஞ் செய்தே
பத்திசெய் பரார்த்த பூசை பண்ணுவர் கரண மூன்றுஞ்
சுத்திசெய்யிவரைக்காணிற் றொலையுமேபவங்கள்யாவும், (அஅ0)

தேற்றமா ரறிவு தன்னிற் சீர்மையிற் சாந்தந் தன்னிற்
றோற்றமா மழகு தன்னிற் றூய்மையிற் பொறையிற் பேசு
மாற்றமா மினிமை தன்னின் மற்றுள குணங்க டம்மி
னேற்றமா நடேச பிள்ளைக் கிலக்கிலை யெடுத்துப் பேச, (அஅக)

பொற்பர மேச்சு ரப்பேர் பொலிவிதா லயத்திக் கிந்தத்
தற்பம திலாத வேந்த றலைமையா சிரிய னாகி
யற்பக லறங்கள் செய்து மருமகப் பேறு பெற்று
நற்பமைந் தினிது வாழ நம்பனா ருள்சித் திக்கும், (௮௮௨)

## செந்தமிழிலக்கண வெளியீடு

கண்ணெனமுன் னமைந்தவைகள் கல்லார்க்கு முகத்திரண்டு
புண்ணெனவுங் கற்குமதும் புலமையுளோர் புகன்றபடி
யெண்ணெனவு மெழுத்தெனவு மிரண்டேனு மெழுத்ததுதான்
பண்ணென நூற் கழகுதரும் பான்மையினி லதிகமென்பர், (௮௮௩)

ஆற்றவரு நூறருதற் காங்கருவி யெனுமெழுத்தென் [ற்
றேற்றவரு மிலக்கணந்தா னெழுத்தொடுசொற் பொருளதன்மே
சாற்றவரும் யாப்பணியென் றைவகைத்தாந் தனித்தனியே
போற்றவரு மிவையாய்ந்து போதவுணர்ந் திடலரிதே, (௮௮௪)

தலக்கணுயர் பாடைமிகத் தயங்குறச்செய் காரணத்தா
லிலக்கணமென் றொருநாம மேற்றுவருங் கற்பவர்க்கு
வலக்கணிகர்த் துறுமனத்து மாசகலக் கற்றிடுத
லலக்கணறி வாளரலா லாரறிவா ரதன்பெருமை, (௮௮௫)

ஞானமதிற் றத்துவத்தின் ஞாயமுடன் காவியத்திற்
கானமதிற் கரைகடந்தே கவின்ராம நாதமகான்
வானமதிற் றிகடான வகைகளுக்கு ளோங்குபன்னூற்
றூனமதிற் சிறப்புடைய தானமிலை யென்றுணர்ந்தே, (௮௮௬)

கூறுபக வற்கீதை குறண்முதனான் கதிகாரத்
தேறுபல வுரைதெளிவா யெளிதெடுத்து விரித்ததுபோல்
வேறுபட விலக்கணத்துள் வேண்டுமெழுத் தோடுசொற்கு
மாறுபடா வகையெவரும் வருத்தமறக் கற்கவென்றே, (௮௮௭)

பன்னூலி னிதுசாலப் பயில்வதற்குச் சாலுமென
நன்னூலிற் சூத்திரங்க ளயந்துதழீக் கொண்டறிஞன்
பின்னூலிற் குதாரணமும் பேருரையும் புகுக்கிவைத்து
முன்னூலி னதிகமென மொழிபவெளி யிட்டனனே, (அஅஅ)

வேறு

அந்தநற் பொருளும் யாப்பு மணியுமென் றினைய மூன்றும்
பிந்தவே தருவா னுன்னிப் பிரித்திரண் டதிகா ரங்கள்
முந்தவே வெளியி டாக்க முயன்றிரு பானே ழாண்டிற்
செந்தமி ழிலக்க ணப்பேர் திகழவைத் துபக.ரித்தான், (அஅகூ)

## மதுரைச்செந்தமிழ்ச்சங்க உபன்னியாசம்

வேறு

நீரி னுலழி வுறுதலும் வழுதிநின் றிரங்குற நிமலன்
சீரி னேரணிப் பணிதனை விடுத்திடம் வகுத்திடத் திருத்தி
யாரி னேர்சடை யிருந்ததண் மதிதரு மதுரநல் லமுதம்
வாரி வீசியே தூய்மைசெய் திடுதலின் வருபெயர் மதுரை,(அகூ0)

துயங்கு சங்கமேற் புலவர்கள் வேண்டிடச் சோமசுந் தரனார்
வயங்கு நற்பொரு ணூலினை வரைந்தனன் றந்ததும் மதுரை
தயங்கு வைசியர் குலத்துய ருமனு முருத்திர சருமன்
மயங்கு நூலுரைப் புலவர்கள்கலகங்கடீர்த்ததும்மதுரை,(அகூக)

நீட்டு நூல்களை யாய்தரு புலவரை நேர்பெற நிறுத்துக்
காட்டு கின்றன பலகையொன் றிருப்பது கரைபொரு கடன்முன்
வீட்டு மென்றுதன் னகரிடை யெழுதலின் வெறுத்துடன் சலதி
மாட்டு வைகிடா வைகைமா நதியினை யுடையதும்மதுரை,(அகூஉ)

இன்ன தாகிய மதுரைமுன் னிருந்தமுச் சங்கமு மிலாமல்
அன்ன சீர்கொண்மூ வேந்தரு மவர்கடா மாதரித் திருந்த
சொன்ன நேரும் புலவருஞ் செந்தமி ழருமையுந் தொலைந்தே
பின்ன முற்றன வருவதை யினைநாட் பெரிதுளங் கருதி,(அகூங)

திதியு நோக்கலன் புகழெனக் கொடுத்துறுர். பார்க்கவ சேது
பதியு மின்னமுந் தக்கவ ராயினர் பலருநேர்ந் தொருங்கே
ததியுளோர் தனந் தொகுத்தனர் செந்தமிழ்ச் சங்கமொன் றமைத்தே
விதியு நூல்களு மாய்ந்தநற் புலவரை மேதக வமைத்தார், (அகூச)

துங்க மன்னனுஞ் சீருள வவர்களுந் தொடங்கிய மதுரைச்
சங்க மிங்கிது தொன்மைபோ லினையநன் ஞளினுந் தயங்கும்
இங்க ணுசறக் கற்றவ ரெய்தவு மிருக்கவு மயக்கஞ்
சிங்க வாய்ந்து நா றரும்பிர சங்கமுஞ் செய்திட லமையும், (அகூரு)

வேறு

வள்ளிய ஞட்டு மிந்த மதுரைச்செந் தமிழ்ச்சங் கத்தில்
தெள்ளிய திருவாங் கூரிற் சேடசாத் திரியு மொப்ப
வுள்ளிய வவருஞ் சூழ வொருபகல் ராம நாத
ஞெள்ளிய வுபன்னி யாச மோங்கவே யுவந்து செய்தான் (அகூகூ)

சாத்திர வகைக டம்மைச் சங்கத்தி னுபகா ரத்தைப்
பாத்திர ராயி ஞேரைப் பைந்தமிழ் வளர்ச்சி தன்னைக்
காத்திர மான வர்க்குங் கருத்துமே யமைய யார்க்கு
நேத்திர நேரு மைய னிகழ்த்தினன் றேங்க வின்பம், (அகூஎ)

உள்ளவே யுளங்கள் மற்றை யோங்கிரண் டள்ளுங் கொள்ளை
கொள்ளவே யெளிதிற் கேட்டுக் குதூகல முடைய ராகித்
தெள்ளவே தெளிந்த சீர்த்திச் சேடசாத் திரியு மற்று
மெள்ளலே யிலாத யாரு மேத்தெடுத் தனரா யுற்ருர், (அகூஅ)

தந்திரத் தறிஞ் ஞென்னிற் றரணியைச் சுமக்க வந்த
மந்திரக் கிழவ னென்னின் வாக்கிற்பொன் ஞக்க னென்னி
னிந்திரச் செல்வ னென்னி னிவனுரை வழங்கு கிற்கி
னெந்திரப்பாவையென்றே யிருந்திடாரவைக்கண்யாரே, (அகூகூ)

பாலவா யழுதபிள்ளை பருகப்பாற் கடலைத் தந்த
வாலவா யமலன் றன்னை யங்கயற் கண்ணி தன்னை
யேலவா யாரப் போற்றி யேத்தியே ராம நாதன்
மேலவா யவிரித் தான மேவிமன் னுற்ருன் மன்னே, (கூ00)

செப்பிய குரிசி லிந்தச் செந்தமிழ்ச் சங்க மீதே
தப்பிலா விதிகள் காட்டித் தகும்பிர சங்கஞ் செய்யர்
திப்பிய வறிவு சான்ற சேடசாத் திரியு மற்றும்
ஒப்பிலா ரளவிப் போற்ற வுறைந்தவ ணகரி மீண்டான், (கூ0க)

## வித்தியாலயதாபனமும் சமயபரிபாலனமும்

வேறு

வானமுடன் மண்ணுலகங் களிசிறக்கச் சிவபோத மருவி நின்ற, ஞானமுடன் றுலக்கமுறச் செந்தமிழுஞ் சிவமதமு நலங்கண் மன்னத், தானமுடன் றவநடக்க வளவைகளுட் படாதமருட் சமய மென்னுந், தீனமுடன் றபுக்கவந்தான் சேர்ராம நாதனெனுந் தெய்வ மன்னன், (கூ0உ)

வாய்ந்தவிளஞ் சிறுவருக்குத் தருமமுடன் சமயபத்தி வளர்க்கச் சான்றோ, ராய்ந்ததனித் தமிழ்க்கலையை யூட்டுதலே யாகியநல் லறமென் றுன்னி, யேய்ந்தவிரு பானிரண்டு தொடுத்தூர்க டொறும்வேண்டு மிடங்க ளெங்கு, மீய்ந்தவர சுதவிகொண்டு மேற்றபல விதாலயங்க ளியற்றி யிட்டான், (கூ0ஙு)

வள்ளுவனா லடிநிகண்டு திவாகரமே பிங்கலந்தை மருளின் றற்ற, தெள்ளுபொரு ளவ்வைமொழி சிறந்தபிள்ளைத் தமிழ்சதகஞ் சிவஞான ஞானங், கொள்ளுதிரு வாசகதே வாரமிதி காசமின்னுங் கூறநின்ற, வுள்ளுசம யத்துடனே யுயர்தரும சாத்திரங்க ளோத வைத்தான், (கூ0ச)

அறுசமயங் கடந்தளவை யளக்கநின்று வீடளிக்கு மரிய சைவ, வுறுசமய விதாலயமென் றூங்காங்கே பலசுடர்க ளுதயஞ் செய்யப், பெறுசமய மிதுவெனமுன் னூர்கடொறும் பலப்பலவாய்ப் பெருகி வந்த, மறுசமய கழகமெனக் கழறுமந்த காரமுற்று மறைந்த வன்றே, (கூ0ரு)

இன்னவிதா லயங்களுட ணுங்காங்கே சென்றுபன்னி யாச மென்னுஞ், சொன்னமழை பொழிந்துமிவன் வேரூன்றி நனிவ ளர்ந்து துலங்கி நின்ற, வன்னமத மானகளை கட்டுயர்ந்த சிவ போக மான வின்ப, மன்னவிளை வானசைவப் பைங்கூழை நித நிதமும் வளர்க்கு மன்றே, (கூ0கூ)

அத்தரைமுன் கலந்தமணி வாசகனர் சிவயோகத் தமரும் பெட்பும், புத்தரைவென் றரன்சமய நிறுத்துமருட் பேறுமுட ன் பொருந்து மன்றோ, வித்தரைநின் றுலவுபுகழ்ச் சேர்ராம நா தமகா னிறைவ னன்பார், பத்தரைநேர் வேடமுடன் சிவயோக சமயநிலைப் படுத்த லெல்லாம், (கூ0எ)

செந்தமிழுஞ் சிவமதமுங் களிசிறந்து வீற்றிருக்குந் திருத் த மிக்க, விந்தவட பாற்கணுள யாழ்ப்பாணத் திருநாட்டை வி னைய நன்னுள், வந்தவகை யதினதிக மேன்மைபெறத் தருங்கா ல வகைகட் கேற்க, நந்தவிலா வூழியஞ யுழைத்துவருஞ் சேர் ராம நாத வள்ளல், (கூ0அ)

ஒன்றிருந்து மொன்றிலையா லுலகிலுண்மை யாளுலு முரை க்கி னிங்கே, முன்றிருந்து வினைவயத்தாற் பெருந்தனமு மருங் கலையு முதலின் மன்னி, மன்றிருந்து கோனடத்து மந்தரங்க ம ந்திரமு மற்று முற்று, நன்றிருந்து கொண்டதெனிற் றனிச்சம ய மொடுதமிழு நயப்பு ரூமோ, (கூ0கூ)

ஆதுலருக் கன்னையொக்கு மயங்கிமதி கேட்குனருக் கமைச் சை யொக்கு, மோதுலக மருளுமதி னரசையொக்குங் குணத்து யர்வுக் கோங்க லொக்கு, மாதுலவு மறிவுதனிற் சேடனுக்குங் கற்றவர்க்கு வரையா தீங்தே, தாதுலவு தருவையொக்கு போத னைச்குக் குருநிகர்க்குஞ் சாற்றி னையன், (கூக0)

கன்னியர்க்கு மாண்மகர்க்கு மிருவேறங் கிலகழகங் கவின வைத்து, மின்னியலா ரரிவையா சிரியநிலை பெறுந்தமிழ்க்கல் லூரி தந்துந், துன்னியபல் லூர்கடொறும் விதாலயங்க ளமைத் துமிவன்! றாய சைவப், பன்னியநூற் பொருள்பரப்பல் யாழ்ப் பாண மியற்றுதவப் பயன . தன்ரோ, (கூகக)

நல்லோர்க்கு நல்லோனென் றேத்தவருஞ் சேர்ராம நாத
வையன், வல்லோர்க்கு மல்லோர்க்கும் வளாகமிது விரும்புகிற்
கும் வளங்க ளொன்று, மில்லோர்க்கு முள்ளோர்க்கு மிருநிலத்
தை யாண்டுவரு மிறைவ னுக்கு, மெல்லோர்க்கு மொருமுகந்
தா னாகியுப காரமுட னிருக்கு மென்றும், (கூகஉ)

## சட்டநிருபணசபையைச்சேர்ந்த ஐம்பதாம்வருடக் கொண்டாட்டம்

வேறு

சமயமா றின்மை நேர்மைச் சட்டநற் சுயாதீ னங்க
ளிமயவர் விரும்பு தர்ம மேதையு மாய்ந்து கோட
றமையரண் காவல் செய்தல் சமர்கடிந் துயர்த லின்ன
வமையமா நிலங்க ளாளு மாங்கில வரசு கண்டீர், (கூகங)

ஏழ்துணை நிலங்க ளெங்கு மேகசக் கிரமுய்த் தாளும்
வீழ்துணை யானு லன்றி விரிவடந் தழைக்க வற்றோ
வூழ்துணை யிலாத போதி லொண்ணுமோ சித்தி வாய்ந்த
சூழ்துணை யமைச்ச னின்றேற் றுலங்குமோவரசுகண்டீர், (கூகச)

துதியுள வணிகண் மன்னத் தொடுகட லிலங்கை யாளு
நிதியுள நிருபன் றன்னை நின்றமந் திரத்தி னோரைக்
கதியுள முறைகள் கோத்துக் காட்டிநே ராக்கற் கொத்த
மதியுள வமைச்ச னாக வந்தவ தரித்தான் கண்டீர், (கூகரு)

ஆதிதா மமைச்ச ராக வடிப்பட விலங்கைப் பாரம்
பாதிதா மேந்து மேலாம் பரம்பரைக் குலத்து மன்ன
னீதிதா னலாமன் மற்றங் நீதிசொற் பனத்துங் காணான்
பேதியான் ராம நாதப் பேறி வாளன் கண்டீர், (கூகசு)

சொற்றமன் னவர்கள் வாழ்த்தித் துதியெடுத் துவகை கூர
மற்றவ னமைச்ச னாக மந்திரக் கவுஞ்சி லேறி
யுற்றவாண் டிருபத் தொன்பா னுறவுறு மேன்மை யேற
வற்றமற் றிலாமன் மன்னி யைம்பது வருடங் கண்டீர், (கூகள)

வேறு

யூகமதி மந்திரியா யுயர்ந்துயர்ந்து ராசவுத்தி
யோகமதி னெத்திசையு மொளியினொளி யோங்கவைத்தே
பாகமதி தவழ்சடையான் பரிந்தருளுங் கருணையென்று
மாகமதி தவறுதைம் பதுவருட மாரமைந்தார், (ருகஅ)

ஒன்றியிது காறிலங்கை யுயர்வுபெறத் தருமமைச்ச
னன்றியிது சட்டமென்பா ராருமிலா தரசாங்கந்
துன்றியிது நமக்குதவுந் துரைராம நாதனுக்கு
நன்றியிது நாங்கருதி நடத்துவங்கொண் டாட்டமென்றே, (ருகரு)

வேறு

சந்திரச் சுதைத் தன்னொளி வீசுறத்
தந்திரத் தொழி றந்து புனைந்திடா
விந்திரற் கென் றிருந்துகண் கொண்டிடு
மந்திரத் தனி மண்டபந் தன்னிடை, (ருஉ0)

ஈழ வேந்து மிவற்குப வேந்தனுஞ்
சூழ மாமதி சூழுந் துணைவரும்
வேழ முற்ற மிளிர்மர போர்களும்
வாழ வேயவை வந்து குழீஇயினர், (ருஉக)

தேச மெங்குந் திகழ்புகழ் நாட்டியே
யாச கன்ற வமைச்சனு யீழத்தோர்
நேச நெஞ்சி னிலவுந மையனும்
வாச வன்னென வந்தவை வைகினன், (ருஉஉ)

தோற்ற மோடவண் டோற்றி யமர்ந்துழி
மாற்ற மென்முனம் வைகினர் பேச்சினி
லேற்ற போதிலங் கெத்தனை நாழியு
மாற்ற லுற்றநம் மையனை வாழ்த்தினர், (ருஉங)

ஆக்க மேவுற வைம்பான் வருடமுந்
தாக்க மாகமன் சங்க மமர்ந்ததுந்
தேக்க நின்றநற் சித்திகள் பெற்றது
மூக்கமா யொவ் வொருவரும் பேசினர், (ருஉச)

வேறு

மண்ணுறப் புகழ்வைத் துள்ள மன்னவன் ராம நாதன்
கண்ணுற விருக்க யாருங் கைதந்து களித்த பின்னர்
பண்ணுறத் தவங்க ளாற்றிப் பண்டைநாட் சேமித் திங்கே
யெண்ணுறத்தோற்றுமெங்களீழவேந்துரைக்குமன்னோ, (கூஉரு)

தேங்குசீ ரவர்தம் வாக்குத் தேனிலு மினிதத் தேனைப்
பாங்கிய லவர்க ளுண்பர் படர்சிறைத் தேனீ யென்னத்
தாங்குற வவர்க்குக் கூத்துத் தருமிடை யிடையே யத்த
லோங்கியவவர்க்குப்பொங்குமுளத்திடைக்களிப்புமன்பும், (கூஉசு)

நந்தலி லரசே யாக நானிந்த விலங்கைத் தீவில்
வந்தநா ளதிக மேன்மை வாய்ந்தவ ரொருவர் நண்ப
ருந்தசே ரிராம நாத வுத்தம ருடனே தர்க்க
மெந்தநா ளேனு மின்றி யிருப்பதே நலமா மென்றார், (கூஉஎ)

சங்கமே லவர்க ளுடிச் சட்டங்கள் பேசும் போதிற்
றுங்கமே வுற்ற வின்னோர் தூங்கிக்கொண் டிருப்ப ரேனும்
பங்கமே யிலாமற் பின்றும் பண்புறப் பேசு மப்போ
தங்கவர் பேசுங் கூற்றி லநுவதித் துதறிக் கூறும், (கூஉஅ)

தூங்கின ரிருக்கும் போதிற் றொன்மதி யினர்தம் பேச்சை
வாங்கினர் முழுதும் பின்னர் வடித்தெடுத் துடைத்துத் தள்ளு
மேங்கின ரிருத்தல் வேண்டு மென்றன ரிவைக ளெல்லாந்
தாங்கின னனுப வத்திற் சாரநான் கண்டேன் கண்டீர், (கூஉகூ)

தூக்கமா யிருக்கு மாறுஞ் சூழ்துணை யோர்தம் பேச்சை
நோக்க மாய்க் கவருமாறு நுண்பொருள் பலவாஞ் சொல்லாற்
றூக்க மாயுடைக்கு மாறுந் தருமசாத் திரத்துக் கேற்ப
வூக்க மாய்ப் பேசுமாறு முவர்க்கலா லெவர்க்குண் டம்மா, (கூநூ0)

சங்கமே லனைய சர்வத் தளிக்கலா சாலைப் பேச்சை
யங்கணே யரிய நாட்டி னரசியற் றிருத்தப் பேச்சைப்
பங்கமே யிலாம லங்கே கேட்குமேற் பகர்வ தென்னோ
துங்கமே வுறுநா தன்சா துரியங்க டெரியு மன்றே, (கூநூக)

வாக்கினுக் கெதிரே யாக வானவே றிடித்த தொப்பத்
தாக்கியே யெதிராம் வாக்குச் சமயவுற் சிதமாய்ச் சொல்ல
ஞுக்கினுக் கழகு செய்யு நல்லவல் லமைக டாமே
தேக்கியவிவரைச்சங்கந்தெய்வமாய்ப்போற்றச்செய்த, (கூ௩௨)

இன்னவர் திறமை யீன மேதையு மறிய கில்லே
முன்னவே சபையி லாத வோய்வுகா லங்க டோறு
நன்னய வவைக்க ணுள்ள நாமெலா மொருங்கு கூடிச்
சொன்னவிந் நாளி லுள்ள சோர்வுகள் பேசு கிற்பேம், (கூ௩௩)

மதித்தநாம் ராம நாத வள்ளலே நோக்குங் காலே
விதித்தநா வலரே யென்றும் வித்தியார்த் திகரே யென்றுந்
திதித்தராச் சியத்தி லோர்தந் திரியெனப் பெறுவ ரென்று
முதித்தசாத்திரவிற்பன்னருயர்ந்தசீர்த்தியரேயென்றும், (கூ௩௪)

ஆற்றவு மரசுக் கேய்ந்த வமைச்சிய னிபுண ரென்று
மாற்றவு மியலா ஞாய வாதிதா னென்று மின்னு
மேற்றமே வுற்ற சீர்த்தி யிரண்டுத்தி யோக ரென்றுஞ்
சாற்றவு மரிதா ஞான சாதனி யென்றும் போற்ற, (கூ௩௫)

வேறு

இத்தனையு மெடுத்தெடுத்தே யிவருடன்மற் றவர்புகல
வத்தனையுங் கேட்டகத்தி னருளினுட னெஞ்ஞான்றும்
சத்தனையு மறவாத தனிராம நாதவைய
னெத்தனையுமதித்திருந்தீரென்றிவற்றைத்தானுரைக்கும், (கூ௩௬)

சாட்சிபெறுங் கடவுளெற்குத் தந்ததத்து வங்களையே
யாட்சிபெறு மதிபதியு மங்கமுள மற்றுமுள
மாட்சிபெறு மெல்லீரு மதித்தெடுத்துப் புகழ்ந்ததனுற்
காட்சிபெறு மெமதுளமேற் களிப்பதிக மாயினதே, (கூ௩௭)

தீரவளஞ் செழித்திலங்குந் தேசவபி மானியென்றுஞ்
சாரவுளத் துவகைதருஞ் சாத்திரவிற் பன்னரென்று
மீரமனத் தருள்சுரக்க விவ்விலங்கை புரக்கவரு
மாரமலர்த் திருமார்பத் ததிபதிதான் கூறினரால், (கூ௩௮)

நாடுசெங்கத் தவரொருவர் ஞானியிவ ரென்றுரைத்தார்
மாடுவரு மொருவரிச்சா மானியரான் முடிக்கரிய
தேடுபெருஞ் சீருடைய சேர்ராம நாதனிவ
ரீடுபெறுங்காரியங்களெலாமுடிக்குமென்றுரைத்தார், (கூ௩கூ)

ஆனாலு நானுரைப்பே னகண்டபர வெளியாகி
நானாலு படைப்புகளு நண்ணுமிந்தச் சிறுதீவிற்
றேனாலு மலர்மார்பீர் செயற்கரிய செய்தனரே
கானாலும் புகழ்மாலை கவினவென்மேற் சூட்டிவிட்டீர், (கூச0)

நல்லுலகி னுங்களெலா நம்வலதாய்ப் பிறந்திலங்காண்
சொல்லுசிறு குழந்தையெனத் தோற்றியுல வுறும்பொழுதிற்
செல்லுறுபிற் சிவியங்க டெரிந்திடுமோ வீன்றெடுத்த
வொல்லுமவர் தாமுமதை யுற்றறிய வல்லுநரோ, (கூசக)

தேறவளர்ந் தேகுழந்தை சேர்த்திமிகப் பெறுகுவனே
லேறவருந் தன்முயற்சி யிந்நிலையைத் தான்கொடுக்குங்
கூறவுள் வொன்றிதற்குக் குவலயமேன் முன்னமுயிர்
மாறமனஞ் செய்திருந்த வல்வினையு மாகுமன்றோ, (கூசஉ)

நாடடைந்த பெருமைதனை நாமடைந்த பெருமைதனை
யீடடைந்த நம்மாலே யென்றுகொளல் பொருந்துமதோ
சேடடைந்த விந்நிலைமை சேர்த்திபதத் துவங்கடமைப்
பீடடைந்தநமக்கருளும்பெருமானைப் போற்றுகிற்போம், (கூச௩)

போற்றியென்பாற் சூட்டுமுங்கள் புகழுரையா மாலையிதை
யேற்றியெமை வைத்தருளு மிறைமலர்த்தாள் களிற்சூட்டித்
தோற்றியிவ ணமைப்புகழ்ந்த தொல்லவையீ ருமக்கிதினுஞ்
சாற்றியிசை பெருகவெனத் தற்பரனை நான்பணிவேன், (கூசச)

ஆய்ந்தபல ரெம்மையிவ ணவதார புருடனென்றே
யேய்ந்தவுளத் தெண்ணுகிற்பா ரின்னுமனு வெனப்பிறந்தோர்
வாய்ந்தவிவண் பெறத்தகைய மன்னுதத்து வங்களெனா
வீய்ந்தவறம்போற்புகல்வேனென்றுமெமையெதிர்பார்ப்பர், (கூசரு)

என்னவிவண் புகலுவதென் றெதனையுநா னறியகில்லே
னென்னையொரு தீபனென்று மெண்ணுகிலே னன்றுதொட்டே
தன்னமரு டருந்தேவ தத்துவங்க ளுடன்கரும
மன்னவெலா மறிதருவா னறிவெனக்குக் கிடைத்திருந்த, (கசசு)

தந்தவருட் டனித்தேவ தத்துவத்தி னுயர்வலியாற்
சந்தமுள பிரமாணந் தருநீதி தவறும
னந்தவிலா வகைநாடி நானடத்தி வருதலுண்மை
யிந்தவிதம் பவுத்தமுட னின்னுமதம் பலபுகலும், (கசஎ)

அரியபிர மாணமில்லா ரன்றுதமை யிழந்திடுவா
ருரியபிர மாணமதே யுயர்ந்தபரி சுத்தமுள
பெரியபிர மாணமென்றும் பெறுகுவதே நங்கடமை
பிரியபிர மாணவுண்மை பேசிலர்முன் னொருஞானி. (கசஅ)

வேறு

இந்தவா றிருக்கத் தாதை யிளமையி லெனக்குச் சொன்ன
தந்தரா மேச்சு ரத்தி னமர்ந்தருள் ராம நாதன்
சந்தநற் பாதம் போற்றித் தனயனிங் கொருவன் றன்னைத்
தந்தனை யெனினின் னுமந் தானவற் கிடுவ னென்ன, (கசகு)

அங்கவ னருளி னாலே யவதரித் திட்டாய் நானு
நங்கட னென்றே ராம நாதப்பே ரிட்டே னென்றான்
மங்கவி லெனது தாதை மனுடனுப் மதிக்கப் பெற்றோன்
தங்கலே பத்தி வாய்ந்தோன் றுபித்தோ னிலிங்க மொன்று, (கருo)

பாடிய மைந்த செவ்விப் பாட்டுக ளியற்ற வல்லோ
னாடிய சிறுவ னாக நானமர் காலந் தன்னி
னாடிய விளைஞ ரோடு மவர்விளை யாட்டிற் போகேன்
தேடிய தாதை கூடத் தெரிசனத் துறுவ தாவேன், (கருக)

சாய்தரு சுவரி னூடுஞ் சார்ந்துநான் நின்று கொண்டே
யேய்தரு தந்தை பாடு மினியபாட் டோசை கேட்பேன்
சேய்தரு வடதே யத்துஞ் சேர்மறு தேய நின்று
மாய்தரு ஞான யோக ரவரிடம் வந்து சேர்வர், (கூருஉ)

பேர்தரு தாதை தானும் பெரியவர் தாமுங் கூடிச்
சேர்தரு மறைக்குள் யானுஞ் சென்றிருந் திடுவ னங்கே
யோர்தரு மொருபேர் ஞானி யொருதினத் தென்னை நாடிச்
சார்தரு முச்சி தொட்டுத் தடவின ராசி சொற்றூர், (கூருங)

மயங்கிய விலாத வேழு வயதெனக் கடுத்த கால
முயங்கிய கருமந் தன்னின் முதிர்ந்துநா னிருத்தலாலு
மியங்கிய பொதுவி ருப்பி விச்சைபெற் கிலாமை யாலும்
வயங்கிய வென்னைத் தாதை வயோதிக னென்று சொல்வர், (கூருச)

நேடுறு வயது நான்கி னீள்கதி நற்று யெய்தப்
பீடுறு மெமது தந்தை பெற்றதாய் தனினுஞ் சால
நாடுறு முதுமைப் பெண்க ணல்லவ ராக நம்மை
யீடுறு மாறு பேண வெடுத்தன ரமைத்து வைத்தார், (கூருரு)

நீர்கொடு குளிக்க வைக்க நின்றுபே யீரம் போக்கச்
சீர்கொடு முணவு நல்கச் சித்திர வுடுப்பு டுத்தத்
தேர்கொடு கழகஞ் சேர்த்துச் செயத்தகு பணிக ளெல்லாம்
நேர்கொடு புரிவா ளாக நிறுவின ரேவ லோரை, (கூருசூ)

பின்னமி றமைய னைப் பெரியமன் னவனு மென்று
நன்னய மாக வென்னை நடுவின்மன் னவனு மென்றுஞ்
செந்நலத் தம்பி தன்னைச் சின்னமன் னவனு மென்று
மின்னவா றாக வெம்மை யிளமையி லழைப்பர் யாரும், (கூருஎ)

இன்னண மொழுகு நாளி லினியநந் தந்தை யோர்நா
ளென்னைமற் றண்ண லாரை யெதிருற நோக்கி நீங்கள்
மன்னிய கொழும்பி னின்று மற்றொரூர் சென்று கற்க
நன்னய விருப்போ வென்ன நாமதற் காமென் றேமால், (கூருஅ)

உற்றவென் வயது மந்நா ளொருபதின் மூன்றே யாகப்
பெற்றதா லப்போ ராணிப் பேர்க்கழ கத்துக் கற்றேன்
குற்றமே யிலங்கை மேனாட் கொண்டகா ரியங்க ளென்றார்
மற்றவர் தமினு மேலாய் வைத்திட நினைந்தா ரெம்மை, (கரு௯)

சென்னைமேற் கலாசா லைக்கட் சேர்க்கவே சிந்தை கொண்டு
முன்னைநாட் புகைத்தேர் வீதி முடிந்தில தாத லாலே
பென்னையென் னண்ண லாரை யெடுத்தவோர் கலமே லேற்றிப்
பின்னைநன் மக்க டம்மைப் பிரிகின்ற வதற்கும் நொந்து, (௯௰)

ஆயிரம் வெள்ளி வைத்தே யடக்கிய பையு மின்னுந்
தோயிரும் பேசி யாவிற் றுபகழ மெங்கட் காக
வேயிரங் குறுநந் தந்தை யேறியே கலத்திற் றந்து
மாயிரும் பணங்க ளின்னும் வருமென்று கூறிப் பின்னும், (௯௰க)

இலங்கிரா மேச்சு ரத்தி லிறங்கிநீர் நாகை சேர்ந்தே
புலங்கிள ரங்கு நின்றும் புகையிர தத்தி லேறிச்
சலங்கிளர் சென்னை புக்குத் தனிக்கலா சாலைக் கண்ணுக்
கலங்கிடீர் கற்பீ ரென்றார் கண்கணீர் வடியக் கண்டேம், (௯௰உ)

வேறு

மாற்றமெடுத் துரைத்துரைத்தே வழியனுப்பித் தாமேகத்
தேற்றமுற வெம்முடனே சென்னைமட்டும் வந்திலரா
லாற்றவருந் துயரமென வண்ணலெனக் குரைத்திரங்க
வேற்றமுள வவர்பிரிவா லிருவேமுங் கலங்கினமே, (௯௰௩)

சித்திபெறி னூர்க்குநயஞ் சித்தியின்றே லுமக்குநட்டம்
புத்தியிது வெனத்தாதை புகன்றமதி யதனாலுங்
கொத்தினுடன் கைவசத்திற் கொண்டபணந் தன்னாலு
மத்தினமே மனுடநிலை யாயினநா மிருவேமும், (௯௰௪)

சென்றுபின்னர்ச் சென்னைநகர் சேர்ந்தனங் கல்லூரியதின்
நன்றுகலை கற்றுவந்தோர் நங்களிடம் விரைந்தணுகி
யின்றுநுமைக் கண்டனம்யா மிருக்கவினித் தனித்தேகந்
துன்றுமப்பியாசமதிற் றொடர்புளதோ வெனவிசைத்தார், (கூகூரு)

மன்னியநும் விளையாட்டிற் பயிற்சியிலே னென்றுரைத்துந்
தென்னியலு மாடலதிற் றெண்டியுமென் றேவினர்நான்
மன்னியகைத் தடியெடுத்து வலியுடனே சுழற்றியுந்தான்
பின்னியலுஞ் சித்தியதிற் பெற்றிலன்மேலேதுசெய்வேன், (கூகூகூ)

ஈதுபழக் குற்றவர்யா ரென்றவரை நான்பார்த்தே
னேதுமவர் மார்புவிரி வுற்றபெரும் யாக்கையுளர்
தீதுசெயத் தகுந்தபெரும் திறலுடையர் நோக்கிடுங்கா
லேதுமைய மிலைசிறிது மனுமனையே யிவர்நிகர்ப்பர், (கூகூஎ)

இன்னவர்பா லித்தொழிலு மிரண்டாண்டிற் பயின்றனமேற்
சொன்னவர்பான் மல்லயுத்தத் தொழில்பலவுங் கற்கலுற்றேம்
பின்னரவர் தம்முடனே பிடித்துபல்ல யுத்தவகை
யென்னவரு மதுபுரிய வெண்ணமெனக் கிருந்ததுவால், (கூகூஅ)

ஒருவாக்குக் கிடைத்ததப்போ தனக்குடம்பிற் றிறலிருந்த
திருவாக்கு மின்னுமின்னுந் திறமைகளு மிருந்தனவென்
றுருவாக்கு வலியிழந்த வுவருடனே பொருதிடுத
லருவாச்கு மருளாமோ வதுவாகா தென்றததது, (கூகூகூ)

அங்கதிலே யிருந்தெவர்க்கு மருள்மிகவு முதிப்பதற்கா
யிங்குநல ஞானிகளை யிலங்குபெரு மக்கடமை
யெங்கெவர்கள் சேர்ந்தொழுகி னெய்தியமேற் சீவியங்க
டங்குமென்று மவாறிஞர் தானுவ ரென்றுணர்ந்தேன், (கூஎ0)

வேறு

பின்புநான் சென்னைச் சர்வப் பெருங்கலா சாலை நின்று
மின்புதந் திலங்கு மெங்க ளிலங்கைவந் தாற்றுந் தொல்லை
யன்புதந் திருந்த வூழா னரியநற் கொடையே யாகத்
துன்புதீர் சீரின் ஞாய துரந்தர னாக வுற்றேன், (கூஎக)

விதிபெறு மாறு நின்று மிளிர்பிர மாண மீது
துதிபெறு தெய்வத் தன்மை தூயதாந் தன்மைத் தாகும்
நிதிபெறு மவர்க ணீதி நின்றிடா தொழுகு வாரேற்
கதிபெறு மதுதா னில்லைக் கருதுகிற் பிழைவந் தெய்தும், (கூஎஉ)

நேரினிற் கொண்டே யுய்க்க நேரினி னடத்தி வைத்துச்
சீரினி னேங்க வென்றுஞ் செய்வது பிரமா ணந்தான்
பாரினி லொருபேர் நீதி பதியையோர் ஞாய வாதி
யேரினின் மயக்கி வென்றே னென்றன ரெனக் கீதென்னே, (கூஎக)

காசுதாம் பெறுவ தற்கே கவின்பெறு பிரமா ணங்க
ளாசுதா மிலாமற் கற்ப தென்பர்க ளறிவி லார்யான்
மாசுதா னிலாத வென்றன் மனசுக்குச் சொன்னேன் ஞானத்
தேசுதா னல்கி யென்னைத் திருத்திடக் கற்ற தென்றே, (கூஎச)

வில்லங்க வழக்கி னின்றும் விலக்கவே யெதிரி தன்னை
வல்லபங் காட்டு வார்கண் மதித்ததந் தரங்கள் செய்வர்
வெல்லத்தான் வேண்டு மென்ற விசாரமே விசார மல்லா
லெல்லவிர் பிரமா ணத்தை யிவர்கொலோ வறிய வல்லார், (கூஎரு)

அரியநன் னீதி மானு மடிப்படு குலத்துள் ளோரு
முரியநற் பிரமா ணத்தி லுயர்ந்தவர் தாமு மென்றுந்
தெரியநன் மதிப்புச் செய்யத் திகழுவோ மெனலு மாகாப்
பெரியநன் னீதி மானே யனுப்புதல் பெரிது மாகா, (கூஎசு)

இந்தவா றிராம நாத வேந்தலங் கெடுத்துத் தாங்கள்
முந்தவந் துதிக்கு மாறு முதலுள யாவுங் கூறி
வந்தநல் லதிப னான வக்கிரா சனற்கும் யார்க்கும்
வந்தனங் கூற வேனோர் மகிழ்ந்தன ருவகை யானார். (கூஎஎ)

# தோகைநலம்

## வேறு

தண்டுவரு மவர்களென்றுந் தபித்துழலு மிவர்களென்றுந்
தொண்டுவரு மடிமையென்றுந் தொழுகுலத்தோ ருவர்களென்றுங்
கொண்டுவரு மொருபகுப்புங் கொண்டிடுத லில்லாமற்
கண்டுவருங் கண்ணோட்டக் கருணையுளோ னிவன்காண்மின், (கூஎஅ)

சேட்டமுள வரசருட ளுங்கிலருஞ் சிங்களரு
மாட்டமுள ராயமரு மாங்கிட்டத்து மாய்ந்துணர்ந்த
கூட்டமுள தமிழகத்தார் கூடுசபை யகத்துமென்று
நாட்டமுள வாக்குவல நாவலனு மிவன்காண்மின், (கூஎகூ)

இகலுவதென் றிலாதெவரு மிமையவனென் றேத்தெடுப்ப
வகலுவதென் றுலகிலொன்றற் கஞ்சுவது முபகார
மிகலுவதென் றெழிவதுவும் விரும்புகிலா ராசதத்தோன்
புகலுவதென் னவதார புருடனென்பா னிவன்காண்மின், (கூஅ0)

அருங்குணங்க ளுள்ளவர்க்கு மடிக்கடியே பற்பலவாய்
வருங்குணங்க ளுள்ளவர்க்கு மருளகல நல்லறிவு
தருங்குணங்க ளானவெலாந் தாழ்ந்துமவர்க் குரைத்துவரும்
பெருங்குணங்க ளுடன்பிறந்த பெருந்தகையு மிவன்காண்மின், (கூஅக)

கோத்திருக்குஞ் சட்டமுறைக் குறைநிறைகள் கூறுதற்கு
மாத்திருக்கு முலகினர்க ளவரவர்க்கொன் றுய்வதற்கு
மூத்திருக்கும் பெரியருரை மொழிந்துமுகங் காண்பதற்குங்
காத்திருக்கு மணிவாய்தற் கவினுடையா னிவன்காண்மின், (கூஅஉ)

அறந்தானென் றரும்பொருளென் றும்புகழென் றெருமூன்றும்
பிறந்தானென் றுளபொழுதிற் பெறுதொழியி லென்பிறந்துஞ்
சிறந்தானென் றிருநிலத்திற் சீரெவையு மொருங்கமையப்
பிறந்தானென் றெடுத்துரைக்கப் பிறந்தவனு மிவன்காண்மின், (கூஅங)

சகத்திலெவர் தவமுடையார் தாமெனநர் மாயவரு
மகத்திலைய மேனிதனை யறியுமருந் தவம்பயந்த
விசத்திலெவ ரெவர்க்கேனு மெய்தவொணா தானவிந்தச்
செகத்திலைசு வரியமெய்துஞ் சீமானு மிவன்காண்மின், (கூஅச)

பொன்னாட்டிற் பொலிவிலங்கா புரத்திருக்கு மெவர்புகழுந்
தன்னாட்டின் மட்டுமென்றே சாற்றுகினுஞ் சாலாதே
யென்னாட்டி னெத்திசையி னிரவியெனு மாறிலங்கக்
கன்னாட்டிப் பேர்நாட்டுங் காவலனு மிவன்காண்மின், (கூஅரு)

நீதனென்று நினையாம னினைந்துவரு நிமலனடித்
தாதனென்று முயர்ந்தசைவ சமயமுள சிவஞான
போதனென்றும் புகலரிதாம் பொற்புடைய மக்கடமு
னாதனென்றும் வரும்ராம நாதனென்பா னிவன்காண்மின், (கூஅசா)

நீடுகுரு வென்றவனி நிகழ்த்தவரு மகத்தியனார்
தேடுகுரு மறைப்பொருளைச் செப்பெனக்கேட் டகமகிழ
மீடுகுரு வோடுகலந் திருவினையின் பற்றொழிக்க
நாடுகுரு வானசிவ ஞானகுரு விவன்காண்மின், (கூஅஎ)

வேறு

சீரினி வினையின் றூன சிவன்றிருப் பணியி னாலு
மாரினி யிவனென் றீந்த வன்னதா னத்தி னாலும்
பாரினி லுயர்ந்த பொன்னம் பலம்புரி தவநற்பேற்றை
நேரினி லுலகிற் காட்டி நின்றசேர் ராம நாதன், (கூஅஅ)

வேண்டள வாக நல்ல மேதினி துதிபெ டுக்கப்
பூண்டள விலாம லென்றும் போதவே யிருபத் தொன்பா
னாண்டள வாகச் செய்த வரியபே ருபகா ரங்க
ளீண்டளவாகச்சொன்னேனினியிவண்டொகுத்துஞ்சொல்வேன், (கூஅகூ)

தந்தைரா மேச்சு ரத்திற் றனயனைத் தருக வென்னா
வந்துமுன் மாதி னோடு மகனொடும் வணக்கஞ் செய்ய
முந்தவே ராம லிங்க மூர்த்திதன் னருள்பா லித்த
வந்தநல் வரத்தின் சீரா லவதர புருட னானான், (கூகூ0)

தனயனைப் பெறுவான் வேண்டுந் தசரதன் றனக்கு வாய்ப்பத்
தனயனாய் வந்து மேனாட் டானவ தரித்த வாபோற்
றனயனை வேண்டு மிந்தத் தாதைக்கு மதுவே யாகத்
தனயனா யனைய காவற் கடவுடான் றரணி வந்தான், (௯௯௧)

வருபொரு ளிரண்டி னொன்றைப் பெற்றிலார் மருட்பை யாவர்
தருபொரு ளொன்றைத் தானுந் தாங்கினார் மனுக்களாவர்
ஒருபொரு ளதுவு மொன்றோ வுலகெலா மதிக்கத் தக்க
விருபொரு ளொருங்கே யெய்தி னேந்தலுக் கிலக்கு மூண்டோ, (௯௯௨)

வெறுத்திடா முகமுங் காட்டி வெள்குற மன்று தோறு
மறுத்திடாப் பொருளுஞ் சொல்லும் வாய்ப்பவே யெடுத்துக் காட்டி
யுறுத்திடா நீத வேந்த னுவக்கவே யரிய நீதி
நிறுத்திடா வாதம் வெல்லும் நிலைமையு மளவிற் றாமோ, (௯௯௩)

முறைகளை யெடுத்துப் பேசு முதன்மதி யமைச்சே யாகி
நிறைகளை யொழியின் மன்ன னீடவு மிடித்துச் சொல்லிக்
குறைகளை யடையா வண்ணங் குரைகட லிலங்கைக் கேற்று
மிறைகளை யெடுக்கச் செய்து மின்னமுஞ் சுகங்க ளாடும்,(௯௯௪)

சொற்றதாய்ப் பாடை நிற்கத் தோற்றிய விடத்திற் றோற்று
மற்றமி லவர்கட் கைய னங்கிலத் தவாவே யென்னின்
மற்றவர் வேட்கை யேனிம் மன்னன்மூ வைந்து நாழி
முற்றவே பேசி நின்றான் முன்னொரு நாளி னம்மா, (௯௯௫)

முன்னமக் கடலுட் கப்பல் மூழ்கச்செய் கலக நாளில்
தன்னுயிர் கருதா தேயிங் கிலந்தினைச் சார்த லாலும்
மன்னனை மாற்ற லாலு மவன்சிறை நீக்க லாலும்
இன்னன செயல்க ளாலு மிவனுயிர்க் கருணை தோற்றும், (௯௯௬)

அங்கில ரிலங்கைக் கான வாசினர் கருமம் பார்ப்பா
னிங்கிலந் திருந்து மிங்கே யெய்துமத் தலைவ மார்கள்
கொங்கில குறுந்தா ரைய குறைவிலிங் கிலந்து மட்டோ
வெங்கில நின்பேர்நாங்க ளிதற்குமுன் னறிவே மென்பர், (௯௯௭)

கொங்கிலங் குறுந்தார் வேந்தாய்க் குறித்துள வவரை நாடி
யிங்கிலங் கிலங்கைக் கின்னே யேகுவீர் போவு நீவி
ரங்கிலங் கிராம நாத னதையறிந் தொழுக னன்றென்
றிங்கிலக் தமரு மேலோ ரிசைப்பரே லச்ச மன்றே, (சுசுஅ)

நன்றென வுள்ள யாவு நாடோர்று நயந்து முன்னாள்
வென்றென தெனக்கொண் டாளும் வேந்தினோர் புயமுமாகி
என்றென வுலக முற்று மிலங்கியே தனக்கீ டின்றிக்
குன்றென விருந்த ராச குடும்பத்தின் றிலக மானான், (சுசுசு)

தந்தைதா பனஞ்செய் கோயிற் றருமகர்த் தாவு மன்றிச்
சிந்தைநேர்ந் திரண்டே யான சிவப்பிர திட்டை செய்து
மெந்தையார் விழவு பூசை யெழில்பெறத் தந்துந் தான்றன்
முந்தைநா ளாற்றி வைத்த முழுத்தவம் விளக்கி னானல், (க000)

கொற்றவர் தமக்கு மேலாங் குலத்துளோர் தமக்கு முற்றக்
கற்றவர் தமக்குங் கல்லாக் கசடர்க டமக்குஞ் செல்வ
மற்றவர் தமக்கு மின்னு மடுத்தெமக் குதவு கென்றே
யுற்றவர் தமக்கு மென்று மூன்றுகோ லிவனே யன்றோ, (க00க)

தேங்கிய செல்வங் கல்வி தேவநற் பூசை வேள்வி
யோங்கிய மாளி மன்ற முன்னிய போக மின்பம்
வீங்கிய கருணை யீகை விறலர சான யாவுந்
தாங்கிய விவனைத் தானே தரேந்திர ரென்பர் நல்லோர், (க00உ)

இத்தரை யரசிற் பாதி யிருபுயஞ் சுமத்த லொன்றோ
சுத்தசெந் தமிழை யோங்குஞ் சுயமத மதனை மேலா
முத்தம ஞானந் தன்னை யுலகினில் வளர்த்த லாலே
யொத்தவ ரிலாத ஞான குருவுமா யுறையு மையன், (க00ரு)

கண்ணிய மாகக் கற்கக் கன்னிய ரர்ட வர்க்கென்
றெண்ணிய கழக மின்னு மெழிற்றமிழ்க் கழக மேனுத்
தண்ணிய நாடு தோறுங் கழகங்க டந்து பெற்ற
புண்ணிய மிதன்மே லுண்டோ புகழுமில் லாமற் போமோ, (க00ச)

பன்னகஞ் சுமந்த வைப்பிற் பாரத வருட மீதி
னன்னய விலங்கை யோடு நாடுமே னாடு தம்மிற்
பொன்னக மலாய நாட்டிற் பொருவிலான் புரிந்த வற்று
ளென்னயான் புகன்றே னாயி னின்னமு மனேக முண்டால், (க௦௦௫)

மழுவலன் ராமன் மற்றத் தசரத ராமன் மன்னுங்
கொழுவலன் ராமன் வேய்ந்த கொன்றைவே ணியன்பாற் பத்தி
வழுவல னான பொன்னம் பலமகன் ராமன் மண்ணி
லுழுவலர் நால்வர் தாமு மோங்குமற் புதர்க ளாவார். (க௦௦௬)

## ராசரிஷித்துவம்

பொருளைநல் லுத்தி யோகப் பொற்பினை யுயிர்மேல் வைத்த
வருளைமன் னறங்க டம்மை யமைந்தவன் ராம நாதன்
மருளைநல் குலக மித்தை யாமெனக் கண்டு பாச
விருளைவென் கண்ட ராச விருடியா மாறு சொல்வாம், (க௦௦௭)

முனிவரும் வேந்து நோக்கின் முனிக்கவர் துரும்பென் றுன்னித்
துணிவரு மாற தின்றித் துணைவியும் பாங்கே யாக
நணிவரும் வேள்வி நோன்பு நயந்தற மியற்றிச் சித்தி
யினிவரு மென்றே ராச விருடியா நிலையைப் பெற்றான், (க௦௦௮)

குச்சகன் முதலோர் பின்னாட் குறைதவிர் துறவி னின்றார்
கச்சக மரசை நீத்த கவுசிகன் முனிவ னானான்
நச்சக வறங்கள் யாவு நடத்தியே யதன்மே லாக
விச்சகம் புகழ நாடி யிருடியே யானார் பல்லோர், (க௦௦௯)

முன்னுமுன் றமைச்சுத் தன்மை மூதுல கறிந்த செல்வ
மன்னுபே ராண்மை வென்றி வளர்புக ழென்றி வற்றாற்
றுன்னுபோ கங்க ளெல்லாந் துய்த்தன னுண்மை கண்டே
யின்னுமே னென்றே ராச விருடிதன் னிலைகைக் கொண்டான், (க௦க௦)

மன்னுமம் பலவப் பேர்நா வலபரா சத்தி சாமி
யுன்னுசீர்ச் சிதம்ப ரத்தி னுமாபதி வீதி வைகி
யின்னுமித் தோன்றற் குள்ள வுண்மைக ளெடுத்துக் காட்டிப்
பன்னுமோர் பாசு ரத்தைப் பாங்குறத் தருவ னிங்கே, (க௦கக)

வேறு

ஆற்றவருந் தவப்பெருமை யகலாதே நிழல்போலத்
தோற்றவரு மெழுமையினுந் தொடர்ராச குடும்பமதின்
மாற்றவருந் தகைத்தாகும் வாழையடி வாழையெனப்
போற்றவரு மவதார புருடனீ வாழ்கவென்றும், (க௦கஉ)

ஏய்ந்தவிடை நாடியென விலங்கிலங்கா புரத்திலெங்கள்
ஆய்ந்ததவப் பயனாக வவதரித்த சீமானும்
ஈய்ந்தபொன்னம் பலராம நாதனென வெண்ணியிவண்
வாய்ந்தவரு டரும்ராச விருடியையீ வாழ்கவென்றும், (க௦கங)

நாவலனே மாணியுடன் சுவாமியுமாய் நலம்பெறிந்தப்
பாவலனை யறிஞரெலாம் பக்குவங்கண் டோர்ந்திடுங்கால்
ஆவலுடன் பணிந்திடுத லதுபெருமைக் குயர்சான்றும்
ஓவலிலா திவன்வரைந்த வுயர்தருபா சுரமுமிதே, (க௦கச)

வேறு

ஒள்ளிய வுணர்வான் மிக்கீ ரொன்றிவ னுரைப்ப துண்டாற்
றெள்ளிய சிவஞா னத்திற் சிவந்தனை யடைந்தே யுள்ளத்
துள்ளுற வோடும் பொன்னு மொக்கவே நோக்கு வோருக்
கெள்ளுத லிலாத மாத ரிருந்துமென் னெழிந்து மென்னே, (க௦கரு)

வேறு

உருவனந்த மெடுத்தெடுத்தே யுலகுயிரைக் காத்துவரு
மொருவனந்த வலைப்பாய லுறங்குமது போன்றுநித்த
மருவனந்த சயனமன்னு மாமாய னருண்மயமாந்
திருவனந்த புரத்தரசன் றெரிந்துமுன மமைத்திருக்கும், (க௦கசு)

சாற்றுமரன் மனைக்குவித்வ சனாசவருட் டான்றிலகன்
ரேற்றுமறி வோங்குசர்வே சுரசர்மா வடகலைக்குப்
போற்றுமவர் புகழ்ந்துவரும் பாணினியைப் போலுமிவன்
றேற்றுபக வத்கீதை செப்பியபா யிரத்தொருண்மை, (கoகஎ)

வேறு

கற்றநூற் கல்வி செல்வக் கதிப்பினன் சிவன்பாற் கூடப்
பெற்றமா ஞானி யிந்தப் பெருமனே ராம நாதன்
சொற்றவிம் மகாத்து மாவைத் தொடர்ந்தனன் பயிற லாலே
நற்றவப் பேறுங் கூட்ட நான்சிவ ஞானி யானேன், (கoகஅ)

என்றிந்த வறிஞர் கோமா னேந்தலை யளந்து கூறு
நன்றிந்த மாற்ற மின்னு நானெடுத் தியம்ப நின்ற
வொன்றிந்த ராம நாத னேம்பிய வுலக வின்பம்
வென்றிந்த ஞான மெய்தல் விளம்பவேண் டுவதன் றீதே, (கoகசு)

அன்றுதொட் டிடையீ டின்றி யடியடி யாக வந்த
குன்றுதொட் டியர்சிர் ராச குடும்பத்தோர் செய்து வைத்த
தொன்றுதொட் டறங்கள் யாவுந் தொடர்ந்தொரு வடிவ மாக
நன்றுதொட் டுலகம் போற்றி நாடவந் துதித்த லானும், (கoஉo)

சித்தியா யமையத் தான்செய் திருப்பணித் தருமத் தானும்
வித்தியா தானத் தானும் விட்டமேற் குறையி னானும்
சுத்தியா மோனத் தாலே சுழுமுனை திறத்த லானும்
பத்தியா மிராம நாதன் பரமஞா னியையே யானன், (கoஉக)

உண்டவர் தமக்குத் தீரு முட்பசி யுலக போகங்
கண்டவர் தமக்குத் தீருங் காதலே யென்பர் நல்லோர்
பண்டவர் புகன்ற வாறே பற்றெலாந் துய்த்த பின்னர்
எண்டவர் நிலைமை யெய்தி னெய்துமோ வவர்க்குங் குற்றம், (கoஉஉ)

ஏறிய வனுபோ கங்கள் யாவையுங் கண்டே நெஞ்ச
மாறிய ராம நாத வண்ணல்சத் தினிபா தந்தான்
ஊறிய உளத்திற் கூட வுலகத்தி னுண்மை கண்டே
தேறிய விருடி யாதல் செப்பவும் வேண்டுங் கொல்லோ, (கoஉங)

## சிவஞானப்பேறு

ஒருவருள் ளிருந்தா ரென்று முலகுதான் மாஜையென்றுங்
கருவருள் வினைகள் விட்டுக் கழலுதல் வேண்டி னென்றுந்
திருவருள் வேண்டு மென்றுஞ் சிந்தைமேற் கொண்டு ஞானக்
குருவருள் கிடைத்த ஞான்றே குணமறு தலைப்பட் டுற்ற, (கoஉச)

சேரின்ப மிரண்டே யென்றுஞ் சிற்றின்ப மாயை யென்றும்
பாரின்ப மான வஞ்சப் பற்றறல் வீட தென்று
நேரின்ப மிலாத தென்று நின்மல னடியைச் சேர்தல்
பேரின்ப மாகு மென்றும் பெறுவதற் கரிய தென்றும், (கoஉரு)

கருமத்தால் வினைக டேயுங் கருமங்கா ரணமாய் நின்று
தருமத்தால் விளைந்து செய்யுந் தருமத்தாற் சித்த சுத்தி
வருமத்தா லொருமைத் தாகி வளர்வதட் டாங்க யோகம்
பெருமைத்தாம் யோக நின்றும் பிறப்பது ஞான மென்றும், (கoஉசு)

ஞானந்தான் சரியை யாதி நான்கினு முளதா மென்றும்
ஞானந்தான் யோக நான்கை நாடியே யுதிக்கு மென்றும்
ஞானந்தா னிலையேன் முத்தி நணுகுறு தென்று முன்னி
ஞானந்தான் வேண்டிராமநாதனையோகுறுதன் முன்னம், (கoஉஎ)

நான்சிவ சமய மென்பர் ஞாலமுந் துறந்தோ மென்பர்
ஏன்சிவ யோகியென்ப ரிவர்களிற் சழக்கே பாதி
தான்சிவ ஞானி யாதல் சாதமே ராம நாதக்
கோன்சிவ யோகி யாகக் குருவருள் கிடைத்த ஞான்றே, (கoஉஅ)

ஆற்றவுந் தனங்கள் பெற்றோ ரமைச்சதி காரம் பெற்றோர்
கோற்றரா வளிக்கும் ராச குடும்பத்தோ ரின்னு முள்ளோர்
ஏற்றதத் துவஞா னத்தை யெய்து வரிதற்குச் சான்றோ
மாற்றமென் றுபு மானர் வாதவூ ரடிகள் பிள்ளை, (கoஉகூ)

இற்றனிக் கிழத்தி யோடு மிசைந்தன ரிருந்து மேனும்
பற்றறத் துறந்து மேலாம் பரமஞா னிகளா யுற்றோர்
குற்றமொன் றிலாத கொற்றங் குடியுமா பதியி னோடு
மற்றவள் ளுவனு மின்னும் வசிட்டனே யாதியா னோர், (௧௦௩௦)

வித்துவ சிரேட்டர் வர்க்கென் விளைவுகூ ரிளமைக் காலை
மொத்துவ ருலகர்க் காக வுழைத்துழைத் துதவி வந்தே
ஞுத்துவ மேறும் ராம நாத வேண் முதுமைக் காலந்
தத்துவ ஞானி யாகத் தான்வரல் புதுமை யன்றே, (௧௦௩௧)

கலைகலங் கிடாமற் கற்ற கவுரவ ராம நாதன்
மலைகலங் கிடினு நின்ற மண்கலங் கிடினுஞ் சூழ்ந்த
வலைகலங் கிடினுந் தன்பா லணுவள வேனுங் கொண்ட
நிலைகலங் கிடாம லிற்கு நின்மல வொளியுந் தானும், (௧௦௩௨)

ஈடுற வந்த ராச விருதியே யாவ னென்னி
ஞுடுற வோங்குந் தத்வ ஞானியு மாவ னென்னிற்
தேடுற வுதித்த ராம நாதனார் திறமை யாவுங்
கூடுற வெடுத்துக் கூறக் கூடுமோ வெவர்க்கு மம்மா, (௧௦௩௩)

இத்தனை சிறப்பும் வாய்ந்தே யாவர்க்கு நோக்கொன் றாகா
வெத்தனை நலங்க ளெல்லா மின்னமுந் தருவா னுற்ற
வத்தனை மறவாப் பத்தி யருள்குடி யிருக்குஞ் சிந்தை
முத்தனை யான ராம நாதனை மொழியப் போமோ. (௧௦௩௪)

மற்றுள வுகங்க டோறு மன்னின ரவரி னிப்பாற்
சொற்றுள கலியு கத்திற் சூழ்கட லிலங்கை மீதிற்
கற்றுள கல்வி செல்வங் கருணைகூ ரரசு மற்றும்
பெற்றுள ராம நாதன் பேரொன்று நின்ற தன்றே, (௧௦௩௫)

நேரினிற் குறையொன் றில்லார் யாரென நிகழ்த்துங் காலைச்
சாரினி லுமையைத் தந்த சங்கர னொருவ னுமால்
பாரினில் யாரும் போற்றும் பரிதிவந் துதயஞ் செய்தால்
நீரினிற் குமுத மொன்று கூம்பியு நிற்ப துண்மை, (௧௦௩௬)

முற்றவே யுணர்ந்தோர் பாவின் மொழிகுவர் குற்ற மென்னின்
மற்றவர் கவிக டம்மேன் வழுக்கள்வா ராமற் போமோ
குற்றமென் றுளக ளைந்தே குணங்களை யணைந்து போதல்
கற்றவர் கடனு மென்றே கழறிடு முலகங் கண்டீர், (௧0௩௭)

நற்றவ முடைமை யாலே நரேந்திர ராகி வாழ்வு
பெற்றவர் தம்மை நாடிப் பிரபந்த மறிஞர் செய்தார்
கொற்றவ னாட்கொண் டானைக் குலச்சடை யப்பன் றன்னைக்
கற்றவ ராய்ந்து முன்னாட் காவியத் தமைத்து வைத்தார், (௧0௩௮)

நலக்கலை யறிவிற் சான்றோர் நயந்துபா மாலை சூட்டற்
கிலக்கமா மிலக்க ணங்க ளியாவையு மமைந்த மேலோன்
துலக்கமா மிராம நாதத் தூயவ னொருவ னன்றி
இலக்கணை யிந்த நாளி னிகழ்த்திடற் குரியார் யாரே, (௧0௩௯)

இன்னநன் னாளி னிங்கே யித்தனை சிறப்பும் பெற்ற
மன்னவன் ராம நாத வள்ளலே யாகு மென்று
வன்னவன் சரிதம் யாவு மரிதினி னாய்ந்தி யானும்
பின்னமற் றிலாம லிந்தப் பிரபந்த மியற்றி னேனே, (௧0௪0)

புரிவுறு நறும்பூ மாலை பொன்னரி மாலை யாயாத்
தெரிவுறு முத்த மாலை செம்மணி மாலை யெல்லாம்
பரிவுறு மவர்பாங் காகிப் பார்த்திடிற் றெரிவ தொன்றே
விரிவுறு தேய முற்றும் விளங்கும் பாமாலை கண்டீர், (௧0௪௧)

உதித்தமே லோர்க டங்கட் குன்னருஞ் செயல்கள் செய்தல்
கதித்தவோர் கடனே போலக் கவிஞர்கள் கடனு மென்றே
துதித்தசேர் ராம நாதத் தெய்வனேர் வள்ள லார்க்கு
மதித்தன னுளங்கொண் டிப்பாமாலையைச்சூட்டினேனே, (௧0௪௨)

பாடிய புலவ ரின்பப் பாக்களின் சுவைக டுய்த்துக்
கூடிய வறிவிற் சான்றீர் குற்றமுங் குணமாக் கொள்ளா
நீடிய வறங்க ளாட்டி நின்றசேர் ராம நாதன்
நாடிய சரித மென்றே நயந்துநீர் வியந்து கொண்மின், (௧0௪௩)

பூவந்த தேய முற்றும் போற்றுநல் லாசி யானுந்
தேவந்த தருமரூபத் தேவதை யருளி னாலும்
நாவந்த சீர்சேர் ராம நாதவே ளுலகி லென்றுஞ்
சீவந்த னாக வாழச் சிவனருள் வணக்கஞ் செய்வாம், (க௦சச)

சொற்றமும் மாரி வாழ்கச் சோர்விலா துயிர்கள் வாழ்கக்
கொற்றவன் செங்கோல் வாழ்கக் குலமறை யவர்கள் வாழ்கக்
கற்றநூ லறிஞர் வாழ்கக் கதித்ததா னங்கள் வாழ்க
நற்றவம் வாழ்க ராம நாதவேள் வாழ்க வாழ்க. (க௦சரு)

சுபம்.

உ

# ஸ்ரீ ராமநாதமான்மிய

## அரும்பத விளக்கம்.

| பக்கம். | செய்யுள் | |
|---|---|---|
| | | **காப்பு.** |
| | | பாதித்திங்கள்—பிறைச்சந்திரன். (திருப்புகழ். பாதிமதிநதி. கந்த, வள், பிளவுகொண்ட பிறைநுதற்பேதை.) தாரகம்-பிரணவம். கைமுகம்—யானைமுகம். |
| 2 | 4 | மிதிலைமான்—சீதை. |
| ,, | 5 | அசோகவனம்—அசோகமரச்சோலை. அசோகு=சோகத்தைத் தீர்ப்பது. |
| ,, | 6 | சுதன்மை—இந்திரன்வசந்தமண்டபம். |
| ,, | 8 | கரம்பு—முட்களும் கற்களுஞ்செறிந்த இடம். குடிசை—சிறு வீடு. |
| 3 | 10 | கண்ணுச்சாமி—கண்டியில் இருந்தரசுபுரிந்த ஓர் தமிழரசன். இவனை, ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் எனவும் வழங்குவர். வேலூர்—சென்னைக்குச் சமீபத்திலுள்ள ஓர் இடம். |
| ,, | 12 | குமாரசாமி என்றது ஸ்ரீமான் பொன்னம்பலமுதலியாரின் மாதுலனை. |
| ,, | 14 | பேரையாறு—இது தற்காலத்தில் நிரவப்பட்டிருக்கிறது. |
| 4 | 15 | திரிகூடவெற்பு—திரிகோணசலம். |
| ,, | 16 | மந்திரஞ்சேர்மன்றம்—ஆலோசனைச்சங்கமண்டபம். |
| ,, | 17 | நடுநீதிமன்றம்-இங்கே நீதிவிசாரணைசெய்யும் மூவகைத்தானங்கள். பொலிஸுக்கோடு, டிஸ்திறிக்கோடு, சுப்பிரீங்கோடு. வையாளி—குதிரையோட்டும்வீதி. உய்யானம்—பூந்தோட்டம். |
| ,, | 18 | காசடக்குங்கூடம்—திரவியசாலை. |
| ,, | 19 | இயக்கபதி — குபேரன். தருநகரம் — கற்பகதருவையுடைய சுவர்க்கநகரம். |
| ,, | 20 | ஆரமியம்—நிலாமுற்றம். |
| 5 | 25 | ஆர்—ஆத்தி. |
| 6 | 28 | கவுஞ்சில் (ஆங்கிலச்சொல்)—மந்திராலோசனைச்சங்கம். |
| ,, | 31 | தனிமகன்—ஏகபுத்திரன்: தேவதாசன். |
| 7 | 35 | மூறை—புத்தகம். மாவலி-இவன் ஓர் சக்கிரவர்த்தி. மகாவிட்டுணுமூர்த்தி வாமனரூபங்கொண்டுவந்து மூன்றடிமண் கேட்டபோது அவருடையகை கீழாகநின்றேற்க இவன் கரம் மேலாகநின்று தாரைவார்த்தமைபோல மகாராணியின்கை கீழாகநின்றேற்க இவர்கரம் மேலாகவந்து புத்தகங்கொடுத்தமையின் "மாவலியோர்கரம்நிகர்க்க" என்று கூறப்பட்டது. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 7 | 37 | விநோதசாலை — நூதனசாலை. ஆனந்தன் - ஆனந்தக்குமாரசாமி. |
| 8 | 40 | கருகுலம் — திரவியசாலை. |
| ,, | 41 | வேளாண்மை — உபகாரம். |
| ,, | 42 | சேர் ராமநாதனுக்கே மணஞ்செய்தற்குரியதென்று நியமித்து அவர் தம்தாயாரின்செல்லாச்சியென்றநாமதேயத்தை ஸ்ரீ நன்னித்தம்பிமுதலியார் தான்பெற்றபுத்திரிக்கு அப்பெயரையே சூட்டினமையின் "பொன்னம்பலமுதலி தனது மனைக்கிருந்தநற்பேர்தேற்றறஞ்சால் ஸ்ரீசேர்ராமநாதனுக் கென்றேமதித்துத்திகழவைத்தான்" என்றுகூறப்பட்டது. |
| 9 | 46 | மாதுலன் — மாமன்; மாதாவுடன்பிறந்தவன். |
| ,, | 47 | உத்தியோகம் — Collector of Customs. |
| ,, | 48 | அதிகாரி — Government Agent, உத்தியோகம் — Assistant Government Agent. |
| 10 | 52 | சலநிதி — சமுத்திரம். |
| ,, | 55 | உவாமதி — பூரணசந்திரன். |
| ,, | 56 | வாலை — சிவசத்திகளுள்ஒன்று. |
| 11 | 58 | பஞ்சகச்சு — உடைவிசேடம், ஐந்திடத்திற்செருகியுடுப்பது. |
| ,, | 60 | சங்கிராந்தி — சூரியன் ஒருராசியிலிருந்து ஒருராசிக்குப்போதல்; மாதப்பிறப்பு. நிகரம் — கூட்டம். |
| ,, | 61 | கலியாணநதி — இங்கே கழனியாறு. பாதை - மரக்கலவிசேடம். |
| ,, | 64 | சுடலை — இறந்தோரைத் தகிக்குமிடம். இது கொட்டாஞ்சேனையில் உள்ளது. |
| 12 | 69 | சலபதி — வருணன். வெரிந் — முதுகு. சேது - பாலம்; அணை - வரம்பு. கோசலநாடன் — தசரதராமன். |
| 13 | 72 | கண்கூடு — பிரத்தியக்ஷம். |
| ,, | 75 | குமாரன் — இவரே குமாரசாமிமுதலியார். |
| ,, | 77 | பஞ்சவத்திரன் — ஐந்துமுகங்களையுடைய சிவன். |
| ,, | 78 | கா — கற்பகசோலை. மகபதி — இந்திரன். |
| 14 | 80 | வலன் — மொழியிறுதிப்போலி. |
| ,, | 82 | இங்கே பேதை என்றது இராவணனை. இவன் நெறிகடந்து பிறனில்விழைந்தமையின் பேதையென்றுகூறப்பட்டது. |
| 15 | 88 | மீன் — நட்சத்திரம். வாக்கு — இரண்டாமிடம். மால் காரி உம்மைத்தொகை. |
| ,, | 89 | காவற்கடவுள் — மகாவிட்டுணு. |
| ,, | 90 | புறந்தரல் — உபகரித்தல். சூதிகை — பிரசவமனை. |
| ,, | 91 | விண்ணவன்குறி என்றது — ஸ்ரீராமநாதசுவாமியின் திருநாமத்தை. |
| 17 | 100 | மாக்கள் — பொய்மையாகிய பூலோகவின்பத்தை மெய்ம்மையெனக்கருதிப் புகழுபவர் மிருகத்தோடொப்பவர் என்பது போதர மக்கள் என்னாது மாக்கள் எனக்கூறப்பட்டது. |
| ,, | 101 | நற்றாய்க்கு ஆண்மகவைக்கவானிடைக்கண்டபொழுதுள்ள உவகையினும் அறிவினாற்சிறந்தவன்என்று சான்றோர்சொல்லக்கேட்டபொழுதில் பேருவகையையுடையள் ஆதலின் "ஈன்றநல்லமையத் தோகையெய்துபத்தினியம்மாளுக் கான்றநல்லறிவும்வாக்குமமைந்ததன்மக்கட்குள்ள சான்றநல்லாற்றல்காணாத்தவக்குறைவிருந்ததென்னே" என்று |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | கூறப்பட்டது. (திருக்குறள். ஈன்றபொழுதிற்பெரிதுவக் குந்தன்மகனைச்சான்றோனெனக்கேட்டதாய்.) |
| 17 | 102 | கோ—மலை. கோடு—மலைச்சிகரம். பூ—பூமி. |
| 18 | 107 | மூன்றுசுடர்—சூரியன் சந்திரன் அக்கினி. ஒருமுகம்—சிவபெருமானுடைய முகம். இங்கே மூன்றுபாடை—சம்ஸ்கிருதம் தமிழ் ஆங்கிலம். அகவிருள்—அஞ்ஞானம். |
| ,, | 109 | அகோராத்திரம்—இரவும் பகலும். |
| 19 | 111 | என்றகதிரளந்திடும்ஆண்டு-சூரியமானத்தால்வந்தஆண்டு. மனுநூல்—மனுஸ்மிருதி. இது இராசதருமங்களைக்கூறுவது. |
| ,, | 113 | இலஞ்சம்—கைக்கூலி. |
| ,, | 115 | அனுவழி—புதன். |
| ,, | 116 | நிரை—பசு. |
| 20 | 117 | மந்திரத்துணைவன்—மந்திரி. |
| ,, | 119 | ஆடவரும் பெண்மையைநச்சும்பேரழகுடைமையின் ஆடவருங் காதலுற என்று கூறப்பட்டது. |
| ,, | 120 | விதியின்வழியே மனமுஞ்செல்லுமாகலின் "நாடவிதிமதியும தாய்" என்றுகூறப்பட்டது. (ஔவை விதியேமதியாய்விடும்.) |
| 21 | 126 | நிறை-கற்பு. மீன்மாது-அருந்ததி. கற்புடையமாதரின் சொற்படி மழை பெய்தலேயன்றித் தெய்வமும் ஏவல்செய்யும் என்பது உரையாசிரியர் பரிமேலழகர் கருத்து. (திருக்குறள், "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யும் மழை") |
| ,, | 127 | ஓரை—முகூர்த்தம். |
| ,, | 128 | உயர்நூல்கள்—தருமசாஸ்திரங்கள். |
| 22 | 135 | செவிலி—வளர்த்ததாய். |
| 23 | 139 | பவம்—பிறப்பு. |
| ,, | 141 | கிருஷ்ணாவதாரத்தில் ஒருதேவியாரின் நாமம் உருக்குமணியாகலின் "மாயன்முயங்குபத்தினிநன்னாமம்" என்று கூறப்பட்டது. |
| ,, | 142 | வெள்ளியகுணம்—சுத்தமானகுணம். |
| 24 | 144 | விண்மணி—சூரியன். |
| ,, | 146 | பார்விசிட்டஞாயதுரந்தரன்—Barrister. |
| ,, | 148 | அத்தம்—செல்வம். |
| 25 | 153 | விதானம்—மேற்கட்டி. அரம்பை—வாழை. எல்—சூரியன். |
| ,, | 154 | சடங்கு—கிரியை. |
| 26 | 162 | வீதி, இதுசங்கரப்பிள்ளைரோட் எனவழங்கும். |
| 27 | 166 | மருமான்—வழித்தோன்றல். |
| ,, | 169 | கோடித்து—அலங்கரித்து. அமர்ந்துவைக—விரும்பியிருக்க. |
| 28 | 172 | பூக்கம்பலம்—பூவிழைத்தகம்பலம். |
| ,, | 173 | உச்சம்—உயர்வு. |
| 30 | 183 | ஒசம்—ஒளி. |
| ,, | 187 | தனிதம்—பேரொலி. |
| ,, | 188 | பந்தம்—கட்டுப்பாடு. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 30 | 189 | கைபோய்—கைவந்து. |
| 31 | 191 | வாமம்—அழகு. தாமம்—ஒளி. ஏமம்—அழகு. |
| ,, | 193 | மண்ணிற்புரந்தரன்—நரேந்திரன். நிரந்தரம்—எப்பொழுதும். |
| 32 | 197 | அச்சுதன்—விட்டுணு. |
| ,, | 199 | மாவிலங்கை—இஃது சேர்ராமநாதனது ஓர் தென்னைத்தோட்டம். |
| 33 | 205 | புணரி—திருப்பாற்கடல். சுரபதி—சுரேந்திரன். நரபதி—நரேந்திரன். |
| 34 | 211 | தில்லை—சிதம்பரம். காளி—சீகாளி. |
| 36 | 228 | பாட்டன்—குமாரசாமிமுதலியார். மாதுலன்—சேர்முத்துக்குமாரசுவாமி. |
| ,, | 229 | ஒல்லார்—பகைவர். |
| ,, | 230 | 1. ஆழி—சக்கரம். 2. ஆழி—சமுத்திரம். 3. ஆழி—மோதிரம். 4. ஆழி—சில்லு; இதுசொற்பின்வருநிலை யென்னுமலங்காரம். |
| 37 | 235 | ஒவ்வொருவாக்குகளும் பொன்னையொத்திருத்தலால் இவர்தம் நாக்கு பொன்நாக்குஆயிற்றுஎன்க. புண்டரீகன்-பிரமா. |
| ,, | 236 | புன்னகை—சிறுசிரிப்பு. |
| ,, | 238 | ஐவகைவளம்—காடுபடுதிரவியம் கடல்படுதிரவியம் மலைபடுதிரவியம் நாடுபடுதிரவியம் நகர்படுதிரவியம். |
| 38 | 242 | அணை—பாலம். சேனைகொடுத்தல்—எள்ளுமுதலியநவதானியங்களைக்காடுகளில் விதைக்கும்படிசெய்தல். |
| ,, | 243 | தருக்கு—சந்தோஷம். |
| ,, | 244 | போகி—இந்திரன். பின்னன்—சாமன். இவன் காமன்தம்பி. |
| 39 | 246 | கோளம்—சேரம். இராசாங்கமந்திரி. Attorney General. |
| ,, | 252 | தரணிபர்மதித்ததோமிலாத மந்திரி—சேர்ராமநாதன். |
| 40 | 253 | கல்லூரி—Queen's College. |
| ,, | 254 | கழகம்—Presidency College. தருமநூற்பண்டிதன்—நியாயவாதி. |
| ,, | 255 | கவுஞ்சில்—இங்கே நகரசபை. Municipal Council. |
| ,, | 257 | காந்தன்—என்றது ஸ்ரீகாந்தனை இவன் மறுதாரத்தின்மகனேயாயினும் ஏண்டமையக்கூறியது ஒற்றுமைநயங்கருதியென்க. |
| 41 | 260 | கன்னிமாதம்—புரட்டாதிமாதம். |
| ,, | 261 | பாத்த—இலங்கையினின்றும்பகுத்த. |
| ,, | 263 | சந்து—சந்தி. |
| ,, | 264 | மின்—இலக்குமி. |
| 42 | 267 | சிந்தாமணி—சீவகசிந்தாமணி. |
| ,, | 268 | நித்தியம் தினப்பூசை. நைமித்தியம்—திருவிழா. |
| ,, | 273 | நொதுமல்—சுற்றம். கோல்நாக்கு—தராசின்நாக்கு. |
| 43 | 276 | பாடசாலை—Academy. |
| ,, | 277 | மாராணிகழகம்—Queen's College. |
| ,, | 278 | சர்வகலாசாலை—Cambridge University. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 44 | 281 | மண்டலநீதிபதி— District Judge. துரை— Registrar General. |
| ,, | 283 | அம்பி—தோணி. நம்பி—ஆடவர்களுட்சிறந்தவன். |
| ,, | 285 | அற்பு—அன்பு. கமலை—இலக்குமி. சாலி—அருந்ததி. |
| ,, | 287 | ஒருமகன் என்றது லண்டனிற்தேகவியோகமான ஸ்ரீபத்மநாபனை. |
| 46 | 296 | மூன்றுவேந்தர்—சேரசோழபாண்டியர். மூன்றுதேவர்—பிரம விட்டுணு ருத்திரர் |
| ,, | 300 | இராசாங்கமந்திரி—Solicitor General. |
| 47 | 301 | வாதபுத்தகம்—வழக்குப்புத்தகம். வாதிகள்—வாதி பிரதிவாதி. |
| | 308 | அந்தரங்கமந்திரி=இரகசியமந்திரி; பிரதிநிதித்தலைவன். Attorney General. |
| ,, | 311 | சேட்டமந்திரி—Attorney General. மேற்கோடுகள்என்றது-டிஸ்திறிக் சுப்பிரீங்கோடுகளை. |
| 48 ,, | 313 | ஆகாயத்து அதிதூரத்துப் பறந்துகொண்டிருந்து ஆழமாகிய நிலத்தில்இருக்கும் இரையை விரைவில் வீழ்ந்துகவர்ந்து கொண்டுபோகும் பருந்துபோல இவர்தாமும்அதிகபொய்களுக்குள்மறைந்துகிடக்கும் உண்மையைஆராய்ந்துஅதி விரைவில் எடுக்கும்சாதுரியமுடையாதலின் இவருக்குப் பருந்து உவமையாயிற்றென்க. |
| ,, | 314 | போகம்முடியுந்துணையும்நட்புக்காட்டிப்புணர்ந்துமுடிவில்முகம் பாராது வெறுத்துவிடுவது வேசிகள் அகம். அதுபோல இவர்தாமும் சுற்றம் நட்பு பகையென்றிவைகளைப்பொது மையில் வெறுப்பின்றிவைத்து நீதங்களை ஆராய்ச்சிசெய் ததன்மேல் முகம்நோக்காமற் தீர்ப்புச்செய்கின்றமையின் இவருக்கு வேசிகள் அகம் உவமையாயிற்றென்க. |
| 49 | 317 | தேசாதிபதியின் ஆலோசனைச்சங்கம். |
| ,, | 318 | இருவகைக்கவுஞ்சில்— Legislative Council. Executive Council. |
| ,, | 319 | சூடாமணி—சிரோரத்தினம். |
| ,, | 321 | பாழிமேந்து—மந்திராலோசனைச்சபை: இது பிரித்தானியராச் சியத்தின் முதற்சங்கம். |
| 50 | 323 | ஈழத்திலங்கை—பண்புத்தொகை. |
| ,, | 326 | தருமச்செங்கோல் கருணைநேர்ந்தோங்குமென முடிவுசெய்க. |
| 51 | 329 | சித்தி—சிவஞானசித்தியார். நவநீதம்—கைவல்லியநவநீதம். ஒடுக்கம்—ஒழிவிலொடுக்கம். கீதை—பகவத்கீதை. |
| 52 | 335 | கும்பகம்—கும்பித்தல்; அடக்குதல். |
| ,, | 336 | இரேசகம்—மூர்ச்சைவிடுதல். நடுவழி—சுழுமுனை. |
| ,, | 337 | கூற்றுவருங்கணை—சொல்லாகிய அத்திரம். |
| ,, | 339 | மக்கட்பவம்—மானுடப்பிறப்பு. |
| 53 | 341 | கார்தனைவழங்கவைத்தல்—மழைபெய்யச்செய்தல். |
| ,, | 343 | இருமை—இம்மை மறுமை. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 53 | 344 | வதிப்பொதியமுதுகைத்தாய்—வழிக்கூத்தருமமாகிய கட்டுச்சத்தத்தையே பொருளாய். |
| ,, | 346 | மைத்துனர்—குமாரசுவாமிமுதலியார் அருணசலமுதலியார். |
| 54 | 349 | யோர்தாநதியிலே ஸ்நானஞ்செய்து கிரியைமுற்றிய அந்தயோவான் அல்லன் என்க. |
| ,, | 352 | அளவை—தர்க்கப்பிரமாணம். |
| 55 | 357 | தந்தைதன்பெயரையேதந்துநாட்டிய எந்தைஎன்றது—பொன்னம்பலவாணேஸ்வரனர. |
| 55 | 358 | இம்மி—மத்தங்காய்ப்புல்லரிசி. |
| 56 | 361 | குமாரசாமிமுதலியார் பதமுத்தியடைந்த இந்த ஆண்டிற்றானே சேர் ராமநாதன் கவுஞ்சிலிலிருந்து விலகினரென்பதும் அதற்குமுன்னமே அமெரிக்காவுக்குச் சென்று திரும்பினரென்பதும் இரண்டாந்தர்மபத்தினியாரை மணஞ்செய்தாரென்பதும் பெறப்படுதல் காண்க. |
| ,, | 362 | பொன்னுடன் வாணிஎன்றது இலக்குமியும் சரஸ்வதியுமாகிய மாமியையும் மருகியையும். இவ்விருவரும் கலகமின்றித் தம்மிடத்தில் ஒற்றுமையாகஇருக்கவைத்த தவமுளராமநாதன் என்றது செல்வமும் கல்வியுமாகிய இரண்டனையும் ஒருங்கே அமையப்பெற்றமையின் என்றறிக. |
| ,, | 364 | கவுஞ்சிலில் விலகியிருந்தகாலத்திலேதான் அமெரிக்காவுக்குச் சென்றதும் பொன்னம்பலவாணேசர் திருப்பணித்தருமமும் ஸ்ரீராமநாத வித்தியாலய தாபனதருமமுமியற்றித் தருமகர்த்தாவாக விருந்தனரென்றறிக. |
| 57 | 367 | கிசலயம்—தளிர். மதுகரம்—வண்டு. |
| ,, | 368 | ஆராமம்—பூஞ்சோலை, |
| ,, | 369 | தெற்றி—சித்திரகூடம், விநோதசாலை—நூதனசாலை. கவலை—நாற்சந்தி. |
| 58 | 371 | காயம்—உடம்பு. |
| ,, | 373 | லிகிதர்—எழுதுவோர். ஆனந்தன்—சேர் முத்துக்குமாரசாமியின் புத்திரன். |
| ,, | 374 | கருப்பொருள்—உட்பொருள். |
| 59 | 378 | தீர்க்கதரிசி—வருங்காரியஞ்சொல்பவன். |
| 60 | 379 | இருவினையொப்பளவும்—பற்றும்வரைக்கும். |
| ,, | 381 | மூதம்—சந்தோஷம். |
| ,, | 383 | வில்லொளி என்றதில் ஒளி—சூரியன். |
| 61 | 388 | ஊருவின்வருமான்—உருப்பசி. சாபமுறுமவன்-அருச்சுனன். கனிட்டன்—அருச்சுனன்தம்பி சகாதேவன். இவன்றனச்கு அக்காலத்து இலங்கைஅரசனுகிய விபீஷணன் பதினன்குபொற்பனைகளைத் தருமபுத்திரனுக்கு இராசசூய வேள்விக்காக உபகாரம்கொடுத்தவன் என்க. தாரு—அசோகமரம். மேருமலையின் மூன்றுசிகரங்களுள் ஒன்றுகலின் சிறப்புநோக்கித்தென்னிலங்கையெனப்பட்டது. |
| 62 | 391 | மாற்றம்—வாக்கு. |
| ,, | 392 | புனர்மணம்—இரண்டாம்விவாகம். |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| ,, | 394 | சட்டகம்—உடம்பு. அஞ்ஞன்—அறிவிலி. |
| ,, | 397 | இல்வாழ்வானே பிரமசாரி வானப்பிரத்தன் சன்னியாசி என்கின்ற மூவரையும் அவர் தத்தம் தருமநெறிகளில் ஒழுகச் செய்தற்குவேண்டிய உபகாரங்களைச்செய்து உற்றதுணையாய்நிற்பவன் ஆகலின், "சொல்லறத்துறைகட்கேய்ந்த துணையுமாய்" என்றுகூறப்பட்டது. (திருக்குறள் இல்வாழ்வானென்பானியல்புடையமூவர்க்கும் நல்லாற்றினின்றதுணை.) |
| 63 | 399 | ரூபமுஞ்செல்வமுமென்றிவற்றால் இலக்குமியேயெனினும் இவர்தாம் இலக்குமிபோலப்பாற்கடலிற்பிறவாது பூமியிற் பிறந்தமையின் "பான்மலிகடலைவிட்டுப்பாரிடைப்பிறந்த" என்றதென்க. கண்ணும் நுதலும் புருவமும் நாசியும் முறையேகாவிப்பூவையும் பிறைச்சந்திரனையும் வில்லையும் குமிழம்பூவையும் ஒத்திருத்தலின் "காவியைப்பிறையைவில்லைக்குமிழைப்பூத்து" என்றதென்க. காவி, குமிழ் என்பன ஆகுபெயர்கள். |
| 66 | 420 | தாரி—கேடுவருதற்குரிய அடையாளம். வாரி—வருவாய். |
| ,, | 421 | விடவி—விருட்சம். |
| 67 | 429 | நபனமண்டபம்—இது ஸ்நானமண்டபம் எனவும்வழங்கும். ஆறுதாரங்களாவன—மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆக்கினை. |
| 68 | 431 | மதநாகம்—யானை. நாகம்—பாம்பு. |
| 69 | 438 | நலம்கைமேலோங்கு—நலமானஒழுக்கத்தில் மேலாகஉயர்ந்த. |
| ,, | 439 | பொன்னம்பலவாணேசர்தேவாலயத்தின் மேலைவீதியிலே அக்காலத்தில் ஒருதமிழ்க்கழகத்தைவைத்துநடத்திவந்தனர்என்க. |
| 70 | 444 | உந்தராமநாதனது தகுதிகளை அரசபாடையேயன்றித் தமிழ் உறுத்திக் காட்டாதாகலின் அப்பாஷைக்குரிய இன்றியமையாதவிஷயங்களை அதிற்றனே கண்டறிக என்பதாம். |
| ,, | 448 | ஒண்மை—கீர்த்தி. வண்மை—கொடை. |
| 72 | 457 | கொட்டாரம்—தொழுவம்; திசைச்சொல். |
| ,, | 460 | சுதை—சுண்ணச்சாந்து. |
| ,, | 461 | விருத்தம்—வட்டம். அயம்—இரும்பு. |
| 73 | 466 | ஓதி—ஞானம். |
| ,, | 467 | எயில்—முப்புரம். |
| ,, | 468 | கலாசாலை—Training College. |
| ,, | 469 | பித்திகை—சுவர். |
| ,, | 470 | கலம்—சற்பாத்திரம். |
| 74 | 471 | குரவர்—துரோணன் கிருபன். |
| ,, | 473 | சகோதரர் தாயர் தந்தையர் மனைவியர் புதல்வர் என்றுகொள்வதெல்லாம் மாயமென்றும், மனத்திலே எழும் ஓர் நினைவுமாத்திரையாகுமென்றும் பகவத்கீதைகூறும். (பாரதம் முதற்போர் (மாயையென்றொருத்தி தன்பால்மனமெனுமைந்தன்றனேன்றித், தூயநல்லறிவன் றன்னைத்தோற்றமின்றாக்கிவைத்தான், தாயொடுதந்தைமக்கடாரமென்றிவர் |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | பாலுற்ற, நேயமுமவன்றனுலேநிகழ்ந்ததோர்நினைவுகண்டாய்.) |
| ,, | 475 | அத்துவிதம்—இரண்டற்றது. (சித்தாந்தவினுவிடை—தத்துவமசி. தத்+துவம்+அசி—அதுநீயானுய்நீயதுவானுய்.) இதனுல் ஒடுக்கத்தில் பதியும் பசுவும் ஒன்றுயிற்றுஎன்க. |
| ,, | 476 | முதன்மொழி தேவமொழிஎன்பன—வடமொழியென்க. |
| 75 | 479 | தனஞ்சயன்—அருச்சுனன். அரசர்களைவென்றெடுத்த திரவியத்தையுடையவன். கண்ணன்—கிருட்டினன். இது கிருஷ்ணன் என்னும் வடமொழிச்சிதைவு: கரியநிறமுடையவன். |
| ,, | 480 | மறைமுடிவு—உபநிடதம். மூவர்—அப்பர் சுந்தரர் சம்பந்தர். முனிவர்—வியாதர். கோவை—திருக்கோவையார். |
| ,, | 481 | உத்தரவேதம்—திருக்குறள். |
| 76 | 483 | இராமநாதீயம்—அவ்வுரைப்பெயர். |
| ,, | 486 | காதலிப்பார்—இடக்கரடக்கல். |
| 77 | 491 | சாமர்ஸ்—இலங்கைத்தேசாதிபதி. |
| 77 | 493 | நூக்கல்—அழித்தல். |
| ,, | 494 | கோட்டுநீர்—அணையுள் அடங்கிநிற்கும் நீர். |
| ,, | 495 | கணம்—பசாசு. |
| 78 | 500 | மேல்நகர் என்றது—காலி கண்டி முதலிய நகரங்களை. |
| 79 | 503 | அரணி—கடைகோல். |
| ,, | 504 | பிடித்ததைவிடாத கொடிறுபோல அரசன் தான்நாட்டிய பிரமாணத்தைவிடாது நிற்பக்கண்டு அவனுற்றலையடக்குமாறும் சீவகாருண்ணியம்பூண்டு சிறைகளை நீக்குமாறும் சேர் ராமநாதன் இங்கிலந்துக்குச்செல்வான் துணிந்தது என்க. [ரை. |
| ,, | 505 | சலதியினும் சமர் என்றது, அந்நாட்சேர்மனியின் கடற்போ |
| ,, | 506 | விபத்து—ஆபத்து. சீவர்க்குற்ற ஆபத்துக்களைநீக்கும்பொருட்டு இங்கிலத்துக்குப்போய் அவ்வாபத்துக்களைநீக்கியபின் தங்கள்திருமுகத்தை ஆவலோடிருக்கும்எனக்கு அதிவிரைவிற் காண்பிக்கவேண்டுமெனத் தருமபத்தினியார் விடைகொடுத்தார் என்க. |
| ,, | 508 | தடம்—வழி. |
| ,, | 509 | அமைச்சன்—லோட்கிச்சினர். |
| 80 | 510 | பாரிடத்திற்சுரந்த எண்ணெய்—மண்ணெண்ணெய். இவர்தாஞ் செல்லும் அந்தஇடத்திற் சிலநாழிகைக்குமுன்னே, சேர்மனி உடைத்துத்தாழ்த்த ஒருகப்பலில் மண்ணெண்ணெய் கடலிற்பரந்திருந்ததென்க. |
| ,, | 511 | சூர்—அச்சம். சேர்மனியின்சுழியோடிவள்ளந்துரத்துதலால், இவர் தாம்இருந்தகப்பல் நேரேயோடாமல் அங்குமிங்குமாயோடியதென்க. |
| ,, | 513 | ஆர்கலி—சமுத்திரம். |
| ,, | 514 | இவர் தாம் லண்டனில் இறங்குஞ்சமயம் சேர்மனியின் யுத்தசம்பவத்தைக்குறித்து ஒருவரோடொருவர் பேசுமாறு |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | நாவெடுப்பினும் அவரைக்கடுஞ்சிறையில் வைக்குஞ்சமயம் என்க. |
| 81 | 519 | பட்டோலை—இலங்கையிற் கலகநிகழ்ச்சிகளைக்குறித்துத் தாம் எழுதியபட்டோலை. |
| ,, | 520 | ஒவ்வொருசமயத்துக் கொவ்வொருவராக இருவரையேனும் மூவரையேனும் நால்வரையேனும் இலங்கைக்கனுப்பி உண்மைகளை அறிகவெனக்கூறினர்என்க. |
| ,, | 522 | விதிக்குவன்—கட்டளைசெய்வன். பதிமுழுதும் என்றதுபிரித்தானிய ராச்சியம் முழுதையும். |
| ,, | 523 | தலம்—பூமி. கைவருதல்—தேர்ச்சியுறுதல். |
| 82 | 525 | அள்ளு—காது. |
| | | கூற்றுநாராசம். தந்திச்சமாசாரமாகிய (சொல்) நாராசம் தோட்க—துளைக்க. |
| ,, | 527 | கோனகர்—கொளும்பு. ஈழம்—இலங்கை. |
| ,, | 528 | தொடுகடல்—தோண்டப்பட்டகடல். |
| 83 | 533 | குறைமுகம்—குறைவுபொருந்தியஇடம். இங்கேகுறைவு கலகத்தால் வந்தகுறைவு. |
| ,, | 536 | கப்பலினும் கடலினும் கரைக்கண்ணுள்ளநிலத்தினும் பூவாகவேபரவப்பட்டனவென்பதாம். |
| 84 | 543 | உங்களை—நீர், தம் என்பனவுயர்த்தற்கண்வந்தபன்மைகள். |
| ,, | 544 | மண்—மார்ச்சனை: அதுமுழவுக்கிடுவது. |
| 85 | 545 | தவன்—தவத்தையுடையவன். |
| ,, | 551 | நீர்ப்படை—சேர்மனின் கப்பற்படை. |
| 86 | 553 | சிற்பநற்கழகம்—சிற்பசாத்திரத்தின்படியமைக்கப்பட்ட கழகம். |
| ,, | 555 | புலநலமாந்தர்கள்—அறிஞர்கள். |
| ,, | 556 | இந்தியப்பேர்—இந்தியாவிலுள்ள ஊர்ப்பெயர். |
| ,, | 557 | மலர்நிலம்—விரிந்தநிலம். இறந்தகாலவினைத்தொகை. |
| 87 | 560 | சுதாகரன்—சந்திரன். |
| ,, | 563 | கலாநிதி—சந்திரன். |
| ,, | 564 | முற்றம்—இங்கேமாணவர் விளையாடற்குரிய முற்றம். |
| 88 | 567 | இந்தச்சிவாலயத்தில்நித்தியநைமித்தியபிராயச்சித்தங்கள் காலக்கிரமமாகவேநடைபெற்று மாணவர்களுக்கு இன்றியமையாதிருக்கும். |
| 90 | 580 | சின்னம்—அடையாளம்: பட்டம். |
| ,, | 581 | பாட்டன்—சூமாரசுவாமி. மாமன் சேர்முத்துக்குமாரசுவாமி. |
| ,, | 585 | சாகியம்—கூட்டம். |
| 91 | 590 | அலமென—அமையுமென்றசொல்ல. |
| 92 | 592 | திருட்டி—கண். |
| 93 | 598 | வேந்தர்—தமிழரசர். நிபந்தனை—கட்டுப்பாடு. |
| 94 | 611 | சிறப்பு—திருவிழா. |
| 95 | 615 | மா—சூரணுகியமா. |
| ,, | 617 | படைவீடுஆறு—திருச்செந்தூர் திருப்பரங்குன்றம் திருவாவினன்குடி திருவேரகம் பழமுதிர்சோலை குன்றுதொருடல். |
| | | முன்னொருகாலத்திலே கடைச்சங்கத்து முதற்புலவராகிய நக்கீரதேவர் இமையமலைச்சாரலிலுள்ளவோர்தடாகக்க |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | ரையில் சந்தியாவந்தனஞ்செய்து கொண்டிருக்கையில், அக்கரைக்கண்ணின்ற ஆலவிருக்ஷத்தின் பழுப்பொன்று நிலத்திற் பாதியும் நீரிற்பாதியுமாக வீழ்ந்து நிலத்திற்பட்டது பருந்தும் நீரிற்பட்டது மீனுமாகி, அம்மீனையப்பருந்து கவ்வுதலும், அதியற்புதமான அச்செயலைத்தியானத்திருந்த தேவர் கண் சென்றவழி மனமுஞ்செல்லச் சிறிதுநோக்கினர். இவர்போலவே முன்னுந் தியானந்தவறுதன்முதலிய குற்றங்களினால் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரைப் பிடித்து ஒரு மலைக்குகையினுள்ளடைத்து ஆயிரவராக இன்னொருவர் அகப்பட்டபின் உண்பதுவேவிரதமாகக்காத்திருந்த பெரும் பூதமொன்று பிடித்துக்குகையினுள் முன்னிருந்தவர்களுடன் வைத்துவிட்டு, ஸ்நானஞ்செய்வதற்காகத் தடாகத்தைநோக்கிச்செல்ல, முன்னடைபட்டிருந்த தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மரும் நாங்களிவ்வளவுகாலமும் உயிர்பிழைத்திருந்தோம் இத்தினத்துஉம்மாலே யிறக்கப்போகின்றோமென்று நக்கீரதேவரைநோக்கிப்புலம்புதலும், அவர் தாமுங்கலக்கமுற்று ஆபத்சகாயரான முருகக்கடவுளைத்தியானித்துத் திருமுருகாற்றுப்படையென்னும் பிரபந்தமொன்றைப் பாடுகையில், அறுமுகப்பெருமானது கட்டளையினால் சத்துருசங்காரவேல் அவ்விடத்துப் பிரசன்னமாகி அப்பெரும்பூதத்தை யிருகூறாக்கிழித்துத் தேவரைமுற்கொண்ட ஆயிரவரையும் ரக்ஷித்துவிட்டது. இதுபற்றியே "நக்கீரனுரை அடுத்துவந்தருளுமாபோல்" என்றதென்க. |
| 96 | 619 | மூன்றுபால்—அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால். பற்பலதுறை—பற்பலசமயங்கள், தமிழினுயமறை-திருக்குறள். |
| 97 | 626 | கைங்கரியம்—தொண்டு. |
| ,, | 627 | சிங்களர் தங்கள்சாதியாரினும் இவர்தம்மையே சட்டநிரூபண சபைக்குத் தெரிவுசெய்தார்களென்பதாம். |
| 98 | 632 | மயில்—திசைச்சொல்: ஓரளவு. பெருமையில்ஐயன்—பெருமைபாராட்டாத சேர்ராமநாதன். |
| ,, | 636 | வரித்தனம்—நியமித்தனம். அஃறிணைப்பொருளாகிய இசையைப்பாடுகின்ற வண்டுக்குத் தேனையூட்டும் மாலையெனவே அம்மாலையைத்தரித்த உயர்திணைப்பொருளாகிய சேர் ராமநாதன் தம்மேற்பாடுநர்க்கு வரையாதுகொடுப்பவரென்பது உள்ளுறையென்பதாம். உள்ளுறை-குறிப்புப்பொருள். |
| ,, | 637 | இலாவகம்—இலகு. |
| 99 | 643 | இருள்வலி—சூரியன். |
| 100 | 645 | ஒளி—கீர்த்தி. |
| ,, | 651 | வியம்—பெருமை. |
| 101 | 652 | வானம்—மழை. |
| ,, | 654 | தாவடி—பேர். |
| ,, | 656 | சாயுச்சியம்—அத்துவிதமுத்தி. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 102 | 661 | சிற்சபை—ஞானசபை. |
| ,, | 662 | புணை—தெப்பம். |
| 103 | 671 | தில்லைவாழந்தணர் வேள்வியாற்றிக் கலியைக்கடிபவரென்க. "கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே செற்றார்வாழ் தில்லைச்சிற்றம்பலமே" (திருப்பதிகம்). |
| ,, | 672 | கொண்டகோளதற்குமேற என்றது தாம் ஏற்பட்டிருக்கும் வாதமாகிய கொள்கைக்குமிணங்கப்பேசினமையை. |
| 104 | 675 | நின்ற+ஏது+அலம்+ஆகும் எனக் கண்ணளிக்க. |
| ,, | 676 | நாலுயர்பதம்—சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம். |
| ,, | 678 | கோவில்—சிதம்பரம். சிவசமயத்தவர் சிதம்பரத்தைக் கோவிலென வழங்குவர். (கோவிற்புராணம்). வைணவர் சீரங்கத்தைக் கோவிலென வழங்குவர். "கோவிலாளுடைய பைங்கொண்டலார்கண்டுயில்" (பாரதம்). நோக்க—அரசினர் மேற்பார்வையிட. |
| 105 | 681 | பாம்பு—பதஞ்சலிமுனிவர். புலி—வியாக்கிரபாதமுனிவர். |
| ,, | 682 | துரியம்—நான்காமவத்தை. மத்தம்—கரும்பூமத்தம். |
| ,, | 683 | ஈர்பான்ஐந்து—1925. வில்லின்மாதம்—மார்கழிமாதம். |
| 106 | 687 | விராட்புருடன்—அண்டத்தைத் தூலதேகமாகவுடைய ஆதிபுருஷன். |
| ,, | 688 | சிதம்பரத்திலே பழமைதொட்டிருந்த சித்தாந்தமகாசபையிலே 1907ம்ஆண்டிலே சேர் ராமநாதனை வரவழைத்து அக்கிராசனாதிபதியாக வைத்துச் சமாசம் நடத்தினரென்க. சல்லியம்—விக்கினம். சமாசம்—சபை. |
| 107 | 696 | அளம்—உப்பளம். நெய்தனிலம். |
| 108 | 701 | ராசமந்திரி—சொலிசிட்டஜெனரல். அந்தரங்கமந்திரி—அட்டோணிஜெனரல். மந்திரி—ராசாங்கசட்டநிரூபணசபையங்கத்தவர். |
| ,, | 702 | மூன்றளவை—சாக்ஷி ஆக்ஷி ஆவணம். |
| ,, | 703 | தீர்த்தநீதி—சமாதானக்கைச்சாத்துவாங்கித்தீர்த்தநீதி. |
| 109 | 705 | விமரிசை—ஆடம்பரம். |
| ,, | 706 | அமர்ந்தமர்ந்த—விரும்பியிருந்த. |
| ,, | 707 | அவன்வசப்படல்—பரவசப்படல். |
| 110 | 710 | நம்பியவென்ன—நம்பியனவென்று சொல்ல. நம்பி—ஆடவர்களுட்சிறந்தவன். |
| ,, | 711 | சொர்ணம்—அருணாசலமுதலியாரின் பத்தினியார் நாமம். பொன்மனை—பொன்கிளார். கிளார் திசைச்சொல். |
| ,, | 712 | நுகர்த்தி—அனுபவிப்பித்து. |
| ,, | 713 | பாரதவருடம்—பாரதகண்டம். |
| ,, | 714 | புள்ளிருக்குவேளூர்—வைத்தீஸ்வரன்கோவில். சடாயுவும் வேதமும் சுப்பிரமணியக்கடவுளும் பூசித்ததலம் இதுவென்பதாம். வல்லைவந்தவன் என்றது தன்னைச்சுற்றி விரைவில்வந்த விநாயகக்கடவுளை. பழநி—திருவாவினன்குடி. சிவபெருமான் ஒருமாங்கனியைவைத்துக்கொண்டு உலகத்தைச்சுற்றி முதலில்வருகின்றவர்க்குக் கொடுப்பேனென |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | ன்ன விநாயகக்கடவுள் தந்தையைமாத்திரஞ்சுற்றிவந்து மாங்கனியைவாங்கினர். முருகக்கடவுள் உலகமுழுவதையுஞ்சுற்றிப் பிந்திவந்து மாங்கனி தனக்குக்கொடாமையைக்கண்டு கோபங்கொள்ள எம்பெருமான் எமக்குப் பழம் நீயன்றேவென்றுகூறி அவரதுகோபத்தையாற்றியதலம் இதுவாகலின் பழநியெனப் பெயர்பெற்றதென்க. |
| 111 | 716 | வெம்போகசாகரம்—விருப்பத்தைத்தரும் இன்பசாகரம். சாகரம்—சமுத்திரம். |
| ,, | 717 | காவினன்— இந்திரன். மகள்— தெய்வயானையம்மையார். வேடக்கன்னி—வள்ளியம்மையார். |
| ,, | 719 | மேதினிபடக்கிக்காட்டுங்கோலன் — அண்டத்தையடக்கிக்காட்டும் விஸ்வரூபத்தையுடையவர். |
| ,, | 721 | பிதாமகன்—பிரமன். |
| 112 | 723 | காயமட்டே—தேகமளவே. |
| ,, | 724 | நோக்காற்றலங்குமீனாட்சி— முட்டையைக்குஞ்சாக்கும் பார்வையையுடைய மீன்போல நோக்கினால் ஆன்மாவைப் பக்குவப்படுத்தும் கண்களையுடைய அம்மையார் என்க. இது தொழிலுவமை. |
| ,, | 725 | தாதன்—அடியவன். |
| ,, | 726 | பொருணூல்—இறைவனாகப்பொருள். இப்பொருணூலுக்கு உரைநிறுத்துக்காட்டியது சுப்பிரமணியக்கடவுளினவதாரமாகிய உருத்திரசன்மன்; அதனைச் சோமசுந்தரக்கடவுளின்மேலேற்றிக்கூறியது ஒற்றுமைநயங்கருதியென்க. |
| 113 | 733 | இரதம்—புகைத்தேர். |
| 114 | 741 | தினமுஞ்சிந்தையேல்—இடக்கர். |
| 115 | 744 | பிசின்மரம்—றப்பர்மரம். |
| ,, | 745 | துறைமுகம்மூன்று—சிங்கை, பினாங்கு, மலாக்கா. |
| ,, | 746 | வள்ளியல்—ஈகைத்தன்மை. |
| ,, | 747 | மாபினோர்க்கன்னியர்—தாழ்ந்தசாதியர். |
| ,, | 748 | தாய்நவின்றசொற்படி— ஔவைப்பிராட்டியார் சொன்ன சொற்படி. அது "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றதையென்க. |
| 117 | 757 | மறைக்காடு—வேதாரணியம். |
| 118 | 769 | கோடித்து—அலங்கரித்து. |
| 120 | 781 | ததி—கூட்டம். |
| 121 | 787 | சிறம்பான்—ஒருநகரம். |
| ,, | 788 | நடை—வழி. |
| 122 | 795 | பாரி—கடைவள்ளல்களிலொருவன். |
| 124 | 806 | செய்யல்—சேறு. |
| ,, | 807 | நம்பி—ஆடவர்களுட்சிறந்தவன். |
| ,, | 809 | தாரகை—நக்ஷத்திரம். இரவி—சூரியன். |
| ,, | 811 | மேலைநாட்டறிவிற்சான்றோர்—ஐரோப்பாவிலுள்ளவர்களிற்கல்வியறிவாலுயர்ந்தவர். |
| 125 | 817 | உழுவலன்பு—பேரன்பு. |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 125 | 818 | இந்துகண்டிளகுங்கல் — சந்திரகாந்தக்கல். முதம் — சந்தோஷம். |
| 126 | 821 | கோ — கண். |
| ,, | 822 | சோபித்த — பிரகாசித்த. |
| ,, | 825 | கங்கு — எல்லை. |
| 127 | 831 | வித்தகம் — அதிசயம், சாமர்த்தியம். |
| 128 | 835 | பூசறுத்து — சுத்திசெய்து. |
| ,, | 836 | ஈரமேல்நாடு — குளிர்ந்த ஐரோப்பா. |
| ,, | 838 | முறை — புத்தகம். (அரிச்சந்திரநாடகம்) |
| 129 | 842 | மாலுமி — கப்பலோட்டுபவன். |
| ,, | 843 | பன்னசம் — பாம்பு. |
| 130 | 848 | தா — குற்றம். இரியும் — நீங்கும். |
| ,, | 851 | சரபோசிமகன் சிவாசி. இவன்மகன் சரபோசி. இவனது காலத்திருந்தவர் அருளபரானந்ததேசிகர். |
| ,, | 852 | திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரின் பரம்பரைஞானமுள்ளவர் அருளபரானந்ததேசிகரென்க. |
| ,, | 853 | மருமான் — வழித்தோன்றல். இவர் தஞ்சையில் நியாயதுரந்தராகவுள்ளவரென்க. |
| 131 | 854 | தஞ்சைநகரசங்கத் தலைவராகஇருந்துவந்தவர். |
| 133 | 870 | கல்வியே நல்லணியாகுமென்று விரும்பியிருக்கும் நங்கையென்க. நங்கை — மகளிர்க்சளுட்சிறந்தவள். |
| ,, | 871 | பல்லவம் — தளிர். |
| ,, | 873 | இலக்குமிதானே திருமங்கிலியமாகலின் "பூமேல்வல்லியென்றிலங்கிநின்ற மங்கலநாண்" என்றும். "மானணிநோக்கி நல்லார் மங்கலக்கழுத்துக்கெல்லாந் தானணியாயபோது தனக்கணியாதுமாதோ" தான் என்றது இலக்குமியை. (ராமா-சீதாபிராட்டிதிருமணம்.) |
| ,, | 874 | சாலி — அருந்ததி. |
| 134 | 875 | நிம்பம் — வேப்பம்வித்து. கஞ்சமான் — இலக்குமி. அஞ்சம் — அன்னம். நீராஞ்சனம் — கண்ணூறுகழிக்கும் ஆலத்தி. |
| 136 | 892 | வீட்டும்என்று-அழிக்குதும்என்று. ஒருகாலத்திலே வருணனுடைய கட்டளையால் மதுரையையழிக்குமாறு கடல்வருதலும் உக்கிரகுமாரபாண்டியர் தமதுவேற்படையைவீசி அக்கடலை வற்றச்செய்தனர் என்க. "வங்கவேலைவெள்ளமாட மதுரைமீதுவருசெயல், கங்குல் வாயதிங்கள்மீதுகாரிவாய காருடல், வெங்கண்வாளரா விழுங்கவீழ்வதொக்குமலதுகா, ரங்கண்மூடவருவதொக்கு மல்லதேதுசொல்வதே" (திரு — கடல்சுவற) தனதுமதுரையையழிக்க வந்ததென்று வெறுத்து வைகைகடலுடன் கலந்திலது என்பதாம். |
| 137 | 895 | சிங்க — கெட. |
| ,, | 896 | வள்ளியன் — கொடையாளன். இங்கேபாற்கரசேதுபதி. |
| ,, | 898 | குதூகலம் — பெருமகிழ்ச்சி. |
| ,, | 899 | தந்திரம் — சாஸ்திரம். |
| ,, | 900 | பாலவாயமுதபிள்ளை பருகப்பாற் கடலைத்தந்த, வாலவாயம |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | லன்—பாலைவேட்டழுத உபமன்னியமுனிவருக்குப் பாற்கடலையழைத்துக் கொடுத்தசிவபெருமான் என்க. "பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான்" (திருப்பல்லாண்டு). |
| 138 | 902 | தீனம்—எளிமை. தபுக்க—நீக்க. |
| ,, | 905 | அந்தகாரம்—இருள். |
| 139 | 906 | களைகட்டு—களையைப்பிடுங்கி. பைங்கூழ்—நெற்பயிர். |
| ,, | 907 | அத்தரை—சிவபிரானாரை. |
| ,, | 910 | தரு—கற்பகதரு. குரு—பிரசஸ்பதி. |
| 140 | 914 | எழ்துணைநிலங்கள்—எழுலகங்கள், வடம்—ஆலமரம். விழுது துணையானாலன்றி விரிந்த ஆலமரமுந் தழைக்கமாட்டா. அதுபோலச் சித்திவாய்ந்தஆலோசனையையுடைய மந்திரியில்லாதபொழுது அரசு நன்றிபடாதென்பதாம். இந்தச் செய்யுள் எடுத்துக் காட்டுவமையணியும் சொற்பொருட்பின்வருநிலையென்னு மணியுமாம். |
| ,, | 916 | அந்நீதி—அ+நீதி—நீதியின்மை. |
| ,, | 917 | இவர் தாம் சட்டநிரூபணசபையில் வந்து 1929 ம்ஆண்டு ஐம்பதவருடமாயினதென்பதாம். எனவே 1879ம்ஆண்டு அச்சபைக்கு வந்தவரென்பது பெறப்பட்டது. |
| 141 | 920 | சுதை—சுண்ணச்சாந்து. தந்திரத்தொழில்— தம்+திரத்தொழில். திரம்—உறுதி. |
| ,, | 921 | வேழமுற்றம்மிழிர்மரபோர்—முற்றத்தில் யானைகட்டப்பட்டு விளங்கும் மரபோர், எனவே உயர்ந்தமரபிலுள்ளவர் என்பது பெறப்பட்டது. |
| ,, | 922 | வாசவன்—இந்திரன். |
| ,, | 923 | பேச்சினிலேற்றபோதில் எத்தனைநாழிகைதான் சென்றாலும் போராற்றலோடு பேசுந்திறத்தையுடையவரென்க. |
| 143 | 933 | "இன்னவர்திறமையீன மேதையுமறியகில்லேம்" இஃது தேசாதிபதியின்கூற்றேயாம். ஒழிந்தமூன்றடிகளும் அங்கத்தினர் கூற்றென்க. |
| ,, | 934 | 935ம் செய்யுள்கள் தேசாதிபதியின் கூற்றுக்களேயாம். |
| 144 | 939 | "முடிக்கரிய" இந்தஎச்சம் காரியங்கள்என்பதனோடுமுடிந்தது. |
| 145 | 947 | இந்தவிதம்—கீழ்ப்போந்தஇந்தவிதம். |
| ,, | 950 | இலிங்கம்—பொன்னம்பலவாணேஸ்வரலிங்கம். |
| 147 | 961 | ஆயிரம்வெள்ளிகொண்ட பையொன்றும் பேசியாக்குதிரையொன்றும் கப்பலிற்கொடுத்தனரென்க. வெள்ளி—ரூபா. |
| ,, | 962 | நாகை—நாகபட்டினம். தந்தையாகியதம்மைப்பிரியும் சோகத்தைத் தீர்க்குமவர்தாமும் கலங்கினராகலின் "கண்கணீர் வடியக் கண்டேம்" என்றதென்க. |
| ,, | 963 | அண்ணல் என்றது குமாரசுவாமிமுதலியாரை. |
| ,, | 964 | கல்வியிற்சித்திபெற்றாலாருக்கு நயமென்றும் பெறாதொழியினுங்களுக்கு நட்டமென்றும் மேலேதந்தையார்கூறினரென்க. மனுடநிலை—மனுடராந்தன்மை. |
| 148 | 965 | கற்றுவந்தோர்—அக்கல்லூரிமாணவர். |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| 148 | 967 | தேகாப்பியாசம் பயிற்றிவருமவர் அனுமனை நிகர்த்தபராக்கிரமத்தையுடையவரென்க. |
| ,, | 968 | அவருடனே மல்லயுத்தம்புரியவேண்டுமென்னுங்கருத்துத்தனக்கிருந்ததென்க. |
| ,, | 969 | உவனோடுமல்லயுத்தஞ் செய்தலருளாகாதென்று தனக்கொரு தெய்வவாக்குக் கிடைத்ததென்பதாம். |
| 151 | 989 | 1929ம் ஆண்டுவரைக்குமிங்கேகூறப்பட்டதென்க. |
| 152 | 992 | ஏந்தல்—இங்கேகௌரவராமநாதன். |
| ,, | 995 | தோற்றியவிடத்திற்றோற்றுமவர்என்றது ஆங்கிலேயம்பிறந்தவிடத்திற்பிறந்தஐரோப்பியர். தமிழினுயர்வுசொல்லாமலமையுமென்பதுதோன்ற "தாய்ப்பாடைநிற்கு" எனப்பட்டது. |
| 152 | 996 | அவன்சிறை—அவ்வரசனால்வைக்கப்பட்டசிறை. |
| ,, | 997 | ஐரோப்பா முதலியமேலைத்தேயங்களிலிருந்து மிலங்கைக்குவரும் உயர்தரமானவர்கள் நாங்கள் உம்மை நம்தேயத்திற்றானேயறிந்திருக்கின்றேமென்பதாம். |
| 153 | 1000 | இரண்டுசிவப்பிரதிட்டை என்றது விசேடதிருப்பணிகள் நடைபெற்றுவரும் பரமேஸ்வரக்கல்லூரியினும் ஸ்ரீராமநாதவித்தியாலயத்தினுமுள்ள சிவப்பிரதிட்டைகளை என்க. |
| 154 | 1007 | மித்தை—பொய். |
| ,, | 1009 | கைத்து என்பது தொடைநோக்கிக் கச்சென்றாயிற்று. |
| 155 | 1011 | பன்னுமோர்பாசுரம்—எழுதுமோர் திருமுகம். |
| ,, | 1012 | ராசகுடும்பத்தில் வாழையடிவாழையாக வந்த அவதாரபுருடன் நீ வாழ்க என்பதாம். மகாராணியம்மாளின்சமூகத்தமர்ந்தளவளாவியும் சத்தியந்தவறா ஹரிச்சந்திரனின்சரித்திரத்தையாங்கிலத்தில் நாடகமாகவியற்றியவர்முன்னிலையிற்படித்துச்சன்மானிக்கப்பட்டும் தமதருமைக்காத்திற்பொன்வாளெடுத்து அதற்சமைந்தவிதிப்படி முதுகிற்றடவிச்சூட்டிய நயிற்பட்டத்தைப்பெற்றும் சக்கரவர்த்திகளைக்கண்டளவளாவியும் நயிற்பட்டங்களைப்பெற்றும் உலகஞ்சிக்க ராசசம்பத்து ராசமதிப்பென்றிவைகளாற் சிறப்படைந்தும் இலங்கையரசியலினொருகூற்றைத் தாஞ்சுமக்கும் பெருங்கடமையைப்பூண்டும் அதிகாரத்துடன் வீற்றிருக்கும் குடும்பமாகலினிக்குடும்பம் ராசகுடும்பமாயிற்றென்க. |
| | | ஆங்கிலவரசியலின் மந்திராலோசனைச்சங்கமாரம்பமாகியசிலநாட்களில் அவர்தாமேவரித்துநியமிக்க ஸ்ரீமான். குமாரசுவாமிமுதலியாரும் அவர்குமாரர் சேர் முத்துக்குமாரசுவாமிமுதலியாரும் இவர்மைத்துனர் ஸ்ரீமான். எதிர்மன்னசிங்கமுதலியாரும் கௌரவ முத்துக்குமாரசுவாமி முதலியாரின்மருகர்களும் ஸ்ரீமான். பொன்னம்பலமுதலியாரவர்களின்குமாரர்களுமான ஸ்ரீமான். குமாரசுவாமிமுதலியார் சேர் ராமநாதமுதலியார் சேர் அருணசலமுதலியாரென்றிவர்களும் கௌரவ அருணசலமுதலியாரி |

| பக்கம். | செய்யுள். | |
|---|---|---|
| | | ன்குமாரரான ஸ்ரீமான் மகாதேவாமுதலியாரென்றிவர்களும் வாழையடிவாழையாக வரசியலுக்குங் குடிகளுக்குங் குறைவுநேரிடாவண்ணம் ஆலமரத்துக்கு விழுதுபோலவரசியலைத்தாங்கு மமைச்சர்களாகவருதலானும், இவர்தம்முன் கௌரவ ராமநாதமுதலியாரவர்கள் அரசர்க்குக்கவசமுங்கண்ணும்போன்றிடித்துரைக்கு மதிவிசேடவமைச்சாகவிலங்கைப்பாரத்தைச்சுமந்துவருதலானுமிக் குடும்பம் மந்திரிக் குடும்பமாயிற்றென்க. "மொழிந்தபொருளோடொன்றவவ்வயின்மொழியாததனையும் முட்டின்றிமுடித்தல்" என்னுமுத்தியால் இஃதுமீண்டுக்கொள்ளப்பட்டது.<br>இடித்துரைக்கும்மந்திரியே யரசைப்பாதுகாக்குமுசாத்துணையான விசேடமந்திரியாதலைக் கீழ்ப்போந்தவிதனுனுமுணர்க. (கந்த—அமைச். மன்னவர்செவியழன்மடுத்ததாமென, நன்னெறிதருவதோர்நடுவுநீதியைச், சொன்னவரமைச்சர்கடுணைவர்மேலையோ, ரொன்னலர்விழைந்தவாறுரைக்கின்றூர்களே.) |
| 155 | 1013 | இடைநாடியாகவிளங்குமிலங்காபுரத்திலே சவப்பயனுகப்பிறந்த பொன்னம்பலம் ராமநாதன் என எண்ணப்படும் ராசவிருடி நீவாழ்க என்பதாம். |
| ,, | 1014 | மாணி—நித்தியப்பிரமசாரி. |
| ,, | 1015 | ஓடும்பொன்னுமொக்கநோக்குவோர், இருவினையொப்புமலபரிபாகத்தையுடையவர். |
| ,, | 1016 | "உறங்குமதுபோன்று" என்றது அறிதுயிலையென்க. |
| 156 | 1021 | சுழுமுனை—இடைநாடிக்கும் பிங்கலைநாடிக்கும் மத்தியிலுள்ள நாடி. |
| 157 | 1029 | கோல்தரா அளிக்கும்—செங்கோலைக்கொண்டு பூமியைப்பாதுகாக்கும். பிள்ளை—பட்டணத்தடிகள். |
| 158 | 1031 | ஞத்துவம்—அறிவு. |
| ,, | 1032 | அலை—கடல். |
| ,, | 1033 | தத்வஞானி—சிவஞானி. |
| 159 | 1037 | முற்றவேயுணர்ந்தோர்—சிவபெருமான். பா—இங்கே "கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி" என்றசெய்யுள். குற்றம்மொழிகுவரென்றது நக்கீரரை என்க. உலகம்—உயர்ந்தோர். |

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 311
நன்கொடை எண்: 311
அவ்வை தி.க. சண்முகம் நூலகம். தமிழியல்துறை.

SWADESHI
BOOK-BINDING STORE
E. CHINNAPPAH CHETTYAR,
VANNARPONNAI,
JAFFNA.